# தமிழ் மலர் மாலை

முதற் புத்தகம்

ஒன்பதாம் வகுப்பு

பதிப்பாசிரியர் :

திரு. தமிழ்நாவலர்,

வித்துவான், சி. அரசப்பனார்

T.G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்.
ப்பக்குளம் | 2/27, பிராட்வே
சிராப்பள்ளி | சென்னை-1

MADRAS
TB
031(9D
N66

25
3.66

# தமிழ் மலர் மாலை

## முதற் புத்தகம்

## ஒன்பதாம் வகுப்பு

[1965இல் வெளியிடப்பட்டுள்ள
புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது]

பதிப்பாசிரியர் :
திரு. தமிழ்நாவலர்,
வித்துவான், சி. அரசப்பனார்,
சே. நி. உயர்நிலைப்பள்ளி, உறையூர், திருச்சிராப்பள்ளி.

MADRAS

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

பதிப்புரிமை]

1966

[விலை ரூ. 2–00

முதற் பதிப்பு—அக்டோபர், 1965
இரண்டாம் பதிப்பு (திருந்தியது)—ஏப்ரல், 1966
மூன்றும் பதிப்பு—ஜூலை, 1966

600 008
135459

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part II—Section 3 of the
Fort St. George Gazette dated 18-5-1966, Page 56]

T3
031(Q)
N66

[Paper used : 14·5 k.g. D/Demy White Printing]

Kabeer Printing Works, Madras (471)

# முன்னுரை

“தமிழ் மலர் மாலை” என்னும் பெயருடன் வெளி வரும் ஒன்பதாம் வகுப்பிற்குரிய இந்நூல் கல்வித் துறையினர் அண்மையில் (7–7–1965) வெளியிட்ட பாட இயலை உளங்கொண்டு தொகுக்கப்பட்டது.

செய்யுட்பகுதி 700 வரிகள் இருக்கவேண்டுமென்பது பாட இயலின் விதி. இந்நூலில் ஏறத்தாழ 720 வரிகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுட் பகுதியின் முதலில் ஆசிரியர் குறிப்பும், நூலின் விளக்கமும், இறுதியில் அருஞ்சொற்பொருள், வினாக்கள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் பாட இயலின் விதிகொண்டு 20 பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கும், அருஞ்சொற்பொருள், வினாக்கள், பயிற்சி என்பனவும் தரப்பெற்றுள்ளன.

மொழி ஆசிரியர் ஒரு பாடத்தைக் கற்பிக்குமுன் மாணவர் தாமே முயன்று படித்தறிதற்குத் துணையாக முன்னுரை, அருஞ்சொற்பொருள் முதலியன தரப்பெற்றுள்ளன. மாணாக்கர் ஊக்கமுடன் பயிற்சிகளைச் செய்வாராயின் கட்டுரை வரையும் திறமைமிக்குறுவர்.

தத்தம் பாடல்களையும் உரை நடைகளையும் இந்நூலில் சேர்த்துக் கொள்ள இசைவு தந்துதவிய பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியது. இதனை என்னுடன் இருந்து பரிசோதித்து நன்முறையில் வெளிவர உதவி புரிந்த வித்துவான், நா. சாமிநாதன் M.A., B.O.L., அவர்கட்கும், திரு. வித்துவான், பொன், சீனிவாசன் அவர்கட்கும் எனது நன்றி என்றும் உரியது.

இந்நூலை மாணாக்கர்களுக்குப் பயன்படச் செய்யும் அறிஞர் அனைவருக்கும் என் பணிவார்ந்த வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

‘தாயகம், உறையூர்’<br>30—9—’65.

சி. அரசப்பனார்.

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாழ்த்து | | |
| 1. | கடவுள் வாழ்த்து | ... | 1 |
| 2. | தமிழ்த் தாய் வாழ்த்து | ... | 2 |
| 3. | நாட்டு வாழ்த்து | ... | 3 |
| II. | அறவுரை | | |
| 1. | திருக்குறள் | ... | 4 |
| 2. | ஏலாதி | ... | 14 |
| 3. | சிறுபஞ்சமூலம் | ... | 16 |
| III. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| 1. | மணிமேகலை | ... | 19 |
| 2. | பெருங்கதை | ... | 23 |
| 3. | பெரியபுராணம் | ... | 27 |
| 4. | வில்லிபாரதம் | ... | 33 |
| 5. | பாஞ்சாலி சபதம் | ... | 38 |
| IV. | பல்சுவை | | |
| 1. | வருணனை | ... | 46 |
| 2. | மெய்யறிவு | ... | 48 |
| 3. | சீட்டுக்கவி | ... | 51 |
| 4. | இரட்டுற மொழிதல் | ... | 52 |
| 5. | சிறு நூல்கள்—பிள்ளைத்தமிழ் | ... | 53 |
| 6. | வழிபாட்டுப் பாடல்கள் | ... | 55 |

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சமுதாய வாழ்க்கை முறை ... —திரு. புலவர், சரவண ஆறுமுக முதலியார் அவர்கள் M.A., B.O.L., L.T. முதல்வர், பழனியாண்டவர் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி. | 58 |
| 2. | இந்திரவிழா ... —திரு. புலவர், R. பஞ்சநதம்பிள்ளை அவர்கள் திருச்சிராப்பள்ளி. | 65 |
| 3. | மனோன்மணீயம் ... —திரு. நாவலர்-பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தஞ்சாவூர். | 71 |
| 4. | நாட்டுவளம் பாடிய நங்கை ... —திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் M.A., 'கலைமகள்' ஆசிரியர், சென்னை. | 76 |
| 5. | அன்னைக்கு (கடிதம்) ... —திரு. டாக்டர், மு. வரதராசனார் அவர்கள் M.A., M.O.L., தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. | 84 |
| 6. | புலவர் மகளிர் சிலர் ... —திரு. டாக்டர், அ. சிதம்பரநாதனார் அவர்கள் M.A., M.L.C., முதல்வர், தியாகராயக் கல்லூரி, மதுரை. | 90 |
| 7. | கரந்தைக் கவியரசு ... —திரு. புலவர், R. ஏகாம்பரநாதனார் அவர்கள், தஞ்சாவூர். | 95 |
| 8. | சிறை நீக்கிய செய்யுள் ... —திரு. டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் | 100 |
| 9. | தமிழகத்துக் கோவில்கள் ... —திரு. டாக்டர், மா. இராசமாணிக்கனார் அவர்கள், M.A., M.O.L., L.T., சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. | 107 |
| 10. | நாட்டு நலத்திட்டம் (தொழில் வளர்ச்சி) ... —திரு. "தமிழ் நாவலர்" வித்துவான், சி. அரசப்பனார் அவர்கள், உறையூர், திருச்சி. | 115 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 11. | குடி இயல்பு (நாடகம்) ... —திரு. வித்துவான், த. கோடப்பிள்ளை அவர்கள், டால்மியாபுரம். | 121 |
| 12. | தமிழ் இசை (நுண் கலை) ... —திரு. புலவர்மணி, வித்துவான், தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள், மதுரை. | 128 |
| 13. | புலவர் மொழி போற்றிய புரவலர்கள் ... —திரு. சைவப்புலவர்–பண்டித, அ. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், வடிவீசுவரம், நாகர்கோவில். | 134 |
| 14. | சிறு சேமிப்பு ... —திரு. ம. இலட்சுமிநாராயணன் அவர்கள், B.SC., B.T., திருத்தவத்துறை. | 141 |
| 15. | நாடகக் கலைஞர் ... —திரு. வித்துவான், தி. ச. சுப்பிரமணியம் அவர்கள், பசுமலை. | 147 |
| 16. | விஞ்ஞான முன்னேற்றத்தால் விளைவது நன்மையே (சொற்போர் மன்ற நிகழ்ச்சி) ... —திரு. வித்துவான். நா. சாமிநாதன் அவர்கள், M.A., B.O.L., திருச்சிராப்பள்ளி. | 154 |
| 17. | வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் ... —திரு. வித்துவான், பொன். சீனிவாசன் அவர்கள், நெய்க்குப்பை. | 162 |
| 18. | தாவரங்களின் மேல் வளரும் தாவரங்கள் ... —திரு. A. P. இராமன் அவர்கள், B.SC., L.T., உதவித் தலைமையாசிரியர், சே. தி. உயர்நிலைப் பள்ளி, உறையூர், திருச்சி. | 170 |
| 19. | குடும்பக்கலை ... —திருமதி வித்துவான், செல்லப்பாப்பா கீரன் அவர்கள், இலால்குடி | 174 |
| 20. | பேசாத தம்பி ... —திரு. அ. சீனிவாச ராகவன் அவர்கள், M.A., முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி. | 182 |

## மனப்பாடம் செய்யவேண்டியவை

| | | | வரிகள் |
|---|---|---|---|
| 1. | வாழ்த்து | | |
| | கடவுள் / மொழி / நாடு | | 16 |
| 2. | அறவுரை | | |
| | திருக்குறள் 1, 2, 4, 5, 9, 14, 15, 26, 27, 28, 29, 35 | — | 24 |
| | ஏலாதி—4, 6, 7 | — | 12 |
| | சிறுபஞ்சமூலம்—1, 2, 6 | — | 12 |
| 3. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| | மணிமேகலை 55 முதல் 72 வரை | — | 18 |
| | பெரிய புராணம் 21, 22 | — | 8 |
| 4. | பல்சுவை | | |
| | மெய்யறிவு —5 | — | 4 |
| | வழிபாட்டுப் பாடல்கள் 1, 2 | — | 8 |
| | | | 102 |

## மனப்பாடம் செய்யத்தக்கவை

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் | — | முழுதும் |
| 2. | ஏலாதி | | ,, |
| 3. | சிறுபஞ்சமூலம் | | ,, |
| 4. | பெரிய புராணம் | | ,, |
| 5. | வில்லிபாரதம் | | ,, |
| 6. | இரட்டுற மொழிதல் | | ,, |
| 7. | வருணனை | | ,, |
| 8. | வழிபாட்டுப் பாடல்கள் | | ,, |

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய ஜய ஹே !

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## தமிழாக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும்,
குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன ;
நின் புகழைப் பாடுகின்றன ;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி ! வெற்றி ! வெற்றி !

## உறுதி மொழி

என்னுடைய தாய்நாடு இந்தியா, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள்.

என் தாய்த் திருநாட்டை நான் உளமார நேசிக்கிறேன். வளமும், வேறுபாடும் நிறைந்த அதன் மரபினை எண்ணி இறும்பூதடைகின்றேன். அன்னதன் புகழுக்கேற்பத் தகுதியுடைய நன்மகனாய் விளங்க நான் என்றும் முயல்வேன்.

அன்புடன் என்னை ஈன்ற அன்னை, ஆருயிர்த் தந்தை, ஆசிரியப் பெருந்தகை, ஆன்ற முதியோர் அனைவரையும் வணங்குவேன். மாண்புடை அன்னவர் அனைவரையும் நன்னயம் துலங்க நடத்துவேன்.

என் நாட்டிற்கும், என் மக்களுக்கும் என் வந்தனை என்றும் உரியது. என் நாட்டவர் வாழ்வின் நலமும் வளமுமே என் போற்றரும் இன்பம் என்று உளம் பூரிப்பேன்.

# தமிழ் மலர் மாலை

## ஒன்பதாம் வகுப்பு

## செய்யுட்பகுதி

## I. வாழ்த்து

### 1. கடவுள் வாழ்த்து

**தாயுமானவர்:** தாயுமானவர் என்னும் பெரியார் பரம் பொருளாகிய இறைவனைப்பற்றிப் பாடிய பாடல்களின் தொகுதிக்குத் தாயுமானவர் பாடல் என்ற பெயர் வழங்குகின்றது.

**தாயுமானவர்:** திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு ஒரு காலத்தில் உண்டாகிய பெயர். தாயும் + ஆனவர். சிவபெருமான் உலகிலுள்ள சகல உயிர்கட்கும் தந்தையாக இருத்தலேயன்றித் தாயாகவும் ஆனார் எனப் பொருள்படும்.

**நூலாசிரியர்:** தாயுமானசுவாமிகள். **ஊர்:** வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காடு. **தந்தை:** கேடிலியப்பப் பிள்ளை. **குலம்:** சைவ வேளாளர் குலம். **மனைவி:** மட்டுவார் குழலி. **மகன்:** கனகசபாபதி. **ஞானாசிரியர்:** மௌனகுரு சுவாமிகள். **மதம்:** சமரச சைவசித்தாந்த மதம். **காலம்:** கி. பி. 18ஆம் நூற்றாண்டு.

எனக்கெனச்செயல் வேறிலை ; யாவுமிங் கொருநின்
தனக்கெனத்தகு முடல்பொரு ளாவியும் தந்தேன்
மனத்தகத்துள அழுக்கெலாம் மாற்றி எம்பிரான்நீ
நினைத்ததெப்படி அப்படி அருளுதல் நீதம்.

—தாயுமானவர்

#### அருஞ்சொற்பொருள்

**தந்தேன் - அர்ப்பணம் செய்தேன், அழுக்கு - மனக்குற்றம், மாற்றி - போக்கி, நீதம் - நீதி.**

பயிற்சி

**பிரித்தெழுதுக :**

வேறிலே, அழுக்கெலாம்.

**வினுக்கள் :**

1. தாயுமானவர்—குறிப்பு வரைக.
2. தாயுமானவர் கடவுளே வேண்டுவது என்ன ?

## 2. தமிழ்த்தாய் வாழ்த்து

ஆசிரியர் : பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், தனவணிக மரபினர் ; கி. பி 1953ஆம் ஆண்டு வரை இருந்தவர். திருவாசகத்துக்கு விரிவுரை எழுதியும், வடமொழி நூல்கள் சிலவற்றை மொழி பெயர்த்தும், தமிழ் நூல்கள் சிலவற்றுக்கு உரை எழுதியும் தமிழ்த்தொண்டு புரிந்தவர். செய்யுள் நயம் புலப்பட விரிவுரை ஆற்றும் வல்லமை உடையவர். சைவ சமயத்தினர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் பேராசிரியராய் இருந்தவர்.

பாலொடு தேனும் பழச்சுவையும் போன்றினிமை
சாலச் சிறந்த தமிழன்னை—நீல
மணிமிடற்ருேன் பெற்ற மடவரல்பொற் பாத
அணிமலரே நல்ல அரண்.

—மு. கதிரேசச் செட்டியார்

அருஞ்சொற்பொருள்

சால : உரிச்சொல் (மிகுதி என்னும் பொருள் உடையது). மணி மிடறு - அழகிய கழுத்து. மடவரல் - பெண், இங்குத் தமிழ்த்தாயை உணர்த்தியது. தமிழ்த்தாய் இறைவனுடைய மகள் என்பது கருத்து. அரண் - பாதுகாப்பு.

பயிற்சி

**வினுக்கள் :**

1. ஆசிரியர் குறிப்பு வரைக.
2. தமிழ் அன்னே என்ன என்ன சிறப்புக்களே உடையவள் ?

**பிரித்தெழுதுக :**

பாலொடு, பழச்சுவை, தமிழன்னே.

**சேர்த்தெழுதுக :**

பழம் + சுவை, தமிழ் + அன்னே.

# 3. நாட்டு வாழ்த்து

ஆசிரியர் : தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார். பெற்ரோர் : சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மையார். பிறப்பிடம் : திருநெல்வேலியைச் சார்ந்த எட்டையபுரம். காலம் : கி. பி. 1882 முதல் 1921 முடிய. இவர் எழுதிய நூல்கள் தேசிய கீதங்கள், பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, ஞானரதம் முதலியன.

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு

சரணங்கள்

ஞானத்திலேபர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்நாடு—இந்தப் (பாருக்) 1
தீரத்திலேபடை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலேமிகு சாத்திரங்கண்டு
தருவதிலே உயர்நாடு—இந்தப் (பாருக்) 2

—பாரதியார்

## அருஞ்சொற்பொருள்

ஞானம் - அறிவு, கானம் - இசை, ஈரம் - இரக்கம், சாத்திம் - நல்ல நூற்கள், பார் - உலகம்.

## பயிற்சி

**வினுக்கள் :**

1. ஆசிரியர் குறிப்பு வரைக.
2. பாரத நாட்டின் பெருமைகள் யாவை?

**பிரித்தெழுதுக :**

பாருக்குள்ளே, அமுதாக, பரமோனத்திலே.

**எதிர்ச்சொல் கூறுக :**

ஞானம், வீரம், உயர்ந்தநாடு, ஈரம்.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

திருக்குறள்—பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. கடைச்சங்க நூல்களை மேற்கணக்கு என்றும் கீழ்க்கணக்கு என்றும் பிரிப்பர். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பவை செய்யுட்களின் அடியளவைக் கொண்டு பிரிக்கப்பட்டவை. மேற் கணக்கில் பதினெட்டு நூல்களும், கீழ்க்கணக்கில் பதினெட்டு நூல்களும் உள. கீழ்க்கணக்கு நூல்களை,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய ஆங்கீழ்க் கணக்கு.

என்னும் செய்யுளால் அறியலாம்.

திருக்குறள் உலகமக்கள் அனைவர்க்கும் ஏற்ற நல்லுரைகளைக் கூறுவது. அதனால் அது மேற்கு நாட்டு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால் இந்நூல் முப்பால் என்னும் பெயர்பெற்றது. இந்நூல் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஆக மொத்தம் இந்நூல் 1330 குறட்பாக்களை உடையது.

நூலாசிரியர் : திருவள்ளுவர். காலம் : கி. பி. இரண்டாம் நூற்றாண்டு. இவர் மன்னர்க்குக் கருமத் தலைவராக இருந்தவரெனவும், நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தாரெனவும், மயிலையிலும், மதுரையிலும் வாழ்ந்தவரெனவும் கூறுவர். சீத்தலைச் சாத்தனார் போன்ற புலவர்கள் குறள்களையும் அதன் கருத்துக்களையும் எடுத்துத் தத்தம் நூல்களில் ஆங்காங்கே ஆண்டிருப்பதொன்றே வள்ளுவரது பெருமைக்குப் போதிய சான்றாகும்.

### அறத்துப்பால் — பாயிரம்

#### கடவுள் வாழ்த்து

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை இல. 1

வான்சிறப்பு

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 2

நீர்த்தார் பெருமை

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

அறன்வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. 4

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 5

இல்லறவியல் - இல்வாழ்க்கை

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன் ? 6

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் ? 7

மக்களைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 8

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. 9

விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 10

இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 11

செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 12

நடுவுநிலைமை

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 13

அடக்கமுடைமை

எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 14

பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 15

அழுக்காருமை

அழுக்காற்றி னல்லவை செய்யார் இழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. 16

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனில் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 17

ஒப்புரவறிதல்

ஒப்புரவி ஞல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. 18

ஈகை

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 19

புகழ்

ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதொன் றில். 20

துறவறவியல் - வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் ? 21

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். 22

இன்னா செய்யாமை

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டுபவர். 23

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 24

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடும் நோய். 25

பொருட்பால் - அரசியல் - இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம். 26

கல்வி

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 27

கேள்வி

நுணங்கிய கேள்வியரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 28

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 29

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 30

தெரிந்து செயல்வகை

நன்றாற்றல் உள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 31

வலியறிதல்

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 32

காலமறிதல்

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 33

இடனறிதல்

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். 34

தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 35

சுற்றந் தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 36

பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 37

செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 38

கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. 39

ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 40

ஆள்வினையுடைமை

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 41

அங்கவியல் - அமைச்சு

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். 42

வினைத் தூய்மை

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 43

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். 44

நட்பு

நவிற்றொறு நூனயம் போலும் பயிற்றொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 45

ஒழிபியல் - மானம்

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 46

சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 47

நாணுடைமை

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. 48

குடி செயல்வகை

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 49

உழவு

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 50

—திருவள்ளுவர்.

## அருஞ்சொற்பொருள்

1. வேண்டுதல் - விரும்புதல்; (தொழிற்பெயர்). இடும்பை - துன்பம்; இலானடி - 6ஆம் வேற்றுமைத் தொகை; இலான் + அடி.

2. விசும்பு - விண்; துளி - மழைத்துளி; பசும்புல் - பண்புத் தொகை; மற்று - அசை.

3. இருமை - இம்மை, மறுமை (இன்பம், துன்பம்). பூண்டார் - மேற்கொண்டார். பிறங்கிற்று - உயர்ந்தது. அறம்பூண்டார் - 2ஆம் வேற்றுமைத் தொகை.

4. ஈனும் - அளிக்கும்; ஆக்கம் - தொழிற்பெயர்; அறத்தி னூஉங்கு - இன்னிசையளபெடை.

5. ஒல்லும்வகை - இயன்ற வகையில்; ஓவாதே - இடைவிடாமல்.

6. ஆற்றின் - ஒழுகின்; போஒய் - செய்யுளிசை அளபெடை.

7. கற்பு - சான்றோர்களால் கற்பிக்கப்பட்டது; தின்மை - கலங் காமை. பெரின் - பெற்றால்.

8. தம்மில் + தம் = தம்மிற்றம்; மன்னுயிர் - நிலைபெற்ற உயிர், மாநிலம் - உரிச் சொற்றொடர்; தம்மக்கள் - 6ஆம் வேற்றுமைத் தொகை.

9. அறம் - அறச்செயல்கள்; மறத்திற்கும் - கொடுமைச் செயல் களை நீக்குதற்கும்; மறம் - தீச்செயல்.

10. இல் இருந்து ஓம்பி வாழ்வதெல்லாம் எனக் கூட்டுக: வேளாண்மை - உதவி, விருந்து - புதுமை. (புதிதாக வருகின்றவர் களுக்கு ஆகிவந்தது) பண்பாகு பெயர்.

11. ஈரம் - அன்பு, அளைஇ - கலந்து, சொல்லிசை அளபெடை. படிறு - வஞ்சனை; செம்பொருள் - நற்செயல். (அறம்)

12. வையகம் - நிலவுலகம்; வானகம் - விண்ணகம்; வையகமும் வானகமும் - எண்ணும்மைகள்.

13. ஒரீஇ - விலகி, சொல்லிசை அளபெடை; அறிக - வியங்கோள் வினைமுற்று; கெடுவல் - தன்மை ஒருமை வினைமுற்று.

14. செல்வம்தகைத்து - வேறோர் செல்வமாம் சிறப்பினையுடையது; பணிதல் - தொழிற்பெயர்; எல்லார்க்கும் - முற்றும்மை.

15. ஒறுத்தார் - தண்டித்தார்; பொதிந்து - போற்றி; ஒறுத்தாரை, பொறுத்தாரை - வினையாலணையும் பெயர்கள்.

16. அழுக்காறு - பொறாமை; முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அல்லவை - அறம் அல்லாதவை. ஏதம் - துன்பம்; படுபாக்கு - உண்டாதலை.

17. அஃகாமை - சுருங்காமை; வெஃகாமை - விரும்பாமை; செல்வத்திற்கு + யாதெனின் = செல்வத்திற்கியாதெனின் (குற்றிய லிகரம்.)

18. ஒப்புரவு - உதவி (உலகியல்). கேடு - அழிவு, முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

19. வறியார் - பொருள் இல்லாதவர்; ஈகை - கொடை; குறி எதிர்ப்பு - அளவு குறித்து வாங்கும் கடன். ஈவதே - தேற்றேகாரம்.

20. ஒன்றுஉயர்ந்த - தனக்கு இணையின்றி ஒன்றாக ஓங்கிய, பொன்றாது - அழியாது.

21. வாய்மை - மெய்மை; தீமை இலாத - பிற உயிர்க்குத் தீங்கு பயவாத சொல்.

22. சினம்காக்க - தன் மனத்துச் சினம் வராமல் காக்க. கொல்லும் - கெடுக்கும். காவாக்கால் - கால் விகுதிபெற்ற வினையெச்சம்.

23. நோய் - துன்பம்; வேண்டுபவர் - விரும்புவோர்; இது வினையாலணையும் பெயர். செய்தார் என்பதும் அது. நோய் என்னும் சொல் பலமுறை பயின்று வருதலால் இக் குறட்பா 'சொற் பொருட்பின் வருநிலை' யணி.

24. நெருநல் - நேற்று; உடைத்து - உடையது; குறிப்பு வினை முற்று.

25. காமம் - விருப்பம்; வெகுளி - வெறுப்பு. நோய் - வினைப் பயன்கள்.

26. காட்சிக்கு எளியன் - நீதி முறை பெற விரும்புவோர்க்கும், தம் குறையைக்கூற விரும்புவோர்க்கும் காண்பதற்கு எளியன். மீக்கூறும் - (உலகம்) மேன்மையாக உயர்த்துக் கூறும்.

27. எண் - கணக்கு. எழுத்து - இலக்கணம். என்ப - என்று சொல்லப்படுபவை; ஈற்றடியில் உள்ள என்ப - என்று சொல்வார்; பலர்பால் வினைமுற்று; வினையாலணையும் பெயர்.

28. நுணங்கிய - நுட்பமான; வணங்கிய - பணிவான.

29. மெய்ப்பொருள்: பண்புத்தொகை. யார் - யார் அடுக்குத் தொடர்.

30. தமர் - சுற்றத்தார்; ஒழுகுதல் - தொழிற்பெயர்.

31. நன்று ஆற்றல் உள்ளும் - வேற்று வேந்தர் மாட்டு நன்மைகளைச் செய்யும்போதும் (உம் - சிறப்பு உம்மை).

32. ஆகாறு - பொருள் வரும் வழி. இட்டிது - சிறியது. போகாறு - செல்லும் வழி.

33. கூம்பும்பருவம் - அடங்கி இருக்கும் காலம், சீர்த்த இடத்து - காலம் வாய்த்தபொழுது; மற்று - அசை.

34. எஞ்சாமை - செய்யவேண்டிய செயல்களையெல்லாம் குறைபடாமல்; எண்ணி - ஆராய்ந்து.

35. தேற்றம் - தெளிவு; உறுதி. அவா - பேராசை.

36. பற்றற்ற கண்ணும் - செல்வம் இழந்த இடத்தும். சுற்றத்தார் - உறவினர்.

37. அரண் - பாதுகாவல். அச்சம் - பயம். பொச்சாப்பு - மறதி (உவமையணி.)

38. பைங்கூழ் - பசுமையான பயிர் (பண்புத்தொகை). ஒறுத்தல் - தண்டித்தல் (தொழிற்பெயர்). கொடியாரை - வினையாலணையும் பெயர்.

39. பொறை - சுமை; கண்ணோட்டம் - தம்மொடு பயின்றார் கூறுவன மறுக்கமாட்டாமை, தாட்சணியம், நாகரிகம்.

40. உரம் - வலிவு. உள்ள வெறுக்கை - ஊக்கமாகிய செல்வம்.

41. தெய்வம் - ஊழ்வினை, மெய் - உடம்பு.

42. அறிகொன்று - அறிந்தவர் கூறிய சொல்லை அழித்து, அறியான் எனினும் - அரசன் தானும் அறியாதவனாய் இருந்தாலும்; உழையிருந்தான் - அமைச்சன்.

43. சான்றோர் - அறிவு ஒழுக்கங்களால் சிறந்தோர். செய்யற்க - வியங்கோள் வினைமுற்று.

44. அடுத்தது - தன்னை அடுத்திருக்கின்ற பொருளின் நிறத்தை. கடுத்தது - மிக்கது; அடுத்தது - ஆகுபெயர்.

45. பயில்தொறும் - பழகும்தோறும். நவில்தொறும் - கற்குந்தோறும். தொடர்பு - நட்பு.

46. இகழ்வார் - தன்னை இகழ்கின்றவர். நிலை - நிற்றல், புத்தேள் - தேவர், உய்யாது - செலுத்தாது.

47. நோன்மை - தவம், கொல்லா நலத்தது - கொல்லாமை என்னும் அறத்தின் கண்ணது, சான்றாண்மை - பிறர் குற்றம் சொல்லாத குணத்தின் கண்ணது.

48. பீடுநடை - பெருமிதத்தை உடைய நடை, பிணி - கண்டார்க்கு நோயாம்.

49. குடி செய்து வாழ்வான் - தன் குடியை உயரச்செய்து வாழ்பவன்.

50. இலம் என்று - யாம் வறுமை உடையோம் என்று நினைத்து, அசைஇ இருப்பார் - சோம்பி இருப்பார், அசைஇ - சொல்லிசை அளபெடை, நகும் - சிரிப்பாள். இது செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; பெண்பாலுக்கு வந்தது.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. "யாண்டும் இடும்பையில"—யாருக்கு? ஏன்?
2. "பசும்புல் தலை காண்பரிது"—எப்போது?
3. உலகத்தில் யாருடைய பெருமை உயர்ந்தது?
4. அறன் வலியுறுத்தலை வள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார்?
5. மண்ணுயிர்க் கெல்லாம் இனிது யாது?
6. மறத்திற்கும் அன்பு துணையாதல் எவ்விதம்?

7. இன்சொல்லின் இலக்கணம் யாது?
8. "செல்வர்க்கே செல்வம் தகைத்து"—எது?
9. யாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர்?
10. "விற்றுக்கோட்டக்க துடைத்து"—எது?
11. ஈகையின் சிறப்பினை எடுத்து விளக்குக.
12. புகழின் மேன்மையினை விளக்குக.
13. வாய்மையின் இலக்கணம் யாது?
14. தன்னைக்காக்க விரும்புபவன் எதைக் காக்க வேண்டும்? ஏன்?
15. உலகு எவ்விதப் பெருமை படைத்தது?
16. மக்களின் கண்கள் எவை?
17. அறிவின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவது யாது?
18. வன்மையுள் எல்லாம் தலையாயது எது?
19. கீழ்க்கண்ட தொடர்களை விளக்குக.
    (1) நன்றுற்றலுள்ளும் தவறுண்டு.
    (2) ஈன்றுள் பசி காண்பான்.
    (3) நவிறொறும் நூனயம் போலும்.
20. தெளிவு யாரிடம் அமையும்?
21. "பைங்கூழ் களைகட்டதனொடு நேர்"—எது?
22. கீழ்க்கண்ட உவமைகளைப் பொருளுடன் பொருத்துக:
    (1) அடுத்தது காட்டும் பளிங்குபோல்.
    (2) கொக்கொக்க.
23. இகழ்வார் பின்சேறலின் இழிவினை விளக்குக.
24. நோன்மை, சால்பு—யாவை?
25. பீடுநடை பிணியாதல் எப்போது?
26. உலகம் யாரைச் சுற்றமாகக் கொள்ளும்?

II. திருவள்ளுவரைப்பற்றியும், திருக்குறளைப்பற்றியும் இருபது வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

III. பிரித்து எழுதுக:

இலானடி, தம்மிற்றம், படிறிலவாம், நோயெல்லாம், கொக்கொக்க, பைங்கூழ், பயிறொறும், புகழல்லால், கடுஞ்சொல்லன்.

IV. சேர்த்தெழுதுக:

பசுமை + புல், விருந்து + ஓம்பி, கோள் + தக்கது + உடைத்து, நோய் + இன்மை, நவில் + தொறும்.

V. திருக்குறட் பகுதியில் வந்துள்ள (1) அளபெடைகள் (2) வினைத் தொகை (3) பண்புத்தொகை ஆகியவற்றைத் தெரிந்தெடுத்து எழுதுக.

VI. இப்பகுதியில் வந்துள்ள அணிகளை எடுத்தெழுதுக.

## 2. ஏலாதி

ஏலாதி என்பதும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு சரக்குகளைக் கொண்டது. இவற்றுள் முதன்மையானது ஏலமாதலின் இம்மருந்து ஏலாதி எனப் பெயர் பெற்றது. உடல் நோயைப் போக்கும் ஏலாதி சூரணத்தைப் போல், இந்நூற் கருத்துக்கள் உயிர்நோயைப் போக்குதலால் 'ஏலாதி' எனப் பெயர் பெற்றது.

இந்நூல் ஆசிரியர் கணிமேதையார். இவர் சைன சமயத்தினர். கி. பி. 2ஆம் நூற்றுண்டினர். இவர் சோதிடத்தில் வல்லவர்.

### வனப்பு வாழும்

சென்ற புகழ்செல்வம் மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை—என்றும்
வழிவந்தார் பூங்கோதாய் ! ஆறு மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு. 1

### கற்றவர்க்கு ஒப்பானவன்

இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி—னடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும். 2

### நல்லோர் நட்பு

உடன்படான் கொல்லான் உடன்றூர்நோய் தீர்த்து
மடன்படான் மாண்டார் நூன்மாண்ட—இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யார்க்கும்வா யார்க்கு மணைந்து. 3

### பண்டிதராய் வாழ்வார்

கற்றூரைக் கற்ற துணரா ரெணமதியார்
உற்றூரை யன்னணமே யோராமல்—அற்றூர்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவைஈந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று. 4

### அறிவு நூல் ஆய்ந்தவன்

பொய்யான் புலாலோடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியார் இனஞ்சேரான்—வையான்
கயலிய லுண் கண்ணாய்! கருதுங்கா லென்று
மயல வயலவர் நூல். 5

### அமைச்சர் இயல்பு

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்ற லுடைமை—முடியோம்பும்
நாற்றஞ் சுவைகேள்வி நல்லா ரினஞ்சேர்தல்
தேற்றனேற் றேறு மமைச்சு. 6

### சொல் வகை

மையேர் தடங்கண் மயிலன்ன சாயலாய்!
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பார்—பொய்யே
குறளை கடுஞ்சொல் பயனில்சொான் றன்கும்
மரலையின் வாயினவா மற்று. 7

—கணிமேதையார்

### அருஞ்சொற்பொருள்

1. வனப்பு - அழகு. பெண்ணை அழைத்துக் கூறுவதுபோல் கூறுவதற்கு மகடூஉ முன்னிலை என்று பெயர்.

2. இடர் - துன்பம், காமுறும் - விரும்பும், கண் - இடப் பொருளில் வந்த ஏழாம் வேற்றுமை உருபு. விண்டவர் - சொன்னவர்.

3. மடன் - அறியாமை, மாண்ட - மாட்சிமைப்பட்ட, யார்க்கும் - முற்றும்மை.

4. உற்றார் - உறவினர், ஓராமல் - ஆராயாமல், அற்றார் - வறுமையுடையார், உறையுள் - வீடு. கற்றாரை, உற்றாரை - இவை வினையாலணையும் பெயர்.

5. இனம் - கூட்டம், கயல் - மீன், இயல் - இயல்பு.

6. வன்கண்மை - கொடுமை, வன்மை - வலிமை, ஓம்பும் - பாதுகாக்கும், மடி - சோம்பல், உடைமை - செல்வம், குடி - குடி மக்கள், வன்மை + கண்மை - பண்புத் தொகை, சுவைகேள்வி - உம்மைத் தொகை.

7. ஏர் - பொருந்திய, தடங்கண் - உரிச்சொற்றொடர், குறளை - கோள்கூறல், கடுஞ்சொல் - (கடுமை + சொல்), நான்கும் - முற்றும்மை, மரலை - அழிவு.

### பயிற்சி

I. **வினாக்கள் :**

1. ஏலாதி ஆசிரியர் குறிப்பு வரைக.
2. 'மகடூஉ முன்னிலை' விளக்குக.

3. " நூல் வேண்டா விடும் " யாருக்கு?
4. பண்டிதராய் வாழ்வார் யார்?
5. அமைச்சர் இயல்பு யாது?
6. நான்கு வகைத் தீச்சொற்கள் யாவை?

II. பிரித்தெழுதுக :

பூங்கோதாய், கீழினம், நூன்மாண்ட, புலாலொடு, கயலியல், குடியோம்பல், தடங்கண்.

III. சேர்த்தெழுதுக :

கீழ் + இனம்; சொல் + காணில்; தடம் + கண்.

IV. இப்பகுதியில் வந்துள்ள மகடூஉ முன்னிலைகளை எடுத்தெழுதுக.

V. இப்பகுதியில் வந்துள்ள வினையாலணையும் பெயர், தொகைநிலைத்தொடர் முதலியவற்றை எடுத்தெழுதுக.

VI. உறுப்பிலக்கணங் கூறுக :

ஈந்தார், வாழ்வார், மாண்டார், உடன்றுர்.

VII. வாக்கியங்களில் அமைக்க :

புகழ்செல்வம், காமுறும், உண்டி உறையுள் உடுக்கை, நூல்வன்மை, தடங்கண்.

## 3. சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் என்பது கண்டங்கத்திரி வேர், நெருஞ்சில் வேர், சிறுவழுதுணை வெர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர் ஆகிய ஐவகை வேர்களையும் கொண்டு செய்யப்படும் மருந்து. மூலம் - வேர். உடற்பிணியை நீக்கும் அருமருந்துபோல் உயிர்ப் பிணியை நீக்கும் ஐயைந்து செய்திகளைக் கூறும் செய்யுட்களாலாகிய நூலாதலின் இது 'சிறு பஞ்ச மூலம்' எனப் பெயர் பெற்றது.

இந்நூலின் ஆசிரியர் மாக்காயனுர் மகனுர் காரியாசான். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். கி. பி. 2ஆம் நூற்றுண்டினர். இவர் இந்நூலின் பாயிரச் செய்யுள் உள்பட 98 பாடல்கள் எழுதியுள்ளார்.

### கேட்பின் நகை

கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டு
மில்லாதா னெக்கழுத்தஞ் செய்தலு—மில்லாதான்
ஒல்லாப் பொருளில்லார்க் கீத்தளியா னென்றலு
நல்லார்கள் கேட்பின் நகை. 1

வாடாத வனப்பு

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பா—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு. 2

வாழ்தல் குணம்

கொண்டான் வழியொழுகல் பெண், மகன் தந்தைக்குத்
தண்டான் வழியொழுகல் தன்கிளையார்—தண்டாதே
வேல்வழி வெம்முனை வீடாது மன்னுடு
கோல்வழி வாழ்தல் குணம். 3

இருகாலெருது

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்தார்—ஆதரே
துன்ப மிலேம்பண் டியாமே வனப்புடையேம்
என்பார் இருகா லெருது. 4

உணர்வு

பூத்தாலும் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார் நூல் தேற்றுதார்—பாத்திப்
புதைத்தாலும் நாருத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 5

அறிவு

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை உயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. 6

—காரியாசான்

அருஞ்சொற்பொருள்

1. நுட்பம் - நுண்பொருள், எக்கழுத்தம் - இறுமாப்பு, ஈந்து - கொடுத்து, அளியான் - அருளுடையவன், காதிரண்டும் - உம்மை முற்றுப்பொருள்.

2. வனப்பு - அழகு, நடை - ஒழுக்கம், கோடாமொழி - நடுவு நிலை தவறுத சொல். கோற்கு - செங்கோலுக்கு, சேவகர் - போர்

வீரர், வாடாத - கெடாத, 'வன்கண்மை' என்பது 'வன்கண்' என மையீறு கெட்டு நின்றது.

3. கொண்டான் - கணவன், ஒழுகல் - நடத்தல், தண்டான் - கட்டளைக்கு நீங்காதவன், கிளை - உறவு, குணம் - நன்மையாம், நாடு - இடவாகு பெயர்.

4. தேவரே - தேவரை ஒப்பர். தேருங்கால் - ஆராயுமிடத்து, பூதரே - பசாசுகளோடு ஒப்பர். ஆதரே - அறிவிலியாவர். இருகால் எருது - இருகால் மாடுகளுக்குச் சமமாம். தேவரே, பூதரே, ஆதரே - ஏகாரம் - தேற்றம், பிரிநிலையுமாம்.

5. மூத்தாலும் - வயது முதிர்ந்தாலும், நாருத - முளைக்காத, உணர்வு - நல்லறிவு. பூத்துக்காயாமரம் - பாதிரி முதலியன. இஃது எடுத்துக்காட்டுவமையணி.

6. நல்ல - பிறர் செய்த நல்லனவற்றை, ஒல்லும் - இயலும், ஒல்லை - விரைவில், ஊற்றங்கோலாகி - ஊன்றுகோல்போல் நின்று உதவி, மாயம் - வஞ்சனை, மாற்றுக - போக்குக. நல்ல, தீய - குறிப்பு வினையாலணையும் பெயர்கள். 'ஊன்றுகோல்' என்பது வலித்து அம் சாரியைப் பெற்று 'ஊற்றங்கோல்' என்ருயிற்று.

## பயிற்சி

I. வினுக்கள் :

1. சிறுபஞ்சமூலம் ஆசிரியர் குறிப்பு வரைக.
2. கேட்பின் நகை விளைக்கக்கூடியது யாது?
3. எது வாடாத வன்கண் வனப்பு?
4. எப்படி வாழ்தல் குணமாகும்?
5. யார் இருகால் எருது?
6. யாருக்கு உரைத்தாலும் செல்லாதுணர்வு?
7. சிறந்த அறிவு எது?

II. கீழ்க்கணக்கு நூல்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

III. பிரித்தெழுதுக :

காதிரண்டும், ஈத்தளியான், கோற்கதுவே, வெம்முனை, மரமுமுள, நன்றறியார்.

IV. சேர்த்தெழுதுக :

வனப்பு + ஆகும். பொருள் + இல்லார்க்கு, வழி + ஒழுகல், முன்பு + பொருள். வித்து + உள.

V. இப்பகுதியில் வந்துள்ள பண்புத்தொகை, அணிகள் முதலியவற்றை எடுத்தெழுதுக.

VI. வாக்கியங்களில் அமைக்க :

கல்லாதான், வழியொழுகல், முன்பொருள் செய்யாதார், நாருதவித்து.

# III. தொடர்நிலைச் செய்யுள்

## 1. மணிமேகலை—விழாவறை காதை

மணிமேகலை : கோவலனுக்கு மாதவியிடம் பிறந்த மகள் மணிமேகலையாவாள். இவளது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிப்பது 'மணிமேகலை' என்னும் நூலாகும்.

இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இது 30 காதைகளை யுடையது; பௌத்தமதக் கோட்பாடுகளைப் பெரிதும் தழுவி எழுதப்பட்ட நூலாகும்.

இந் நூலாசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இவர் சீத்தலை என்ற ஊரில் பிறந்து மதுரையில் எண்வகைக் கூலங்களாகிய தானியங்களை வாணிபம் செய்து வந்தமையால் இப் பெயர் பெற்றார். இவர் இளங்கோவடிகளின் நெருங்கிய நண்பராவார். காலம் : கி. பி. 2ஆம் நூற்றாண்டு. மதம் : பௌத்தம். இவர் சங்க இலக்கியங்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய இவற்றுள் பாடினவாகச் சில பாடல்கள் கிடைத்திருக்கின்றன. திருவள்ளுவமாலையில் இவர் பாடியதாக ஒரு வெண்பா காணப்படுகிறது.

### விழாவறை காதை

பண்டைக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தை வளமுறச் செய்வதற்கு அகத்தியர் நினைத்தார். தொடித்தோள் செம்பியன் இந்திரனை வணங்கி அனுமதி பெற்றான். இருபத்தெட்டு நாள் விழா. பல சமய வாதிகளும் கூடினர். விழாவை மறந்தால் துன்பம் நேரிடும். முரசறைவோன் ஊரை வாழ்த்தி முரசறைந்தான். புகார் நகரம் பொலிவுடன் அலங்கரிக்கப்பட்டது. இப் பகுதியில் இந்த வருணனை மிக அழகுடன் விளங்குகின்றது.

### மணிமேகலை—விழாவறை காதை

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோள் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று

மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
வமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்

மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறம் தத்தம் இயல்பினில் காட்டும்
சமயக் கணக்கரும் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகி
கரந்துரு வெய்திய கடவு ளாளரும்

பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுட்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்

மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
விடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடுந்
தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடு
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டு

மாயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மண்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
ஏற்றுரி போர்த்த விடியுறு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை

முரசுகடிப் பிகூஉ முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமும் மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்

ஆயிரங் கண்ணோன் தன்னோ டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பில்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோர் இயம்பின தாகிப்

பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை உணர்ந்தோர் துணிபொரு ளாதலில்
தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பொலிவுடன் பரப்புமின்

காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பு நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்

பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்
கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை

ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்
தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்

பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்
வெண்மணல் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரு

நாளேழ் நாளினு நன்கறிந் தீரென
ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

—சீத்தலைச்சாத்தனுர்

## அருஞ்சொற்பொருள்

1. உலகம் - நன் மக்களுடைய ஒழுக்கம். திரியா - வேறு படாத. விழுச்சீர் - சீரிய புகழ். மூதூர் - பண்புத் தொகை. மலயம் - பொதிய மலை. அருந்தவன் - அகத்தியன்.

5. விண்ணவர் தலைவனை - இந்திரனை, நாலேழ் - இருபத்தெட்டு, நேர்ந்தது - (இந்திரன்) உடன்பட்டது, கடவார் - பிழையார், வழக்கு - உலகியல், நன்பொருள் - தத்துவம்.

15. இத்திறம் - இவ்வகைகளை, ஈண்டிய - கூடிய, பாடை - மொழி, ஐம்பெருங் குழு - அமைச்சர், புரோகிதர், சேனுதிபதி, தூதுவர், சாரணர். குழீஇ - கூடி, கொற்றவன் - முசுகுந்தன், துயரம் - (அசுரர்விட்ட தாமதாத்திரத்தால் வந்த) துன்பம்.

25. எயிறு - பல், இடும்பை - துன்பம், மா இரு ஞாலம் - பெரிய உலகம், கச்சை - கீழ் வயிற்றில் கட்டும் கச்சை, வானகம் - மேகம், மாரி - மழை, நால்வேறு தேவர் - முப்பத்து மூவர்; அவர் வசுக்கள் எண்மர்; திவாகரர் பன்னிருவர்; உருத்திரர் பதினெருவர்; மருத்துவர் இருவர். பல்வேறு தேவர் - பதினெண் கணங்கள், பொன்னகர் - தேவலோகம், கோட்டி - சபை, வஞ்சி - மரம், தாமம் - மாலை, பத்தி - வரிசை, காழ் - காம்பு. மதலை - கொடுங்கை; பற்றுக்கோடு. பொதியில் - அம்பலம், 60. புண்ணிய நல்லுரை - தரும பதம், ஒட்டிய - சபதம் செய்த, பொருள் - தத்துவம், பட்டி மண்டபம் - பல்கலை மண்டபம், பற்றுமாக்கள் - பகைவர், துருத்தி - ஆற்றிடைக் குறை. தாழ்பூந் துறைகள் - நீர்த் துறைகள், ஒளிறு - விளங்கும், கண் முரசு - முகத்தையுடைய முரசம், அகநகர் - உள் நகர்; இது பட்டினப் பாக்கம். வெண் மணல் - பண்புத் தொகை.

## பயிற்சி

I. வினுக்கள் :

1. மணிமேகலை ஆசிரியர் குறிப்பு வரைக.
2. குறிப்பு வரைக:
   அமரர் தலைவன், தொடித்தோள் செம்பியன், கரிகால் வளவன், பட்டி மண்டபம், ஐம்பெருங் குழு.

3. இந்திர விழா எதற்காக ஏற்பட்டது?
4. விழாவின் ஏற்பாட்டை 15 வரிகளில் தொகுத்து எழுதுக.
5. முதுகுடிப் பிறந்தோன் யாது கூறி முரசறைந்தான்?

II. பிரித்தெழுதுக :

ஓங்குயர், மூதூர், மண்ணகம், நாலேழ், இத்திறம், மாயிரு ஞாலம், கோணிலை, காழூன்று, நல்லுரை.

III. சேர்த்தெழுதுக :

விழு + சீர்; அருமை + தவன், தூங்கு + எயில்; ஐந்து + பெரும் + குழு; எட்டு + பேராயம்; வளவன் + நீங்கிய; தெய்வம் + ஈருக; பாங்கு + அறிந்து.

IV. இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் செய்க :

1. 'ஆயிரங்கண்ணோன் விழாக்கால் கொள்கென'.
2. 'பொன்னகர் வறிதாப் போதுவர்'.
3. 'பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்'.

V. பொருள் கூறுக :

விழு, மலயம், எயில், விழவு, பாடை, வேட்கை, குருதி.

## 2. பெருங்கதை—குறிஞ்சி நிலங்கடந்தது

பெருங்கதை என்பது உதயணனைப் பற்றிக் கூறும் பெரிய கதை. பெருங்கதை என்னும் இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் எனும் ஆறு பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு காண்டத்திலும் பல உட்பிரிவுகள் உள்ளன. இந் நூலுக்கு உதயணன் கதை, கொங்குவேள் மாக்கதை என்னும் வேறு பெயர்களும் உண்டு.

இந் நூலாசிரியர் கொங்குவேளிர் ஆவார். இவர் கொங்கு வேளாள மரபினர். கொங்கு நாட்டிலுள்ள விசயமங்கலம் என்னும் ஊரினர். மதம்: சமணம். இவரது காலம் கி. பி. 7ஆம் நூற்ருண்டு. உதயணன் குறிஞ்சி நிலத்தைக் கடந்தது இதில் கூறப்படுகிறது.

### குறிஞ்சி நிலங்கடந்தது

விரைந்தன னாகிய விறல்கெழு வீரியன்
முகைந்த புறவின் முல்லையம் பெருந்திணை
இகந்த பின்றை இருபாற் பக்கமும்

## குறிஞ்சி நில வருணனை

அளப்பரும் படிவத் தான்றோர் போலத்
துளக்க மில்லாத் திருத்தகு நிலைமைய

மதுரம் பொதிந்த மழலையங் கிளவிச்
சதுரச் சந்திச் சமழ்ப்பில் கலாபத்துத்
தொட்டிமை கலந்த தூசுவிரி அல்குல்
பட்டிமை ஒழுக்கில் பலர்தோய் சாயல்
அரம்போ ழுவ்வளை மகளிர் மனத்தின்

நிரம்பா நெறியின வாகி அரும்பொருள்
கல்லா மாந்தர் உள்ளம் போல
நொய்ந்நுரை சுமந்து மெய்ந்நயந் தெரிந்த
மேலோர் நண்பிற் ருழ விழிதரும்
அருவி அருஅ வாகலின் அயல

பருவி வித்திய பைந்தாட் புனந்தோ
றீரமில் குறவர் இதண்மிசைப் பொத்திய
ஆரத் துணியொடு காரகில் கழுமிய
கொள்ளிக் கூரெரி வெள்ளி விளக்கிற்
கவரிமா னேறு கண்படை கொள்ளும்

தகரம் கவினிய தண்வரைச் சாரல்
நறையு நாகமு முறையிரு வேரியும்
வருக்கையும் மாவும் வழையும் வாழையும்
அருப்பிடை நிவந்த வாசினி மரமும்
பெருஞ்சண் பகமும் பிண்டியும் பிரம்பும்

கருங்கோல் குறிஞ்சியும் கடிநாள் வேங்கையும்
சுள்ளியும் சூரலும் வள்ளியும் மரலும்
வால்வெள் வசம்பும் வள்ளிதழ்க் காந்தளும்
பால்வெண் கோட்டமும் பனிச்சையும் திலகமும்
வேயும் வெதிரமும் வெட்சியும் குளவியும்

ஆய்பூந் தில்லையும் மணிமா ரோடமும்
ஆரமும் சந்தும் அகிலும் தமாலமும்
ஏரில வங்கமும் ஏலமும் இருப்பையும்

... ... ... ... பாய்தலிற் கிழிந்து
பொதிக்க ணிருஅற் பூம்புறம் புதைஇ

மதிக்கண் மறைந்த மாசுண மான
மணிவரை மருங்கின் அணிபெற வொழுகி
முதிர்பூங் காவின் உதிர்தா தளைஇ
மலைவாழ் குறவர் மகளிர் குடையும்
சுனைவாய் நிறைக்கும் சூருடைச் சிலம்பில்

பாடுபெயர்த் தறியாப் பக்கம் பயின்ற
கோடுயர் நிவப்பிற் குளிர்மலை யோங்கி
மாட நிறைத்த மறுகை போல
நிரப்ப மெய்தி முரப்புநிலை முனுது
கல்லிற் காட்டிய செல்லற் றூவழிப்

பிண்டி பிணங்கிப் புலம்புக் கதுபோல்
கண்டவர்க் காயினுங் கடத்தற் காகா
அருமை எய்திய வரிலமை யாரிடை
இறும்பம லடுக்கத் தின்றேன் கொளீஇய
பொங்கெரி விளக்கம் ... ... ...

ஏனற் பெருந்தினை ஏனங் காவலர்
கானற் பெருமரம் கண்ணுற மாட்டி
இருள்பட வோங்கிய எல்லை வேலிதொறும்
வெருள்படப் போக்கிய வெண் தீ விளக்கம்
மங்குல் வானத்து மதிநிலா மழுங்கக்

கங்குல் யாமத்துக் கடையற வெழுந்த
கதிரோன் போல வெதிரெதிர் கலாஅய்
நறும்பூஞ் சோலை நாற்றங் கமழிய
குறிஞ்சிப் பெருந்திணை குலாஅய்க் கிடந்த
பதிற்றுப் பத்தொடு விதிப்பட எண்ணிய

ஐயைந் தெல்லையு மரையிருள் நடுநாள்
எய்தி இகந்தின்றால் இற்றமை பிடியென்.

—கொங்கு வேளிர்

## அருஞ்சொற்பொருள்

2. முகைந்த - அரும்பிய, புறவு - காடு, படிவத்து - தவ ஒழுக்கத்தையுடைய, துளக்கம் - துளங்குதல், சலித்தல். சதுரச் சந்தி - நாற் சந்தி, கபாலம் - கூட்டம், சிலம்பில் - மலையில், தொட்டிமை - அழகு, பட்டிமை - வஞ்சனையாகிய, போழ் - அறுக்கப்பட்ட, நிரம்பா - முடிவடையாத, 6. பருவி - பருத்தி, ஈரம் - அன்பு, ஆரத்துணி - சந்தன மரத் துண்டம், வெள்ளி - வெண்மை நிறம், 21. தகரம் - ஒருவகை மரம், நறை - நறைக்கொடி, நாகம் - மரம், வழை - சுரபுன்னை, அருப்பிடை - அரிய வழியின் இடையே, ஆசினி - ஈரப் பலா, பிண்டி - அசோகு, கருங் கோற் குறிஞ்சி - கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரம், சுள்ளி - ஆச்சாமரம், சூரல் - ஒருவகைப் பிரம்பு, பால்வெள் - மிக வெள்ளிய, பனிச்சை - ஒருவகை மரம், வேயும் வெதிரமும் - மூங்கில் வகைகள், மாரோடம் - செங் கருங்காலி, 32. ஆரமும் சந்தும் - சந்தன மர வகைகள், தமாலம் - பச்சிலை, இறுஅல் - தேனடை, புகைஇ - புதைத்து, மதிக்கண் - சந்திரனை, அளைஇ - கலந்து, சூர் - தெய்வ மகளிர், கோடு - மலையுச்சி, 43. மறுகை - வீதி, நிரப்பம் - நிரம்புதல், செல்லல் - துன்பம், அரில் - சிறு தூற்றின் பிணக்கு, இறும்பு - குறுங்காடு, கானல் - சோலை, கலாஅய் - கலந்து, குலாஅய் - வளைந்து.

## பயிற்சி

I. **வினாக்கள் :**

1. குறிஞ்சி நிலத்தின் வருணனையைப் பதினைந்து வரிகளில் வரைக.
2. பெருங்கதை ஆசிரியர் குறிப்பு வரைக.
3. சாரலின் இயல்பை விளக்குக.

II. **உவமையைப் பொருளொடு பொருத்துக :**

1. 'கல்லா மாந்தர் உள்ளம் போல'.
2. 'மதிக்கண் மறைந்த மாசுண மன்ன'.
8. 'மாட நிறைத்த மறுகை போல'.
4. 'கங்குல் காமத்துக் கடையற வெழுந்த கதிரோன் போல'.

III. **பிரித்தெழுதுக :**

பைந்தாள், கருங்கோல், பொங்கெரி, ஐயைந்து.

IV. **பொருள் கூறுக :**

புறவு, துளக்கம், கலாபம், பட்டிமை, இறுஅல், மறுகை, ஆரம், ஆசினி, சுள்ளி, சூர், கானல்.

# 3. பெரியபுராணம்

## திருநாளைப்போவார் நாயனுர் புராணம்

பெரியபுராணம் என்பது சிவனடியார்களாகிய திருத்தொண்டர் அறுபத்துமூவரது வரலாற்றைக் கூறும் நூல். திருத்தொண்டர் புராணம் என்பதே இந்நூலுக்கு இதன் ஆசிரியர் இட்டபெயராகும். பெரியபுராணம் என்பதற்குப் பெருமை பொருந்திய புராணம் என்பது பொருள். ஒன்பது குழுவினராகிய தொகையடியார் வரலாற்றுக் குறிப்பும் இதனுள் உள்ளது. பன்னிரு திருமுறைகளில் இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

இந்நூலாசிரியர் சேக்கிழார் சுவாமிகள் ஆவார். இவர் தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் சைவவேளாள மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தவர். அநபாய சோழனது தலைமை அமைச்சாரக இருந்தவர். கடவுளிடத்தும், அடியார்களிடத்தும் மிக்க அன்பும், அரசியலறிவும், உலகியலறிவும் ஒருங்குபெற்ற அறிஞராவார். மன்னர் இவர் வாயிலாக அடியார் வரலாற்றைக் கேட்டு அதனை ஒரு நூலாக ஆக்கித்தருமாறு வேண்டினன். மன்னன் வேண்டுகோட்கிணங்கி இறைவனுர் 'உலகெலாம்' என்று அடிஎடுத்துக் கொடுக்க அதனையே முதலாக வைத்துத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினுர். ஆதலின், இவருக்குத் 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற சிறப்புப் பெயரும் தோன்றலாயிற்று. இவரது காலம் 12ஆம் நூற்றுண்டு.

பாடப்பகுதி: நந்தனுர் வளம் நிறைந்த ஆதனூரில் பிறந்தார். அவர் தமக்கு மானியமாகவிட்ட நிலத்தின் வருவாயைக் கொண்டு தமக்குரிய பரம்பரைத் தொழிலைச்செய்து வந்தார். சிவனை மறவாச் சிந்தையர். தோற்கருவிகளுக்கு வேண்டும் தோல், வார் முதலியவற்றைச் செய்துகொடுத்துச் சிவத்தொண்டு புரிந்தார்.

நந்தனுர் சிவன் கோவில் முன்நின்று சிவனைத்தொழுது மகிழ்ந்து வந்தார். ஒருநாள் தில்லை சென்று நடராசப் பெருமானை வணங்க விரும்பினுர். கோவிலினுள் புக அஞ்சி நந்தனுர் கவலைகொண்டார். இதை அறிந்த இறைவன் தில்லை வாழ் அந்தணரைத் தீ அமைத்துக் கொடுக்கும்படி கனவில் சொல்ல, அவ்விதமே அமைத்த தீயில் நந்தனுர் மும்முறை வலம்வந்து இறைவனை வணங்கி அதனுள் புகுந்தார். நந்தனுர்

முனிவராய்க் காட்சி அளித்தார். அந்தணர்களும் முனிவர்களும் துதி செய்தனர். பின்னர் அந்தணர்களும் நந்தனாரும் இறைவனை வணங்கினர். நந்தனார் இறைவன் திருவடியில் ஒன்றினார். சிவபெருமான் நாளைப்போவாருக்குத் திருவருள் புரிந்தார்.

### ஆதனூரின் வளம்

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனல் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணை நீர் நன்னாட்டு மேற்கானாட் டாதனூர் 1

நீற்றலர்பே ரொளிநெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம். 2

நனைமருவும் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடும் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி அசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனல்மழையோ? மதுமழையோ? பொழிவொழியா பூஞ்சோலை. 3

பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
தாளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழமிதப்ப வண்பலவின்
நீளமுதிர் களிஇழிதேன் நீத்தத்தில் எழுந்துகளும். 4

### புலைப்பாடியின் இயல்பு

மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையில்
சுற்றவிரும் பியகிழமைத் தொழில்உழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி. 5

### நந்தனார் இயல்பு

இப்படித்தா கியகடைஞர் இருப்பின்வரைப் பினின்வாழ்வார்;
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைந்தஉணர் வொடும்வந்தார்;
அப்பதியில் ஊர்ப்புலைமை ஆன்றதொழில் தாயத்தார்;
ஒப்பிலவர்; நந்தனார் எனஒருவர் உளரானார். 6

பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினல் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறிநின்ருர். 7

நந்தனர் தொழில்

ஊரில்விடும் பறைத்துடவை உணர்வுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்ருர் தொண்டினல் ;
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோவில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும். 8

போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலும்இசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையும்இவை அளித்துள்ளார். 9

இவ்வகையால் தந்தொழிலின் இயன்றவெலாம் எவ்விடத்தும்
செய்வனவும் கோவில்களில் திருவாயிற் புறநின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினல் ஆடுதலும்
அவ்வியல்பில் பாடுதலு மாய்நிகழ்வார் அந்நாளில். 10

திருப்புன்கூர் சென்றது

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினெடுந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
யருத்தியினு லொருப்பட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினல் வந்தவ்வூர் மருங்கணைந்தார். 11

விடை விலகியது

சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயி'
னேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறு மெயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்தார். 12

தில்லைகாண வேட்டது

இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
வுய்த்த பெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப. 13

'நாளைப் போவேன்' என்றது

அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பி னங்கெய்த
வொன்றியவணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
யென்றிதுவு மெம்பெருமா னேவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதன்மிக "நாளைப்போ வே"னென்பார். 14

தில்லை சென்றது

நாளைப்போ வேனென்று நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியினின்றும் போய்
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைவார். 15

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையு
மல்குபெருங் கிடையோது மடங்கணெருங் கினவுங்கண்
டல்குந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார். 16

இறைவன் கனவிலே தோன்றியது

இவ்வண்ண மிரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
வவ்வண்ண நினைந்தழிந்த வடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார் மன்றினடங் கும்பிடுவ
தெவ்வண்ண மெனநினைந்தே யேசறவி னொடுந் துயில்வார். 17

இன்னறரு மிழிபிறவி யிதுதடையென் றேதுயில்வா
ரந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார். 18

"இப்பிறவி போய் நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணைவா யெ"ன்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னரருளி யம்பலத்தே மேவினார். 19

நந்தனார் உருமாறியது

கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கா
ரெய்தியவப் பொழுதின்கண் ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முலடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார். 20

### தில்லை வாழ்ந்தணர் நந்தனரைக் கைதொழுதது

திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்று
ரருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல் வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரா மறைமுனிவர். 21

### நந்தனர் இறையொடு கலந்தது

தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யொல்லைபோ யுள்புகுந்தா ருலகுய்ய நடமாடு
மெல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால். 22

—சேக்கிழார்

### அருஞ்சொற்பொருள்

1. திகழ்ந்த - தெளிந்த, புனல் - நீர், திரை - அலை, மருங்கு - பக்கம், முளரி - தாமரை, பணை - வயல், உலக - இடவாகுபெயர், வளம்பதி - பண்புத்தொகை.

2. வன்குலை - வலிய நெற்கதிர், தகட்டுவரால் - தகடுபோன்ற வரால், பகடு - எருமை, சால் - படைச்சால், அலவன் - நண்டு, முருகு- மணம், நிறைகரும்பு - வினைத்தொகை. சாற்றலைவன் குலை-சாறு + அலை + வன்மை + குலை, உயிர்க்க - செய் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

3. நனை-அரும்பு, தினகரன் - சூரியன், கனம் - மேகம், மது - தேன், பொதுளி - வினையெச்சம், செறிதளிர் - வினைத்தொகை, செழுந்தரு - பண்புத்தொகை.

4. பைங்காய் - பசுமையான காய், தெங்கு - தென்னமரம், முட்டி - மோதி, வாளை - வாளைமீன், நீத்தம் - பெருக்கம், உகளும் - குதிக்கும். விரிமணம், கிழிதேன் - வினைத்தொகைகள், தடங்கிடங்கு - உரிச்சொல் தொடர், தேன் நீத்தம் - உருவகம்.

5. கிழமை - உரிமை, கிளை - சுற்றம், துவன்றி - நெருங்கி, சுரை- சுரைக்கொடி, புல் - புல்லால், குரம்பை - குடிசை, புலைப்பாடி - புலைச்சேரி, சுற்றம் - தொழிலாகுபெயர்.

6. பரிவு - அன்பு, கழற்கே - திருவடிக்கே, கடைஞர் - புலையர், வரைப்பின் - இடத்தில், தாயத்தரர் - உரிமையாளர், மெய்ப்பரிவு - பண்புத்தொகை, கழல் - தானியாகுபெயர், விளைந்த உணர்வு - பெயரெச்சத்தொடர்.

7. பிறைக் கண்ணி - பிரையாகிய மாலையைச் சூடிய, அயல் - வேறு, பிறைக் கண்ணி - உருவகம், மறந்தும் - உம் உயர்வு சிறப்பு, நெறிநின்றார் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

8. கூர் + இலைய = கூரிலைய, மூன்று + குடுமி = முக்குடுமி, அண்ணல் - சிவன், செய்வார் - வினையாலணையும் பெயர்.

9. விசிவார் - இழுத்துக்கட்டும் வார், தந்திரியும் - தோலும், அளித்து - கொடுத்து, இசை - பாட்டு.

10. மெய்விரிவு - உண்மை பொருந்திய, நிகழ்வார் - வாழ்வார், எலாம் - இடைக்குறை, ஆடுதல் - தொழிற்பெயர்.

11. செம்மை + அடி = சேவடி, உறும் - பொருந்திய, சேவடி - பண்புத்தொகை. ஒருப்பட்டு - வினையெச்சம்.

12. சீர் - சிறப்பு, நேர்வார் - அருள்புரிவார், கண்ணுதலார் - சிவபெருமான், போர் ஏறு - நந்தி, நினைந்தார்க்கு - வினையாலணையும் பெயர், நேர்வார் - முற்றெச்சம்.

13. இத்தன்மை - இவ்வாறு, விரவுவார் - வாழ்வார், தில்லை - சிதம்பரம், உய்த்த - தூண்டிய, காதல் - அன்பு, மகிழ்பதி - வினைத்தொகை, பெருங்காதல் - பண்புத்தொகை.

14. புலர்ந்த - விடிந்த, எய்த - அடைந்த, துயிலார் - எதிர்மறை வினைமுற்று, போக்கு - தொழிற்பெயர்.

15. தரியாது - மனம்பொருது, கமுகு - பாக்குமரம், பழனம்-வயல், தரியாது - எதிர்மறை வினையெச்சம், பிறவிப்பிணிப்பு - உருவகம், பழம்பதி - பண்புத்தொகை.

16. திரு + எல்லை = திருவெல்லை, வேள்வி - யாகம், நில் + (ன்) + ற் + ஆர் = நின்றார்.

17. அழிந்த - வருந்திய, அயர்வு - சோர்வு, ஏசறவு - துயரம், இரவுபகல் - உம்மைத்தொகை.

18. இன்னல் - துன்பம், மன்னும் - நிலைபெற்ற, அணைத்து - சென்ற, முறுவல் - புன்னகை, ஆகுவார் - வினையாலணையும் பெயர்.

19. எரி - தீ, முப்புரி - மூன்றுபுரி, மேவினார் - பொருந்தினார், இ + பிறவி = இப்பிறவி.

20. உன்னி - நினைத்து, அழல் - தீ, இமாய (இ + மா) - இந்தமாயமான, உரு - உருவத்தை, மெய் - மார்பில், வேணி - சடை, கழல்உடல் - தானியாகு பெயர், புக்கார் - புகு (புக்கு) + ஆர், வெண்ணூல் - பண்புத்தொகை.

21. திரு - சிறப்பு, பரவ - வணங்க, மறை - வேதங்கள், மறைமுனிவர் - நந்தனார், பயில்(ன்) + ற் + ஆர் = பயின்றார்.

22. எய்தி - அடைந்து, கொல்லை - புனம், ஒல்லை- விரைந்து, தலைப்பட்டார் - அடைந்தார், ஒல்லை - இடைச் சொல்.

## பயிற்சி

**I. வினாக்கள் :**

1. ஆதனூரின் வளம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
2. ஆதனூர்ப் புலைப்பாடியின் தன்மை யாது?

3. நந்தனரின் சிவபக்திச் சிறப்பினை வரைக.

4. திருப்புன்கூரில் நந்தனருக்குச் சிவபெருமான் அருளிய செயலை வரைக.

5. நந்தனர் ‘ திருநாளைப்போவார் ’ என ஏன் அழைக்கப்பட்டார்?

6. தீயில் மூழ்கி எழுந்த நந்தனர் தோற்றத்தை வரைக.

II. இடங்கூறிப் பொருள் விளக்கம் செய்க :

(1) ‘ அங்கெய்த ஒன்றி அணை தரு தன்மை உறுகுலத்தோடு இசைவில்லை ’.

(2) ‘ மைவண்ணத் திருமிடற்ருர் மன்றில் நடங்கும்பிடுவ தெவ் வண்ணம் ’.

(3) ‘ இன்னல் தரும் இழிபிறவி இதுதடை ’.

III. பிரித்தெழுதுக :

செழுமணி, நன்னுட்டு, பைங்காய், அவ்வூர், கூரிலைய, அவ்வியல் பில், சீரேறு, காரேறு, அன்றிரவு, பழம்பதி.

IV. சேர்த்தெழுதுக :

சேறு + அலவன் ; மணம் + கமழும் ; பசுமை + கொடி ; செம்மை + அடி ; சீர் + ஏறு ; இ + வண்ணம்.

V. இப்பகுதியில் வந்துள்ள வினைத்தொகை, பண்புத் தொகை, தொழிற்பெயர், உரிச் சொற்ருெடர் முதலியவற்றை எடுத்தெழுதுக.

VI. உறுப்பிலக்கணம் கூறுக :

செய்வார், அணைந்தார், நின்ருர், துயில்வார், எழுந்தார்.

## 4. வில்லி பாரதம்—கன்னபருவம்

வில்லி பாரதம் என்பது வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய பாரதம் எனப் பொருள்படும். பாரதம் என்பது பரதரது கதை. சந்திரகுல மன்னனுகிய துட்டியந்தனுக்குச் சகுந்தலையிடம் தோன்றிய மகன் பரதன். அவன் மரபினர் பாரதர். அவர்களே பாண்டவரும், கௌரவருமாவார். அத்தகைய பரதன் மரபினரது கதையைக் கூறும் நூலே பாரதமாகும். இந்நூலை முதலில் வடமொழியில் எழுதியவர் வியாச முனிவர். அதன் வழிநூலே வில்லி பாரதமாகும். வில்லி பாரதம் 10 பருவங்களையும், ஒவ்வொரு பருவத்தின் உட்பிரிவாகப் பல சருக்கங்களையும் உடையது.

இந் நூலாசிரியர் வில்லிபுத்தூரார். இவர் திருமுனைப்பாடி என்னும் நடு நாட்டில் சனியூரில் வைணவ அந்தணர் குலத்தில்

தோன்றியவர். இவர் வக்கபாகை வரபதி யாட்கொண்டான் என்னும் சிற்றரசனுல் ஆதரிக்கப்பட்டவர். அவன் வேண்டுகோட்கிணங்கியே பாரதத்தை அருமையான சந்தத் தமிழில் இயற்றினூர். இவரது காலம் கி. பி. 15ஆம் நூற்ருண்டு. தந்தையார் வீரராகவாச்சாரியார்.

பாரதப் போர் மூண்டது. துரியோதனுதியர் பக்கத்தில் பீஷ்மர் பத்துநாட்கள் வரையில் சேனைத் தலைவராயிருந்தார். பின்னர் துரோணர் ஐந்து நாட்கள் சேனைத் தலைவராயிருந்து மாண்டார். பிறகு கன்னன் சேனைத் தலைவனுனன். பதினேழாம் நாள் நடந்தபோரில் அவன் வலிமை குறைந்தவனுனன்.

### கன்னன் கண்ணனிடம் வருதல்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போ 1
யாதவன் சாய்தல் கண்டருளி
முத்தருக் கெல்லாம் மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் 'செருநீ
யொழி' கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னுகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான்.

### இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

" தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த 2
தரணியில் தளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் ;
மேருவி னிடைத்தவம் பூண்டேன் ;
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன் ;
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தொன்ருல்."

### கன்னனிடம் கண்ணன் விரும்பிய பொருள்

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப, 3
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றுகொள் விசயனி விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்

நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்" கென நான்மறை யவனும்
"ஒன்றிய படிநிலு புண்ணியம் அனைத்தும்
உதவு" கென் றலுமுள மகிழ்ந்தான்.

#### கன்னன் கூறுதல்

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை 4
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ!"

#### கன்னன் இரத்தங்கொண்டு தானம் அளித்தல்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச 5
விறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை உவகைக் கருத்தினல் நோக்கிக்
"கைப்புனல் உடன்றரு" கென்ன
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்.

#### கன்னனுக்கு வரம்

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன் 6
மகிழ்ந்து "நீவேண்டிய வரங்கள்
சொல்லுக உனக்குத் தருதும்" என்றுரைப்பச்
சூரன்மா மதலையும் சொல்வான்;
"அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினும் ஏழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ அளித்தருள்" என்றான்.

### கண்ணன் வரம் அளித்தல்

மைத்துனன் உரைத்த வாய்மை கேட்டையன் 7
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணை நீ ராட்டி
"எத்தனை பிறவி எடுக்கினும் அவற்றுள்
ஈகையும் செல்வமும் எய்தி
முத்தியும் பெறுதி முடிவில்" என் றுரைத்தான்
மூவருள் ஒருவனும் மூர்த்தி.

### கண்ணன் அளித்த காட்சி

போற்றிய கண்ணன் கண்டுகண் களிப்பப் 8
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோன்றிய படியே தோற்றினன் முடிவும்
தோற்றமும் இலாதபைந் துளவோன்.

### கன்னன் அடைந்த மகிழ்ச்சி

அமரரா னவரும் அமரயோ னிகளும் 9
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார்;
"சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் வீடவும் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான்.

### கன்னன் கூறுதல்

"தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுக ணண்மைச்
செருவிலென துயிரனைய தோழர் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோனுக்(கு)

உரைபெறுநற் கவசகுண் டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே,
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே.''

—வில்லிபுத்தூரார்.

## அருஞ்சொற்பொருள்

1. அத்த வெற்பு - சூரியன் மறையும் மலை, விற்கிடை - வில்கிடக்குந் தூரம், முத்தர் - முத்தியடைந்தோர், வெயிலவன் புதல்வன் - கன்னன். சிலை - வில், செரு - போர், அடை + த்(ந்) + த் + ஆன் = அடைந்தான்.

2. தாண்டிய - மோதுகிற, ஈண்டிய - மிகுந்த, தளர்ந்தவர் - வினையாலணையும் பெயர், கவனம் - கதி, துரகம் - குதிரை, சுடர் - சூரியன், பெருந்துயர் - பண்புத்தொகை, தடந்தேர் - உரிச்சொற்றொடர்.

3. ஒன்றியபடி - உள்ளபடியே, நவில்க - கூறுக - வியங்கோள் வினைமுற்று, மகிழ் + த் (ந்) + த் + ஆன் மகிழ்ந்தான்.

4. யாக்கை - உடம்பு, ஓவு - ஒழிதல், அயன் - பிரமன், ஆவி - உயிர், கொள்க - வியங்கோள் வினைமுற்று.

5. இறைஞ்ச - வணங்க, எழிலி - மேகம், புனல் - நீர், முன்னம் - வாமனவதாரத்தில், அங்கை - அகம் + கை = உள்ளங்கை.

6. மல்லல் - வளப்பம், தொடையல் - மலர் மாலை, சூரன் - சூரியன், உற்பவம் - பிறப்பு, அல்லல் - துன்பம்.

7. மைத்துனன் - தன் அத்தை மகனாகிய கண்ணன், கைத்தலம் - உருவகம், மூவர் - சிவன் ; திருமால் ; நான்முகன். ஈகை - கொடை.

8. புணரி - கடல் நீர், முகில் - மேகம், மாற்றிய - நீக்கிய, பஞ்சாயுதம் - ஐம்படை (சங்கு, சக்கரம், கதை, வாள், வில்.), உறழ் - ஒத்த, கரா - முதலை, குஞ்சர ராசன் - கசேந்திரன், பைந்துளவோன் - பசிய துளசி மாலையை அணிந்த கண்ணன்.

9. அமர யோனிகள் - தேவகுலத்தார், நாண்மலர் - அன்றலர்ந்த கற்பக மலர், சமரம் - போர், அமரர் - தேவர், கமலம் - தாமரை, பணிந்தார் = பணி + த் (ந்) + த் + ஆர்.

10. தறுகண் - அஞ்சாமை, செம் சோறு கடன் - செவ்வையாகப் போட்டுப் பாதுகாத்த சோற்றுக் கடமை, மருதிடை - இரட்டை மருத மரங்களிடையே.

## பயிற்சி

**I. வினாக்கள்**

1. அந்தணர் உருவங்கொண்ட கண்ணன் எத்தகையவன் ?
2. கண்ணன் கன்னனிடம் யாசித்தது என்ன ?

3. கண்ணன் சொன்ன பதில் என்ன ?
4. கன்னன் கேட்ட வரம் யாது ?
5. கண்ணன் கொடுத்த வரம் யாது ?
6. கண்ணன் காட்சி எத்தகையது ?
7. கன்னன் எந்தக் காரணத்துக்காகப் பெருமகிழ்வு கொண்டான் ?

II. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் செய்க :

1. 'செரு நீ யொழிகென'
2. 'ஒன்றியபடி நின் புண்ணியம் அனைத்தும் உதவுக'
3. "புண்ணியம் இதனினும் பெரிதோ !"
4. "கைப்புனல் உடன் தருக"
5. "முத்தியும் பெறுதி முடிவில்"

III. இவற்றை விளக்குக :

1. 'வெயிலவன் புதல்வன்'
2. 'மூவுலகமும் உடன் கவர்ந்தோன்'
3. 'குஞ்சர ராசன் முன் அன்று தோற்றியபடி'
4. 'மருதிடை முன் தவழ்ந்தருளும் செங்கண்மால்'

IV. பிரித்தெழுதுக :

கருங்கடல், வெங்கணை, குவித்திறைஞ்ச, மூவுலகு, வெவ்வினை, பைந்துளவோன், செஞ்சோறு.

V. பொருள்கூறுக :

ஆதவன், தரங்கம், இறைஞ்சலர், உற்பவம், புணரி, தறுகண்.

VI. இப்பகுதியில் வந்துள்ள உரிச் சொல், உவமைத் தொகை, பண்புத் தொகை, வினையாலணையும் பெயர் முதலியவற்றை எடுத்தெழுதி விளக்குக.

## 5. பாஞ்பாலி சபதம்—துரியோதனன் பொருமை

பாஞ்சாலி சபதம் என்பது பாஞ்சாலி செய்த சபதம் என விரியும். துரௌபதி பாஞ்சால நாட்டு மன்னன் மகளாகையால் பாஞ்சாலி எனவும் கூறப்படுவாள்.

பாஞ்சாலியின் துகிலைத் துரியோதனன் ஆணையால் அவன் தம்பி துச்சாதனன் மன்னரும் புலவரும் கூடிய சபையில் உரிய, அதனால் அவள் வெகுண்டு கூறிய சபதமே "பாஞ்சாலி சபதம்" என்று கூறப்படுகிறது.

இந் நூலாசிரியர் சி. சுப்பிரமணிய பாரதியார். இவரைப் பற்றிய குறிப்பு முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

துரியோதனன் பொருமை: இப்பகுதி பாஞ்சாலி சபதம் முதற் பகுதியில் உள்ளது. துரியோதனன் பாண்டவர் பெருமை யுறுவதைப் பொருது பொருமை கொள்ளுகின்ருன். பாண்ட வருக்கு வந்து குவியும் புகழையும் பொருளேயும் கண்டு நெஞ்சு காய்கிருன்.

''பாஞ்சாலி சபதம்'' என்ற காவியத் துணுக்கு 308 பாடல் களேக் கொண்டது. பாரதியார் பாரத தேசத்தை மனத்திற் கொண்டு பாடியது. நாட்டுத் தலேவர்களேப் பாண்டவர்களாக வும், பாஞ்சாலியைப் பாரதத் தாயாகவும், கொடுமை யிழைக்கும் துரியோதனன் கூட்டத்தை ஆங்கிலக் கொடுங்கோலாட்சியாகவும் எண்ணிப் பாடியிருக்கின்ருர். நாமும் அந்த எண்ணத்துடன் படித்தால் பாட்டின் பெருமை விளங்கும்.

எண்ணி லாத பொருளின் குவையும்
யாங்க ணுஞ்செலுஞ் சக்கர மாண்பும்
மண்ணி லார்க்கும் பெறலரி தாமோர்
வார்க டற்பெருஞ் சேனேயு மாங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டு மின்பம் பெற்றவ னேனும்
கண்ணி லாத்திரி தராட்டிரன் மைந்தன்
காய்ந்த நெஞ்சுடன் எண்ணுவ கேளீர்! 1

வேறு

'பாண்டவர் முடியுயர்த்தே—இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை நான்
ஆண்டதோர் அரசாமோ?—எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளா மோ?
காண்டகு வில்லுடை யோன்—அந்தக்
காளே அருச்சுனன் கண்களி லும்
மாண்டகு திறல்வீமன்—தட
மார்பிலும் எனதிகழ் வரைந்துள தே!' 2

'பாரத நாட்டி லுள்ள—முடிப்
பார்த்திவர் யார்க்குமோர் பதியென்றே
நாரதன் முதன்முனி வோர்—வந்து
நாட்டிடத் தருமன்அவ் வேள்விசெய் தான் ;
சோரனவ் வெதுகுலத் தான்—சொல்லும்
சூழ்ச்சியும் தம்பியர் தோள்வலி யும்
வீரமி லாத்தரு மன்—தனை
வேந்தர்தம் முதலென விதித்தன வே.' 3

'ஆயிரம் முடிவேந் தர்—பதி
னுயிர மாயிரங் குறுநிலத் தார்
மாயிருந் திறைகொணர்ந் தே—அங்கு
வைத்ததோர் வரிசையை மறந்திட வோ ?
தூயிழை யாடைக ளும்—மணித்
தொடையலும் பொன்னுமோர் தொகைப்படு மோ ?
சேயிழை மடவாரும்—பரித்
தேர்களும் கொடுத்தவர் சிறுதொகை யோ ? 4

ஆணிப்பொற் கலசங்க ளும்—ரவி
யன்னநல் வயிரத்தின் மகுடங்க ளும்
மாணிக்கக் குவியல்க ளும்—பச்சை
மரகதத் திரளும்நன் முத்துக்க ளும்
பூணிட்ட திருமணி தாம்—பல
புதுப்புது வகைகளிற் பொலிவன வும்
காணிக்கை யாக்கொணர்ந் தார் ;—அந்தக்
காட்சியை மறப்பதும் எளிதா மோ ?' 5

'நால்வகைப் பசும்பொன் னும்—ஒரு
நாலா யிரவகைப் பணக்குவை யும்
வேல்வகை வில்வகை யும்—அம்பு
விதங்களும் தூணியும் வாள்வகை யும்

சூல்வகை தடிவகையும்—பல
    தொனிசெய்யும் பாறைகளும் கொணர்ந்து வைத்தே
பால்வளர் மன்னவர் தாம்—அங்குப்
    பணிந்ததை என்னுள்ளம் மறந்திடுமோ?' 6

'கிழவியர் தபசியர் போல்—பழங்
    கிளிக்கதை படிப்பவன் பொறுமையென்றும்
பழவினை முடிவென்றும்—சொலிப்
    பதுங்கிநிற் போன், மறத்தன்மையி லான்
வழவழத் தருமனுக் கோ—இந்த
    மாநில மன்னவர் தலைமைதந் தார்?
முழவினைக் கொடிகொண் டான்—புவி
    முழுதையுந் தனியே குடிகொண் டான்.' 7

'தம்பியர் தோள்வலி யால்—இவன்
    சக்கர வர்த்தியென் றுயர்ந்ததும்
வெம்பிடு மதகரி யான்—புகழ்
    வேள்வி செய் தந்நிலை முழக்கியதும்
அம்புவி மன்னரெ லாம்—இவன்
    ஆணைதம் சிரத்தினில் அணிந்தவராய்
நம்பரும் பெருஞ் செல்வம்—இவன்
    நலங்கிளர் சபையினில் பொழிந்ததும்.' 8

'எப்படிப் பொறுத்திடு வேன்?—இவன்
    இளமையின் வளமைகள் அறியேனோ?
குப்பை கொலோமுத் தும்?—அந்தக்
    குரைகடல் நிலத்தவர் கொணர்ந்துபெய் தார்;
சிப்பியும் பவளங்க ளும்—ஒலி
    திரண்ட வெண்சங் கத்தின் குவியல்களும்
ஒப்பில்வை டூரிய மும்—கொடுத்து
    ஒதுங்கி நின்றார் இவன்ஒரு வனுக் கே.' 9

மலைநா டுடையமன் னர்—பல
மான்கொணர்ந் தார், புதுத் தேன்கொணர்ந் தார்,
கொலைநால் வாய்கொணர்ந் தார்—மலைக்
குதிரையும் பன்றியும் கொணர்ந்துதந் தார்;
கலைமான் கொம்புக ளும்—பெருங்
களிறுடைத் தந்தமும் கவரிக ளும்
விலையார் தோல்வகை யுங்—கொண்டு
மேலும்பொன் வைத்தங்கு வணங்கிநின் றார்.' 10

'செந்நிறத் தோல்கருந் தோல்—அந்தத்
திருவளர் கதலியின் தோலுட னே
வெந்நிறப் புலித்தோல் கள்—பல
வேழங்கள் ஆடுகள் இவற்றுடைத் தோல்
பன்னிற மயிருடைகள்—விலை
பகரரும் பறவைகள் விலங்கினங் கள்,
பொன்னிறப் பாஞ்சாலி—மகிழ்
பூத்திடும் சந்தனம் அகில்வகை கள்.' 11

'ஏலம் கருப்பூரம்—நறும்
இலவங்கம் பாக்குநற் சாதி வகை
கோலம் பெறக் கொணர்ந் தே—அவர்
கொட்டிநின் றார்கரம் கட்டிநின் றார்
மேலுந் தலத்திலு ளார்—பல
வேந்தர் அப்பாண்டவர் விழைந்திடவே
ஓலந் தரக் கொணர்ந் தே—வைத்த
தொவ்வொன்றும் என்மனத் துறைந்ததுவே.' 12

'மாலைகள் பொன்னும் முத்தும்—மணி
வகைகளிற் புனைந்தவும் கொணர்ந்துபெய் தார்;
சேலைகள் நூறுவண் ணம்—பல
சித்திரத் தொழில்வகை சேர்ந்தன வாய்,

சாலவும் பொன்னிழைத் தே—தெய்வத்
தையலர் விழைவன பலர்கொணர்ந் தார்
கோலநற் பட்டுகளின்—வகை
கூறுவதோ ? எண்ணில் ஏறுவதோ ?' 13

'கழல்களும் கடகங்களும்—மணிக்
கவசமும் மகுடமும் கணக்கில வாம்
நிழல்நிறப் பரிபலவும்—செந்
நிறத்தின் பலவும்—வெண்ணிறம்பல வும்
தழல்நிறம் மேகநிறம்—விண்ணில்
சாரும் இந்திரவில்லை நேரும்நிறம்,
அழகிய கிளிவயிற்றின்—வண்ணம்
ஆர்ந்தன வாய்ப்பணி சேர்ந்தன வாய்.' 14

'காற்றெனச் செல்வன வாய்—இவை
கடிதுகைத் திடுந்திறல் மறவ ரொடே,
போற்றிய கையினராய்ப்—பல
புரவலர் கொணர்ந்து, அவன்சபை புகுந்தார்
சீற்ற வன்போர் யானை—மன்னர்
சேர்த்தவை பலபல மந்தையுண் டாம் ;
ஆற்றல் மிலேச்ச மன்னர்—தொலை
அரபியர் ஒட்டைகள் கொணர்ந்துதந் தார்.' 15

'தென்றிசைச் சாவக மாம்—பெருந்
தீவு தொட்டேவட திசையதனில்
நின்றிடும் புகழ்ச்சீ னம்—வரை
நேர்ந்திடும் பலபல நாட்டின ரும்,
வென்றி கொள் தருமனுக் கே—அவன்,
வேள்வியில் பெரும்புகழ் விளையும்வண் ணம்,
நன்றுபல் பொருள் கொணர்ந் தார் ;—புவி
நாயகன் யுதிட்டிரன் என உணர்ந் தார்.' 16

‘ஆடுகள் சிலர் கொணர்ந் தார் ;—பலர்
ஆயிர மாயிரம் பசுக் கொணர்ந் தார் ;
மாடுகள் பூட்டின வாய்ப்—பல
வகைப்படு தானியம் சுமந்தன வாய்
ஈடுறு வண்டி கொண் டே—பலர்
எய்தினர் ; கரும்புகள் பல கொணர்ந் தார் ;
நாடுறு தயில வகை—நறு
நானத்தின் பொருள்பலர் கொணர்ந்துதந் தார்.’ 17

‘நெய்க்குடம் கொண்டுவந் தார்—மறை
நியமங்கொள் பார்ப்பனர் மகத்தினுக் கே ;
மொய்க்குமின் கள்வகை கள்—கொண்டு
மோதினர் அரசினம் மகிழ்வுற வே ;
தைக்குநற் குப்பாயம்—செம்பொற்
சால்வைகள், போர்வைகள், கம்பளங் கள்,
கைக்கு மட்டினுந் தானோ—அவை
காண்பவர் விழிகட்கும் அடங்குப வோ ?’ 18

‘தந்தத்தில் கட்டில்களும்,—நல்ல
தந்தத்தின் பல்லக்கும், வாகனமும்
தந்தத்தின் பிடிவா ளும்—அந்தத்
தந்தத்திலே சிற்பத் தொழில்வகை யும்,
தந்தத்தி லாதன மும்—பின்னும்
தமனிய மணிகளில் இவையனைத் தும்
தந்தத்தைக் கணக்கிட வோ—முழுத்
தரணியின் திருவும்இத் தருமனுக் கோ ?’ 19

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

## அருஞ்சொற்பொருள்

1. குவை - மிகுதி. மாண் - பெருமை, சக்கரம் - ஆட்சி, துய்ப்பன - அனுபவிப்பன, மைந்தன் - துரியோதனன்.

2. பார் - பூமி, தட - (உரிச்சொல்) - விசாலமான.

3. பார்த்திபர் - அரசர், பதி - ஊர், வலி - வலிமை.

4. முடிவேந்தர் - வேற்றுமைத் தொகை, குறுநிலம் - பண்புத் தொகை, சேயிழை - சிறந்த அணி (பண்புத் தொகை), பரி - குதிரை.

5. ஆணிப் பொன் - சிறந்த பொன், ரவி - சூரியன், திரள் - கூட்டம், பூண் + இட்ட (பூணிட்ட), பொலிவன - அழகு தருவன.

6. சூல் - தண்டு, வேல்வகை - வேற்றுமைத் தொகை.

7. மாநிலம் - பெரிய உலகம் - உரிச் சொற்றொடர். வழவழ - இரட்டைக் கிளவி, புவி - உலகம்.

8. மதகரி - மதத்தையுடைய யானை - வேற்றுமைத் தொகை.

9. குரைகடல் - ஒலிக்கின்ற கடல் - வினைத் தொகை.

10. நில் + (ன்) ற் + ஆர் (நின்றார்)-பன்மை வினைமுற்று.

11. செந்நிறம் - செம்மை நிறம் - பண்புத் தொகை, கதலி - வாழை, வேழம் - யானை, பகரரும் - கூறமுடியாத.

12. கோலம் - அழகு, தலம் - இடம், உறைந்தது - தங்கிற்று.

13. சாலவும் - மிகவும் (உரிச்சொல்), தையலர் - பெண்டிர்.

14. கழல் - வீரக்கழல், கவசம் - சட்டை (இரும்பு), தழல் - நெருப்பு, பணி - வேலைப்பாடு.

15. கடிது - விரைந்து (உரிச்சொல்), புரவலர் - வள்ளல்.

16. தென்றிசை - தெற்குத் திசை, (தெற்கு + திசை).

17. நாடு + உறு (நாடுறு), நறு - மணம் மிகுந்த.

18. அரசு + இனம் (அரசினம்), குப்பாயம் - நீண்ட சட்டை.

19. ஆதனம் - ஆசனம், தரணி - பூமி.

## பயிற்சி

**I. வினாக்கள் :**

1. பாரதியார் - குறிப்பு வரைக.

2. பாஞ்சாலி சபதத்தின் உட்பொருள் யாது?

3. துரியோதனன் குணங்கள் யாவை ?

4. தருமனுக்குக் கொடையாகக் கிடைத்த பொருள்களைத் தொகுத்து 15 வரிகளில் வரைக.

5. துரியோதனன் காய்ந்த நெஞ்சுடன் எண்ணியன யாவை?

II. பிரித்து எழுதுக :

பெறலரிதாமோர், விண்ணிலிந்திரன், குறுநிலத்தார், மாயிரும், சேயிழை, நால்வகை, பசும்பொன், பொன்னிறம், நற்பட்டுடைகள், தென்றிசை, வன்போர்.

III. பொருள் கூறுக :

குவை, துய்ப்பன, மாண்பு, திறை, பரி, கரி, முழவு, சிப்பி, வேழம், கழல், சால, குப்பாயம், தரணி.

IV. இப்பகுதியிலுள்ள உயிரினங்களைத் தொகுத்தெழுதுக.

V. இப்பகுதியிலுள்ள தேசங்களின் பெயர்களைத் தொகுத்தெழுதுக.

VI. இப்பகுதியிலுள்ள பண்புத்தொகை, வினைத் தொகை, உரிச் சொற்றொடர், வேற்றுமைத் தொகை, தன்மை ஒருமை வினை முற்று, தன்மைப் பன்மை வினைமுற்று முதலியவற்றை எடுத்தெழுதுக.

VII. உறுப்பிலக்கணங் கூறுக :

நின்றார், பெய்தார், கொணர்ந்தார்.

# IV. பல்சுவை

## 1. வருணனை

### 1. இருசுடர்

இப்பாடல் "சிலப்பதிகாரத்தில்" நடுகற் காதையில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும், முப்பது சிறு பிரிவுகளையும் (காதை) உடையது; எண்சுவை நிறைந்த வரலாற்று இலக்கியம்.

இந்நூலாசிரியர் இளங்கோவடிகள். காலம் : கி. பி. 2ஆம் நூற்றாண்டு. பொது நோக்கம் உடைய சமயப் பொதுமை உடையவர்.

முடிபுறம் உறிஞ்சும் கழற்காற் குட்டுவன்
குடிபுறந் தருங்கால் திருமுகம் போல,
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்
பலர்புகழ் மூதூர்க்குக் காட்டி நீங்க.

—இளங்கோவடிகள்

## 2. தென்றல்

இப்பாடல் "திருவிளையாடற் புராணத்தில்" உள்ளது. இறைவனின் திருவிளையாடல்களைக் கூறுவது; தமிழிசையும் சைவமும் பொலிவது.

இந்நூலாசிரியர் பரஞ்சோதி முனிவர். காலம்: கி. பி. 17ஆம் நூற்றாண்டு. மதம் : சைவம்.

பொங்கரி னுழைந்து வாவி புகுந்து பங்கயந் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று
தென்றல்
அங்கங்கே கலைகள்தேறும் அறிவன்போ லியங்குமன்றே!

—பரஞ்சோதிமுனிவர்

## 3. கதிரோன்

இப்பாடல் "தமிழ் விருந்து" என்ற நூலில் உள்ளது.

இந்நூலாசிரியர் "தமிழ் நாவலர்" வித்துவான் சி. அரசப்ப ஞர். இவர் தஞ்சை வட்டம் சாத்தனூரில் திரு. சிங்காரவேலுச் சோழகருக்கும், தனத்தம்மாளுக்கும் மகவாய் 4—10—1924இல் பிறந்தார். பல நூல்கள் கவிதையிலும், உரை நடையிலும் வரைந்துள்ளார். சிறந்த இலக்கியப் பேச்சாளர். தமிழாசிரியப் பணிபுரிபவர்.

காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியாரின் பாராட்டும் பதக்கமும் பெற்றுத் திருச்சிராப்பள்ளி மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தாலும் பாராட்டப் பெற்றவர்.

காலையிலே எழுந்துவரும் கதிரோனைக் காண்க!
கண்ணொளியில் தண்ணொளியைப் புகுத்திக் காட்டி
மாலையிலே ஒளிச்சுடராய் மங்கித் தோன்றி
மாநிலத்தின் புதுமையினை உதறித்தள்ளி
வேலையிலே போய்ப்புகுந்து வெப்பந் தீர்ந்து
விடிவளவும் தவமிருந்து ஆற்றல் பேணிக்
காலையிலே தோன்றிவிட்டான் கடமை செய்யக்
கதிர்காட்டும் கடமையினை நாமும் செய்வோம்.

—சி. அரசப்பனுர்

### அருஞ்சொற்பொருள்

1. உரிஞ்சும் - தேய்க்கும், மலர்கதிர் மதியம் - விரிந்த கதிர்களை யுடைய கதிரவன், மூதூர் - வஞ்சிமா நகர், முதுமை + ஊர்; பண்புத் தொகை.

2. பொங்கர் - சோலை, வாவி - குளம், பங்கயம் - தாமரை, பசுமை + கடி - (பைங்கடி), கடி - மணம்; உரிச்சொல், பந்தர் - பந்தல் என்பதன் ஈற்றுப்போலி, கொங்கு - மகரந்தப் பொடி.

3. கதிரோன் - சூரியன், தண் - குளிர்ந்த, மாநிலம் - பெரிய உலகம், வேலை - கடல், மா + நிலம் - உரிச்சொல் தொடர்; தண்மை + ஒளி (தண்ணொளி).

### பயிற்சி

**I. வினாக்கள் :**

1. செங்குட்டுவன் முகம் எதற்குவமையாகும்?
2. தென்றல் எங்கெங்கே புகுந்து வருகிறது?
3. கதிரோனின் இயல்பு யாது?

**II. பிரித்தெழுதுக :**

மூதூர், பொங்கரினுழைந்து, பைங்கடி, அங்கங்கே, கண்ணொளி, மாநிலம்.

**III. சேர்த்தெழுதுக :**

முதுமை + ஊர், கொங்கு + அலர், அங்கு + அங்கு, கண் + ஒளி, தண் + ஒளி.

IV. இப்பகுதியில் வந்துள்ள பண்புத் தொகை, உரிச் சொற்றொடர், ஈற்றுப்போலி முதலியவற்றை எடுத்தெழுதுக.

V. இக் கவிதைகளைப் போன்ற இயற்கை வருணனைகளைத் தொகுத்தெழுதுக.

## 2. மெய்யறிவு

இந் நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கில் இன்பம் தவிர மற்றைய மூன்றையும் தெரிவிப்பது. நூறு வெண்பாக்கள் உடையது.

இந்நூல் திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. கண்ணனூர்ச் சிறையில் வ. உ. சி. இருந்த பொழுது குற்றவாளிகள் நன்னெறி அடையும் பொருட்டு எழுதப் பட்டது.

இந் நூலாசிரியர் நாட்டுத் தொண்டு செய்ததைப் போலவே மொழித் தொண்டும் செய்துள்ளார். இவரியற்றிய நூல்கள் மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மெய்யறம், எனது பாடற்றிரட்டு முதலியன.

இம்மெய்மை நன்குணர்ந்தா ரின்றுவருந் தீயூழின்
வெம்மெய்யைத் துண்டுதுண்டா வெட்டிடுவர்
—தம்மெய்
அறச்செயலான் முள்ளை அரிவாள்கொண் டீர்க்குந்
திறச்செயலார் போலச் சிரித்து. 1

எப்பெயரால் கூறிடினும் எவ்வியல்பை ஏற்றிடினும்
எப்பொழுது மெய்ப்பொருள்தா னேகங்காண்
—செப்பமுடன்
அப்பொருளைப் பேணின் அறமாதி நான்குமுனை
இப்பொழுதே சேரு மிவண். 2

காலைவரு முன்னெழுந்து கைகால்கள் சுத்திசெய்து
சீலைதனை மாற்றியுயர் சிற்பொருளை—ஞாலமுள
நல்லுயிரு மேர்த்தொழிலும் நல்லரசும் வாணிகமும்
தொல்லறமும் வாழத் தொழு. 3

பின்னுனது நெஞ்சத்துட் பின்னியுள பாவமெலாம்
உன்னியவை நீக்கற் குறுதிமொழி—பன்னி
முதனுளிற் செய்தவெலா மூதறிவா லாராய்ந்
திதமான கொள்ளையலை யீர். 4

அருளீகை உண்மையறி வாசையின்மை வாய்மை
பொருளீயு மின்பமொடு போதத்—தெருளீயும்
வீடீயு மாணீயு மெய்ப்பொருளின் எண்ணரிய
பீடீயும் என்றுமிவை பேண். 5

—வ. உ. சிதம்பரம் பிள்ளை

அருஞ்சொற்பொருள்

**1.** திறம் - வலிமை, தீயூழ் - கெட்ட விதி, வெம்மெய்யை - கொடிய உடலை.

2. இயல்பை - இலக்கணத்தை, செப்பமுடன் - ஒழுக்கத்துடன், ஏகம் - ஒன்றே, அறம் ஆதி நான்கும் - அறம், பொருள், இன்பம், வீடு நான்கும்.

3. சிலைதனை - உடைகளை, ஞாலம் - உலகம், வாழ - பெருகும் பொருட்டு, சித் பொருளை - அறிவாகிய பரம்பொருளை, நல்லுயிர் - பண்புத் தொகை.

4. பின்னியுள - பற்றிப் படர்ந்துள்ள, உன்னி - எண்ணி, உறுதி மொழி பண்ணி - சத்தியம் செய்துகொண்டு, இதமான - நற் செயல், அயலை ஈர் - தீய செயல்களை விட்டுவிடுக, முதுமை + அறிவு (மூதறிவு) –பண்புத் தொகை.

5. போதம் - அறிவு, தெருள் - தெளிவு, வீடு - மோட்சம், மாண் - பெருமை, ஈயும் - கொடுக்கும், மெய்ப் பொருள் - கடவுள், பீடு - வலிமை, பேண் - காப்பாற்று, அருள் முதலிய ஐந்து, பொருள் முதலிய ஆறை யும் கொடுக்கும்.

## பயிற்சி

I. வினாக்கள் :

1. வ. உ. சி. குறிப்பு வரைக.

2. 'முள்ளைச் சீவிக் குச்சியைப் பயன்படுத்தல் போல' – இவ் வுவமையை விளக்கு.

3. யாருக்கு அறமாதி சேரும் ?

4. மக்கள் ஒழுகவேண்டிய முறையாது ?

5. பின்னுனது.................என்று தொடங்கும் பாடலை எழுதிப் பொழிப்புரை தருக.

6. அருள் முதலிய ஐந்து எவை ?

7. பொருள் முதலிய ஆறு எவை ?

II. பிரித்து எழுதுக :

நண்குணர்ந்தார், அறச்செயல், எப்பெயர், பின்னுனது, அருளீகை, வீடியும், மாணீயும், எண்ணரிய.

III. சேர்த்தெழுதுக :

எ + பொழுது, அறம் + ஆதி, முன் + எழுந்து, நெஞ்சம் + உள், முதல் + நாள், வீடு + ஈயும், அயலை + ஈர்.

IV. வ. உ. சி.யின் தமிழ்த் தொண்டை விவரி.

V. பொருள் கூறுக :

ஊழ், மெய், ஏகம், சீலை, இதம், ஈகை, மாண், பீடு.

## 3. சீட்டுக் கவி

இக்கவி, அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் சந்திர வாணன் என்பவருக்கு எழுதி விடுக்கப்பட்டது. அந்தகக்கவி வீரராகவ முதலியார் தொண்டை நாட்டிலுள்ள பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் உள்ள மன்னர், செல்வர் முதலியவர்களைப் பாடிப் பரிசில் பல பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் கழுக்குன்ற புராணம், திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் முதலியன. காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு.

மின்னுமாளிகை அநந்தை ஆதிபதி
சந்தர வாணமகி பாலன்முன்
வீரராகவன் விடுக்கும் ஓலைதன்
விரும்பினுல் வலியவே யழைத்(து)
உன்னுகாவிய மதிற்பெருத்த தொரு
கோவை யோதுகென ஓதினன்
ஓதிமாச மொருமூன்று போகியொரு
நாலுமாச மள வாகவும்
இன்னமுந்தனது செவியில் ஏறவிலை
என்னில் என்ன உலகெண்ணுமோ
இராசராசர் திறைகொள்ளும் என்கவிதை
இங்குவந்து குறையாகுமோ
தன்னைஎன் சொலுவர் என்னைஎன் சொலுவர்
தான்தமிழ்க் குமணன் அல்லவோ
தன்புகழ்க்குமிது நீதியோ கடிது
தானின் னேவருதல் வேணுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

### அருஞ்சொற்பொருள்

அநந்தை - அனந்தபுரம், சீட்டுக் கவி - கவிதையாக எழுதும் கடிதம், போகி - போய், சொலுவர் - சொல்லுவர், இது இடைக் குறை. கடிது - விரைவில் - உரிச் சொல், இன்னே - இப்பொழுதே, குமணன் - ஒரு வள்ளல்.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. அந்தகக்கவி யாருக்கு எவ்வாறு சீட்டுக்கவி அனுப்பினர் ?

2. " தன்னை என் சொலுவர், என்னை என் சொலுவர் " விளக்குக.

3. " இராச ராசன் திறை கொள்ளும் என் கவிதை " இதன் கருத்து யாது ?

II. இப் பாடலின் கருத்தைத் தொகுத்தெழுதுக.

## 4. இரட்டுற மொழிதல்

### நெல்லைச் சிலேடை வெண்பா

இந்நூலிலுள்ள வெண்பாக்கள் முதல் இரண்டு அடிகள் திருநெல்வேலியின் சிறப்பியல்புகளையும், பின்னிரண்டடிகள் அங்கெழுந்தருளியுள்ள சிவபெருமானது பெருமையினையும் குறிப்பனவாம்.

இந் நூலாசிரியர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார். மரபு வேளாளர். இவர் கோம்பி விருத்தம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். காலம் கி. பி. 1857—1946.

கோலமுறு வாவிகளும் கொங்கார் நெடும்பொழிலும்
நீலமணி வானந்தேய் நெல்லையே—பாலுறவேய்த்
தோளியுட னுடினன் தொந்தோ மெனமுன்பு
காளியுட னுடினன் காப்பு.

—வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

### அருஞ்சொற்பொருள்

பால்உற - தனது இடது பக்கத்தில் பொருந்தியிருக்கும்படி, வேய் தோளி - மூங்கில் போன்ற தோளையுடைய பார்வதி, கோலம் - அழகு, நீலம் - நீல மலரும், மணி - முத்தும், வால்நந்து - வெண்மை நிறத்தை யுடைய சங்கும், ஏய் - பொருந்தியுள்ளது.

இருவகை — நீலம் - மணி - வால் - நந்து - ஏய்
நீலம் - அணி - வானம் - தேய்
(நீலமணி வானந்தேய்)
உடல் + நாடினன்
உடன் + ஆடினன்
(உடனுடினன்)

### பயிற்சி

I. வினாக்கள் :

1. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?
2. ஆசிரியர் குறிப்பு வரைக.
3. இரு பொருள்படும் தொடர்களை விளக்குக.

II. பிரித்தெழுதுக :

கோலமுறு, கொங்கார், நெடும்பொழில், பாலுற.

III. சேர்த்தெழுதுக :

தொம் + தோம் ; தோளி + உடன் ; காளி + உடன்.

IV. இப்பகுதியில் வந்துள்ள பண்புத்தொகை, சொல்லணி, பண்பாகு பெயர், மரூஉ முதலியவற்றை எடுத்தெழுதுக.

## 5. சிறுநூல்கள்

### அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்

இத்நூல் திருவானைக்காவில் உள்ள அகிலாண்ட நாயகியின் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ் ஆகும். கடவுள் அரசர் முதலியவர்களை இளம் பிள்ளையாகப் பாவித்து அதற்குரிய பத்துப் பருவங்களிலும் அக் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டுவது.

பத்துப் பருவங்களாவன: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர். இவை ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களாம். இவற்றுள் சிற்றில், சிறு பறை, சிறுதேர் எனும் இறுதி மூன்று பருவங்களை நீக்கி அவற்றுக்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் எனும் மூன்று பருவங்களையும் அமைப்பின் பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களாம்.

இந் நூலாசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். ஊர் - திரிசிரபுரம். சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர். பெரிய கவிஞர். பல நூல்கள் இயற்றியவர்.

### வருகைப் பருவம்

பொன்னே வருக மூவுலகும்
பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன்
புதல்வீ வருக முகிற்கிளைய

மின்னே வருக மெய்ஞ்ஞான
விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப
விளைவே வருக மிகுங்கருணை
அன்னே வருக அகநெகுவார்க்(கு)
அணியே வருக அலர்மடவார்க்(கு)
அரசே வருக உரைப்பருஞ்சீர்
அம்மே வருக அழற்கரத்து
மன்னேர் உடலம் பகிர்ந்த இளம்
மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட
மானே வருக வருகவே.

—மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

## அருஞ்சொற்பொருள்

மூன்று + உலகும் (மூவுலகும்), பூத்தாய் - தோற்றுவித்தாய், புரந்தாய் - பாதுகாத்தாய், வழுதியர் கோன் - பாண்டியன், மறை நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்; பெருமை + இன்பம் (பேரின்பம்), அலர் மடவார் - கலைமகள், திருமகள் என்னும் இருவர். மாதங்கம் - யானை. மதங்கவனம் - திருவானைக்கா.

## பயிற்சி

I. வினாக்கள்:

1. பிள்ளைத் தமிழ் குறிப்பு வரைக.
2. கவிஞர் அகிலாண்ட நாயகியை எவ்விதம் அழைக்கின்றார்?
3. திருவானைக்கா எவ்வாறு நயமாக அழைக்கப்படுகிறது?

II. பிரித்தெழுதுக:

மூவுலகும், நாயேனை, முகிற்கிளைய, உரைப்பருஞ்சீர், மன்னேர், மானே.

III. சேர்த்தெழுதுக:

மெய் + ஞானம், அகம் + நெகுவார், மிகும் + கருணை, மூன்று + உலகு.

IV. இவ்வாசிரியர் எழுதிய வேறு நூல்களைக் கேட்டு அறிக.

V. இப் பகுதியில் வந்துள்ள பண்புத்தொகை, உரிச் சொற்றொடர், அடுக்குத் தொடர், முதலியவற்றைத் தெரிந்தெடு.

# 6. வழிபாட்டுப் பாடல்கள்

## 1. திருவாசகம்

இது ஒரு ஞான நூல். இறைவனின் அருள் பெருமையை உள்ளம் உருகக் கூறுவது. எட்டாந் திருமுறையைச் சேர்ந்தது.

இந்நூலாசிரியர் மாணிக்கவாசகர். பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தவர். அந்தண மரபினர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராயிருந்தவர். 'தென்னவன் பிரம ராயன்' என்ற பட்டம் பெற்றவர். சைவ சமயப் பெரியார் நால்வருள் ஒருவர். காலம் கி. பி. 10ஆம் நூற்றாண்டு.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே ?

—மாணிக்கவாசகர்

## 2. பாரதம்

(குறிப்பு முன் கூறப்பட்டுள்ளது)

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

—வில்லிபுத்தூர் ஆழ்வார்

## 3. தேம்பாவணி

தேம்பாவணி - வாடாத மலர்மாலை ஆகும்.

இந்நூலாசிரியர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டினர். இவர் இயற்பெயர் மறைத்திரு. பெஸ்கி. இவர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் மொழியைக் கற்று இந்நூலை இயற்றினார். இவரது காலம்: கி. பி. 17ஆம் நூற்றாண்டு. மதம்: கிறித்துவம்.

அறக்கடல் நீயே ; அருட்கடல் நீயே ;
அருங்கரு ணாகரன் நீயே ;
திறக்கடல் நீயே ; திருக்கடல் நீயே ;
திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே; நிகர்கடந் துலகில்
நிலையுநீ; உயிருநீ; நிலைநான்
பெறக்கடல் நீயே; தாயுநீ எனக்குப்
பிதாவுநீ; அனைத்துநீ யன்றே!

—வீரமாமுனிவர்

## 4. சீருப்புராணம்

சீறு என்பது 'ஸீரத்' என்னும் அரபு மொழியின் திரிபு. "வாழ்க்கை வரலாறு" என்பது இதன் பொருள். இது நபி நாயகத்தின் வரலாற்றைக் கூறுவது.

இந்நூலாசிரியர் உமறுப் புலவர். சிறந்த கவிஞர். கி. பி. 17ஆம் நூற்றுண்டினர். பாண்டிய நாட்டில் எட்டையபுரத்தில் பிறந்தவர். முகம்மதிய மதத்தினர்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் உயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

—உமறுப்புலவர்

### அருஞ்சொற்பொருள்

1. வான் - ஆகாயம், வளி - காற்று, ஒளி - நெருப்பு, ஊன் - உடம்பு, கோன் - தலைவன், யான் எனது என்பன அகப்பற்று புறப்பற்றுக்கள்; வாழ்த்துவன் - தன்மை ஒருமை வினைமுற்று.

2. ஆழிமாயன் - பாற் கடலில் பள்ளிகொள்பவன், முகில் - மேகம், முளரி - தாமரை மலர், ஏத்துவாம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

3. கருணைகரன் - கருணைக்கு இருப்பிடமானவன், திறன் - ஆற்றல், ஞானநிறம் - ஞான ஒளி, அருமை + கடல் (அருங்கடல்) - பண்புத் தொகை.

4. இதயம் + ஆசனம் (இதயாசனம்) - மனமாகிய இடம், உறைந்து - வாழ்ந்து, பதி - ஊர், மதி - அறிவு, அழிவிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், மண் - பூமி.

## பயிற்சி

I. வினாக்கள் :

1. இறைவன் எந்தெந்தப் பொருள்களாக விளங்குகிறார் ?
2. ஐம்பெரும் பூதங்கள் யாவை ?
3. இறைவன் உலகத்தவரை எவ்வாறு கூத்தாட்டுகின்றார் ?
4. திருமால் எச்சிறப்புக்களை உடையவர் ?
5. வீரமாமுனிவர் ஏசுநாதரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?
6. சீறாப்புராணம் முகம்மது நபியை எவ்வாறு வாழ்த்துகிறது ?

II. பிரித்தெழுதுக :

வானாகி, மண்ணாகி, ஊனாகி, கோனாகி, இருபதம், கடந்துலகில், பிறப்பிறப்பு, அழிவிலா.

III. சேர்த்தெழுதுக :

இதயம் + ஆசனம், பிறப்பு + இறப்பு, உயிர் + ஆகி, அருமை + கடல், தொடர் + இன்பம்.

IV. இறைவனைப் பற்றிக் கூறியுள்ள நூல்களைத் தொகுத் தெழுதுக.

V. பொருள் எழுதுக :

மண், வளி, மறை, முகில், முளரி, மணி.

VI. இப்பகுதியில் வந்துள்ள வினைமுற்று, பண்புத்தொகை, உருவகம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் முதலியவற்றை எடுத் தெழுதுக.

# உரைநடைப் பகுதி

## 1. சமுதாய வாழ்க்கை முறை

திரு. புலவர், சரவண ஆறுமுக முதலியார், M. A., B. O. L., L. T.
முதல்வர் - பழனியாண்டவர் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

### சமுதாய வாழ்வு

இல் வாழ்க்கையைச் செம்மையாய் நடத்திவரும் பல குடிகள் சேர்ந்தே ஒரு சமுதாயம் ஏற்படுகின்றது. பல சமுதாயங்கள் சேர்ந்த ஒரு பெருங்குழுவை நாடு (Nation) என்கிறோம். ஒரு சமுதாயமும் நாடும் பிற பிற சமுதாயங்களாலும், பிற நாடுகளாலும் நலிவடையாமற் கண்காணிப்பதற்கு ஒரு தலைவன் வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் அத்தலைவனை அரசன் என்றும் அவன் காவல் நடத்தும்போது அவனுக்கேற்ற துணையாயிருந்துதவும் அமைச்சர்களையும் பிற துணைகளையும் பொதுவாக அங்கங்கள் என்றும் அமைத்து, அன்னார்தம் ஒழுக்க முறையை அரசியல் அங்கவியல்களில் விதந்தோதுவர்.

பொது நோக்கம் அமைந்த இல்வாழ்க்கையை மேற்கொண்ட பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு சமுதாயம், செங்கோலனாகிய தலைவனைப் பெற்று, அவன் அமைச்சரும் நல்லோராய் அமையப்பெறின், அதன்கண் கல்வி, பொருள், குணம் முதலிய செல்வங்களும் அமைதியும் குடிகொண்டிருக்குமெனக் கூறவும் வேண்டுமோ? அத்தகைய சமுதாயங்கள் நிறைந்த ஒரு நாட்டையே நாடாகத் திருவள்ளுவர் கருதுகிறார். அந் நாட்டினர் அனைவரும் ஒருங்கே மேற்கொண்டு நாட்டிற்குப் புகழையும், அவர்தம் அரசனுக்குப் பெருமையையும் கொண்டுவரக் கூடிய ஓர் ஒப்பற்ற பொது முறைமையைத் திருவள்ளுவர் பொருட்பாலில் அமைக்கின்றார்.

திருவள்ளுவர் அரசனையும் அவனமைச்சர்களையும் ஏனைய சமுதாய மக்களைப் போன்றே ஒப்ப நோக்கி,

அன்றும் மேற்கொண்டொழுகவல்ல முறையே இவர்களுக்கு ஒதுக்குகின்றார். எனினும் இவர்கள் சிறப்பாக மேற்கொள்ள வேண்டியவற்றையும், இவர்களுக்கே உரிய சில பொருள்களையும் அதனோடு சேர்த்துக் கூறுகின்றார். இறைமாட்சி, செங்கோன்மை, கொடுங்கோன்மை, ஒற்றாடல் முதலியன போன்ற பொருள்கள் அரசனுக்கே உரியன வென்றும், அமைச்சு, தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல், பொருள்செயல்வகை, படை, அரண் முதலிய வற்றைப் பற்றிய பொருள்கள் அரசனது அங்கங்களுக்கே உரியன வென்றும் கூறலாம்.

இனி இவ்விருவியல்களிலும் அரசன் அமைச்சர்களை யுள்ளிட்ட பிற சமுதாய மக்களும் மேற்கொள்ளக்கூடிய பொது நோக்க முறையின் பாற்படும் சில பொருள்களை மட்டும் ஈண்டு நோக்குவோம். "கயமை" என்னும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் எழுதிய உரையாசிரியர் பரிமேலழகர் "மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பு வகையாற் கூறப்பட்ட குணங்களுள், ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கும் எய்தவைத்தமையின் ஆண்டு குறிப்பாற் கூறியனவும் ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை" என்று கூறுவதால், பரிமேலழகரும் அரசியல் அங்கவியல்களில் சிறப்பு வகையாக அரசனுக்கும் அங்கங்களுக்கும் கூறப்பட்ட குணங்கள் போக, அவர்களை உள்ளிட்டு ஏனைய சமுதாய மக்களும் மேற்கொள்ளக்கூடிய சில குணங்களை, பொது நோக்கத்தோடு ஆசிரியர் கூறியுள்ளதாகக் கொள்கின்றார் என அறியலாகும்.

### "கல்வி, கேள்வி அறிவுடைமைகள்"

உலக வாழ்வில் அரசனை உள்ளிட்ட ஒவ்வொருவரும் இறைவன் மக்களுக்கு அளித்துள்ள இயற்கையறிவோடு நூற்கல்வி, கேள்விகள் வாயிலாய் செயற்கை யறிவையும் ஈட்டி, அறிவுடைமையோடு விளங்குவது இன்றியமையாததாம். உலகில் அழிவில்லாத சீரிய செல்வம் கல்வியே

யாகும். ஒழிந்த பொன்னும் மணியும் பிறவும் அழிவிலாச் செல்வமாகா. தாயத்தார், கள்வர், வலியர், அரசர் முதலியோரால் கொள்ளப்படாமலும், நெருப்பினுல் அழியாமலும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமல் "தொட்டனைத் தூறும் மணற்கேணியே" போன்று மேலும் மேலும் வளரக் கூடியதுமாய் உள்ள கல்வியே "சிற்றுயிர்க்கு உற்ற துணை"யாம். "எண்ணும் எழுத்தும்" மக்கட்குக் கண்களே போன்றன. அது பற்றியே,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று ஆசிரியர் கூறுவாராயினர். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்புண்டு. எந்த ஊரும், எந்த நாடும் கற்றோர்க்குச் சொந்தமான நாடும், ஊருமாகும். மேலும் இப்பிறப்பில் கற்கும் கல்வி, ஒருவருக்கு ஏழுபிறப்பிலும் சென்றுதவும்.

கற்றோர்க்குச் சிறப்பு தானுகவே சென்று சேர்வதைப் போன்று, கல்லாதவர்க்கு இழிவும் சென்று சேர்கிறது. கல்லாதோரை விலங்குகளாகவும், கற்றறிந்தோரை மக்களாகவும் திருவள்ளுவர் கருதுவர்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றரோடு ஏனை யவர்."

மேலும் நுண்மான் நுழைபுலமில்லார் எழில் நலம் மிகவுடையரெனினும் சுதையால் மாட்சிமைப் படப் புனைந்த பாவையின் அழகைத்தான் அது ஒக்கும். பெயரளவில் மட்டும் அவர்கள் உயிருள்ளவர்கள் என்று கருதப்படுவரேயன்றி, உண்மையில் தனக்கும் பிறருக்கும் பயனின்றி வறிதிருக்கும் களர் நிலத்தை ஒப்பார். கல்லாதான் ஒட்பம் ஒரோவழி நன்றுயிருப்பினும் அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார். எனவே கல்வி எல்லோருக்கும் இன்றியமையாததாம். உயர் குலம், பிறப்பு, உயர்வு, தாழ்வு, ஆண், பெண் என்ற வேற்றுமைகளின்றி அனைவரும் கற்றற்குரியர் என்று கருதிய ஆசிரியர் "உயிர்க்கு" என்று பொதுப்

படக் கூறினர். அரசனும் அவனது அங்கங்களுமே கற்றறிந்தோராயிருந்து, குடிகளனைவரும் கல்வியறிவில் லாக் கசடராயிருப்பின் நாடு செழித்தோங்குவது யாங்ஙனம்? அரசன் குடிகட்குச் செய்யும் நன்மை யனைத்தையும் மேற்கொண்டு அவற்றைத் தக்கபடி கொண்டு செலுத்துவது குடிகள்தம் கடமையன்றோ?

கல்வியின் இன்றியமையாமை இந்நாளில் நம் நாட் டில் சிறப்பாக வற்புறுத்தப்பட வேண்டுயுள்ளது. நம் சமுதாயத்தில் ஒருசிலர் தவிரப் பெரும்பாலான மக்கள் கல்வியறிவு அற்றவர்களாய்த் தங்கள் வாழ்நாளைச் செவ் வனே கழிக்க வழிதெரியாது விலங்குகளைப் போன்று அறியாமையிலும், அழுக்கிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். அன்னர் அரசியல் தன்மையையும், அரசியலார் தமக்குச் செய்யக் கடமைப்பட்டுள்ள நன்மைகளையும் அறியாது தங்களுக்குரியவற்றையும் கேட்டுவாங்கிக் கொள்ளவும் பிறர் கை உதவியையே எதிர்பார்த்து நிற்கின்றனர். தனிப்பட்ட குடிமக்களது பலவகையுரிமைகளும், குடி மக்களது உரிமையாட்சி முறைகளும் தரப்படல்வேண்டும் என்று அறைகூவும் இந்நாட்களில் குடிமக்கள் இக் கீழ் நிலையிலிருப்பின் இது எங்ஙனம் இயலும்? தொன்று தொட்டே கல்வியிலும், கலையறிவிலும், நாகரிகத்திலும், பண்பாட்டிலும் மிகவும் உயர்ந்து "இசையால் திசை போயிருந்த நம்நாடு," இவ்விழிநிலையடைந்திருப்பது பார்ப்போருக்கும், கேட்போருக்கும் மிக வருத்தத்தை யளிக்கின்றது.

திருவள்ளுவர் கூறும்படி கல்வியின் இன்றியமை யாமையைச் சமுதாயத்தின் பல பிரிவினரில் ஒவ்வொரு வருக்கும் எடுத்துக்காட்டி ஆண், பெண், இளைஞர், முதியர் ஆகிய அனைவருக்கும் நம்நாட்டுக்கும், பண் பாட்டுக்கும் ஏற்ற கல்வியை வழங்கி, அவர்கள் கற்றறிந் தோராய்த் திகழ்ந்து முன்னேற்றம் அடைந்த நாளே நன்னாளும் பொன்னாளுமாகும். உண்மை உரிமையுற்ற நாளுமாகும்.

தாமே எல்லாவற்றையும் படித்து உணர்வதற்குரிய

வசதிகளில்லோரும், படிக்காது மூத்தோறும் பிறரும் நூற்பொருள்களைக் கற்றறிந்தோர் மாட்டுக் கேட்டுத் தெளிதல் வேண்டும். கற்றறிந்தோர்க்குக் கல்வியினலாய அறிவை வலியுறுத்துவதும், கல்லாதோருக்கு அவ்வறிவை உண்டாக்குவதும் இக்கேள்வியே. செல்வத்துட் செல்வ மாகிய செவிச் செல்வம் ஒருவர்க்குத் தளர்ச்சி வந்துழிப் பற்றுக்கோடாயிருந்து, வழுக்கு நிலத்து ஊன்று கோல்போல் உதவிபுரியுமாதலின் ஆசிரியர் எல்லோருக் கும், "கற்றிலனாயினுங் கேட்க" என்று அறிவுறுத்து கிறார். நுணங்கிய கேள்விச் செல்வத்தாலேயே வணங்கிய வாயும் வாய்க்கும். கேள்வியால் துளைக்கப்படாத செவி கேளாத் தகையது என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து, நாம் செவிச்செல்வமாகிய கேள்வியின் பெருமையை அறிகின்றோம். கேள்வியின் வாயிலாக இக்காலத்து நாகரிகமுற்ற நாடுகளில் சிறுவர் சிறுமிகளுக்கும் படிக் காது மூத்தோருக்கும், பிறருக்கும், வானொலி, ஒலிபரப்பும் கருவிகள், பேசும் படங்கள் முதலிய பல கேள்வி முறை களில் கல்வி மிகவும் எளிய இனிய வழிகளில் புகட்டப் படுவதை நாமெல்லாரும் அறிவோம்.

கல்வி கேள்விகள் கைவரப்பெற்றோர், அறிவுடையோ ராவதென்பதைக் காட்டவே ஆசிரியர் அறிவுடைமையை வைத்தாரென்க. இயல்பாக உள்ள அறிவோடு, கல்வி யறிவும் பெற்ற ஒவ்வொருவரும் உண்மையறிவுடைய ராவர். எவர் எதைச் சொல்லினும் அன்னார் அவ்வாறே அதை ஏற்றுக்கொள்ளாது, அதன் உண்மையையும் அண்மையையும் ஆராய்ந்தறிய வல்லாராவர். அதுவே மக்களாயுள்ளாரனைவரும் மேற்கொண்டு செயற்பால தாம். கண்ணால் கண்டதும் காதால் கேட்டதுங்கூடச் சில சமயங்களில் பொய்யாகின்றன என்றால் ஆராய்ந்து பகுத் தறிந்து, உண்மை காணுவதே நிலைத்து நிற்கக்கூடியதா கின்றது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

என்பர் ஆசிரியர்.

இத்தகையோருக்கு வருவதறியவல்ல கூரிய அறிவும் நுண்மாண் நுழைபுலமும், உயர்ந்த மனவலிமையும், ஆராய்திறனும் தாமே அமையும். பொய்யும் மெய்யும் மயங்கி வேறுபடுத்தி அறிய இயலாது கிடக்குமிந் நாளில், இவ்வறிவுடைமை எல்லாருக்கும் 'இன்றியமையாததே. அதிலும் நம் நாட்டில் அவற்ளேடு கல்வியின்மையாகிய இருளும் கலந்து நம்மக்களைக் கண்ணிருந்துங் கண்ணிலி களாய்ச் செய்துள்ளதாகலின் இவ்வறிவு மிகவும் வேண் டப்படுவதொன்று அன்ளே ?

பண்டைத் தமிழரின் சிறந்த நாகரிகமும், வாணிக மும், கல்விவளமும், பழக்கவழக்கங்களும், வாழ்க்கை முறை அரசியல் போர்முறைகளும் பிறவும் உண்மை நிலையில் அறியப்படவேண்டுமாயின் இக்காலத்தில் இவ் வறிவு சிறப்பாய் வேண்டப்படுவதே. வருவதறிவோராகிய இவரை ஆசிரியர் மிகவும் பொருந்து முறையில் "ஆவதறிவார்" என்பர். உண்மை அறிவில்லாதார் வருவதறியாரென்றும், வருவதறிவோர் தம்மறிவுடைமை யால் தமக்கும் பிறருக்கும் வரும் துன்பங்களை ஒழிப்பதற் குரிய வழிகளைக் காணுவர் என்றும் ஆசிரியர் கூறுவது மறுக்க முடியாத உண்மையாகும். சுருங்கக்கூறின் அறிவுடையார் எல்லாமுடையார் ; அஃதில்லார் என் னுடையரேனும் இல்லாதோரேயாவர்.

### அருஞ்சொற்பொருள்

குழு - கூட்டம், திகழ்ந்து - விளங்கி, மாட்சி - பெருமை, இறை - அரசன், ஈண்டு - இங்கு, கேள்வி - கேட்டல், சீரிய - சிறந்த, புலம் - அறிவு, நுணங்கிய - நுட்பமான.

### பயிற்சி

**I. வினுக்கள் :**

1. சமுதாய வாழ்க்கை - விளக்குக.
2. கல்வி கேள்வி அறிவுடைமை தொடர்பென்ன ?
3. அறிவின் பெருமையை விவரி.
4. குறிப்பு வரைக :
   திருக்குறள், பொருட்பால், பரிமேலழகர், அறிவுடைமை.
5. எதை வள்ளுவர் நாடாகக் கருதுகின்முர் ?

II. பிரித்தெழுதுக :

பெருங்குழு, அவனமைச்சர்களையும், செங்கோன்மை, கற்றறிந் தோரை, பற்றுக்கோடாயிருந்து.

III. சேர்த்தெழுதுக :

பொருள் + பால், கற்றற்கு + உரியர், செழித்து + ஓங்குவது, நன்மை + நாளாகும்.

IV. வாக்கியங்களில் அமைக்க :

நலிவடையாமல், பொதுமுறையை, மேற்கொள்ள, நுண்மாண் நுழைபுலம், இன்றியமையாமை, ஊன்றுகோல்.

V. திருக்குறளைத் தழுவி எழுதப்பட்ட நூல்களைத் தொகுத்துக் கூறுக.

VI. கட்டுரை வரைக :

1. சமுதாய வாழ்வின் பண்புகள்.
2. மாணவர் சமுதாயத் தொண்டு.
3. குடிமையின் குணங்கள்.

## 2. இந்திர விழா

[திரு. புலவர் R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள், திருச்சிராப்பள்ளி.]

இந்திரவிழா என்பது இந்திரனைப்பற்றிய திருவிழா என்று பொருள்படும். இது இந்திர கோடணை என்றும், தீவகச் சாந்தி என்றும் பெயர் பெறும். விழா, உற்சவம், பண்டிகை, திருநாள் என்பன ஒரே பொருளைத்தரும் சொற்களாகும்.

ஒரு நாட்டின் நாகரிகத்தை அளந்து அறிதற்குரிய பொருள்களில் அந்தந்தக் காலங்களில் நிகழ்ந்துவந்த திருவிழாக்களையும் ஒன்ருகக் கொள்ளலாம். மாந்தர்கள் வழிபட்டுவந்த தெய்வங்களின் மீது காட்டிவந்த பக்தி காரணமாகவே திருவிழாக்கள் பழங்காலத்தில் நடைபெற்று வந்தன. பக்தியின் வெளிப்பொருளாகவே உற்சவங்கள் நிகழ்ந்துவந்தன. கண்ணுக்கு இனிய காட்சிகளும், செவிக்கு இனிய கீதங்களும், பக்தியை உண்டாக்கும் பரவச மொழிகளும் உடலிற்குரிய சமயச் சின்னங்களும் ஆகிய ஐம்புலன்களுக்குரிய பக்திச் செயல்கள் திருவிழாக்களில் பொலிவுடன் விளங்கி வந்தன.

இவ்வாறு நடைபெற்றுவந்த திருவிழாக்கள் நாளடைவில் காலப்போக்காலும், மக்களின் பழக்க வழக்கங்களாலும் மற்றும் பல வேறு காரணங்களாலும் பழைய முறைகளிலிருந்து மாறிப் புதிய புதிய முறைகளில் வெளி ஆடம்பரங்களுடன் நடைபெற்று வருகின்றன. எனினும் பக்தி என்பது சிறிது குறைவாகவே காணப்படுகின்றது.

முற்காலத்தில் திருவிழாக்கள் எவ்வாறு நடைபெற்று வந்தன என்பதைத் தமிழ் நூல்களில் மிகவும் விளக்கமாகக் காணலாம். அவைகளுள் தமிழ் நாட்டார் அனைவர்க்கும் பொதுவான இந்திரவிழாவின் வரலாற்றை ஆராய்வோம்.

முதலாவதாக, இந்திரன் யாவன்? இவனுக்குள்ள வேறு பெயர்கள் என்னென்ன? இவனுக்குள்ள தகுதிகள் யாவை? இவனுக்கு விழா செய்யவேண்டிய காரணம் யாது? முற்காலத்தில் விழா எவ்விதம் கொண்டாடப்

பட்டது? தற்காலத்தில் விழா எவ்விதம் கொண்டாடப் படுகிறது? என்ற பாகுபாடுகளாகப் பிரித்துக்கொண்டு ஆராயலாம்.

இந்திரன் யாவன்? இவன் வானுலகத்திலுள்ள அமராவதி நகரத்தில் தேவர்களுக்குத் தலைவனாக இருந்து கொண்டு அவர்களது துன்பத்தைப் போக்கி ஆங்குள்ள நானாவித இன்பங்களை இமையாத நாட்டத்துடன் அனுபவித்து வருவான் என்பர்.

**வேறுபெயர்கள்** : இவனுக்கு மேகவாகனன், வேள்விக்கு வேந்தன், வச்சிரபாணி, போகி, வாசவன், புரந்தரன், புருகூதன், சசிமணாளன், ஆகண்டலன், வலாரி, சதமகன், ஆயிரங்கண்ணோன் முதலிய பெயர்களும் உண்டு. இப்பெயர்கள் எல்லாம் இவனுக்குப் பற்பல காரணங்களால் ஏற்பட்டன.

**தகுதிகள்** : எவன் ஒருவன் நூறு அசுவமேதயாகங்களைச் செய்து முடிக்கின்றானோ அவன் விண்ணுலகத்திலுள்ள இந்திர பதவியை அடைவான் என்பது நூற் கொள்கை. இதன் பொருட்டே இவன் சதமகன் என்றும் அழைக்கப்படுகின்றான். தமிழ் நூல்களில் இந்திரர்கள் பலரைப்பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன.

**இன்பப் பொருள்கள்** : ஆங்குச் சிந்தித் தவற்றைத் தரவல்ல சிந்தாமணிஎன்னும் சிறந்த இரத்தினம் உண்டு. நினைத்தவற்றைக் கொடுக்கவல்ல சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம் என்னும் ஐந்து மரங்கள் உள்ளன. அழகுமிக்க ஐராவதம் என்னும் வெள்ளை யானை ஊர்ந்து செல்வதற்கு உள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த உச்சை சிரவம் என்னும் குதிரை உண்டு. எண்ணிய பொருள்களை ஈயவல்ல காமதேனு என்னும் பசு உண்டு. ஆடலிலும் பாடலிலும் வல்ல அரம்பையர்கள் உளர். உலகில் நிகழும்நிகழ்ச்சிகளை அவ்வப்போது அசைவினால் அறிவிக்கும் வெண்மை நிறமுள்ள பாண்டு கம்பளம் உண்டு. இவைகளே அல்லாமல் உண்டாரை நீடு வாழச் செய்யவல்ல சாவாமருந்தாகிய அமுதமும் உண்டு.

**விழாச்செய்ய வேண்டிய காரணம்** : இந்திரனுக்

குள்ள பல பெயர்களில் மேகவாகனன் என்பதும் ஒன்ரு கும். மழை பெய்கின்ற மேகத்தை வாகனமாகக் கொண்டு உலாவுதலாலும், மழைக்குக் காரணனுதலாலும் இப்பெயர் ஏற்பட்டது. மழையில்லாமல் மாநிலத்தாருக்கு உண வில்லை. ஆதலால்,

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று" என்னும் திரு வள்ளுவர் வாய்மொழிப்படி உயிர்களை உய்விக்க வல்ல அமுதமாக மழை விளங்குவதாலும், மழையின்றி ஓரறி வுயிராகிய புல்லும் தலைகாட்டாதலாலும் மழைக்காலத் தில் தோன்றும் வானவில்லுக்கு "இந்திர தனுசு" என்று பெயர் வழங்குவதாலும், இடி இடிக்கும் காலத்தில் இந்திர குமாரனை அருச்சுனன் பெயர் சொல்லப்படுதலாலும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகையான நிலங்களில் இந்திரன் மருத நிலத்திற்குத் தெய்வமாய் இருப்பதாலும் இந்திரனுக்கு மக்கள் திருவிழாச் செய்து வழிபடலானுர்கள்.

**விழாவின் தொன்மை:** பழந்தமிழ்ப் பனுவல்களா கிய சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் இதன் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சோழநாட்டுத் தலைநகரங்களுள் ஒன்ருன காவிரிப் பூம் பட்டினத்தை ஆண்டுவந்த சோழ அரசர்களுள் தூங் கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்பவன் அகத்திய முனிவரை அணுகித் தன் நாடு மேம்பட்டு விளங்குமாறு அருள்புரிய வேண்டினன். அவர் அரச னிடம் இந்திரனுக்கு விழா நடத்தி மகிழ்விக்கும்படி கட் டளையிட்டார். அவ்வாறே செம்பியனும் இந்திரனுக்கு விழாச்செய்து வழிபடலானுன். விழாவும் பரம்பரையாக நடத்தப்பட்டு வரலாயிற்று. மற்றைய கோவில்களுடன் இந்திரனுக்கும் ஒரு கோவில் அவ்விடத்தில் ஏற்பட்டது. அது வாசவன் கோவில் என வழங்கும்.

இந்த விழா சித்திரைமாதம் பௌர்ணமி திதியில் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் வரை நடைபெற்று அடுத்த பௌர்ணமி திதியில் முடியும். விழாக்காலங்களில்

நகர மாந்தர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களை மாசு நீக்கித் தூய்மை செய்வார்கள். வாசல்களில் பூரணகும்பங்களையும் பாவைவிளக்குகளையும் வைத்து அணிசெய்வார்கள். தூண்களில் வாழை மரங்களையும், பாக்குமரங்களையும் கட்டுவார்கள். வீதிகளிலும், மன்றங்களிலும், தோரணங்களையும் துகிற்கொடிகளையும் நாட்டுவார்கள். பழைய மணலைப் போக்கிப் புதிய மணலைப் பரப்புவார்கள். இந்திரனுக்கும் மற்றைய தெய்வங்களுக்கும் அந்தந்தக் கோவில்களில் பூசைகள் நிகழும். ஒரு புறத்தில் அறிஞர் பலர்கூடி அம்பலங்களிலும் பந்தல்களிலும் கடவுளைப்பற்றியும், விழாக்களைப் பற்றியும் சமயச் சார்பான உரை நிகழ்த்துவார்கள். மற்றொரு புறத்தில் நாட்டியமும் இசைக்கீதங்களும் நிகழும். வீரர்கள் பலவகைப் பலிகளைக் கொடுத்துத் தெய்வங்களை வழிபடுவார்கள். சிலர் தங்கள் தலைகளை அரிந்து பலி கொடுப்பார்கள். சிறைப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள். வேறு பல வகையான காட்சிகளும் நடைபெறும். இவ்வாறே நகர முழுவதும் விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவார்கள்.

விழாவின் கடைசிநாளில் அரசன் முதல் குடிகள் ஈறாக அனைவரும் புறப்பட்டுக் கடற்கரைக்குச் சென்று கடலாடுவார்கள். அன்று கடற்கரை கண்ணைக் கவரத்தக்க அலங்காரங்களுடன் நகரம்போல விளங்கும். பலர் பலவிதமான படைவீடுகளை, அதாவது கூடாரங்களை அமைத்துக்கொண்டு அறுசுவை உண்டி உண்டு ஆடிப் பாடி இன்புறுவர். பின்பு எல்லோரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கு எழுவர். இவ்விதமாக இந்திர விழா நடைபெறும். இவ்விழா நீண்டகாலம் வரையில் நடைபெற்று வந்து நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழன் காலத்தில் நடைபெருமல் நின்றுவிட்டபடியால் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது என்பர்.

**விழாவின் தற்காலமுறை :** மக்களுடைய வாழ்க்கை முறை நாளடைவில் மாறுபட்டது போலவே திருவிழாக்களும் வேறுபட்டு நிகழத் தலைப்பட்டன. சித்திரை மாதத்

தில் நடைபெற்றுவந்த இத்திர விழா இக்காலத்தில் நடைபெறுவதில்லை. ஆனால் பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள்வரும் போகிப்பண்டிகைக்கும் இந்திர விழாவிற்கும் தொடர்பு இருப்பதாக நூல்களால் தெரியவருகின்றது.

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் பெரும் பண்டிகைகளில் பொங்கல் பண்டிகையும் ஒன்றாகும். இப் பண்டிகை மூன்று நாட்கள்வரை கொண்டாடப்படுகின்றது. முதல் நாள் போகிப்பண்டிகை என்றும், இரண்டாவது நாள் பொங்கல் பண்டிகை என்றும், மூன்றாம்நாள் மாட்டுப் பொங்கல் என்றும் பெயர்பெறும். தாங்கள் அடைந்து வரும் நன்மைகளுக்கு நன்றியாகவே இப்பண்டிகையைத் தமிழ் மக்கள் கொண்டாடுகிறார்கள். தமக்கு வேண்டிய உணவுகளை உண்டாக்குவதற்கு இன்றியமையாததாகிய மழைக்கும், அடுத்து தனது கதிரால் உதவி செய்யும் சூரியனுக்கும், உணவைப் பெறுதற்குத் துணையாக உழுது உதவுகின்ற மாடுகளுக்கும் முறையே மூன்று நாட்களிலும் பண்டிகை கொண்டாடுகிறார்கள்.

இவற்றுள், போகிப்பண்டிகை என்பது போகமுடையவனை அதாவது இன்பநாட்டமுடையவனை இந்திரனைக் குறித்துச் செய்யப்படுவது. இது மார்கழி மாதத்தில் கடைசி நாளில் கொண்டாடப்படுகிறது. அன்று யாவரும் எண்ணெய் தேய்த்து நீராடிப் புதிய ஆடை உடுத்தி நல்லுணவுகளை உண்டு மகிழ்கின்றனர். அன்று இந்திரனுக்குரிய பூசை எதுவும் நடைபெறுவதில்லை. இந்திரனைப் பற்றிய பல வரலாறுகளில் இந்திரன் தனக்குரிய பூசையைக் கண்ணன் தடுத்ததால் கோபங்கொண்டு மழை பெய்வித்தபோது கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து யாவரையும் காப்பாற்றிய அருஞ்செயல் இந்த போகித் தினத்தன்று நிகழ்ந்ததாகக் கூறுவர்.

ஆகவே, சித்திரை மாதத்தில் இருபத்தெட்டு நாட்கள் வரையில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றுவந்த இந்திர விழா மார்கழி மாதக் கடைசியில் ஒரே நாளில் நடைபெறுகின்றது.

இதுபோன்ற மாறுபாடுகளுக்கெல்லாம் காரணம் பழையன கழிதலும் புதியன புகுதலுமேயாகும்.

### அருஞ்சொற்பொருள்

நிகழும் - நடைபெறும், கீதம் - இசைப்பாடல், பொலிவு - அழகு, வானுலகம் - தேவலோகம், அணுகி - நெருங்கி, அம்பலம் - பொது இடம், ஈய - கொடுக்க, மாநிலம் - பூமி, அமிழ்தம் - நல்லுணவு, மாசு - குற்றம், சம்பந்தம் - தொடர்பு, பனுவல் - நூல்.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. இந்திரனைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
2. இந்திர பதவிகிடைக்க யாது செய்யவேண்டும்?
3. தெய்வலோகத்திலுள்ள இன்பப் பொருள்கள் யாவை?
4. இந்திரவிழா செய்யவேண்டிய காரணமென்ன?
5. இந்திரவிழா நடத்தும் முறை யாது?
6. இந்திரவிழா யார் காலத்தில் நின்றது?
7. இந்திரவிழாவிற்கும் பொங்கலுக்கும் சம்பந்தமுண்டா?

II பிரித்து எழுதுக :

ஐம்புலன், வானுலகத்திலுள்ள, ஆயிரங்கண்ணோன், நானாவித, வானவில்லுக்கு, பனுவல்களாகிய, தூங்கெயில், இந்திரனுக்குரிய.

III. பொருள் கூறுக :

ஐம்புலன், வான், எயில், பனுவல், கிரி, மாறுபாடு, செம்பியன், வீண், போகி, பனுவல்.

IV. வாக்கியங்களில் அமைக்க :

இந்திரவிழா, பக்திகாரணமாகவே, முதலாவதாக, மேக வாகனன், அரம்பையர்கள், வாய்மொழிப்படி, தமிழ்ப்பனுவல், இன்பநாட்டமுடையவனை.

V. நம் நாட்டில் நடைபெறும் திருவிழாக்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்.

VI. இந்திரவிழா பற்றிக் கூறும் இலக்கியங்களைத் தொகுத்துப் படி.

VII. கட்டுரை வரைக :

1. பொங்கல் பண்டிகை.
2. சுதந்திர விழா.
3. கார்த்திகைத் தீபம்.

# 3. மனோன்மணீயம்

[திரு. நாவலர்-பண்டிதர்,
ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தஞ்சாவூர்.]

மனோன்மணீயம் என்பது ஆசிரியர் சுந்தரம் பிள்ளையால் இயற்றப் பெற்றதொரு தமிழ் நாடகம். சுந்தரம் பிள்ளையவர்கள் சென்ற நூற்றாண்டினிறுதியில் திருவனந்தை அரசர் கல்லூரியில் தத்துவ சாத்திரப் போதகாசிரியராய் விளங்கியவர். தத்துவ நூலாராய்ச்சியுடன், வரலாற்றாராய்ச்சி, மொழியாராய்ச்சி முதலியவற்றிலும் சிறந்தவர். நல்ல தமிழ்ப் புலமையும் கவிபாடும் ஆற்றலும் வாய்ந்தவர். இவர் திருஞான சம்பந்தப் பெருமான் விளங்கிய காலத்தை முதன் முதலாக ஆராய்ந்து அறுதியிட்டுரைத்தார். அது தமிழிலக்கிய ஆராய்ச்சி செய்வார்க்கு ஒரு கலங்கரை விளக்கம் போலாயிற்று. இவரது மொழியாராய்ச்சியையும் தாய் மொழியாகிய தமிழின் பால் இவருக்கிருந்த எல்லையற்ற பற்றினையும் இவர் இயற்றிய தமிழ்த் தெய்வ வணக்கம் புலப்படுத்தும்.

பண்டைக் காலத்தில் தமிழிலே நாடகக்கலை உயரிய நிலையில் இருந்ததென்பது தமிழ் மொழியை மூன்று பிரிவினதாக வைத்து இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என வழங்குதலானும், நாடக விலக்கணங்கள் பல சிலப்பதிகாரத்துக் கூறப்படுதலானும், பிறவற்றாலும் அறியப்படும். எக்காரணத்தாலோ பிற்காலத்திலே நாடகம் பெரிதும் அருகிவிட்டது. அக்குறையினைப் போக்குவதற்கு உயரிய நிலையில் நாடகம் ஆக்குவது தமிழன்னைக்கு ஆற்றும் அரும்பணிகளுள் ஒன்றாக ஆசிரியர்க்குத் தோன்றியது. அதனால் உதித்ததே இந்நூல்.

இந் நாடகம் தோன்றிய நாள்தொட்டு அறிஞர் பலருடைய மதிப்பிற்கும் பாராட்டிற்கும் உரியதாயிற்று. அன்று முதல் இன்று காறும் இதுபோல்வது பிறிதொன்று தோன்றாதிருத்தலே இதன் பெருமைக்குச் சான்றாகும். இந் நாடகத்திலே மக்கள் அறியவேண்டிய சிறந்த

பொருள்கள் பலவற்றை ஏற்ற இடங்களில் வெளிப்படையாகக் கூறியிருப்பதுடன், தத்துவப் பொருள்களை நூல் முழுவதும் உள்ளுறையாக அமைத்திருப்பது ஆசிரியரது உயர்ந்த சிந்தனையையும், அறிவின் சதுரப்பாட்டையும் புலப்படுத்துகின்றன. இது முழுதும் செய்யுளாலேயே அமைந்திருப்பினும் இதிற் பெரும்பகுதியான ஆசிரியப்பா உரைநடை போலவே பெரும்பாலும் காணப்படும். மற்றும் பலவகையான பாக்களும் கருத்துக்களுக்கேற்ற ஓசை நலமுடையனவாக இதில் ஆண்டாண்டு வந்துள்ளன. தமிழர் நாகரிகத்தைப் புலப்படுத்துவது ஆசிரியர் கருத்தாதலின் அதற்குப் பொருத்தமாக நாடகம் நிகழுமிடத்தையும், நாடகப் பாத்திரங்களையும் அமைத்துக்கொண்டார்.

சீவகன் என்னும் பாண்டியன், சூழ்ச்சித்திறமும் தீய நினைவுமுடைய குடிலன் என்னும் அமைச்சன் வயப்பட்டு, அவன் சொற்படி, மதுரையை விடுத்துத் திருநெல்வேலியிற் கோட்டை கட்டி அதில் உறைகின்றனன். சீவகனுக்குக் குல குருவாகிய சுந்தரமுனிவர் அவனை ஆபத்தினின்றும் பாதுகாத்தற் பொருட்டு, அரணிலே ஓர் அறை தமக்கென வாங்கி அதிலிருந்து அரணின் புறத்துள்ள தமது உறையுள்வரை பிறர் அறியாது ஒரு சுருங்கை வழி அமைத்திருக்கின்றனர். சீவகனுக்கு ஒரே மகளாகிய மனோன்மணியும், சேர தேயத்தரசன் புருடோத்தமனும் ஒருவரையொருவர் கனவிற்கண்டு காதல் கொள்கின்றனர். அதற்கு முன்பே மனோன்மணியின் தோழியாகிய வாணியும் நடராசன் என்னும் ஆண்டகையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டு உள்ளனர். வாணியின் தந்தையாகிய சகடன் பொருளாசையால் தன்மகளைக் குடிலன் மகனாகிய பலதேவனுக்கு மணஞ்செய்விக்கத் துணிந்து அரசன் அனுமதியும் பெற்றுள்ளான். மனோன்மணிக்கேற்ற மணவாளன் புருடோத்தமனே எனச் சுந்தர முனிவர் கூறவும், மனோன்மணியும் அவட்குரிய அரசாட்சியும் தன்மகன் பலதேவனுக்குக் கிடைக்கலாகாதா என்ற

பேராசையால் குடிலன் ஒரு சூழ்ச்சி செய்து, பல தேவனையே சேரனிடம் தூது விடுக்கச் செய்து, சேரனைப் படையெடுத்து வரும்படி செய்வித்தனன். போரிலே பாண்டியன் பின்னிட நேர்ந்தது. இன்னமும் அவன் குடிலன் உரையையே மெய்யென நம்புகின்றனன். மனோன்மணியைப் பலதேவனுக்கு மணம் செய்விக்கத் துணிகின்றனன். மனோன்மணி கடமை யுணர்ச்சியால் அதற்கு இசைகின்றனள். நள்ளிரவிலே ஒரு மணவறை யில் சுந்தரமுனிவர் மணச்சடங்கியற்ற, மனோன்மணி பலதேவனெதிரே மாலையுங்கையுமாய் வந்து நிற்கின்ற னள். பாதகனாகிய குடிலனுக்கு விலங்கிடுவித்து, அவன் காட்டிய சுருங்கை வழியே வந்த புருடோத்தமன் மனோன்மணியின் கண்ணெதிரே நிற்கின்றான். மனோன் மணி அவனுக்கு மாலையிட்டு, அவன் தோள்மேற் சாய்ந்து அவசமாகின்றனள். உண்மைக் காதல் வெற்றிபெறுகின்றது.

இக்கதையை நடத்தும் வாயிலாக வெளிப்படுத்தப் பெற்றுள்ள அரும்பொருள்களிற் சிலவற்றை இனி நோக்கு வோம். சேரநாட்டின் ஒரு பகுதியாகிய நன்செய் நாட்டின் மருதவளம் நெய்தல் வளங்களைத் திணை மயக்கத்தின் பாற்படுத்து எழில்பெறக் கூறியிருப்பது ஆசிரியரது கற்பனைத் திறத்தைப் புலப்படுத்துகின்றது. மற்றும் அந்நாட்டிலே ஒருசார், துகிர்க்கால் அன்னமும் புகர்க்கால் கொக்கும், செங்கட் போத்தும் கம்புட் கோழியும், கனைகுரல் நாரையும், சினமிகு காடையும், பொய்யாப்புள்ளும் உள்ளான் குருகும், எண்ணிலவாகக் குழுமியெழுப்பும் பேரொலியுடையதாயிருக்குமென்றும், நாற்றுப்பறிப்பவரும் நடுபவரும் களைபறிப்பவருமாகிய கள்ளுண்கடைசியர் பள்ளும் பாட்டுமாய ஒலி ஒருசார் பரந்திருக்குமென்றும் இயற்கைவளம் கூறியுள்ளார். விடியற்கால நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தே, காக்கைகள் கத்திக்கொண்டு திசைதோறும் ஓடுதலை, இருட்பகைவ னாகிய கதிரவன் தம்மையும் இருளெனக் கருதிக் காய்வனோ என்று அஞ்சித் தம்பெயரைச் சொல்லிக்

கொண்டு ஓடுவதாகக் கற்பனை செய்திருப்பது நகைப்பும் வியப்பும் விளைக்கின்றது.

குடிலனுடைய வஞ்சநெஞ்சினை அரசனுக்குக் குறிப்பாகத் தெரிவிக்கக் கருதிய நாராயணன் தனது மூக்கிலே கரிதேய்த்துவந்து. 'மூக்கிற்கரியர் உளர்' என நாயனர் கூறியபடி, எல்லாம் உள்ள நின்னருகு அவர் இல்லாரா வாரோ? என்றியம்புவது நகைச்சுவை பயக்கின்றது. தான் எவ்வாறு தெரிவித்தும், அரசன் குடிலனை உண்மையாளனுக நம்பியிருத்தல் கண்டு இரங்கி, அவன் தானே கூறிக்கொள்ளும் மொழிகள் அரசபாரம் பொறுத்தலின் அருமையைப் புலப்படுத்துகின்றன. 'என்னே அரசர் தன்மை! மன்னுயிர்க்கு ஆக்கமும் அழிவும் அவர்தம் கடைக்கண் நோக்கில் உண்டாம் வல்லமை நோற்றுப் பெற்றுர். பெற்ற அப்பெருமையின் பாரம் உற்று நோக்குவரேல் உடல் நடுங்காரோ? கரும்போ தேனே என்று அவர் களிப்பது நெருப்பு ஆறும் மயிர்ப்பாலமும் அன்றே? விழிப்பாய் இருக்கிற் பிழைப்பர், விழி இமை கொட்டில் கோடி பிறழுமே. வாலால் தேளும், வாயால் பாம்பும் விடம் கக்குமெனக்கருதி எவற்றையும் அடிமுதல் முடிவரை ஆய்ந்து பாராதவர் ஆளும் உலகம் என்னபாடு படாது? என்னும் அவன் கூற்றுக்களை நோக்குமின்.

போர்மூண்டகாலை சீவகன், படைத்தலைவர்களையும் வீரர்களையும் நோக்கி "நுமது போர்க்கோலம் நோக்கி யாம் மகிழ்ந்தோம். ஆ! ஆ! யார்க்கு இது வாய்க்கும்! யாக்கையின் அரும்பயன் வாய்த்தது இங்கே உமக்கே. தாயினும் சிறந்த தயைபூண்டிருந்த நும்தேயமாம் தேவிக்குத் தீவினையிழைக்கத் துணிந்த வஞ்சகரை எண்ணுந்தோறும் களங்கமில் நும்முகம் காட்டும் இச்சினத்தைக் கண்டு பாண்டியே கொண்டனள் உவகை! தாம்பிர பன்னியும் அலையெறிந்து ஈதோ ஆர்த்தனள்! விந்தம் அடக்கினேன் தந்த நற்றமிழ்மொழி தற்சுதந்திரம் அறும் அற்பர் வாய்ப்படுமா! தொட்டிலிற் கிடந்து, நும் அன்னையர் தாலாட்ட முன்னையோருடைய தீரமும் செய்கையும், வீரமும் பரிவும் விரும்பிக்கனிவுடன் கேட்ட

வண்டமிழ்மொழியால் மீட்டு இக்காலம் 'ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் தோற்றனம்' 'என்போர் யாவர்? அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும், நாட்டபிமானம் உள்மூட்டிய சினத்தீ அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு? இன்று நீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும் நின்று உகம்பலவும் நிகழ்த்துமே! போர்க்குறிக் காயமே புகழின் காயம்! புண்ணோ அதுவும் புகழின் கண்ணோ?'' என்றிவ்வாறு கூறி, அவர்கட்கு மன வெழுச்சியை உண்டாக்கும் திறன் பாராட்டற்குரியது.

## அருஞ்சொற்பொருள்

புலப்படுத்தும் - தெரியப்படுத்தும். அருகி - குறைந்து, 'சதுரப் பாடு - திறமை, பா - பாட்டு, உறைகின்றனன் - தங்கியிருக்கின்ருன், சுருங்கை - சுரங்கம், எழில் - அழகு, ஒருசார் - ஒருபக்கம், யாக்கை - உடல், பாண்டியே - பாண்டியதேவியே, பரிவு - அன்பு, வண்டமிழ் - வளமையான தமிழ்.

## பயிற்சி

I. **வினுக்கள் :**

1. சுந்தரம்பிள்ளை குறிப்பு வரைக.
2. மனோன்மணீயம் கூறும் கருத்து யாது?
3. இந்த நாடகத்தின் பெருமையை விளக்குக.
4. மனோன்மணீய வரலாற்றை சுருக்கி வரைக.
5. இதில் அமைந்த வீரப்பகுதிகள் யாவை?

II. **குறிப்பு வரைக :**

குடிலன், சீவகன், மனோன்மணி, நாராயணன்.

III. **வாக்கியங்களில் அமைத்தெழுதுக :**

எல்லையற்ற, அரும்பணிகளுள், புகழின் காயம்.

IV. பெண்களை முக்கியமாகக் கொண்ட சில காவியங்களை எழுதுக.

V. தற்கால நாடகங்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

# 4. நாட்டு வளம்பாடிய நங்கை

[திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், M.A.,
"கலைமகள்" ஆசிரியர், சென்னை.]

சோழ மன்னன் கரிகால் வளவனுடைய புகழ் பரவப் பரவ அவனைப் புலவரும் பாணரும் நாடி வந்தார்கள். காவிரிப்பூம் பட்டினத்தில் நிறுவிய பட்டி மண்டபத்தில் புலவர்கள் தங்கள் தங்கள் கவிதையை அரங்கேற்றினர். தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்தார்கள். மதுரையில் இருந்த சங்கத்தைப் போன்ற சிறப்புக் காவிரிப்பூம் பட்டினத்துப் பட்டி மண்டபத்துக்கும் உண்டாயிற்று.

சேர சோழ பாண்டிய நாடுகளிலிருந்து புலவர்கள் அடிக்கடி வந்து கரிகாற்சோழனைக் கண்டு செல்வார்கள். பல புலவர்கள் கரிகால் வளவனைப் பாடிப் பரிசு பெற்றுச் சென்ருர்கள். வளவன் உறையூரில் சில காலமும் காவிரிப்பூம் பட்டினத்திற் சில காலமுமாக இருந்துவந்தான்.

ஒருநாள் வளவனிடம் ஒரு பெண் புலவர் வந்தார். அவருக்குத் தாமக்கண்ணி என்று பெயர். அவர் கால் முடம். ஆதலின் முடத் தாமக் கண்ணியார் என்று யாவரும் அவரைக் குறிப்பிட்டுக் கூறுவர். உறுப்புக் குறை இருந்தால் அதை இழிவாகக் கருதாத காலம் அது. அதைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, அதை அடையாளமாகக் கருதுவார்களேயன்றி இழிவாக எண்ணுவதில்லை. குணச் சிறப்பே சிறப்பென்று கொண்டாடுவார்கள். கரிகாலன் என்ற சக்கரவர்த்தியின் பெயரே அங்கத்தைக் குறித்து வந்தது தானே? கரிந்த காலை உடையவன் என்ற பொருளை உடையது அது. அப்படி ஓர் ஊனம் இருந்தால் இக்காலத்தில் அதைப்பற்றிப் பேசினுல் தவருக எண்ணுவோம். அக்காலத்தில் அதை ஓர் அடையாளமாகக் கொண்டார்கள். அதனுல் அதைச் சுட்டிச் சொல்வதைத் தவருக எண்ணவில்லை.

முடத்தாமக் கண்ணியார் கரிகாலனுடைய அவைக் களத்துக்கு வந்தார். வழக்கம் போல அரசன் அவரை

வரவேற்று உபசரித்தான். சில காலம் அரண்மனையில் அப் பெண்மணியார் தங்கினார். அங்கிருந்த புலவர் களோடு அளவளாவிப் பேசி மகிழ்ந்தார். அவர் சோழ நாட்டில் பல ஊர்களுக்குச் சென்று வந்தார்; சோழநாடு நிலவளமும் நீர்வளமும் நிரம்பப் பெற்று விளங்குவதை உணர்ந்தவர்; மற்றவர்கள் அந்த வளங்களைப் பற்றிக் கூறுவதையும் கேட்டவர்.

ஆதலின் அந்த வளப்பங்களை யெல்லாம் அமைத்து ஒரு பெரிய கவியைப் பாடவேண்டுமென்று எண்ணினார். நேரே கரிகால் வளவனைப் புகழலாம். அப்படிச் செய்ய அவருக்கு மனம் இல்லை. மறைமுகமாக, வேறு யாருக்கோ சொல்வது போல, அம்மன்னன் சிறப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பினார். தமிழில் ஒருவருடைய புகழை வெளிப்படுத்தப் பல வழிகள் இருக்கின்றன. வள்ளல்களிடம் பரிசு பெற்ற ஒருவர் பரிசு பெறும் இடம் தெரியாமல் அலையும் மற்றவர்களைப் பார்த்து, "நீங்கள் இன்னாரிடம் போனால் உயர்ந்த பரிசில் கிடைக்கும்" என்று சொல்லி அவர்களிடம் போவதற்கு வழி காட்டும் முறையில் புலவர்கள் சில நூல்களைப் பாடியிருக்கிறார்கள். அந்த வகையான நூலுக்கு "ஆற்றுப்படை" என்று பெயர். பரிசிலைப் பெறப் போகிறவர்கள் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் என்று பலவகையாக இருப் பார்கள். இவர்களில் யாரைப் பார்த்துச் சொல்வதாக பாட்டு அமைகிறதோ அவர்கள் பெயரால் அந்த நூலுக் குப் பெயர் அமையும். புலவரைப் பார்த்துச் சொல்வதாக இருந்தால் "புலவராற்றுப் படை" என்று அதைச் சொல்வார்கள். இப்படியே பாணாற்றுப்படை, பொருந ராற்றுப்படை, விறலியாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்று மற்றவர்களுக்குப் பெயர்கள் அமையும். முடத் தாமக் கண்ணியார் பொருநர் ஆற்றுப்படை பாடி அதில் கரிகாலன் புகழைப் பதித்துவைக்கலாம் என்று முடிவு செய்தார்.

பொருநர் என்பவர்கள் கையிலே தடாரி என்ற பறையை வைத்துத் தட்டிக்கொண்டு பாடுகிறவர்கள்.

அவர்களுடன் யாழ் வாசித்துப் பாடியும் ஆடியும் பரிசில் பெறும் விறலியரும் வருவார்கள். வறுமையில் ஆழ்ந்து தன்னை ஆதரிக்கும் வள்ளல் யாரையும் காணுமல் ஊர் தோறும் அலைந்துகொண்டிருக்கும் பொருநன் ஒருவனைக் கண்டு, 'கரிகால் வளவனிடம் சென்று பரிசில் பெற்ற மற்றொரு பொருநன் சொல்வதாக அந்தப் பொருநராற்றுப் படையைப் பாடினர்.

எங்கேயோ திருவிழாவுக்குப் பொருநன் போயிருந்தான். அங்கே அவனுடன் வந்த விறலி யாழ் வாசித்துப் பாடினுள். அவன் தடாரிப் பறை கொட்டினுன். திருவிழா முடிந்துவிட்டது. விழாவில் நான்கைந்து நாள் அவர்கள் வயிறு நிரம்பச் சாப்பிட்டார்கள். விழா முடிந்தவுடன் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டுவிட்டார்கள். எங்கே போவது என்ற நிச்சயம் இல்லாமலே புறப்பட்டார்கள். விறலி தன் அழகிய யாழைச் சுமந்து சென்றுள். அவர்களுடன், பல நாட்களாகப் போதிய அளவு உணவு கிடைக்காமையால் உடம்பு மெலிந்த சுற்றத்தாரும் சென்றுர்கள்.

இன்ன இடத்துக்குப் போவது என்ற திட்டம் இல்லாமையால் எதிர்ப்பட்ட வழியில் போனுர்கள். அந்த வழி அவர்களை ஒரு காட்டினிடையே கொண்டுபோய் விட்டது. மரங்கள் அடர்ந்த காடு அன்று; கோடை வெயிலால் ஈரத்தை இழந்து மரங்கள் எல்லாம் வாடி உலரப் பாலையாகிக் கொண்டுவரும் காடு. நடந்துநடந்து அவர்களுக்குக் கால் சலித்துவிட்டது. ஒரு மரம் அங்கே வழியிலே இருந்தது. அதில் சில இலைகள் இருந்தன. இலை செறிவாக இல்லை. அதனுல் மாத்தின் கீழே அடர்ந்த நிழலைக் காணவில்லை. வலையை விரித்தாற் போல அந்த நிழல் இருந்தது. அதாவது கிடைத்ததே என்ற ஆறுதலோடு அந்தப் பொருநனும் அவனுடைய பரிவாரங்களும் அங்கே சற்று அமர்ந்தார்கள்.

அப்போது கரிகால் 'வளவனிடம் சென்று அவன் அளித்த விருந்தை உண்டு மகிழ்ந்து பரிசில் பெற்றுக் கொண்டு மற்றொரு பொருநன் அங்கே வந்தான். மரத்

தின் நிழலில் பொருநனும் அவனைச் சார்ந்த பட்டினிப் பட்டாளமும் இருப்பதைக் கண்டான். அவர்கள் நிலையைக் கண்டு இரங்கினன். "நாமும் இவர்களைப் போல இருந்தோமே! கரிகால் வளவனைக் கண்டபிறகு தானே நம் கலி நீங்கியது? இவர்களையும் அவனிடம் போகும்படி சொன்னல் இவர்களுக்கு நன்மை உண்டாகுமே!" என்று எண்ணினன். உடனே அங்கே இருந்த ஏழைப் பொருநனைப் பார்த்து இந்தப் பணக்காரப் பொருநன் சொல்லத் தொடங்கினன். "பொருநர் தலைவனே, உன்னையும் உன் சுற்றத்தாரையும் நான் வரும் வழியிலே கண்டது உங்கள் புண்ணியப் பயன் என்றே சொல்ல வேண்டும்."

அமர்ந்திருந்த பொருநன், "யாரோ பெரிய செல்வர் நம்மைப் பார்த்துப் பேசுகிருரே!" என்று எழுந்து நின்று மரியாதை செய்தான். மற்றவர்களும் எழுந்து ஒதுங்கி நின்ருர்கள். அவர்கள் செயலைக் கண்டு, வந்த பொருநன் மனத்துக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

"நானும் உங்கள் இனத்தைச் சார்ந்தவன் தான். என்னைக் கண்டதும் நான் யாரோ என்று மருண்டு விட்டீர்களென்று தோன்றுகிறது. நானும் உங்களைப் போலவேதான் பசியும் வறுமையும் வாட்ட வருந்தினவன். ஆனல், கரிகால் வளவனைக் கண்ட பிறகு என் வறுமை கால்வாங்கி ஓடிவிட்டது. அவனுடைய அரண்மனை வாசல் என்றும் திறந்தே இருப்பது. நம்மைப் போன்ற இரவலர்கள் புகுந்தால் யாரும் தடைசெய்ய மாட்டார்கள். நான் அங்கே போனேன். பல நாள் பட்டினி கிடந்தமையால் என் உடம்பு மிகவும் இளைத்திருந்தது. கையில் தடாரியை வைத்திருந்தேன். என் கையழுக்கு அதில் படிந்திருந்தது. நான் விடியற்காலையில் அந்தத் தடாரியைக் கொட்டினேன். என்னவென்று சொல்வேன்! கரிகால் வளவன் நான் இருந்த இடத்துக்கே வந்துவிட்டான். நெடுநாட்களாகக் காணுத உறவினனைக் காண்பதுபோல அன்போடு என்னுடன் பேச ஆரம்பித்தான்."

"உங்களிடம் காரிகால் வளவனே பேசினுனு?"

"ஆம், நான் எந்தக்கோலத்தில் இருந்தேன் தெரியுமா? என் இடையிலே கந்தை இருந்தது; வேர்வையிலே நனைந்து பேனுக்கு உறையுளாக இருந்தது. கிழிந்த இடங்களைத் தைத்து உடுத்திருந்தேன். கரிகால் வளவன் என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். அந்தப் பார்வையிலே எத்தனை குளிர்ச்சி! என் என்பெல்லாம் சில்லென்று தண்ணிய உணர்ச்சியைப் பெற்றன. என் இடையிலே உள்ள ஆடையைக் களைந்தெறியச் சொல்லி வேறு புதிய ஆடையை அளித்து அணியச் செய்தான். பேன் குடியிருந்த ஆடை முன்பு என் இடையிலே இருந்தது. இப்போது மிக மிக மெல்லிய பூவேலை செய்த ஆடையை அணிந்தேன். பிறகு மிக இனிமையான பான வகைகளைப் பொற் கிண்ணத்தில் அழகிய மகளிர் ஊற்றித் தந்தார்கள். அவற்றைக் குடித்தேன். என் தாகமும் பசியும் எனக்கன்றே தெரியும்? அவர்கள் வார்க்க வார்க்க நான் வாங்கிக் குடித்துக் கொண்டே இருந்தேன்.

"பிறகு இளைப்பாறினேன். முதல் நாளில் நான் இருந்த இருப்பு என்ன? அப்போது நான் நுகர்ந்த இன்பம் என்ன! ஆளைப்பார்த்தால் அடையாளமே தெரியாது. அப்படி ஆடை அலங்காரங்களுடன் விளங்கினேன். என் உடை நாற்றமும் உடல் நாற்றமும் எனக்கே சகிக்க முடியாமல் இருந்தன. இப்போதோ ஒரே நறுமணந்தான். எனக்கே 'நாம் கனவு காண்கிறேமா!' என்ற சந்தேகம் உண்டாயிற்று.

"அங்கே எனக்கு நடந்த உபசாரங்களை நான் முன்னே எங்கேயும் அநுபவித்ததில்லை. ஆகையால் அங்கே உள்ள பண்டங்களை எப்படி எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதே எனக்குத் தெரியாது. அங்கிருந்த வேலைக்காரர்கள் அதையெல்லாம் எனக்குச் சொல்லித் தந்தார்கள்."

நடுவிலே ஏழைப் பாணன் ஒரு கேள்வியைக் கேட்டான்; "பானங்களை நுகர்ந்ததையும் ஆடை அணிந்த

தையும் சொன்னீர்கள். உணவு கொள்ளவில்லையோ?'' என்று கேட்டான்.

"அதற்குள் அவசரப்படுகிறீர்களே. பக்குவமாக வெந்த ஊனோடு கலந்த விருந்தைப் பக்கத்தில் இருந்து, அதைச் சாப்பிடுங்கள், இதைச் சாப்பிடுங்கள் என்று சொல்ல நான் உண்டேன். சுடச் சுடச் சாப்பிட்டேன். ஒருவகை உணவு சலித்துவிட்டதனால் வேறு வகையான பலகாரங்களைத் தந்தார்கள். முனை முறியாத அரிசியினாற் சமைத்த சோற்றை உண்டேன். இப்படித் தினமும் விருந்து உண்டு உண்டு என் பற்கள் கூடத் தேய்ந்து போய்விட்டன. பலநாள் அங்கே தங்கியிருந்தேன். பிறகு விடைபெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணிக் கரிகால் வளவனிடம், 'எங்கள் ஊருக்குப் போய் வருகிறோம்' என்று மெல்லச் சொன்னேன். அப்போது அவனுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே. "கோபமா? எதற்காகக் கோபம்?'' என்று ஏழைப் பொருநன் கேட்டான்.

"உண்மையான கோபம் அல்ல. கோபம் வந்தது போலக் காட்டினான். 'எங்களை விட்டுப் போகப் போகிறீர்களா?' என்று கேட்டான். நான் போகவேண்டுமென்று தீர்மானித்திருப்பதைத் தெரிந்து கொண்டான். அவனுக்கு வருத்தந்தான்; உடனே யானை முதலிய பரிசில்களைத் தந்தான்; அவன் தந்தான் என்று சொல்வது பிழை. அவன் பல பொருள்களைக் காட்டினான். நான் வேண்டியவற்றையெல்லாம் வாரிக் கொண்டேன்.''

"கரிகால் வளவன் பெருஞ் செல்வம் உடையவள்ளலோ?'' என்று கேள்வி வந்தது.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? சோழ நாட்டு மன்னன் அவன். உருவப் பஃறேர் இளஞ் சேட் சென்னியின் புதல்வன். கருவில் இருக்கும் போதே தந்தை இறந்தமையால், அப்போது அரசுரிமை இவனுடையதாகி விட்டது. சேர பாண்டியர்களை வெண்ணிப்பறந்தலையில் போர் செய்து வென்றவன். அவனிடம் போனால் உங்கள் வறுமை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.''

"நாங்கள் அங்கே போய் என்ன செய்யவேண்டும்?"

"அவனை அணுகினாலே போதும். அதற்கு அதிருட்டம் வேண்டும். உங்களுக்கு இருக்கிறது. அவனை அணுகித் தொழுது நின்றால் அவனுடைய அன்புப் பார்வை உங்கள் மேலேபடும். கன்றை ஈன்ற பசு தன் கன்றைப் பார்ப்பது போல அன்பு ததும்ப உங்களைப் பார்ப்பான். நீங்கள் யாழ் வாசித்துத் தடாரிப் பறையைக் கொட்டுங்கள். அவற்றின் ஒலி அவன் காதில் விழுந்ததோ இல்லையோ அவன் உங்கள் தகுதியைத் தெரிந்து கொள்வான். உங்கள் இடுப்பிலுள்ள கந்தையைக் களைந்து பட்டாடையை உடுத்துக் கொள்ளக் கொடுப்பான். நல்ல மதுவகைகளை வழங்குவான். பொன்னாற் செய்த தாமரையை உங்கள் தலையிலே சூட்டுவான். விறலி அணியும்படி பொன்னரி மாலையை அளிப்பான். அழகான குதிரைகளைப் பூட்டிய தேரை வழங்குவான். யானையைத் தருவான். அவற்றை அவரவர்களுக்கு நீங்கள் பகிர்ந்து தரும்படி மிகுதியாகத் தருவான். ஊருக்குப் போகிறோம் என்று சொன்னால் எளிதிலே உங்களை அனுப்பமாட்டான். அவனுடைய அன்புக்கு ஈடாக எதனையும் சொல்ல இயலாது." இப்படிச் சொன்ன பொருநன் கரிகாலனுடைய சோழ நாட்டை வருணித்து, "இத்தகைய நாட்டையுடைய கரிகாலன் உனக்குப் பரிசில்களைத் தருவான்" என்று சொல்லித் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான்.

முடத்தாமக் கண்ணியார் பொருநனுடைய கூற்றாகச் சொல்லும் இந்தப் பாட்டில் சோழ நாட்டின் வளத்தை விரிவாக அமைத்திருக்கிறார்.

### அருஞ்சொற் பொருள்

நாடி - தேடி; முடம் - நொண்டி; ஊனம் - குறை; அளவளாவி - உரையாடி; தடாரி - ஒருவகைப்பறை; கலி - வறுமை; மருண்டு - பயந்து; ஊன் - மாமிசம்; கூற்று - சொல்.

## பயிற்சி

**I. வினாக்கள் :**

1. கரிகாலன் எனப் பெயர்வரக் காரணம் யாது?
2. 'ஆற்றுப்படை', என்றால் என்ன? விளக்குக.
3. முடத்தாமக் கண்ணியார் பாடிய பாட்டின் கருத்தென்ன?
4. இப்பகுதியில் வந்துள்ள ஆற்றுப்படைகள் யாவை?
5. கரிகாலன் அளித்த கொடைகள் யாவை?
6. கரிகாலனின் வாழ்க்கைக் குறிப்பை வரைக.

**II. குறிப்பு வரைக :**

ஆற்றுப்படை, கரிகாலன், அவைக்களம், வெண்ணிப்பறந்தலை, காவிரிப்பூம்பட்டினம்.

**III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :**

கரிகால் வளவனுடைய, குணச்சிறப்பே, ஊர்தோறும், பட்டினிப் பட்டாளமும், வேறு புதிய, பொன்னாற்செய்த, வளத்தை விரிவாக.

**IV. கட்டுரை வரைக :**

1. நீ அறிந்த வள்ளல்.
2. கல்வித் தொண்டில் ஈடுபட்ட அறிஞர்.
3. நாட்டுத்தொண்டர்.

# 5. அன்னைக்கு

## (கடிதம்)

[திரு. டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள், M. A., M. O. L. தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை].

அன்புள்ள அம்மா!

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன்; இன்று நடக்கவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடையமுடியாது; கடமையொழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ்நாடு எப்பொழுதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனுய் இருந்து வாயால் மட்டும் விளங்காதே; உணர்வால் மட்டும் உயராதே; செயலாலே சீர்ப்படு" என்று நீ எனக்கு எழுதிய கடிதத்தை நான் மறந்து விடவில்லை; என் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருந்து முற்போக்குத் தமிழன் தான் என்பதைக் காட்டப்போகிறேன். பாடங்களை நன்ருகக் கற்று முதல் வகுப்பில் தேறப்போகிறேன்; ஆனுலும் நேற்றுவரையில் அமைதியாய் இருந்ததுபோல, இன்று இருக்கமுடியவில்லை. ஆகையாலேதான் சில தினங்கள் கழித்து இதுபோலக் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா, நான் எப்படி இன்று அமைதியாய் இருக்க முடியும்? உலகம் அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறந்திருக்கமுடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு மட்டும் கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடுதோறும் இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்ததுபோல இருக்கின்றதே! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும் இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. நில நடுக்கம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலே ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒரு சேரக் கலங்கவைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடீஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதினா யிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளை விக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால், வாழ் நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யாரம்மா? காந்தியடிகள். இந்தப் பெயரையும் நினைத்துத் தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிட மிருந்து கற்று வளர்ந்த புதியமுறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே?

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள்; அரசி யலில் அவர் பெருந்தலைவர் என்பதே பெரும்பாலோருக் குத் தெரிந்தது. ஆனால் இது முழு உண்மை அன்று; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால் அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறு பட்டவர் எங்கும் இருக்கின்றனர். அவருடைய அரசியல் கொள்கைக்குச் செல்வாக்கு இருந்தாலும், உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும் அவருடைய அறநெறியே இன்றுவரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக்

காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலைநிமிர்ந்த வாழ்வுக்குக் காரணம்.

அம்மா, மறக்கமுடியவில்லை! நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை! 'அரசியலில் அவர் சொல்வதில் இதுமட்டும் சரி; அது சரியன்று' என்று வாதாடினோம். ஆனால், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அறவொழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அவரது ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியுறவில்லையா? அவரைவிடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வை குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா?

"உள்ளத்தார் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழர் எழுதி வைத்துவிட்டுச் சென்றார். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாய் நின்றது. அன்று திருவள்ளுவர், உண்மையினை உணர்ந்து, உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாய் மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மதவெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன! திருவள்ளுவரின் அறத்துப் பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக் காட்டான வாழ்க்கை அல்லவா அது?

எத்தனையோ நம்பிக்கைகள், எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன.

ஆனல், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்ட மாய் இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கை யாகக்கொண்டு வாழ்ந்த வாழ்வு, அன்று மாலே அடங்கிய அந்தப் பெருவாழ்வு !

இன்னென்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்று கிறது. 'அடிகள் பெரியவர்; ஒப்பற்ற தலேவர்' என் பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனல், அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர் எத்தனே பேர் அம்மா ? அரசியலில் மட்டும் அவர் இன்னவர் என்பதைப் பொதுமக்கள் உணர முடிந் திருக்கலாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர் மிக மிகச் சிலரே என்று எண்ணுகின் றேன். அப்பா ஒரு நாள் கூறியது போல, காந்தியடி களின் உயர்ந்த கொள்கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பது போல, கலேயுணர்வு இல்லாது திரைப் படக் காட்சிக்குச் சென்று காண்பது போல, நாகரிகத் தின் பெயரால் கொள்கைகளே உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாய் இருக்கின்றூர்கள். அதனலேதான் அந்தத் தூயஉடல் வாடிய அன்று இரவே கொலேயும், கொள்ளேயும், தீயிடலும், துன்புறுத்தலும் செய்யச் சிலர்க்கு மனம் வந்தது. ஆனலும் அவர்களும் துயரக் கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணமல்லர் ; நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்பது தெரிகின்றது.

அம்மா, என்னென்னவோ நினேவுக்கு வருகின்றன. தென் ஆப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணேயாய் நின்று அவரது அன்பையும் பெற்றூர்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணே' என்னும் பழமொழியாலும், திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ்மொழி அவருடைய போற்றுதலேப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத

போது அவரே தமிழ் ஆசிரியராய் இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும் தமிழ்மொழியின் கருத்துவளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ்நாட்டு வறுமையும் அவர் கோலத்தையே மாற்றி விட்டதே! சேலத்திற்குத் தெற்கே தமிழ்மக்கள், ஆண்களும் பெண்களும் அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் நீங்கியது! பத்துமுழ வேட்டியும் பறந்தது! "இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை", என்று கசிந்துருகித் தமிழ்நாட்டுக் குடியானவன் கோலத்தையல்லவா அவர் அன்று முதற் மேற்கொண்டார்! அந்தக் கோலந்தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா, ஏதோ எழுதினேன் ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்.

எழில்.

## அருஞ்சொற்பொருள்

திங்கள் - மாதம், சாக்காடு - சாவு, எடுத்துக்காட்டு - உதாரணம், அறம் - நற்செயல். ஞாயிறு - சூரியன், புறக்கணித்து - வெறுத்து, நெறி - வழி, அங்கி - சட்டை.

## பயிற்சி

I. வினாக்கள்:

1. அம்மா எழுதிய கடிதத்தின் கருத்தென்ன?

2. புத்தர் வாழ்க்கைக்கும், ஏசு வாழ்க்கைக்கும், காந்தியடிகள் வாழ்க்கைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

3. காந்தியடிகள் வாழ்க்கை எந்தத் திருக்குறள் கருத்திற்கு விளக்கமாக அமைந்தது?

4. இந்தியாவின் தலைநிமிர்ந்த வாழ்விற்குக் காரணம் யார்? அவர் இயல்பென்ன?

5. தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் அடைந்த வெற்றிக்குத் துணையானவர்கள் யார்?

6. உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம் யாரை நினைவுறுத்துவது?

II. குறிப்பு வரைக :
புத்தர், ஏசு, தென்னுப்பிரிக்கா, அறத்துப்பால்.

III. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் செய்க :
1. 'உலகம் அழுகின்றதே'.
2. 'ஒருசேரக் கலங்கவைக்கும் ஆற்றல்'.
3. 'பசி இல்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பது போல'
4. 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை'.
5. 'நீண்ட அங்கியும் நீங்கியது'.

IV. வாக்கியங்களில் அமைத்து எழுது :
கடமையொழுங்கு, தலைகீழாய், நம்பிக்கைகள், அரசியல் கொள்கைக்கு, தொண்டு செய்ததும்.

V. அறிஞர் மு. வ. அவர்களின் நூல்களில் சிலவற்றைக் கூறுக.

VI. காந்தியடிகளைப் ,பற்றிய தமிழ் நூல்களைத் தொகுத்துப் படிக்க முயல்க.

VII. கட்டுரை வரைக :
1. பொது நலம்.
2. கல்வியின் பெருமை.
3. நாட்டுப் பெரியோர்.

# 6. புலவர் மகளிர் சிலர்

[திரு. டாக்டர், அ. சிதம்பர நாதனுர், M. A., M. L. C.,
முதல்வர், தியாகராயர் கல்லூரி, மதுரை.]

பழந்தமிழ் நாட்டிற் பெண்பாலருட் பலர் புலவராய் விளங்கியது பழந்தமிழ் இலக்கியங்களால் அறியப்படுகிறது. அவருட் சிலரைப் பற்றி அறிய முற்படுவோம். காக்கையைப் பற்றித் தமது பாடலிலே பாடிய சிறப்பினுல், பெண்மணியார் ஒருவர் காக்கை பாடினியார் என்று பெயர் பெற்ருர். அவர் காக்கையை எப்படிச் சிறப்பித்தார் எனப் பார்ப்போம். தலைவன் ஒருவன் பொருளீட்டும் பொருட்டுத் தன் மனைவியைப் பிரிந்து போனவன் இப்பொழுது திரும்பி வந்திருக்கிருன். அவன் தோழியைப் பார்த்து "நான் பிரிந்த பொழுது தலைவியை ஆற்றுவித்துக்கொண்டு இருந்ததற்காக மிக்க நன்றியுடையோன்" என்று சொல்ல, அவள் "காக்கை கரைந்தது; அதனுல்தானே நீ வருவாய் என்று சொல்லி நான் ஆற்றுவித்தேன். காக்கைக்கே கடப்பாடுடையேம். நல்ல பசு நெய்யோடு வெண்ணெல்லால் ஆகிய சுடு சோற்றை ஏழு பாத்திரத்திலே ஏந்தித் தலைவி காக்கைக்குக் கொடுத்தாலும் அது பெரிய கைம்மாருகாது" என்று கூறுகிருள். இப்படிக் கூறியதாகப் பாட்டு ஒன்று இயற்றிய காரணத்தால், நச்செள்ளையார் என்னும் புலவர், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என அழைக்கப்பட்டு : நாளடைவில் காக்கை பாடினியார் என்றே வழங்கப்படுவாராயினர்.

இவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் அரசனைக் குறித்துப் பாடிய பத்துப் பாடல்களுக்காக நூருயிரம் பொற்காசும் அணிகலம் செய்துகொள்ளவென்று ஒன்பது துலாம் பொன்னும் பரிசிலாகக் கொடுக்கப்பெற்ருர் என அறிகிருேம். அப்பாடல்களைப் "பதிற்றுப் பத்து" என்னும் புத்தகத்திற் காணலாம். ஒரு பாட்டில், நீ பெரிய வள்ளல் எனக் கேள்வியுற்று உன்னைப் பார்க்க வந்தேன்; நான் நினைத்து வந்த செய்தியை முடித்து

வைப்பாயாக. இரவலரது துன்பம் போகும்படி நாடோறும் வரைவின்றி வழங்குகின்றாய். ஆதலால், நீ சிறிது காலமும் மேலுலகம் போகாது இரவலர் பொருட்டு இவ்வுலகில் தானே, நீண்டகாலம் நிலைபெறுவாயாக !'' என்று வாழ்த்துகிறார். மற்றப் புலவர்களாயின், நீடூழி வாழ்க! காவிரி மணலின் எண்ணைவிடப் பல ஆண்டு வாழ்க. நூறு பத்தடுக்கிய கோடி ஆண்டு வாழ்க. நான் வாழுங் காலமுஞ் சேர்த்து நீ வாழ்க! என்றவாறு வாழ்த்தி இருப்பார்கள். இவரோ,

"...........................எனையதூஉம்
உயர்நிலை யுலகத்துச் செல்லாது இவணின்று.
இருநில மருங்கின் நெடிது மன்னியரோ"

எனக் கூறத் துணிந்தார். அப்படிக் கூறியதால் அவ்வரசனுடைய பெருமையை ஒப்பற்ற முறையிற் புகழ்ந்தவரானார். அவனது கொடைச் சிறப்பால் அவன் வானுலகடையும் தகுதி உடையவன் என்பதும், வானுலகில் ஈவோரும் ஏற்போரும் இல்லை ஆதலால், இவ்வுலக வாழ்வே நலம் பயக்கும் என்பதும், அவன் விண்ணுலகு சேர்ந்துவிட்டால் உலகில் இரவலரைப் பாதுகாப்போர் அவன் போன்றவர் பிறர் இல்லை என்பதும், மேன்மேலும் அவன் ஈதலாகிய அறத்தையே செய்துகொண்டிருப்பதால் என்றும் அவனுக்கு வானுலகு கிட்டுமாதலின் இப்பொழுது அங்கு எய்தாததால் அவன் இழப்பது ஒன்றுமில்லை என்பதும், அவன் இங்கு இருப்பதால் இரவலர் பெறுவன பல என்பதும் எவ்வளவு நயமாக அங்குக் குறிக்கப்பெற்றுள! இப் புலவர் இலட்சம் பொற்காசு பெற்றது இவ்வொரு பாட்டுக்காக இருந்தாலும் தகும் என்று சொல்லலாம்.

பழந்தமிழ் நாட்டில் எல்லாக் குலத்திலும் புலவர் தோன்றினர் என அறிகிறோம். அறிவென்பது ஒரு குலத்தாருக்கோ, ஒரு பாலினருக்கோ தனி உரிமை என்று சொல்லுதல் ஆகாது. பெண் பாலருட் பலர் அக்காலத்திற் சிறந்த புலவராய் இருந்தனர் என்பதுமாத்திரமன்றி அப்புலவருட் சிலர் குறவர் குடியில், பாணர்

குடியில், குயவர் குடியில் தோன்றி விளங்கியவர் என்பதும் அறியப்படுகிறது. வெண்ணிக்குயத்தியார் எனப்படும் புலவர் நீடாமங்கலத்துக்கு அருகாமையில் உள்ள கோயில் வெண்ணி என்னும் ஊரிலே பிறந்த குயச்சாதிப் பெண். இவர் கரிகாற்சோழனைப் பாடிய பாட்டு ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. அப் பாடலால் இவருடைய கூரிய அறிவு புலனாகிறது.

அதனுள், கரிகாலனை நோக்கி இப்புலவர் கேட்கிறார் :

"வெண்ணிப் போர்க் களத்துள் நின்னொடு பொருது தோற்றுத் தான் பட்ட முதுகுப்புண்ணிற்காக நாணி உயிரைவிடத் துணிந்துள்ள சேரன், வென்ற உன்னை விட நல்லவன் அல்லனோ?" என்று. கரிகாற்சோழன் பெருஞ்சேரலாதன் என்பான் மீது எய்த அம்பு அவன் மார்பில் தைத்து உருவிப் போயிற்று. ஆயினும், தன் முதுகுப் பக்கத்திலும் புண்ணாயிற்றே; பார்ப்போர் முதுகுகாட்டி ஓடியதால் இங்ஙனம் விளைந்தது என்று கூறுவரே என்ற நாணத்தால் சேரன் வடதிசையை நோக்கியிருந்து, பட்டினிகிடந்து உயிர்விடத் துணிந்தான். எதிரிக்குத் தோற்றுப் புறங்காட்டி ஓடாதிருந்தும், முதுகிலே தோன்றிய புண் முதுகுகாட்டிப் பெற்ற புண்ணோடு ஒத்தது என்று கருதி இச்சேரன் வடக்கிருந்தான் ஆதலின், அவனை நல்லவன் என்று புலவர் மதிக்கிறார். இதை அந்த அளவில் வாளா கூறாமல் "போரிலே வென்றவனே! உன்னைவிட நல்லவன் புறப்புண் நாணி வடக்கிருந்தோன்" என்று கூறுவது உன்னத்தக்கது. இதனைக் கேட்டவுடன், சேரன் எதிர்க்குங்கால் கரிகால் வளவன் அவன் மார்பில் அம்பினை எய்யாமல், அச் சேரன் தோற்றோடும்போது முதுகில்தான் எய்தானோ என்ற எண்ணம் உண்டாகும். அப்படிச் செய்திருந்தால் கரிகாலனுக்குப் பழியென்பது வெளிப்படை. உண்மையில் முதுகில் எய்யவில்லை; மார்பைக் குறித்தே எய்தான் என்ற சொல்லைப் பகையரசரின் ஆட்கள் சொல்ல வேண்டும் என்று உட்கொண்டு இப்புலவர் இங்ஙனம் கூறினார் போலக் காணப்படுகிறார்.

" வென்ருேய்! நின்னினும் நல்லன் அன்றே
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே "

என்று கூறிய இப்புலவர் சொற்களுக்கு எதிரே,

" தன்போல் வேந்தன் முன்புகுறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கி ருந்தனன் "

என்ற சொற்கள் கழாத் தலையார் என்ற சேர நாட்டுப் புலவர் வாயினின்றும் எழுகின்றன. இவ்விரண்டு கூற்றும் வெவ்வேறு பாடல்களில் வந்துள ஆயினும் ஒன்று சேர்த்து நோக்கத் தக்கனவாம். இங்ஙனம் உண்மைப் புகழ்மொழியைப் பிறர் வாயினின்று, அதிலும் பகைப் புலத்துப் செரும்புலவர் வாயினின்று எழுப்ப வல்லரா யிருந்த வெண்ணிக் குயத்தியார் பாராட்டத் தக்கவர். " நீ மார்பிலே அம்பு எய்ய, அது உருவி முதுகுப் பக்கம் போனதற்காக வடக்கிருந்தவன் அறிவிலி " என்று சொல்லி இருப்பாரேல் இவர் இழிந்தோர் எனப்படுவர். மார்பிலே எய்த அம்பு முதுகு வழியே நீங்கிற்ருக, அதற்கு நாணி வடக்கிருந்தோனை விட, நீ பெரியவன் என்று சொல்லி இருப்பாரேல், இவர் சாதாரண மகள் என்று சொல்லப்படுவர். வென்ற உன்னைவிடப் புறப்புண் நாணி வடக்கிருந்தவன் நல்லவன் என்று சொல்லியதில்தான் நுட்பம் அமைந்து இருக்கிறது. புறங்காட்டி ஓடியவனைச் சோழன் எய்யவில்லை என்று கழாத்தலையாருடைய வாயால் பேசுவித்ததன்றி மார்பில் எய்தது முதுகு வழி வந்தது என்ற பேச்சை எழுப்பி அதனுல் சோழனுடைய அம்பின் திறத்தையும், சேரனுடைய மார்பின் நுண்மையையும் குறிப்பித்தாராஞர் இக் குயத்தியார். பழிப்பார் போலப் புகழ்ந்து இத்துணைப் பெருமை கரிகாலர்க்கு உண்டு என்று குறிப்பாய்க் காட்ட வல்ல வெண்ணிக் குயத்தியார் சிறந்த புலவர் என மதிக்கத் தக்கவர். அன்றியும் கரிகாலனை நோக்கிக் கூறப்பட்டதாக உள்ள இப் பாடல் அரசனிடத்தும் புலவர் சிற்சில வேளைகளில் விளையாடுவதும் உண்டு என்பதைக் காட்டும்.

எனவே, பண்டைத் தமிழ் நாட்டிலே கல்வியறிவு படைத்துப் புலமையுற்ற பெண்மணியார் பலர் என்பதும் அவர் பாடிய பாக்கள் பல என்பதும் அவர் பாடல்கள் மதி நுட்பம் மிக்கன என்பதும் அறியப்படும்.

## அருஞ்சொற்பொருள்

ஆற்றுவித்து - தணித்து, அணிகலம் - நகை, வரைவின்றி - அளவின்றி, புலனுகின்றது - தெரிகின்றது, பொது - போர் செய்து, உன்ன - எண்ண, புறப்புண் - முதுகுப் புண், கூற்றும் - சொல்லும், நுண்மை - நுட்பம்.

## பயிற்சி

I. வினக்கள் :

1. சங்ககாலப் பெண் புலவர் சிலரைக் கூறுக.
2. காக்கை பாடினியார் என்று பெயர்வரக் காரணம் யாது ?
3. சங்ககாலத்தில் எல்லாக் குலத்தினரிலும் புலமை மிக்கவர் இருந்தனர் என்பதற்குச் சான்று கூறுக.
4. வெண்ணிக் குயத்தியாரின் புலமையை விளக்குக.
5. புறப்புண் நாணி வடக்கிருந்தோன் யார் ? ஏன் ?

II. பிரித்து எழுதுக :

பழந்தமிழ், பொருளீட்டும், கைம்மாருகாது, நாடோறும், வானுலகில், தோற்ருேடும், வடக்கிருந்தவன்.

III. குறிப்பு வரைக :

நச்செள்ளையார், வடக்கிருத்தல், பதிற்றுப்பத்து, கோயில் வெண்ணி, கரிகாற்சோழன்.

IV. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

அழைக்கப்பட்டு, இரவலர், அம்பு எய்ய, பண்டைத்தமிழ், பழிப்பார் போல, கூறப்பட்டதாக.

V. கற்ற பெண்களின் பெருமை பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 7. கரந்தைக் கவியரசு

[திரு. புலவர், R. ஏகாம்பரநாதனுர் அவர்கள், தஞ்சாவூர்]

தோற்றமும் இளமையும் : திரு. அரங்க. வேங்கடா சலம் பிள்ளை அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த கந்தவர்வக் கோட்டைக் கருகில் உள்ள மோகனூரில் பிறந்து, தஞ்சையில் வாழ்ந்த பெரும் புலவர் ஆவார். இவர் ஆயர் மரபினர். 'விய' ஆண்டில் தோன்றி அறுபது ஆண்டுகள் வாழந்து 'விசய' ஆண் டில் மறைந்தவர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் வேங்கடராமபிள்ளை, குயிலையா, இலக்கண ஆசிரியர் மன்னார்குடி சோமசுந்தரம்பிள்ளை முதலியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியப் பாடம் கேட்டவர். டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர், புலவர் அரசஞ் சண்முகனர், இரா. இராகவையங்கார், நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார் முதலிய புலவர் பெருமக்களிடம் மிகுந்த தொடர்பு கொண்டவர்.

ஆசிரியர் தொழில் : பிள்ளையவர்கள் கோனுப்பட்டு (கோனூர் பற்று), கரந்தைத் தமிழ்ச் சங்கப்பள்ளி, தஞ்சைத் தூய பேதுரு உயர்நிலைப்பள்ளி, திருவையாறு அரசர் கல்லூரி, கரந்தைப் புலவர் கல்லூரி ஆகிய இடங்களில் தமிழாசிரியர் தொழிலைச் செவ்வையாகச் செய்தவர்.

பிள்ளையவர்கள் இலக்கணம் கற்பிக்கும் போதும் பிறரிடம் பேசும்போதும் நகைச்சுவை பொருந்தத் தாமே விரைவில் புதுப்புதுக் கதைகள் கட்டி சந்தர்ப்பத் தோடு இயைத்துக்காட்டி விளக்குவார்கள். உதாரண மாக நுந்தை என்ற சொல்லில் நு, (ந்+உ) இரண்டெழுத் தும் சேர்ந்து மொழிக்கு முதலாக வந்தது. மொழிக்கு முதலாகாத குற்றியலுகரம் (ந்) எழுத்துடன் சேர்ந்து முதலானது ஒற்றுமை நயம்பற்றி யென்றும், உயிர் மெய் யல்லாத தனி மெய்கள் மொழிக்கு முதலாகா என்பதனை (க்+அ=க) என்று உயிருடன் கூடி மொழிக்கு முதலாகுமே

யன்றி, "க்" தனியே மொழிக்கு முதலாகாது என்றும் கூறி, இது வேற்றுமை நயம் பற்றியது என்பர் தொல்காப்பியர். இக் கருத்தைக் கவியரசு ஒரு சமயம் பின்கண்ட ஒரு நயமான கதையைப் புனைந்து விளக்கினர்.

இரயிலில் ஒரு சீட்டு வாங்கிக் கொண்டு ஒரு பெண் பயணம் சென்ருள். கையில் மூன்று வயது நிரம்பிய ஒரு குழந்தையை அவள் பக்கத்தில் வைத்திருந்தாள். அப்போது சீட்டுச்சோதகர் இரயிலில் சீட்டுக்களைச் சோதித்துக் கொண்டு வந்தார். இப் பெண்ணிடம் வந்து சீட்டுக் கேட்டார். இவள் உடனே குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு சீட்டைக் காட்டினள். சோதகர் 'குழந்தைத்கு'? என்ருர். உடனே மடியில் தானே இருக்கிறது என்று கூறித் தப்பினள். அப்பெண் அடுத்த ஊருக்கு அரசாங்க உலுப்பை (ஊண் பண்டம்) வாங்கச் செல்பவள். அடுத்த ஊரில் இறங்கினள். உலுப்பை வாங்கும் இடத்துக்குச் சென்ருள். உலுப்பை அதிகாரி இவளுக்கு ஓர் உலுப்பை கொடுத்தார். உடனே அப்பெண் இதோ இக் குழந்தைக்கும் ஒன்று கொடுங்கள் என்று கேட்டு வாங்கினள். தற்செயலாக இரயில் சீட்டுச் சோதகர் அங்கு வந்தார். இப் பெண்ணின் செயலைப் பார்த்து, நீதானே அம்மா இரயிலில் வந்தது என்ருர். உடனே ஆமாம் ஐயா, அது ஒற்றுமை நயம், இது வேற்றுமை நயம் என்ருளாம். (இன்னும் வயிற்றில் இருந்த 9 மாதக் குழந்தைக்குக்கூட வேற்றுமை நயத்தால் உலுப்பை கேட்டாள் என்றும் கூறுவார் கவியரசு.)

மற்ருெரு சமயம் இலக்கியப் பாடத்தில் ஒரு புதிய உரை கூறினர்: 'எண்ணறக் கற்று எழுத்தறப் பயின்றும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்து' என்ற பாடலுக்குப் பழமையாகச் சொல்லும் உரை பெண்களை இழிவுபடுத்துவதாக உள்ளது. அவர்கள் இனியும் பழைய உரையைக் கூறின், கூறுபவர் மேல் பெண்கள் மானநட்ட வழக்காடக்கூடும். ஆதலால் அது சரியன்று. எவ்வளவு படித்திருப்பினும் பெண்ணறிவுபற்றி இழித்துக்

கூறல் பெரும் பேதமைத்து என்று கூறவேண்டும் என்று தெளிவாகக் கூறினுர். இப்படிப் பல கூறுவார்.

**நகைச்சுவை:** ஒருவர் கரந்தையில் கவியரசைக் கண்டு ஐயாவுக்கு எங்கே சாகை என்ருர். உடனே கவியரசு அவர்கள் எனக்குச் சாகை கரந்தையில் தான் என்ருர். (சாகை=இறப்பு, இருப்பிடம்), மற்ருெரு சமயம் அவர் வீட்டில் பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஒரு கதை சொன்னுர். ஒரு நாள் ஒருவர் தனது நண்பர் ஒருவரைத் தன் வீட்டிற்கு உணவுண்ண அழைத் தார். அழைத்தவர் வைதிகர். இருவரும் உண்டு முடிந்த பின்பு, வைதிகர் தன் மனைவியைப் பார்த்து 'நண்பர் உண்ட இடத்தில் கொஞ்சம் சாணம் தடவு' என்ருராம். உடனே அழைக்கப்பட்டவர் ஆமாம் அம்மா, ஐயா சொன்ன இடத்தில் தடவுங்கள் என்று சொன்ருராம். இப்படியெல்லாம் நாள் முழுதும் நகைச் சுவை தோன்றப் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள கவியரசு பட்டத்திற் கும் அவர் நகைச்சுவை தோன்றப் பின்கண்டவாறு கூறினுர். நான் இளைஞனுக இருந்தபோது என் சொந்த ஊரில் இருந்த ஒரு கவிந்த அரசமரத்தின் கீழிருந்து ஏதாவது படிப்பது வழக்கம். அதைப்பார்த்த சங்கத் தார் 'கவியரசு' என்ற ஆகு பெயரால் என்னை அழைத் தனர் என்று கூறினுர்.

**தமிழ்ப் பணி:** பலயாண்டுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அமைச்சராகவும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் தமிழ்ப் பொழில் என்னும் திங்கள் வெளியீட்டின் ஆசிரியராகவும் இருந்து தமிழ்ப் பணி புரிந்தவர்.

தமிழ்ப் பொழிலில் பல கட்டுரைகளும், கவிதை களும் புதிய முறையில் செந்தமிழ் நடையில் பிள்ளை யவர்கள் எழுதியுள்ளார். அவற்றுள் 'நாய் பிடிக்கும் சோமன்' என்ற தலைப்பில் பிள்ளையவர்களால் எழுதப் பட்டது மிகச் சிறந்ததாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாக்கள் தோறும்

பிள்ளையவர்களால் எழுதப்பட்ட வரவேற்றுப் பாடல் களும் வாழ்த்துப் பாடல்களும் சிறந்ததொரு இலக்கிய மாகும். அதன் சிறப்பினை யுணர்ந்தே சங்க வெள்ளி விழாவின்போது "கரந்தைக் கவியரசு" என்ற சிறந்த தோர் பட்டம் அன்னாருக்கு அளிக்கப்பட்டது. சங்க ஆண்டுவிழாக்களின்போது மக்கள் திரளாகக் கூடுவர். விழா இரண்டு மூன்று நாட்கள் நடைபெறும். சிறந்த இலக்கியத் தலைப்புக்களில் பெரும் புலவர் சொற்பொழி வாற்றுவார். ஒவ்வொரு நாளும் சொற்பொழிவின் இறுதியில் நன்றி கூறல் நிகழும். அப்போது சொற் பொழிவுகளைக் கேட்கத் தவறியவர் சிலர் தாம் கேட்கத் தவறியமை பற்றிக் கவலைப்படாது பிள்ளையவர்கள் அமைச்சர் நிலையில் நின்று நன்றிகூறும் சிறப்பினையும் நயத்தையும் கேட்டு இன்பமும் அமைதியும் கொள்வர். எங்கெங்கு சென்றவர்களும் இறுதியில் அமைச்சர் நன்றி கூறும் வாய்ப்பினை இழக்க மாட்டார்கள். இப்போதுள்ள வழக்கத்திற்கு மாறாக அவர் காலத்து நன்றி கூறும் நேரத்தில் தான் அவை நிறைந்து காணப்படும். நன்றி கூறலை ஒரு கலையாக–பண்பாகச் செய்தவர் கவியரசு அவர்கள். தொல்காப்பியத்திற்கு எழுதப்பட்ட பழைய உரையாகிய தெய்வச் சிலையார் உரையைப் பதிப்பித்தார் கள். சங்க இலக்கியங்கள் சிலவற்றிற்கு திரு. வேங்கட சாமி நாட்டார் அவர்கள் உரையெழுத முற்பட்டபோது கவியரசு அதற்கு உறுதுணையாக நின்றார்கள். திரு. சாமிநாத ஐயர் அவர்கள் வெளியிட்ட சீவக சிந்தாமணிப் பதிப்புக்குக் கவியரசர் ஓரளவு உதவியவர். ஆசாணுற்றுப் படை, சிலப்பதிகார நாடகம் இவ்விரண்டும் இவர்களால் ஆக்கப்பட்ட சிறந்த நூல்களாகும்.

அறுபதாண்டு விழா: கரந்தைப் புலவர் கல்லூரி யில் கல்லூரித் தலைமைப் பொறுப்பேற்று நடத்தும் போதுதான் அவர்கட்கு அறுபதாண்டு விழாக் கொண் டாட நேர்ந்தது. கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் பல்லாயிரம் மக்கள்கூடி விழாவினைச் சிறக்கக் கொண் டாடினர்.

அன்பர்கள் ஆருயிரம் ரூபாய் அதுபோது காணிக்கை யாகத் தந்தனர். இவர்கள் சிறந்த கவி புனைதலால் மட்டும்தான் புகழ் பெற்றுக் கவியரசர் என்ற சிறந்த பட்டம் பெற்ருர் என்பது மட்டுமல்ல, புலவர்க்கு இருக்க வேண்டிய பாப்புனைவு, உரைநூல் எழுதல், பாடம் கூறல், யாவரும் விரும்புமாறு நடத்தல் ஆகிய தன்மை பெற்றுத் திகழ்ந்தார்கள்.

### அருஞ்சொற்பொருள்

ஆயர் - இடையர், திரள் - கூட்டம், இறுதி - கடைசி, அவை - தமிழ்ச் சங்கம்.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. கவியரசின் இளமையைப் பற்றிக் கூறுக.
2. கவியரசின் நகைச்சுவைக்கு ஓர் உதாரணம் கூறுக.
3. கவியரசின் இலக்கணப் புலமையை விளக்குக.
4. கவியரசு எழுதிய நூல்கள் யாவை ?
5. கவியரசின் தமிழ்ப் பணியைத் தொகுத் தெழுதுக.
6. புலவர் பெற்ற பட்டங்கள் யாவை ?
7. புலவரின் நண்பர்கள் யாவர் ?
8. புலவர் பணிபுரிந்த இடங்கள் யாவை ?

II. பிரித்தெழுதுக :

தமிழாசிரியர், இலக்கியப்பாடத்தில், செந்தமிழ் நடையில், மற்ருெரு.

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

கற்பிக்கும் போதும், வாங்கிக் கொண்டு, கவியரைசைக் கண்டு, அறுபதாண்டு, பெருந்திரளாக.

IV. உனக்குத் தெரிந்த ஒரு புலவர் வரலாற்றைக் கேட்டு நீயே சுவை யாக எழுதுக.

## 8. சிறை நீக்கிய செய்யுள்

[திரு. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், சென்னை.]

திருச்சிராப்பள்ளியில் சொக்கநாத நாயக்கர் அரசாட்சி செய்துவந்த காலத்தில், திருநெல்வேலிச் சீமையை வடமலையப்பப் பிள்ளையன் என்பவர் (கி. பி. 1620—1676) பிரதிநிதியாக இருந்து ஆண்டுவந்தார். அவருடைய அதிகாரத்தின் பெருமையினால் தென்பாண்டி நாட்டில் குடிகள் யாவரும் சுகமாக வாழ்ந்துவந்தனர். அவரைப் பிள்ளையன் என்றே பெரும்பாலும் வழங்குவர். அவர்கள் தெய்வ பக்தி மிக உடையவர். அவரால் இயற்றப்பட்ட தருமங்களும், தேவாலயத் திருப்பணிகளும், பிற அருமைச் செயல்களும் பல புலவர்களுடைய செய்யுட்களில் மணியைப்போல அமைக்கப்பட்டு, அவருடைய புகழை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் சிறந்த கல்விமானாக இருந்தார். தமிழில் நிறைந்த புலமையுடையவர். மச்சபுராணம், நீடூர்த்தலபுராணம் முதலிய சில நூல்களை அவர் இயற்றியிருக்கிறார். தமது சிறந்த புலமைக்கேற்ப புலவர்களுடைய பெருமையையும் அவர்கள் இயற்றும் செய்யுட்களின் அருமையையும் அறிந்து, அவர்களை மதித்துப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையுடையவர். புலவர்களிடத்தில் பேரன்புடையவராக அவர் இருந்தமையால் அவரைச் சார்ந்த பலருக்கும் அங்ஙனமே புலவர்களிடத்தில் அன்பு உண்டாயிற்று. அவர் காலத்து உத்தியோகத்தர்களில் பலர் சிறந்த கல்விமான்களாக விளங்கினார்கள்; மன்னவனெப்படி மன்னுயிரப்படி, என்பது உண்மையன்றோ?

அக்காலத்தில் தென்திருப்பேரை என்ற வைணவத் தலத்தில் உள்ள தலவகார சாமவேதிகளாகிய வைணவர்களுள் நாராயண தீட்சதரென்னும் ஒரு வித்வான் இருந்தார். பல வருடங்களுக்குமுன் சுந்தரபாண்டியரென்னும் அரசர் பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார சாம வேதிகளாகிய வைணவர்கள் குடும்பத்தைத் தென் திருப்பேரையில் அமைத்து அக் குடும்பத்

73
04(9)
N66

தினருக்கு, வீடுகளும் நிலங்களும் வழங்கினரென்பர்; அந் நூற்றெட்டுக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் இன்றும் அவ்வூரில் வாழ்கின்றனர்.

முற்கூறிய நாராயண தீட்சதரென்பவர் அப் பரம்பரையில் வந்தவரே. அவருக்கு நிலம், வீடு முதலிய சொத்துக்கள் இருந்தன. அவர், தம்முடைய குலவொழுக்கத்திற்கேற்ற கடமைகளைச் செய்தும், தமிழ் நூல்களைப் படித்து இன்புற்றும், செய்யுளியற்றியும், தென்திருப்பேரையில் எழுந்தருளியுள்ள மகர நெடுங்குழைக்காதரென்னும் திருநாமமுள்ள திருமாலைத் தரிசித்து மகிழ்ந்தும் வாழ்ந்து வந்தார்.

இங்ஙனம் இருந்த காலத்தில் வரி வசூலிக்கும் பொருட்டு வடமலையப்பப் பிள்ளையினல் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுள் ஒரு வன்னெஞ்சர் தென்திருப்பேரையிலிருந்த வைணவர்களில் சிலர் வரி செலுத்தவில்லையென்ற காரணத்தால் அவர்களைத் திருநெல்வேலிக்குக் கொணர்ந்து சிறையிலிட்டார். அவர்களுள் நாராயண தீட்சதரும் ஒருவர். அவர்கள் தாம் வரி கொடமைக்குக் காரணங்களை மிகவும் பணிவாகக்கூறி, இயன்ற காலத்தில் செலுத்தி விடுவதாக நயந்து கேட்டுக்கொண்டும் அவ்வதிகாரியின் மனம் இளகவில்லை. ஒரே பிடிவாதமாகச் சிறையிலிட்டுக் காவல் வைத்துவிட்டார். அச் சிறைக் கூடம் இருந்த தெருவிற்கு இப்போதும் காவற்புரைத் தெரு என்னும் பெயர் வழங்கி வருகிறதாம்.

சிறைப்பட்ட நாராயண தீட்சதர் 'தம்முடைய பிராப்த வினையின் பயனாக இந்தத் துன்பம் வந்தது' என்று எண்ணி ஏங்கினர். சுதந்திரமான வாழ்க்கையும் நாள்தோறும் அதுவரை செய்து வந்து குழைக்காதர் தரிசனமும் அவருக்கு அப்பால் இல்லாதனவாயின. நாம் எவ்வளவோ நயந்து கல்லும் கரையும்படி கேட்டுக் கொண்டும் இந்தக் கொடியன் இரங்கவில்லையே! இனி என்செய்வோம்! எல்லாத் துன்பத்தையும் நீக்கிப் பாது காக்கும் குழைக்காதரே நமக்குக் கதி. இந்தக் கொடியவனிடம் செய்து கொண்ட விண்ணப்பம் இவன் காதில்

135409

சிறிதும் ஏறவில்லை; இனிமேல் குழைக்காதர் காதில் ஏறும் வண்ணம் விண்ணப்பித்துக் கொள்வதுதான் முறை என்று தெளிந்தார். அதுமுதல் ஒவ்வொரு நாளும் குழைக்காதரைப் பற்றி மனமுருகிச் செய்யுட்கள் சிலவற்றை இயற்றித் திருப்பித் திருப்பி வாயாரச் சொல்லிப் பிரார்த்திக்க ஆரம்பித்தார். அவரைப் பார்த்து உடன் இருந்தவர்களும் சில செய்யுட்களை இயற்றத் தொடங்கினார்கள்.

நாராயண தீட்சதர் "குழைக்காதர் பாமாலை" என்று பெயரிட்டு, தம்முடைய செய்யுட்களை முறையாக அமைத்து வந்தார். குழைக்காதரைப் பிரிந்திருக்கும் கொடிய காலமும் வந்ததே, என்று அவர் எண்ணி எண்ணி நைந்தார்.

" கன்றுக் கிரங்கிய கற்றுவைப் போலக் கருணையுடன்
என்றைக் கிரங்குவ ரோவறி யேனெழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை யெனத்திரித் தோர்குழைக் காதரையான்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே "

என்பது பாமாலையிலுள்ள முதற்பாட்டு. இதில் குழைக் காதரை யான் சென்று தொழுவதும் பாவங்கள் தீர்வதும் எப்பொழுது என்று அவர் உள்ளந் துடித்துப் பாடியிருக் கிறார்.

சிறை வாழ்க்கையை மேற்கொண்டு ஒருமாத காலம் ஆயிற்று. ஒரு வழியும் தோன்றவில்லை.

" திங்களொன் றுகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
எங்கடம் பாலிரங் காததென் னேவிசை நான்மறையின்
சங்கமுங் கீதத் தமிழ்ப்பாட லுஞ்சத்த சாகரம்போல்
பொங்குதென் பேரைப் புனிதா கருணைப் புராதனனே "

என்று குழைக்காதரை நினைந்து இரங்கினார். தம்முடைய ஊரில் பெருமாள் சந்நிதியில் நான்முறை முழக்கமும் திவ்வியப் பிரபந்த முழக்கமும் கடல் முழக்கம் போல நிறைந்து விளங்குமென்பதை அவர் எண்ணிக் கொண்டு 'அந்தத் திவ்விய சப்தங்களைக் கேட்டு ஈடு படாமல் இங்கே அழுகையொலியும், சிணுங்கும் சப்தமும், அதிகாரத் தொனியும் கேட்டுத் துன்புறும் தலைவிதி

நமக்கு வாய்த்ததே!' என்று புலம்பினர். குழைக்காதர் அருள்செய்வார், அருள் செய்வார், இன்றைக்குள் ஏதாவது நன்மை ஏற்படும், நாளைக்குள் அநுகூலம் உண்டாகும், என்று எண்ணி ஏமாந்தார். பிறகு,

" இன்றுகும் நாளைக்குள் நன்றுகும் என்றிங் கிருப்பதலால்
ஒன்று கிலும்வழி காண்கில மேயுன் உதவியுண்டேல்
பொன்றுமல் நாங்கள் பிழைப்போம் கருணைபுரிந் தளிப்பாய்
அன்று ரணந்தொழ நின்றுய்தென் பேரைக் கதிபதியே"

என்று குழைந்து நைந்தார்.

வடமலையப்பப் பிள்ளையன் நல்ல நீதியுடையவ ரென்றும், தமிழ் அன்புடையவ ரென்றும் அறிந்தவராதலின், தாமும் பிறரும் சிறையில் இருப்பதை அவர் அறிந்தால், அவரால் நன்மையுண்டாகு மென்ற நினைவு தீட்சதருக்கு உண்டாயிற்று; அப்பொழுது, 'அவருக்குத் தெரிவிப்பவர் ஒருவருமில்லையே' என்ற எண்ணம் அடுத்தாற்போல் தோன்றியது; உடனே,

" வள்வார் முரசதிர் கோமான் வடமலை அப்பன்முன்னே
விள்வாரு மில்லை இனிஎங்கள் காரியம் வெண்டயிர்பால்
கள்வா! அருட்கடைக் கண்பார் கருணைக்களி றழைத்த
புள்வாக ணு!வன்பர் வாழ்வே!தென் பேரைப் புராதனனே"

என்று கதறினர்.

இப்படிச் சில நாள் கழிந்தன. புதிய செய்யுள் இயற்றி மனங்கரைந்து பாடுவதும், முன்பே இயற்றியுள்ள பாடல்களைப் பாடிப் புலம்புவதும், நாராயண தீட்சதர் வழக்கமாயின. அந்தச் சிறைக் கூடக் காவலதிகாரி தமிழறிவுடையவர். ஒருநாள் நாராயண தீட்சதர் 'வள்வார் முரசதிர் கோமான்' என்ற செய்யுளை மட்டும் சொல்லிக்கொண்டிருந்தபோது, அவ்வதிகாரியின் காதில் அது பட்டது. நம்முடைய எசமான் பெயர் இந்தப் பாட்டில் அமைந்திருக்கிறதே! உள்ளே இருப்பவர் தமிழ் வித்துவான் போலத் தோற்றுகிறது என்று எண்ணினர். தமிழ்ப் புலவர்களுக்கு மரியாதை செய்வதும் அவர்களுக்குக் குறைவு வராமல் பாதுகாப்பதும் பிள்ளையனுக்கு உவப்பான காரியங்களாதலின், அதிகாரி உடனே சென்று

தமிழ் வித்துவானொருவர் சிறையில் இருப்பதையும் அவர் பிள்ளையன் பெயரைப் பாட்டில் கூறிப் புலம்புவதையும் எசமானனிடம் சொன்னார்.

அவர் சொன்னதுதான் தாமதம்; தண்டமிழ்வாணர் துயரத்தைப் பொருத வடமலையப்பப் பிள்ளையன் எல்லாக் காரியங்களையும் விட்டு விட்டு, உடனே தம் குதிரைமீது ஏறிக்கொண்டார்; சிறைக் கூடத்தை நோக்கி விரைந்து வரலானார்.

சிறிது நேரத்திற்குள் குதிரை சிறை வாயிலில் வந்து நின்றது. பிள்ளையன் சிறைக் கூடத்தைத் திறக்கச் செய்து உள்ளே சென்றார். அப்பொழுது குழைக்காதர் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு பாட்டுப் பாடிய வண்ணமாய்க் கண்ணுங் கண்ணீருமாக அங்கே இருந்த புலவரைக் கண்டார். அவருடைய நிலை பிள்ளையன் நெஞ்சில் உருக்கத்தையும் கண்ணில் நீரையும் உண்டாக்கின; 'குழைக்காதரை நினைந்து தமிழ்க் கவியால் முறையிடும் இந்தப் புலவர் பெருமானைப் பற்றி இதுகாறும் அறிந்து கொள்ளவில்லையே; நாம் தமிழறிந்ததனால் என்ன பயன்? இவர் எவ்வளவு நாட்களாய் இங்ஙனம் துன்புறுகின்றாரோ?' என்று மனம் வருந்தினார். அவரை நோக்கி அவர் வரலாற்றை வினவினார். அவரது வாய் மொழியால் எல்லாம் தெளிந்தார்.

பிள்ளையன் உத்தரவினால் பல வண்டிகள் சிறைவாயிலில் வந்து நின்றன. நாராயண தீட்சதரும் அவருடன் இருந்த வேறு தமிழறிஞர்களும் அவற்றில் ஏறிக் கொண்டனர். பிள்ளையன் தீட்சதரையும் பிறரையும் தம் அரண்மனைக்கு அழைத்துச்சென்று உபசரித்தார்; அவர் கொடுக்க வேண்டிய வரியை நீக்கியதோடு அவர் நிலங்களை என்றும் வரியில்லாத இனம் நிலங்களாகச் செய்து விட்டார்.

தீட்சதர் பாடிய பாமாலையைப் பிள்ளையன் கேட்டார். அப்புலவருடைய மனம் எவ்வளவு வருந்தி நைந்திருக்க வேண்டுமென்பதை அச்செய்யுட்கள் நன்றாக எடுத்துக் காட்டின. அதுகாறும் அறுபத்தைந்து பாடல்கள் இயற்

றப்பட்டிருந்தன. பிள்ளையன் தீட்சதரைப் பார்த்து, 'இந்நூலை முற்றும் பாடி முடிக்க வேண்டும்' என்று விரும்பினர். அப்படியே அப்புலவர் பின்னும் முப்பத்தைந்து செய்யுட்களை இயற்றி நூறு பாடலாகப் பூர்த்தி செய்தனர்.

தாம் சிறைக்கூடத்திலிருந்து முறையிட்ட முறையீடு குழைக்காதர் காதில் விழுந்தமையால் அப்பெருமான், பிறர் காதுகளிலும் விழும்படி செய்து சிறைத் துன்பத்தை நீக்கி அருளினரென்று தீட்சதர் உறுதியாக நம்பினர். அதனால் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்பு பாடிய செய்யுட்களில் குழைக்காதர், தம் துன்பத்தைப் போக்கியருளியதாகச் சொல்லியிருக்கிறர். விடுதலைபெற்ற நிலையில் பாடிய முதற் பாட்டிலேயே,

"ஆடகச் சேவடி யாலெம தாவி அளித்தனைகார்க்
கோடகப் பாவிகள் வாராமற் காத்தனை"

என்று குறிப்பித்திருக்கின்றர். இதில் "கார்க்கோடகப் பாவி"கள் என்றது தம்மைச் சிறையிட்ட அதிகாரியையும் அவரைச் சார்ந்தவர்களையுமே யென்று தோன்றுகிறது.

இந்தப் பாமாலை தென்திருப்பேரை முதலிய இடங்களில் பலரால் மிக்க பக்தியோடு பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. அங்ஙனம் செய்வதனுல் சில துன்பங்கள் நீங்கி இன்பம் உண்டாவதாகச் சிலர் கூறக்கேட்டிருக்கிறேன். பள்ளிக்கூடத்திலும் முன் காலத்திலே இது பாடமாக இருந்து வந்தது.

## அருஞ்சொற்பொருள்

தலவகாரம் - சாம வேதத்தின் ஒரு பிரிவு, மகரம் - சுறுமீன், குழை - காதணி, நயந்து - கெஞ்சி, நைந்தார் - வருந்தினர், காவற்புரைத்தெரு - சிறைக்கூடமுள்ள தெரு. "கன்றுக்கு" எழு பார் உம் - ஏழு தீவுகளைக் கொண்ட நிலத்திலுள்ள யாவரும், குன்றை - கோவர்த்தன மலையை, கவிகை என - குடையாக, "திங்களொன்ருக" திங்கள் ஒன்று ஆக - ஒரு மாத காலமாக. எங்கள் தம்பால் - எங்களிடத்தில், பொன்ருமல் - அழியாமல், அன்று - வெகு காலந்தொடங்கி, ஆரணம் -

வேதம். 'வள்வார்' முரசு - வலிய தோல் கயிற்றினுல் கட்டப்பட்ட பேரிகை. விள்வார் - சொல்பவர், புள் - கருடன்.

## பயிற்சி

I. வினுக்கள் :

1. பிள்ளையன் என்ற பெயர் யாருக்கு வழங்கியது ?
2. பிள்ளையனுடைய குண நலன்களைச் சுருக்கி வரைக.
3. பிள்ளையன் எழுதிய நூல்கள் யாவை ?
4. நாராயண தீட்சதர் என்பவர் யார்? அவர் சிறைப்படக் காரணம் யாது ?
5. தீட்சதர் எழுதிய நூல் யாது? எழுதக் காரணம் என்ன ?
6. புலவர் சிறை நீக்கம் பெற்றது எவ்வாறு ?
7. தீட்சதர் விடுதலை பெற்றபோது பாடிய பாட்டில் தமது நம்பிக்கையை எப்படி வெளியிட்டிருக்கிருர் ?

II. சிறு குறிப்பு வரைக :

தலவகாரம், காவற்புரைத் தெரு, பிள்ளையன்.

III. சேர்த்தெழுதுக :

வன்மை + நெஞ்சர், வெண்மை + தயிர், நான்கு + மறை, கன்று + ஆ; செம்மை + அடி.

IV. 1. பிள்ளையன் தமிழ்ப்பற்று என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

2. தற்காலத்தில் தமிழ் வளர்க்கும் ஒருவரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 9. தமிழகத்துக் கோவில்கள்

[திரு. டாக்டர், மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L., L.T.,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.]

தமிழகத்தில் இன்றுள்ள கோவில்கள் எப்போது தோன்றின? அவற்றிற்கு மூலம் என்ன? கோவிற் கலை உணர்வு தமிழர்க்கே உரியதா? பண்டைக் காலத்தில் கோவில்கள் எவற்றிற்குப் பயன்பட்டன? நமது கடமை என்ன? என்பன போன்ற கேள்விகட்கு விடை காணலே இவ்வாரய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கோவிலும் கல்வெட்டும்:** "செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்திர பல்லவன் - அப்பர் காலத்தவன்) அமைத்த கோவில் இது" என்னும் கல்வெட்டு, மண்டபப்பட்டு என்னும் இடத்துக் கோவிலிற் காணப்படுகிறது. இதன் காலம் கி. பி. 615-630 ஆகும். இக் கல்வெட்டால் அறியத்தக்க செய்திகளாவன:

(1) மகேந்திரன் காலத்திற்கு முன் தமிழகத்தில் கற்கோவில்கள் இல்லை. இருந்த கோவில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்ருல் ஆனவை.

(2) மகேந்திரன் காலத்திற்கு முன்னரே தமிழர் கோவில் கட்டத் தெரிந்திருந்தனர். ஆயின் அவை மண், மரம் முதலியவற்ருலாகி அழியத்தக்கன.

(3) இங்ஙனம் அழியத்தக்க பொருள்களால் அமைத்த கோவில்களையே மகேந்திரன் கற்களில் செதுக்கி அமைத்தனன்.

தரையும் சுவர்களும் செங்கற்களால் ஆனவை. மேற் கூரை மரத்தால் ஆயது. அங்கங்கு இணைப்புக்காக ஆணிகள் முதலியன பயன்பட்டன. இங்ஙனம் இயன்ற கோவில்களை இன்று மலையாள நாட்டிற் காணலாம். இங்ஙனம் கோவில்களை அமைப்பதில் தமிழர் பண்பட்டிராவிடில் திடீரெனக் கி. பி. 7ஆம் நூற்ருண்டிலிருந்து பல கோவில்கள் தமிழ்நாட்டில் தோன்றிவிட்டன எனல் பொருள் அற்றதாய்விடும்.

விமானங்கள், 'தூயது, கலப்பு, பெருங்கலப்பு' என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றில் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம் 'தூய விமானம்' எனப்படும். பல பொருள்களால் அமைவது 'பெருங் கலப்பு விமானம்' ஆகும். இது கட்டடக் கலை நூற் கூற்றுகும். இதனாலும் பண்டைக் காலத்தில் கோவில்கள் இருந்தமையும், விமானங்கள் உண்மையும் அறியலாம்.

இனி, தமிழகத்தில் மகேந்திரனுக்கு முன்பே கோவில் கள் இருந்தமைக்குக் கல்வெட்டுக்களே சான்றுதல் காண்க. திருக்கழுக்குன்றத்துக் கோவிற் பெருமானுக்குக் கந்தசிஷ்ய பல்லவன் (கி. பி. 436–460) நிலம் விட்டதாக வும் அதனை நரசிம்ம வர்மன் தொடர்ந்து நடத்தியதாக வும் ஆதித்த சோழன் கல்வெட்டுக் கூறுகிறது.

தென்னவனுய் உலகாண்ட, கோச்செங்கணுன் (கி. பி. 450–500) திருவக்கரையில் பெருமானுக்கு ஒரு கோவில் கட்டியிருந்தான். அதிராசேந்திரன் அதனைக் கல்லாற் புதுப்பித்திருந்தான். செம்பியன் மாதேவியார் திருவக்கரைக் கோவிலைக் கல்லாற் புதுப்பித்தார்; திருக் கோடிக்காவில் இருந்த செங்கல் விமானத்தையும் கருங்கல் விமானமாக அமைத்தார்.

**சங்க காலத்துக் கோவில்கள்:** பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திலே வீரர் வணக்கத் துக்குரிய கோவில்கள் இருந்தன. முருகன், திருமால், காடுகிழாள் முதலிய தெய்வங்கட்குக் கோவில்கள் இருந் தன. தொகை நூல்களில் சிவபெருமான், முருகன், திருமால், பலராமன் இவர்கள் சிறப்புடைக் கடவுளாகக் கூறப்படுவதை நோக்குக. ஆலமர் செல்வற்கு நீலநாகம் நல்கிய கலிங்கத்தை, ஆய்வேள் அளித்தனன் என்று புறநானூறு புகலல் காண்க. இதனுல் அக்காலத்தில் கோவிலும் கடவுள் உருவச் சிலையும் இருந்தமை நன் கறியலாம். கி. பி. 2ஆம் நூற்றுண்டில் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தும் மணிமேகலையிலும் காணப்படும் கோவில்கள் பல. மணிமேகலையில்,

" காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும் "

எனவரும் அடிகள் வீரர், அருந்தவர், அரசர், பத்தினிமார் இவர்க்குக் கோவில்கள் இருந்தமையை வலியுறுத்துகின் றன. சுடுமண் – செங்கல் கோவில்கள் குன்றுகள் போல உயர்ந்திருந்தன என்பது அறியத்தக்கது.

அற்புத வேலைப்பாடு: இக்கோவில்களும் அரசர் மாளிகைகளும் மண்டபங்களும் சிற்ப நூல் வல்லுநரால் நாள் குறித்து, நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும், அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பது,

" ஒருதிறம் சாரார் அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து "

எனவரும் " நெடுநல் வாடை " அடிகளாலும்,

" அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடு சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம் "

என வரும் சிலப்பதிகார அடிகளாலும் நன்குணரக் கிடத்தல் காண்க.

அரசர் கோவில்களும் தெய்வங்களின் கோவில்களும் சுற்றுமதில் உடையன ; உயர்ந்த வாயில்களைப் பெற்றன; அவ்வாயில்கள்மீது உயர்ந்த மண்ணீடுகள் (கோபுரங்கள்) உடையன ; அம்மண்ணீடுகளில் வண்ணம் தீட்டப் பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன என்பது மணிமே கலை, மதுரைக் காஞ்சி முதலிய நூல்கள் நுவலும் செய்தி யாகும்.

இக் கோவில்கள் அனைத்தும் செங்கற்களால் அமைந்

தவை. மேலே உலோகத் தகடுகள் வேயப்பட்டிருந்தன; சாந்து பூசப்பட்டிருந்தது. இங்ஙனமே உயர்ந்த மாட மாளிகைகளும் இருந்தன.

" விண்பொர நிவந்த வேயா மாடம் "
" சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு "
" நிறைநிலை மாடத்து அரமியந் தோறும் "

இவ்வாறு 'அமைந்த பெரிய கட்டடங்களைச் சுற்றி யிருந்த சுவர்கட்கு உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில் களும் அவ்வாயில்கட்குத் துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவங்களும் பொருத்தப்பட்டிருந் தன என்பது நெடுநல்வாடை அடிகள் (76, 88)அறிவிக்கும் அரிய செய்தியாகும். சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவர்க்கு இறைவன் நடன கோலத்தைக்காட்டி அருளினன் என்பது புராணச் செய்தி. பதஞ்சலி முனிவர் காலம் கி. மு. 150 என்று ஆராய்ச்சியாளர் அறிவர். எனவே, கோவில் எனச் சிறப்புப்பெயர் பெற்ற சிதம்பரத்தில் உள்ள திருக்கோவில் கி. மு. 150க்கு முற்பட்டதாதல் அறிக. அங்குள்ள நடராசர் மண்டபம் மரத்தால் கட்டப் பட்டிருத்தலும் அதன் பழமைக்குச் சான்றாகும்.

கி. பி. 200 முதல் 250க்குள் தமிழகத்தையாண்ட கோச்செங்கட் சோழன் 70 கோவில்கள் கட்டியதாகத் திருமங்கையாழ்வார் கூறியுள்ளார். அவர்க்கு முன்னரே அப்பரும் சம்பந்தரும் இதனைத் தம் பதிகங்களிற் குறித் துள்ளனர்.

**தேவார காலத்துக் கோவில்கள்:** தேவார காலத்தில் தமிழகத்தில் ஏறத்தாழ 200 கோவில்கள் இருந் தன. அவை அனைத்தும் மரம், செங்கல், மண், உலோகம் இவற்றால் ஆனவை. அவை (1) பெருங்கோவில் (2) இளங்கோவில் (3) மணிக்கோவில் (4) கரக்கோவில் (5) தூங்கானைமாடம் முதலிய பலவகைப்படும். இவற்றுள் தம் காலத்தில் பெருங்கோவில்கள் 78 இருந்தன என்று அப்பரே அறைந்துள்ளார். பெரிய கோவில்களைப் பழுது பார்க்குங்கால் மூர்த்தங்களை எழுந்தருளச் செய்து வந்துள்ள (பெரிய கோவில் திருச்சுற்றில் உள்ள) சிறிய

கோவிலே இளங்கோவில் எனப்படும். பெரிய கோவி லுக்கு அண்மையில் உள்ள சிறிய கோவிலும் இளங்கோ வில் எனப் பெயர்பெறும். எனவே, தேவார காலத்திற்கு முன்பே பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன என்பது தெளிவாகிறதன்றோ? தேவார காலத்தில் விமானம் கொண்ட கோவில்கள் இருந்தன என்பது பெண்ணுடகம், தூங்கானை மாடம் கோவில்களின் அமைப்பைக்கொண்டு நன்கறியலாம். விமானம் "தூங்கும் யானை" வடிவில் அமைந்ததாகும். திரு இன்னம்பர், திருத்தணிகை கோவில் விமானங்கள் இம்முறையில் அமைந்தவை. திரு அதிகைக்கோவில், திருக்கடம்பூர் இவற்றின் உள்ளறை கள் (மூலத்தானம்) தேர்போன்ற அமைப்பு உடையவை; உருளைகளும் குதிரைகளும் பூட்டப்பெற்றவை. திருச் சாய்க் காட்டுக் கோவிலை ஒட்டித் தேர் போன்ற விமானம் ஒன்று உருளைகளுடன் உள்ளது.

**பழைய கோவில்கள்:** இந்த விமான அமைப்புடைய தேர்போன்ற கோவில்களே பழையவை. இன்று காணப் படும் கோவில்களை அடுத்துள்ள தேர்கள் மிகப் பழைய காலத்தில் மரக்கோவில்களாக இருந்தவை. மனிதன் மரக் கோவில்களைப் போலச் செங்கற்களைக் கொண்டு பிற் காலத்தில் கோவில்களை அமைத்தான். சான்ருக நகரியில் உள்ள சில கோவில்களைக் காணலாம். அவை கி. மு. 250இல் ஆக்கப்பட்டவை. அவற்றைச் சுற்றிக் கற்சுவர் கள் உள்ளன. ஆயின், கோவில்கள் மரத்தால் கட்டப் பட்டவையாகும்.

"மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் கோவில்கள் எல்லாம் பல்லவர் காலத்தில் இருந்த தமிழ்நாட்டுக் கோவில்களைப் போன்றவையே என்பதைப் பார்த்தவுடன் கூறிவிடலாம்," என அறிஞர் லாங்ஹர்ஸ்ட் குறித்தல் காண்க.

**திராவிடக் கலை:** கோவில் கட்டுதல் திராவிடரது பழக்கம் ஆகலாம். அதனைப் பிற்காலத்தில் ஆரியர் கைக் கொண்டனர். தூபி, சைத்தியம் என்பன திராவிட ருடையன. இவற்றை ஆரியர் கடன் பெற்றனர். இவை

பிற்காலத்தில் இந்து சமயக் கோவில்களிற் காணப் பட்டன. இவற்றையே பௌத்தர் மேற்கொண்டனர். விமான வகைகள் பல தென் இந்தியாவில் உண்டு. அவை யாவும் கல்லறைகளிலிருந்து தோன்றின என்பது தவறு காது. தென் கன்னடக் கோட்டத்திலுள்ள 'முதுபித்ரி' என்னும் இடத்திற் காணப்படும் குருமார் கல்லறைகளில் மூன்று முதல் ஏழு அடுக்குகள் கொண்ட விமானம் காணலாம். சதுரத்தின் மேல் சதுரம் வைத்துக் கட்டப் பட்ட ஏழு அடுக்குகள் கொண்ட சதுரக் கல்லறைகள் பல இந்நாட்டில் உண்டு. இவ்வமைப்புக்கள் நாளடைவில் பெரிய விமானங்களாக மாறிவிட்டன என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபுரங்கள், விமானங்கள், இவற்றிற் காணப்படும் வேலைப்பாடுகள் அனைத்தும் இந் நாட்டுப் பழைய வேலைப்பாடுகளிலிருந்து வளர்ச்சியுற் றனவேயாகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டை ஓட்டி லிருந்து இன்றைய மனிதனது மண்டை ஓடு வளர்ச்சியுற் றாற்போலவே தமிழகக் கட்டடக் கலையும் வளர்ச்சி பெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர் களைக் கொண்டும், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவனார் கோவில் வேலைப்பாட்டைக் கொண்டும் செவ் வனே அறியலாம்.

**கோவில்கள் பயன்பட்ட வகை:**

(1) சங்ககாலத்துக் கோவில்கள் அழியக்கூடிய பொருள்களால் ஆனவை. ஆதலால் நமக்குக் 'கல்வெட் டுக்கள்' கிடைக்கவில்லை. பின் வந்த பல்லவர் கற்கோவில் கள் அமைத்தனர். ஆதலின் கல்வெட்டுக்கள் கிடைக் கின்றன. அவர்களுக்குப் பின் வந்த சோழர் பழைய கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர்.

ஆதலின் அழியா நிலையுடைய கல்வெட்டுக்கள் தோன்றின. அவை கோவில் அறப்பணிகளைக் குறிக்க

எழுந்தன. ஆயினும், அரசர் மரபு, போர்கள், அரிய செயல்கள் இன்ன பிறவும் முதலில் பொறிக்கப்பட்டிருந் தன. அக்குறிப்புக்களே இன்று தமிழக வரலாற்றிற்கு அடிப்படையாக இருந்து உதவுகின்றன.

(2) கோவிலை அடுத்துச் சமய வளர்ச்சிக்குரிய மடங் கள் இருந்தன. அவை சமயக் கல்வியைப் புகட்டின. விழாக்களைக் காணவந்த அடியார்க்கு உண்டியும் உறை யுளும் உதவின. அம்மடங்களுக்குப் பலர் தானம் அளித் துப் பாதுகாத்து வந்தனர்.

(3) கோவிலை அடுத்து மருத்துவசாலை இருந்தது. இதனைத் தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கல்வெட்டால் அறியலாம்.

(4) நடனம், இசை, நாடகம் முதலிய நாகரிகக் கலை கள் கோவில்களில் வளர்க்கப் பெற்றன. இவற்றில் பண் பட்ட பெண்மணிகள் இருந்தனர். அவர்கள் அடிகள் மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திர கணிகையர் எனப்பட்டனர். தஞ்சாவூர்ப் பெரிய கோவிலில் மட்டும் 400 பேர் இருந்தனர். காஞ்சி முத்தீசுவரர் கோவிலில் 42 அடிகள்மார் இருந்தனர். பெருங்கோவில்களில் எல்லாம் நடன அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்குகள் இருந்தன.

(5) கோவிலில் 'தருக்க மண்டபம்', 'பிரசங்க மண்டபம்' என்பனவும் இருந்தன என்பதைத் திரு வொற்றியூர்க் கோவில் கல்வெட்டுக் கொண்டு அறியலாம். பாரதம், ஆகமம் போன்ற நூல்களைப் பொதுமக்கட்குப் படித்துக் காட்டக் கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

அருஞ்சொற்பொருள்

பெருங்கணி - தலைமை நிமித்திகன். கோட்டம் - கோவில். வண் ணம் - நிறம். நிவந்த - உயர்ந்த. நெடுநல்வாடை - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. மூர்த்தங்கள் - சிலைகள். ஆலமர் செல்வர் - கல் லாலமரத்தடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். கலிங்கம் - ஆடை. காடமர் செல்வி - காளி. மும்மூர்த்தி - சிவன், திருமால், பிரமன்.

## பயிற்சி

I. வினாக்கள் :

1. மண்டபப்பட்டுக் கல்வெட்டு அறிவிப்பதென்ன ?
2. விமானங்களின் வகைகளையும், அவற்றின் அமைப்புக்களையும் வரைக.
3. தமிழகத்தில் மகேந்திரனுக்கு முன்பே கோவில்கள் இருந்தன என்பதற்குச் சான்று தருக.
4. மகேந்திரனுக்கு முற்பட்ட காலத்துக் கோவில்கள் எவ்வாறு அமைந்திருந்தன ?
5. தேவார காலத்துக் கோவில்களைப்பற்றி நீவிர் அறிவதென்ன ?
6. சங்க காலத்துக் கோவில்களைப் பற்றிச் சுருக்கி வரைக.
7. கோவில்கள் எவ்விதம் பயன்பட்டன ?

II. குறிப்பு வரைக :

மணிமேகலை, நெடுநல்வாடை, பூங்கோவில், கோச் செங்கணான், சைத்தியம், கல்வெட்டு, பல்லவர்.

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

இன்றுள்ள, செங்கற்களால், தென் இந்தியாவில், பழைய கோவில்கள், கல்லறைகளில், சமய வளர்ச்சிக்குரிய.

IV. கட்டுரை வரைக :

1. தமிழ் நாட்டின் வரலாற்றைக் காட்டும் கருவிகள்.
2. கோவில்கள் - பல்கலைக் கூடங்கள்.
3. கோவிலின் வளர்ச்சி.

# 10. நாட்டு நலத்திட்டம்–தொழில் வளர்ச்சி

(திரு. தமிழ் நாவலர், வித்துவான் சி. அரசப்பனுர் அவர்கள், உறையூர்.]

நம் நாடு நலம் பெறத் திட்டங்கள் பல வகுக்கப் பட்டுள்ளன. அதன்படி மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறிவிட்டன. அடுத்த ஆண்டிலிருந்து 4–ஆவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்க இருக்கிறது. 22 ஆயிரங் கோடிச் செலவில் இத் திட்டம் நிறைவேறினல் நம்நாடு பல முன்னேற்றங்களை அடையும். இதற்கு முன் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பல ஆயிரங் கோடி செலவு செய்திருக்கிறோம்.

வேளாண்மைக்குப் பெருந்தொகை செலவு செய்யப் பட்டுள்ளது. தாமோதரப் பள்ளத்தாக்குத் திட்டம், கோதாவரித் திட்டம், தபதித் திட்டம், மலம்புழாத் திட்டம் முதலியவை இவற்றுள் சில; பஞ்சாபில் சட்லெஜ் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள ‘பக்ரா – நங்கல்’ அணைக் கட்டு $77\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. உலகிலுள்ள அணைகளில் இது மிகப் பெரியது!

இதைத் தவிர, சாலை வசதி, இருப்புப் பாதை, சமூக நலத்திட்டம், குடிசைத் தொழில், கல்வி, தாழ்த்தப்பட்டோரின் நிலை உயர்வு, சுகாதார வசதி முதலியனவற்றிற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெருந் தொழில்களுக்குப் பெருந்தொகை ஒதுக்கப்பட்டது. பெருந் தொழில்கள், குடிசைத் தொழில்கள் கவனிக்கப்பட்டன. பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், 2,600 கோடி ரூபாய்! இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 4,800 கோடி ரூபாய்! மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் 10,200 கோடி ரூபாய்! அதைப் போலவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பெருந்தொகை கொண்டு திட்டமிடப் பட்டிருக்கிறது.

இப்பெருந் தொகை வரிகள் மூலமாகவும், மக்களிட மிருந்து கடனுகவும், இரயில்வே, பாங்குகள் முதலியவற் றின் மூலமாகவும், அயல்நாடுகளிலிருந்து கடனுகவும் பெறத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவ்விதம் முயன்று முன்னேறிஞல்தான், பாரதியார் கூறியபடி "பாருக் குள்ளே நல்லநாடு எங்கள் பாரதநாடு" என்பது உண்மை யாகும்.

நாடு முழுவதும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக் கிறது. ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலே ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும்! மைசூரிலுள்ள பத்ராவதி இரும்பு எஃகுத் தொழிற்சாலே இந்தியாவின் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பெரிதும் உதவுகின்றது. பீகாரில் பிலாய் இரும்பு எஃகுத் தொழிற் சாலே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது சோவியத் நாட் டின் உதவி பெற்றது. 'ரூர்கேலா', 'துர்காபூர்' தொழிற் சாலேகளும் மிகப் பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலே களாம். இவற்றைத் தவிர சிறு தொழில் வளரவும், அன்ருடத் தேவையை நிரப்பவும், போர்க் கருவிகளேத் தயாரிக்கவும் நம் நாட்டு அரசாங்கம் அரும்பாடு படுகிறது.

மக்களும் கூட்டுறவு முறையில் நம்பிக்கை கொண்டு உழைத்தால் வறுமை, அறியாமை, வேலேயில்லாத் திண் டாட்டம் முதலியவைகளே ஒழித்து நன்மையடைவர். இது வரை நாட்டின் பொது நிலேயைக் கவனித்தோம். இனித் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி எவ்வளவு வளர்ந்திருக் கிறது என்பதைச் சிறிது நோக்குவோம்.

பாரதியார்,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம்"

என்ருர். அதன் உண்மையை நாம் என்றும் மறக்கக் கூடாது. பெரிய நாடு பசி, பகை, பிணி அற்று வாழ வேண்டுமாஞல் உழவைமட்டும் நம்பி இருக்க முடியாது. ஆயிரக்கணக்கான தொழில்களிலும் முன்னேற வேண் டும். அரசாங்க உதவி, தனியார் உதவி, மக்கள் முயற்சி இவ்வளவும் சேர்ந்தால்தான் தொழில் வளரும்.

**தொழில் தந்தை :** தமிழ்நாட்டில் தொழில் வளர அரும்பாடுபட்டு வருபவர் அமைச்சர் R. வெங்கடராமன் அவர்கள். அவர் மின்சார உற்பத்தி, போக்குவரத்து, தோல் தயாரிப்பு, இரசாயனம், துணி உற்பத்தி, முதலிய வற்றில் தனியார் தொழில்களுக்குக் கடன் வசதிகளைப் பெருக்கியிருக்கிறார். தமிழகம் இத்துறையில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இனியும் முயன்றால் முதலிடத்தைப் பெறலாம்.

நெய்வேலியில் : தென் ஆற்காடு மாவட்டத்தில் 256 சதுர கி. மீ. பரப்பிற்கு நிலக்கரி இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது பழுப்பு நிறமாக இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாள் சென்றால் கறுப்பு நிறமாக மாறி விடுமாம்! இப்போது 9 கி. மீ. சதுர அளவு தோண்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அதை மட்டும் தோண்ட 40 ஆண்டுகள் ஆகுமாம். 26–5–1957இல் நிலக் கரி தோண்டும் வேலை தொடங்கியது. அனல் மின்சாரம், உரத்தொழிற்சாலை, கண்ணாடிச்சாமான் தொழிற்சாலை முதலியன நிறுவப்பட்டு வருகின்றன.

நெய்வேலியில் 16,000 தொழிலாளர்கள் பணி புரிகி றார்கள். இவர்கள் குடியிருக்க 12,000 வீடுகள் கட்டப்பட் டிருக்கின்றன. நகரத்தின் மக்கள்தொகை 80,000 ஆக வளர்ந்திருக்கிறது. மக்கள் நலத்திற்காக மருந்தகம், பள்ளி, கலை அரங்கம் முதலியன உள்ளன. இதற்கு முதலீடு 160 கோடி ரூபாய்!

பெரம்பூரில்: 2–10–1955இல் சென்னை—பெரம்பூரில் இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. மூல தனம் ஏழு கோடியே, ஐம்பது இலட்சம் ரூபாய். ஒரே நாளில் இரண்டு பெட்டிகள் தயார் ஆகின்றன. இங்கும் புதிய முறையில் எஃகு உலோகத்தால் செய்யப்படுகின் றன இந்தப் பெட்டிகள். இதன் ஆட்டமில்லாத ஓட்டம் மிகவும் மகிழ்ச்சிகரமானது. வீடு போன்ற வசதி உடை யது. குளிக்கலாம்; சாப்பிடலாம்; தூங்கலாம். இது வரை 4,500 பெட்டிகள் தயார் ஆகி உள்ளன. மின்சார இரயில் பெட்டிகளும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளியில் : 1962ஆம் ஆண்டில் திருச்சியை அடுத்த திருவெறும்பூரில் "பாய்லர்" தொழிற்சாலை தொடங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. எட்டு கி. மீ. நீளத்திற்குப் பொன்மலையிலிருந்து தனி இரயில் பாதை போடப்பட்டிருக்கிறது. இதை அமைக்க 23 கோடியே 23 இலட்சம் செலவாகி இருக்கிறது. தொழிற்சாலைக்கு வேண்டிய நீர் காவிரியிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

"பாய்லர்": "பாய்லர்" என்பது சிறிய எந்திரமன்று; முழு அளவில் உருவான ஒரு "பாய்லர்". பார்வைக்கு மூன்றுமாடிக் கட்டிடம் போலத் தோற்றம் அளிக்கக்கூடியது. ஒரு பாய்லரின் உயரம் 40 மீட்டர்! அதன் எடை சுமார் 4,500 டன். 1100 சதுர மீட்டர் இடத்தை அடைத்துக்கொள்ளும்! இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் முதல் "பாய்லர்" 1966ஆம் ஆண்டில் வெளிவரவிருக்கிறது. ஒரு "பாய்லரின்" விலை சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய். ஆண்டு ஒன்றுக்கு 12 பாய்லர்கள் வீதம் உற்பத்தி செய்யத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர் பணி புரிகின்றனர். பள்ளி, கலை அரங்கம், வீடுகள் முதலியன அமைக்கப்படுகின்றன.

இவற்றைத் தவிர, சைக்கிள் தொழிற்சாலை, வானொலி தயாரிப்பு, பேரிங் தொழிற்சாலை, சிமென்டுத்தொழிற்சாலை, மின்சார உற்பத்தி, சினிமாத்தொழில் முதலியன பெரிய அளவில் வளர்ந்து வருகின்றன.

தொழில் பேட்டை: தொழில்பேட்டை என்பது சிறிய தொழிற்சாலைகளின் 'காலனி' என்று சொல்லலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 22 தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டன. இப்போது அவைகளில் 397 யூனிட்டுகள் உள்ளன.

அம்பத்தூர் தொழில் பேட்டை: சென்னைக் கருகில் அம்பத்தூரில் 1,120 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. சாலைகள், நீர்க்குழாய்கள், சாக்கடை வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

இங்கு மூன்று ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 70 தொழில் யூனிட்டுகள் அமைக்கப்பட்டன. 1958இல் வேலை தொடங்கிவிட்டது. ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவானது. தொழிலதிபர் 2 கோடிக்கு முதலீடு செய்கிருர்கள். இனி வளர்ந்துவரும் தொழில் பேட்டைகள் சிறிய நகரங்களிலும், சிற்றூர்களிலும், ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. அதன் பயனுக இராணிப் பேட்டை, கடலூர், திருச்சிராப்பள்ளி, மேட்டூர், திருநெல் வேலி, அரக்கோணம், கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டில் இதுவரை 175 கோடிக்கு முதலீடு செய்திருக்கிறது. இன்னும் சேலம் இரும்புத் தொழிற்சாலை முதலியன ஏற்படின் நம் தமிழகம் வளம் பெருகும்; மக்கள் நலமுறுவர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தாலும் பல நன்மைகள் கைகூடும். நீர்ப்பாசனம், மின்விசை, தொழில் வளர்ச்சி, போக்கு வரத்து, கல்வி, சுகாதாரம், சமூகநலன், கூட்டுறவு முதலியவற்றிற்குப் பெருந் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவே நாட்டுயர்வு.

### அருஞ்சொற்பொருள்

வேளாண்மை - உழவு, சோவியத் நாடு - இரஷியா, வந்தனை - வணக்கம், பிணி - நோய், சிறுமை + ஊர் = சிற்றூர்.

### பயிற்சி

**I. வினுக்கள் :**

1. ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள 'நன்மைகள் யாவை?
2. வேளாண்மை வளர்ச்சிக்குச் செய்த திட்டங்கள் யாவை?
3. இந்தியாவில் தோன்றிய பெரிய தொழிற்சாலைகள் யாவை?
4. அமைச்சர் வெங்கடராமனின் சேவை யாது?
5. நெய்வேலியில் நடைபெறும் தொழில் யாது? விளக்குக.
6. இரயில் பெட்டித் தொழிற்சாலையின் நிலையென்ன?

7. மத்திய அரசாங்கம் தமிழகத்தில் எத்தனை கோடி முதலீடு செய்திருக்கின்றது? முக்கியமான இடங்கள் யாவை?
8. திருவெறும்பூர் 'பாய்லர்' தொழிற்சாலையை விளக்குக.
9. தொழில்பேட்டை—விளக்குக.

II. குறிப்பு வரைக:

ஐந்தாண்டுத் திட்டம், பாய்லர், தொழில்பேட்டை, கூட்டுறவு.

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

உலகிலுள்ள அணைகளில், பழுப்பு நிலக்கரி, கூட்டுறவு முறையில், தொழில் வளர, வீடுபோன்ற, காலனி.

IV. கட்டுரை எழுதுக:

1. ஜப்பானில் தொழில் வளர்ச்சி.
2. பாரதத்தின் முன்னேற்றம்.
3. உழவும் தொழிலும்.

# 11. குடி இயல்பு

## (நாடகம்)

[திரு. வித்துவான், த. கோடப்பிள்ளை அவர்கள், டால்மியாபுரம்.]

**இடம் :** சோழன் நலங்கிள்ளியின் அரண்மனை.

**நேரம் :** மாலை.

(சோழன் நலங்கிள்ளியும் அவன் தம்பி)
மாவளத்தானும் வட்டாடுகின்றனர்.)

**நலங்கிள்ளி :** மிக நன்றாக ஆடுகின்றாயே தம்பி!

**மாவளத்தான் :** நீங்கள் ஆடும் ஆட்டத்தை விடவா என் ஆட்டம் சிறந்துள்ளது?

**நல :** பார் இப்போது (வட்டினை உருட்டி)... உம்... அப்படி விழு. ஒன்று, இரண்டு...

**மாவ :** காயைச் சரியாக வையுங்கள் அண்ணா!

**நல :** சரியாகத்தான் வைக்கிறேன். நீ ஆடு!

**மாவ :** எனக்கு எத்தனை வேண்டும்? நான்கு. ஆம், நான்கு விழு. நான்கு...நான்கே தான். உம்... நீங்கள் ஆடுங்கள்.

(தாமற் பல்கண்ணனார் வருகிறார்)

**தாமல் :** வணக்கம் மன்னா!

**நல :** ஓ...புலவர் தாமற் பல்கண்ணனாரா, வருக! வருக!!

**தாமல் :** ஆம். ஓ...இளவரசர் மாவளத்தானும் இங்குள்ளாரோ! வணக்கம் இளவரசே!

**மாவ :** வணக்கம் புலவர் பெரும! இப்படி அமருங்கள். ஊரில் எல்லாரும் நலம் தானே?

**நல :** அவருக்கு என்ன, நலத்திற்கு. தாமல் என்ற ஊர் எல்லா வளமும் கொழித்து, சான்றோருடைத்து; அவர் கவிதையும் வளமுடைத்து.

**தாமல் :** ஏதேது......என்னைப் பேசவே விடமாட்டார் போலிருக்கிறதே, மன்னர் பெருமான். நானல்லவா வாழ்த்தவும் புகழவும் வேண்டும் மன்னரை? சோழ

மன்னர் நலங்கிள்ளியின் ஆட்சி எம் ஊரையும் மக்களையும் மாட்சிபெறச் செய்கிறது ; அவ்வளவே ! வாழ்க மன்னரும் இளவரசரும் என்று வாழ்த்துவ தன்றி வேறு அறியேன். ஆ ... நான் வந்ததால் உங்கள் வட்டு ஆட்டம் நின்றுவிட்டதே. தொடர்ந்து ஆடுங்கள்.

**நல :** இல்லை.....நீங்கள் இருவரும் ஆடுங்கள். தம்பி தான் உங்களோடு ஆடுவதென்ருல் இனிப்புத் தின்பது போல மகிழ்வானே.

**தாமல் :** வேண்டாம், வேண்டாம். நீங்கள் இருவரும் ஆடுங்கள். நான் பார்த்திருப்பேன்.

**மாவ :** அண்ணு ! எங்கே, இக் கட்டத்தில் நான் வைத்த காயைக் காணேம் ?

**நல :** வைத்தாயா ? இல்லையா ? நன்ருகப் பார் !

**மாவ :** (சினந்து) நீங்களே பாருங்கள் ; முன் உருட்டி விட்டபோது நான்கு விழுந்ததே. அதற்கு, இங்கே தான் வைத்திருந்தேன்.

**நல :** பார்த்தாயா...அதற்குள் வெகுளுகிருயே.

**மாவ :** இங்கு வைத்திருந்தேன் என்கிறேன். அவ்வளவு தான்.

**தாமல் :** உங்கள் இருவர் ஆட்டத்தையும் நான் இன்னும் பார்க்கவில்லையே...அதற்குள்...

**நல :** பாருங்கள் புலவரே ! எதற்கெடுத்தாலும் உடனே வெகுளுகிருன். தம்பிக்கு இந்தக் குணம் எப்போது மாறுமோ ?

**மாவ :** நான் ஒன்றும் வெகுண்டெழவில்லை. நீங்கள் தாம்...

**நல :** சரி, சரி. தம்பி ! நீ புலவரோடு ஆடு. என்னேடு ஆடிஞல் சினம்தான் வரும்...புலவரே ! தம்பியோடு வட்டாடி மகிழுங்கள். கொஞ்ச நாழிகைக்குள் வந்து விடுவேன்.

**மாவ :** சரி, வாருங்கள் புலவர் பெரும ! நாம் ஆடு வோம். உங்களோடு வட்டு ஆடிப் பல நாட்களாகி விட்டன. வட்டு ஆடும்போதே வண்டமிழையும்

அறிவேன். அதனை இழந்திருந்தேன் இத்தனை நாளாக.

**தாமல் :** வட்டு என்றால் உனக்கு அறுசுவை உண்டியும் மறந்துபோம். சரி தொடங்குவோம்.

**மாவ :** உம்...நான் ஆடிவிட்டேன். தாங்கள்...

**தாமல் :** (காயை உருட்டி) உம்...

**மாவ :** உம்...ஆ, ஆடுங்கள்...ஆடுங்கள் !

**தாமல் :** உம்...ஆகா, ஆட்டத்தை, இன்று கவனித்தே ஆடுகிறாய் போலும். வட்டும் உன் விருப்பப்படி உருள்கிறதோ !

**மாவ :** ஆடுங்கள்; காயை நகர்த்துங்கள். என்ன பார்க்கிறீர்களே !

**தாமல் :** என்றுமில்லாத சுறுசுறுப்பு இன்றிருக்கிறதே உன் ஆட்டத்தில் !

**மாவ :** தங்களோடு ஆடும் மகிழ்ச்சியில்தான்.

**தாமல் :** ஆட்டம் நன்றாக இருக்கிறது. நீயே வெல்வாய்.

**மாவ :** ஆம், நானே வெல்வேன். ஆ......வட்டுக் காய்களில் ஒன்றைக் காணோம்.

**தாமல் :** சரியாகப் பார்.

**மாவ :** சரியாக இல்லையே. ஒரு காய் எங்கே ?

**தாமல் :** யான் அறியேனே !

**மாவ :** முதலில் நான் ஆடியபோது சரியாக இருந்ததே.

**தாமல் :** நானென்ன விழுங்கிவிட்டேனா ?

**மாவ :** நான் தான் விழுங்கிவிட்டேனா ? நன்றாகத் தேடிப் பாருங்கள்.

**தாமல் :** தேடித்தான் பார்க்கிறேன். எங்கே போவேன் ? எடுத்து மறைத்தா வைத்துள்ளேன் ?

**மாவ :** வேறு யார் இங்குள்ளார்கள் ? நாம் இருவரே. ஆகவே நீவிர் தாம் மறைத்திருக்க வேண்டும்.

**தாமல் :** ஆ, இளவரசே !

**மாவ :** ஆம், நான் மறைக்கவில்லை. நீவிர்தாம் மறைத்திருக்க வேண்டும்.

**தாமல் :** இளவரசே ! உன்னோடு வட்டுமட்டும்தான் ஆடுகிறேன். சூது ஆடவில்லை.

**மாவ :** நானும் அப்படி நினைக்கவில்லை. ஆனால் காய் எங்கே? நீவிரே மறைத்திருக்க வேண்டும். எழுங்கள் பார்ப்போம்.

**தாமல் :** நீ எழுந்து பார்!

**மாவ :** (எழுந்து) இதோ எழுந்தேன்; இல்லை. நீங்கள் எழுங்கள்.

**தாமல் :** இதோ பார். நான் மறைத்து வைப்பேனா!

(எழுகிறார். கீழே வட்டுக்காய் இருக்கிறது!)

**மாவ :** (சினங்கொண்டு) இஃதென்ன? வட்டுக் காயன்றோ? மறைக்கவே இல்லை என்றீரே.

**தாமல் :** (திகைத்து) இளவரசே! சொல்லில் அளவு இருக்கட்டும். நான் மறைக்கவில்லை.

**மாவ :** வேறு ... நானா மறைத்தேன்? சரி, ஆடுங்கள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு!

(வட்டுக்கொண்டு அவர்மீது எறிந்துவிடுகிறான்!)

**தாமல் :** ஆ ... வட்டுக் கொண்டா எறிகிறாய்? இள வரசே (பெருமூச்சு விட்டு) உம் ... இற்றை நாள் வரை மாவளத்தான்—சோழன் மாவளத்தான் என்று எண்ணியிருந்தேன்......

**மாவ :** (மேலும் சினந்து) என்ன சொன்னீர்கள்? சோழன் மாவளத்தான் அன்றி வேறு யார்?

**தாமல் :** வேறு யார்? நானும் அதனையே கேட்கலுற் றேன். பருந்து விரட்டியதால் அலறிப் புடைத்து அடைக்கலமாகப் புகுந்த புருவிற்காகத் தன்னையே ஈந்தவனின் வழி வந்தது சோழர் குடி. அக்குடியில் தோன்றி வெற்றிப் பண்பாடும் சோழன் நலங் கிள்ளி, நின் தமையன். தேர்வண் கிள்ளியாகிய அவனுக்கு இளவலாக நீ தோன்றினை! தன்னைப் பகைத்தோரையன்றிப் பிறரைப் பகையான் நலங் கிள்ளி. அவனுக்கு நீ இளவல்! தன்னை அண்டி னோரைத் தண்ணளி செய்து தனிப்புகழ் நாட்டுபவன் சோழன் நலங்கிள்ளி. அவனுக்கு நீ இளவல்! துஞ்சுபுலி இடறிய சிதடன் போல் வஞ்சனை

கொண்டு எழுந்த பகைவர் அழிவரே அன்றி ஏனை யோர் அணுவளவும் தெறலறியார் நலங்கிள்ளியால். அவனுக்கு நீ இளவலாய்த் தோன்றினை! அவன் தண்ணளியால் விண்மதி யொப்பான்; பொறையால் நிலத்திற்கு ஒப்பாவான். சோழர் குடிக்குப் புகழ் தந்தான் அவன். ஆனால் நீ? அந்தோ......அச் சோழர் குடியில் தோன்றினாய்! அச்சோழர் குடி யினர் பார்ப்பார் நோவன செய்யார். நீ செய்தனை. என்னை வட்டுக் கொண்டு எறிந்தனை! நோதக்க செய்த நீ சோழர் குடியினனாக இருக்கமுடியாது. உன் பிறப்பில் ஐயம் உளது. ஆம் உன் பிறப்பில் ஐயமுடையேன். நீ சோழனல்லை! சோழனல்லை!

(வெறுப்பில் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்.)

**மாவ:** ஆ!.........ஐயோ! புலவரே! (வருந்துகிறான்) என்ன சொல்லிவிட்டீர்கள்! ஐயோ.........என்ன செய்வேன்!

(நலங்கிள்ளி வருகின்றான்.)

**நல:** புலவர் பெருந்தகையே! (புலவரும் மாவளத் தானும் கவனிக்காததைக் கண்டு) ஏன்?.............. கவனிப்போம்.

**மாவ:** அந்தோ....................நான் சோழனல்லனோ? புலவரே, என்ன கொடுமை! ஐயோ......இசை பாட வேண்டிய நாவால் வசை பாடி விட்டீர்களே. வண் டமிழ் வழங்கும் வாயால்—இளவரசே! வளவா...... மாவளவா..................என்று உளமார அழைத்திடும் வாயால்—சோழனல்லன் என்றீர்களே. ஐயம் கொண்டீர்களே என்பிறப்பில்; ஐயோ......என் நிலை இஃதோ? இழிந்தவன், நான் இழிந்தவன். சினத் தால் சீரழிந்தவன். ஆம் சான்றோரே! பிழை செய் தேன்; வகையறியாது தவறிழைத்தேன். என் கவனக்குறைவால்தான் வட்டு உம் கீழ் வீழ்ந்திருக்க வேண்டும். உங்கள் மீது குற்றம் சாற்றிச் சினம் கொண்டு ஏசினேன்; வட்டுக் கொண்டு எறிந்தேன்.

அஃது என் பிழையே. புலவர், பெரும! பொறுத் தருளுங்கள். இதற்காகவே சோழன் குடியில் தோன்றியவனே என்று ஐயம் உடையேன் என்றீர் கள். உங்கள் சொல் கூரிய வாளினும் உட்புகுந்து உருத்துகிறது, பொறுத்தருள்வீராக! சினம் தவிர்த்து ஆதரிப்பீராக. புலவரே! ஆதரிப்பீராக! (வருத்தம் மிக்குத் தலை கவிழ்கிறுன்).

தாமல்: போதும் இளவரசே போதும். உணர்ந்து கொண்டேன் உன் மனவியல்பை. பிழை என் னுடையதே. வட்டுக்காய் என்னையறியாமல் என் கீழ் வீழ்ந்திருக்க வேண்டும். அன்றியும் உன்னைக் கொடுஞ் சொல் சொல்லிவிட்டேன். யான் செய்த இப் பிழையை மனங்கொள்ளாது நீ வட்டுக்கொண்டு எறிந்ததையே எண்ணி யெண்ணி வருந்தினே. பிழைத்தாரைப் பொறுப்பது நுங்கள் குடிக்கு இயல்பு என்பதைக் காட்டுகிறது உன் செயல். பிழை செய்தவன் யானே. அவலம் விடுக. நும் குலக்கொடியாகிய காவிரியாறு கொழித்து இட்ட மணலினும் பல்லாண்டு வாழ்க.

நல: புலவர் பெருந்தகையே!

தாமல்: ஆ.........மன்ன......

நல: சான்றோரே! எல்லாம் அறிந்தேன். சிறியோர் செய்த பெரும் பிழையையும் பொறுத்து நல்வழிப் படுத்துவோரே சான்றோர். அத்தகைமையைக் காட்டி என் தம்பியைத் திருத்திவிட்டீர்.

தாமல்: அவ்வாறன்று, மன்ன! யானே பிழை செய் தேன். கடுஞ்சொல் கூறினேன். தாங்கள் பொறுத் தருள வேண்டும்.

மாவ: அன்று, அன்று; யானே பிழை செய்தேன். வட்டுக் கொண்டு எறிந்தேன்.

நல: புலத்துறை முற்றியோய்! தம்பி மாவளத்தான் தன்னை உணர்ந்து கொண்டான். பிழை செய்த வனே, அறியாது செய்துவிட்டேனென்று உணர்ந்து விட்டான். அறியச் செய்த உங்களை என்றும்

மறக்கமாட்டோம். இனி எங்கள் அரண்மனையே உங்கள் மாளிகை. எங்களை விட்டுப் பிரியாதிருக்க வேண்டும்.

**தாமல் :** நன்றிமிக்குடையேன், மன்னு! என்றும் மறவேன். வாழ்க நீவிர்! வளர்க நும் பெருமை!

[ திரை ]

### அருஞ்சொற்பொருள்

வட்டு - வட்டுக்காய்; சான்றோர் - நற்குணம் நிறைந்தோர்; மாட்சி - பெருமை; வெகுளுதல் - கோபித்தல்; உண்டி - உணவு; அளவு - எல்லை; இளவல் - தம்பி; வசை - பழி.

### பயிற்சி

**I. வினுக்கள் :**

1. யார் யார் வட்டாடினர்?
2. நலங்கிள்ளி செய்த செயல் யாது?
3. புலவர் சினமுறக் காரணம் யாது?
4. மாவளத்தான் மனச்சோர்வுறக் காரணம் யாது?
5. இந்நாடகத்தில் குடி இயல்பு எவ்விதம் போற்றப்படுகின்றது?

**II. பிரித்தெழுதுக :**

சான்றோருடைத்து, நானல்லவா, உங்களோடு, அறுசுவை, இஃதென்ன, தண்ணளி, இளவரசே.

**III. சேர்த்தெழுதுக :**

சான்றோர் + உடைத்து, நான் + அல்லவா, ஆடுவது + என்றால், இழந்து + இருந்தேன்.

**IV. எதிர்ச்சொல் வரைக :**

மாலை, சரியாக வேண்டும், அறிவேன், சான்றோர், சிறியோர்.

**V. வாக்கியத்தில் அமைக்க :**

வாழ்த்தவும் புகழவும், உங்களோடு, வட்டுக்காய்களில், நோவன செய்யார், குலக்கொடியாகிய.

**VI. குறிப்பு வரைக :**

தாமல் பல்கண்ணனுர், மாவளத்தான், புறநானூறு, வட்டாடுதல்.

**VII.** "தமிழில் நாடக வளர்ச்சி" என்று ஒரு கட்டுரை வரைக.

# 12. தமிழ் இசை

## (நுண் கலை)

[திரு. புலவர் மணி, வித்துவான், தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள், மதுரை.]

முத்தமிழ் : தமிழ் மொழியானது இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூவகையாகப் பிரிக்கப்பட்டு முத்தமிழ் என்று முற்கால முதல் வழங்கப் பெற்று வருகிறது. இயற்றமிழாவது யாவரும் தம் உள்ளக் கருத்தை வெளியிடுவதற்குக் கருவியாய் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் செய்யுளும் உரை நடையுமாய் இயலுந் தமிழ். இவ்வியற்றமிழ் இசையொடு கலந்தும் தாளத்தோடு கூடியும் பாடப்பெறும்போது இசைத்தமிழாம். இயற்றமிழின் செம்மையையும் இசைத் தமிழின் சுவையையும் காட்சியின் நலத்தோடு கலந்தளித்து மெய்யின் இயக்கமாக மனத்தை மகிழ்விப்பது நாடகத் தமிழாகும். இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் உள்ளம், உரை, செயல் என்ற மூன்றினையும் பற்றியவை யாகும். இம் முறையில் தமிழிலமைந்துள்ள முத்தமிழ்ப் பிரிவு போன்று வேறெம்மொழியிலும் காணவியலாது.

இசை நூல்கள் : இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது, வயப்படுத்துவது என்பது பொருள். நுண்கலைகளுள் இசையும் ஒன்று. இசை கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும் இயல்பினை உடையது. ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை எல்லா உயிர்களையும் இசை வசப்படுத்தும்.

“ காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார் ”

என்றார் பாரதியார். நினைப்பிற் கெட்டாத நெடுங்காலத்திலேயே இசை தோன்றி வளர்ந்தது. கலைகள் பலவற்றுள் இசைக்கலையால் இன்புற்று வாழும் வழி கண்டவர் தமிழ் மக்களே யாவர். இசைத் தமிழுக்குத் தனியே இலக்கண இலக்கிய நூல்கள் பல உள்ளன. இசைத் தமிழுக்குப் பண்ணும் பாணியும் அங்கங்களாகும். பண்

என்பது பண்ணும் இராகம். பண்டையோர் இதனை வண்ணம், வன்னம், நிறம் எனவும் வழங்கினர். பாணி என்பது தாளம். இது கொட்டு, அசை, தூக்கு, அளவு என நான்கு வகைப்படும்.

> " கொட்டும் அசையும் தூக்கும் அளவு
> மொட்டப் புணர்ப்பது பாணி யாகும் "

என்று சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் இளங்கோ வடிகள் கூறியுள்ளார்.

தமிழ்மக்கள் தம் பண்பட்ட மொழியில் சுவைபட இயற்றிய செய்யுட்களைப் பண்ணோடும் தாளத்தோடும் பாடி மகிழ்ந்தனர். மொழி என்பது கருத்தைப் பிறர்க்கு விளக்குவதற்காக மட்டும் அமைந்தது அன்று. கருத்தோடு கூடிய உணர்ச்சியையும் அது நன்கு விளக்கக் கூடிய ஆற்றல் உடையதாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மொழி வனப்புறும். இயற்றமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் அது 'சுவை' எனக் குறிக்கப்படுகிறது. இசைத் தமிழில் அது 'குரல்' எனப்படும். நாடகத் தமிழில் 'விறல்' எனப்படும். இந்த மூன்று நிலைகளிலே கருத்துக்களை முன்பு இயக்கினுர்கள். பண்டு, தமிழ் கற்பது என்ருல், தமிழ் மொழியைக் கற்பது, தமிழிசையைக் கற்பது, தமிழ் நடிப்பைக் கற்பது என்பது பொருள். ஔவையார் 'சங்கத் தமிழ் மூன்றுந் தா' என வேண்டியதிலிருந்து இதனை உணரலாம்.

அகத்தியர் இயற்றிய அகத்தியம், தலைச் சங்கப் புலவர்களியற்றிய பெருநாரை, பெருங்குருகு, நாரதர் இயற்றிய பஞ்சபாரதீயம், சிகண்டி இயற்றிய இசை நுணுக்கம், அறிவனுர் செய்த பஞ்ச மரபு, ஆதிவாயிலார் செய்த பாரத சேனுபதீயம், பாண்டியன் மதிவாணனுர் செய்த மதிவாணர் நாடகத் தமிழ் நூல் முதலியன தமிழிசை நூல்களாகும். இசை பற்றிய நூல்கள் தமிழில் இன்னும் பல இருந்தன. அவற்றுள் ஒன்றேனும் முழுமையாய்க் கிடைத்திலது. அவற்றுள் சில சூத்திரங்களே நூற் பெயருடன் கிடைத்துள்ளன.

தொல்காப்பியத்தில் இசையைப் பற்றிய குறிப்புக் களும் பாணர் முதலியவர்களைப் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. அந்நாலுள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்கட்கும் வெவ்வேறு வகையான பண்கள் குறிக்கப்பெற்றுள்ளன. தெய்வப் புலவர் திருவள்ளுவர், "பண்ணென்னும் பாடற் கியை பின்றேல்" எனப் பண்ணைப் பற்றியும், "ஆயன்குழல் போலும்" "குழலினது யாழினிது என்ப" என்று குழல், யாழ் என்னும் இசைக் கருவிகளைப் பற்றியும் திருக்குறளில் கூறியுள்ளார். சங்க இலக்கிய நூலாகிய பரிபாடலுள் பண் அமைப்பு முறை காணப்படுகிறது.

இயற்றமிழில் இசை: இயற்றமிழில் இசை விரவி வருவதை 'வண்ணம்' என்பர் தொல்காப்பியர். நால் வகைப் பாவினுள் வெண்பா சங்கராபரணத்திலும், அகவற்பா ஆரபியிலும், கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலியன பைரவியிலும் தமிழறிஞர்களால் பாடப்பெற்று வருவதைக் காணலாம். கலிப்பா, பரிபாடல் என்பன இசைப் பாக்களே. அச்சம், வியப்பு, வெகுளி, வீரம், அவலம், நகை முதலிய மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசையமைதி உடையனவே. முற்கால நூல்களிலும் இடைக்கால நூல் களாகிய சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலியவற்றிலும் உள்ள பாக்கள் இசையமைதி உள்ள வையே ஆகும்.

இடைக்கால இசை: கடைச் சங்க காலத்திற்குப் பிறகு சுமார் ஐந்நூறு ஆண்டுகள் இசை வளர்ச்சி குன்றியிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய சைவ சமய ஆசிரியர்களாகிய திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமிழ்ப் பண்கள் பல பாடி நாளும் தமிழ் வளர்த்தனர். அதன் பின்னர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோன்றிப் பண்கள் பல பாடியருளினர். இம் மூவரும் பாடியருளியவை ஏழுதிருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. அவற்றிற்குத் 'தேவாரம்' என்பது பெயர். மாணிக்கவாசகர் அருளிய 'திருவாசகம்'

ஒப்பற்ற இசைப் பாக்கள் அமைந்த எட்டாந்திரு முறை யாகும்.

நாயன்மார்களைப் போலவே, ஆழ்வார்களும் பண்ணுென்றப் பாடல்கள் பல பாடினர். அவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனப்பட்டன. இவர்களால் இசைக் கலை இடைக்காலத்தில் ஏற்றமுற்றது.

இசைப் பெருமை: அழகுக் கலைகளுள் இசைக் கலையும் ஒன்ருகும். இசைக்கு உருகாத உயிரினங்களே இல்லை எனலாம். செடி கொடியுங் கூட இசையறிந்து இன்புறுகின்றன என்று இக்கால ஆய்வாளர் மெய்ப்பித்து வருகின்றனர். வண்டுகளின் இசையினுல் மொட்டுக்கள் நெகிழ்ந்தன என்ற செய்தி,

"புதலும் வரிவண்டூத வாய்நெகிழ்ந் தனவே" என்னும் குறுந்தொகை அடியால் தெரிய வருகிறது. மதம் பிடித்த யானையும் யாழிசை கேட்டு அடங்கியது என்பதைப் பெருங்கதை கூறுகிறது. தினைப் பயிரை உண்ண வந்த யானை குறிஞ்சிப் பண் கேட்டு, வந்த செயலை மறந்து, நிலையில் பெயராது நின்றது என்பதை அகநானூற்றுப் பாடலொன்றில் அழகுறக் காணலாம். கொடிய பாலை நிலம், வன்ருெழில் புரியும் கள்வர் உள்ள இடம். அவ் வழியே செல்வோர் பாலைப் பண்ணைப் பாடுகின்றனர். அதனைக் கேட்டுக் கள்வர் ஆயுதங்களை நழுவவிட்டு வன்ருெழில் மறந்து இன்புற்று உருகிய செய்தி இலக்கியத்தில் காணப்படுகிறது. குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியைக் கேட்டுத் தினை உண்ண வந்த யானை துயின்றது என்ற செய்தி சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லை நிலத்தில் கோவலர்கள் தமது குழலோசையினுலேயே ஆவினங்களைத் தம்முடன் அழைத்துக்கொள்வர் என்பதை முல்லைக் கலியில் காணலாம். குறிஞ்சி நிலத்தில் உள்ள ஓர் அழகிய தினைப்புனம்; தினைப் பயிரை மலைநாட்டு பெண்ணுெருத்தி பரண் மீதிருந்து காவல் செய்கிருள்; என்னதான் காவலிருப்பினும் கிளி, குருவி முதலியன வரத்தான் செய்கின்றன; அப்பறவை

களும் காவல் பெண்ணின் இனிமையான பண் கேட்டு, தம் தொழில் மறந்து, தம்மை விரட்டுவதையும் அறியாது இசைவயமாகிவிட்டன. திணைமாலை நூற்றைம்பதில் இதனை ஒரு வெண்பாவில் காணலாம். தமிழ் இலக்கியங்களில் இசை பற்றிய எத்துணையோ நிகழ்ச்சிகள் உள்ளன.

ஒளி மங்கிய கண்ணுடையவர் இசை பயின்றால் பார்வை மிகுதியும் வரப்பெறுகின்றனர் என்று கிராவ்காவ் என்ற மேலைநாட்டு அறிஞர் கூறியுள்ளார். இசையால் பல நோய்களையும் நீக்கலாம் என்பர் அறிஞர் உவில்லியம் வால். தொழிற்சாலைகளில் உள்ள மக்களை இசை கேட்கச் செய்வதால் வேலை விரைவில் நடைபெறுகிறது எனவும் கண்டறிந்துள்ளனர். அன்பே வடிவாகிய ஆண்டவனும் இசையை விரும்புகிறான்; இசையின் பயனாக இருக்கிறான்; இசை பாடுகிறான் என்றெல்லாம் நூல்கள் கூறுகின்றன. "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று சுந்தரரும் "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்று அப்பரும் இதனைக் கூறியிருக்கின்றனர். கலைமகள் கையில் வீணை, கண்ணன் கையில் குழல், நாரதர் கையில் யாழ், நந்தியின் கையில் முழவு இருக்கக் காணலாம். நம் முன்னோர் இசைக் கலையை எவ்வளவு சிறப்பாகப் போற்றி இருத்தல் வேண்டும் என்பது இதனால் தெளிவாகின்றதன்றோ!

கவியரசர் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார் முதலியோர் இந்த நூற்றாண்டில் எழுச்சியும் உணர்ச்சியுமிக்க இசைப் பாடல்களை இசைத்துள்ளனர். இராசா சர். அண்ணமலைச் செட்டியாரவர்கள் இசைத் தமிழ் வளர வேண்டி, தமிழிசை இயக்கம் ஒன்றையே நிறுவியுள்ளார். சென்னையில் உள்ள தமிழிசை மன்றம் நற்பணியாற்றி வருகிறது. இசைக் கலைஞர்கள் பலர் தமிழிசை வளர்ச்சியுற இசைப்பணியாற்றியும் வருகின்றனர்.

## அருஞ்சொற்பொருள்

செம்மை - சிறப்பு ; நுண்மை + கலை ; ஆறு + அறிவு ; பண்டையோர் - முன்னோர், பண் - இசை, வனப்பு - அழகு, விரவி - கலந்து, புனம் - கொல்லை.

## பயிற்சி

I. வினாக்கள் :

1. முத்தமிழ்—விளக்குக.
2. இசை நூல்கள் யாவை ?
3. எந்தெந்தப் பாக்களை எந்தெந்த இராகத்தில் பாடவேண்டும் ?
4. இசையமைதி உள்ள நூல்கள் யாவை ?
5. இசையின் பெருமையை விவரி.
6. இந்த நூற்றாண்டில் இசையை வளர்த்தோர் யாவர் ?
7. குறிப்பு வரைக :
   இராகம், சிலப்பதிகாரம், தேவாரம், குழல், பரிபாடல், நாயன்மார்.

II. பிரித்து எழுதுக :

இயற்றமிழ், முத்தமிழ், ஓரறிவு, தமிழறிஞர், வண்டூத, அப்பறவை.

III. சேர்த்து எழுதுக :

இசை + தமிழ் ; பாடல் + ஒன்றில் ; யாழ் + இசை ; மேற்கு + நாடு ; எம் + இறை.

IV. எதிர்ச்சொல் வரைக :

பண்டையோர், பண்பட்ட, மகிழ்வு, துயின்றது, ஒளி, தெளிவு.

V. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

முத்தமிழ், இசைத்தமிழ், ஓரறிவு, நுண்கலை, பண்பட்ட, பண்ணோடும், வெவ்வேறு, குழலோசை.

VI. பொருள் கூறுக :

இசை, பாணி, பண், வனப்பு, புனம், பரண்.

VII. கட்டுரை வகை :

1. விபுலானந்தர் இசைக்குச் செய்த தொண்டு.
2. இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரின் இசைத்தொண்டு.

# 13. புலவர் மொழிபோற்றிய புரவலர்கள்

[திரு. சைவப்புலவர், பண்டித அ. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், வடிவீசுவரம், நாகர்கோவில்.]

தமிழ்மொழி பண்டைக்காலம் தொட்டே சொல்நயம், பொருள் நயம், முதலிய நயங்களைக் கொண்டு நானிலத்தில் ஓர் உயர்வுடையதாகத் திகழ்கின்றது. இந் நயங்களோடும், சிறந்துயர்ந்த கருத்துக்களை மேற்கொண்டும் புலமைச் செல்வம் நிரம்பிய நம் பண்டைத் தமிழ்மொழியைப் பயின்று புலமைபெற்ற புலவர் பெருமக்களைப் பொன்னேபோற் போற்றி அவர்களுடைய விழுமிய கருத்துக்களைப் புரவலர்கள் கைக்கொண்டு ஒழுகிவந்தனர் என்பதற்கு முற்கால இலக்கியங்கள் தக்க சான்று பகருகின்றன.

இத்தகைய புலவர் பெருமக்கள் பண்டைத் தமிழ் நாட்டின் சிறப்புக்களையும், அக்கால மக்களின் வாழ்க்கைகளையும் அரசனது பெருமைகளையும் தம் பாடல்களில் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குத் தெளிவாக விளக்கும். அவைகளைத் தந்து அழியாப் புகழ் பெற்ற புலவர்கள் தங்களுடைய நல்லொழுக்கத்தாலும், உண்மை, வறுமையிற் செம்மை முதலான நற்குணங்களாலும், சிறந்து திகழ்ந்தார்கள். ஆதலால்தான் அரசர்கள் இப்புலவர்களை ஆதரித்தனர்; சிலரைத் தம் அரசவைப் புலவர்களாகவும் ஆக்கிக்கொண்டார்கள். இப் புலவர்கள் புரவலர்களுக்குத் தக்க அறவுரை கூறி அவர்களை நன்னெறியில் செலுத்தப் பெரிதும் முயன்ருர்கள். இவ்வாறு புரவலர்களுடைய வாழ்வைத் தம் வாழ்வாக எண்ணிப் புலவர்களும், புலவர்களுடைய வாழ்வைத் தம் வாழ்வாக எண்ணிப் புரவலர்களும் வாழ்ந்து நாட்டிற்கும், மக்களுக்கும் சிறந்த பல நன்மைகளைச் செய்திருக்கிருர்கள்.

இவ்வாறு தம் சொல்வன்மையினுலும், ஒழுக்க நெறியினுலும், அரசர்களையும், குடிகளையும் காத்து நன்முறையில் நாட்டை ஆளவேண்டுமென்று தன்னுயிர்க்கு

ஆபத்து வந்த காலத்திலும் அஞ்சாது அரசர்களுக்கு நீதியை எடுத்துரைத்தவர்கள் இப் புலவர்களாவர். அரசர் குடும்பங்களுக்குள் கலகம் நிகழ்ந்த காலத்து நடு நின்று நீதிகளை உணர்த்தி அவர்களை ஒன்றுபட்ட நல் வாழ்வில் 'ஈடுபடச் செய்யும் நல்லவர்களாகவும், நெறி தவறிய அரசனை நன்னெறிப் படுத்தும் சான்றோராகவும், போர் நிகழ்ந்த காலத்து அஞ்சிய அரசர்களுக்கு வீரமூட் டும் மறமானம் படைத்த மாண்புடையவர்களாகவும், இரு அரசர்களுக்கிடையே போர் நிகழ்ந்தபோது அவர் களிடையே சென்று நேர்மையை எடுத்துக்கூறி அவர் களைச் சந்து செய்யும் குலத்தில் தோன்றிய முதியவ ராகவும், தந்தையை இழந்து வருந்தும் இளம் பெண் களுக்கு அவர்களோடு இருந்து ஆறுதல் கூறி அவர் களின் வாழ்வை நல்வாழ்வாக்கிச் சிறந்த கணவர்களைத் தெரிந்தெடுத்து மணஞ்செய்து அவர்களை இடையரு இன்பத்தோடு வாழ வழிகாட்டும் தன்மை உடையவர் களாகவும், காதலை இழந்து மனைவியைத் துறந்து நிற்கும் அரசர்களுடைய தன்மையை உணர்ந்து அவர்களுக்கு நன்னெறி உணர்த்தி அவர்கள் இல்வாழ்வில் நன்னிலை அடையச் செய்யும் ஆன்றவிந்தடங்கிய சான்றோராகவும் விளங்கினுர்கள். இன்னும் இளமை, முதுமை காரண மாக ஏற்படும் தளர்ச்சி, செல்வ நிலையாமை, இவைகளை அரசன் நன்குணரும்படி எடுத்துரைக்கும் அறவோ ராகவும் விளங்கினுர்கள்.

இனி, இப் புலவர் பெருமக்கள் எங்ஙனம் அரசர் பெருந்தகைகளை நன்னெறிப் படுத்தினுர்கள் என்பதை இலக்கியங்கள் வாயிலாக ஆராய்வோம். தகடூரை அதியமான் நெடுமானஞ்சி என்பவன் ஆண்டு வந்தான். அவன் கல்வியிற் சிறந்தவன். கவியியற்றும் புலவர்களை யும், இசைத் தமிழ்வல்ல பாணர்களையும், நாடகத்தமிழ் வல்ல கூத்தர்களையும் நன்கு வரவேற்றுப் பரிசில் வழங்கும் இயல்பினன். இவன் ஔவையாரைத் தன் அவைக்களப் புலவராக வைத்துக்கொண்டான். அக்காலத் தில் காஞ்சியைத் தொண்டைமான் என்னும் அரசன்

ஆண்டு வந்தான். அவன் அதியமானேடு போர் செய்யத் துணிந்தான். இதை யறிந்த அதியமான் அகங்காரம் கொண்டான். தொண்டைமானின் அறியாமைக்கு வருந்தினன். அதியமான் போரின் கொடுமையையும், அதனுல் அவன் வலியழிந்து கெடுவதையும், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உண்டாகும் கேட்டையும் அறிந்து கொள்ளுமாறு அறிவித்ததற்கு அவன் பால் அனுப்பத் தகுந்தவர் ஔவையாரே என்றெண்ணி அவள் விருப்பத்தைக் கேட்டான். அவளும் அதற்கிசைந்து சென்ருள். ஔவையார் தன்னிடம் தூதாக வருவதைத் தொண்டைமான் அறிந்து நன்முறையில் வரவேற்றுச் சிறந்த விருந்தளித்தான். பின் ஔவையாருடன் தன் அரண்மனையைச் சுற்றி வரலாஞன். அப்போது அவள் தொண்டைமானைப் பார்த்து எக்காலத்தும் போர்வராமல் காத்தலே மன்னருடைய மாண்பு. குடிகளை அமைதியாகக் காத்தலே மேலானது. போர் எக்காரணத்தையுடையதாக இருந்தாலும் வெறுக்கத் தக்கது என உணர்த்தினள். பின் தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காண்பித்தான். ஔவையார் அவனை நோக்கி "உன் போர்க் கருவிகள் நெய் பூசியும், பீலியணிந்தும், புதிதாக இருக்கின்றன. அதியமானுடைய கருவிகள் நுனி மழுங்கிக் கொல்லனின் உலைக்கூடத்தில் கிடக்கின்றன" வென்று தொண்டைமானைப் புகழ்வது போலவும் அதியமானை இகழ்வதைப் போலவும் கூறினள். இதைத் தன் நுண்ணறிவினுல் உணர்ந்த தொண்டைமான் ஔவையாரின் கூற்றை நன்குணர்ந்து போரைப் பற்றிய எண்ணத்தை விடுத்தான். இதிலிருந்து ஔவையாரின் சொன்னெறியும் 'தொண்டைமானின் செந்நெறிபடரும்' உள்ளமும் தெளிவாகிறது.

சோழநாட்டை நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற இரு சோழர்கள் ஆண்டு வந்தார்கள். இருவரும் பங்காளிகளே! ஆனுலும் பகையாளிகளாக இருந்தார்கள். நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையினுள் இருந்தான். அது நலங்கிள்ளியின் இடமாதலால் அவன் ஆவூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி அஞ்சிப்

போருக்கு எழவில்லை. இதையறிந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்கு வீரத்தை யுணர்த்தி அவனைப் போர் செய்யத் தூண்டினர். அப்போரில் தப்பியோடிய நெடுங் கிள்ளி உறையூரில் தங்கினன். உறையூர் நெடுங்கிள்ளிக் குரியது. அதையறிந்த நலங்கிள்ளி உறையூரை முற்றுகை யிட்டான். நெடுங்கிள்ளி உறையூர்க் கோட்டைக்குள் அடைபட்டுக் கிடந்தான். அப்போது கோவூர்கிழார் சென்று அவனைப் பார்த்து "ஏ அரசனே! யானைகள் வருந்தி இடிபோன்று முழங்குகின்றன. குழந்தைகள் பாலின்றிக் கதறுகின்றன. மகளிர் எல்லோரும் பூவில் லாது வெறுந்தலை முடிக்கிருர்கள். மனைதோறும் அழுங் குரல், உன் அரண்மனைக்கண் கேட்கிறது. இவை யெல்லாம் நிகழவும், நீ அரண்மனைக்குள் வாளாவிருப்பது இனிதன்று. முன்னே வந்து முற்றுகையிட்டிருக்கும் அரசனைப் பார்த்து அறவுணர்வால் உனக்கு வேண்டு மானல் பெற்றுக்கொள் என்று சொல்லிக் கதவைத் திறந்து விடு. போர் செய்தலே முறையென்ருல் போர் குறித் தாவது கதவைத் திறக்கவேண்டும். இரண்டுமின்றிப் பெரிய கோட்டைக்குள் பதுங்கியிருப்பது நாணத்தகுவ தாகும்," என்று கூறினர்.

பின் கோவூர்கிழார் நலங்கிள்ளியிடம் சென்று "இவன் உனக்கு மாறுபட்ட பாண்டியனுமல்லன், சேரனுமல்லன். சோழர் குடியிலுள்ள நீவிரிருவரும் போர் செய்தல் நன்றன்று. ஒருவர் தோற்பின் தோற்பது நும் குடியே. ஆதலால் நீங்கள் போரை நிறுத்துவதே நல்லது" என்று கூறி இருவரையும் சந்து செய்வித்தார். இதிலிருந்து புரவலர்கள், புலவர்களின் மொழியை எவ்விதம் போற்றி வந்தார்கள் என்பது விளங்கா நிற்கும்.

மேலும், மலையாள நாட்டில் நல்லூர் என்ற ஓர் ஊர் இருந்தது. அதனைப் பேகன் என்ற அரசன் ஆண்டு வந்தான். புலவர்களை ஆதரிப்பதில் அவனுக்கு நிகர் யாருமில்லை; அவன் மக்களிடம் அன்பும் அருளும் உடையவன். வீரர்களோடு சண்டை செய்வானே யொழிய மெலியாரோடு சண்டை செய்வதில்லை. இவன்

குளிரினல் வாடிய மயிலுக்குப் போர்வை யளித்த வள்ள லாவான். இவனுக்குக் கண்ணகியென்ற அருமை மனைவி இருந்தாள். இவளும் புலவர்களிடம் அளவற்ற மதிப்பு வைத்திருந்தாள். ஒரு சமயம் பேகன் கண்ணகியின்பால் சினங்கொண்டு அவளைவிட்டு விலகி வேறிடத்தில் போய்த் தங்கினன். கண்ணகி எவ்வளவோ மன்னிப்புக் கேட்டும் பேகன் மனம் திரும்பவில்லை. சுற்றத்தார்களா லும் மனத்தை மாற்ற முடியவில்லை. அப்போது அவரால் ஆதரிக்கப்பட்ட பல புலவர்களும் சென்று பேகன்மீது பல பாடல்களைப் பாடி அவன் சினத்தை மாற்றிக் கண்ணகி யோடு வாழ வழி செய்தார்கள். அதில் கபிலர் என்ற புலவர் பேகனிடம் சென்று, "போர்த்திறம் வாய்ந்த பேகனே! நான் உன் வீட்டிற்குச் சென்றேன். வழக்கம் போல் உன்னையும், உன் மனைவியையும், உன் மலையாள நாட்டையும் பற்றி வாழ்த்தினேன். அப்போது உன் மனைவியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. அதனல் உங்கள் இருவருக்கும் ஏதோ மன் வேற்றுமை இருக்கிறதாக உணர்ந்தேன். உன்னுடைய அன்புக்குரியவளாகிய அவளை அப்படி வருந்தும்படி விடு வது கூடாது" என்ற பொருளமைந்த பாடலைப் பாடினர்.

இனி, பரணர் என்பவர் பேகனிடம் சென்று, "ஏழை கட் கிரங்கி அவர்களுக்குதவும் அருட்குணம் நிறைந்த அரசனே! நான் உன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். உன் இல்லக் கிழத்தி என்னைக் கண்டதும் கண்ணீர்த் துளிகளை முத்துப் போன்று சிந்தினள். நான் 'பேகன் எங்கே?' என்று கேட்டேன். 'அவர் என்மீது சினங் கொண்டு சென்றுவிட்டார்' என்று கூறி ஐயகோ! என்ற லறினள். அதைக் காண என்னல் பொறுக்க முடிய வில்லை. அருட்குணம் நிறைந்த நீ எவ்வாறு பொறுத்துக் கொண்டிருக்கிருய். மயிலுக்குப் போர்வையளித்த மன்னனே! உன்னிடத்தில் அன்பு காட்டி வந்த கண்ணகி யைக் காப்பாற்ருமல் விட்டு விடுதல் மிகவும் தவருகும். நான் உன்னிடம் பரிசு கேட்பது பொன்னும், பொருளு மல்ல; உன் தேரிலேறி உனக்காகக் காத்திருக்கும்

கண்ணகியின் இருப்பிடத்திற்குச் செல்ல வேண்டும். அப்படிச் செய்யாமல் நீ இங்ஙனம் வாளா விருப்பது உனக்குக் கொடுமையாகும்'' என்று கூறி அவனை மனைவியிடம் அனுப்பினர். இதிலிருந்து இப் புலவர்கள் பிரிந்த கணவனை ஒன்று சேர்க்க முயன்ற நெறியினை நாம் நோக்குங்கால் பண்டைத் தமிழரசர்கள் புலவர் பால் கொண்டிருந்த அன்பும், புலவர்கள் அரசர்கள் பால் வைத்த அன்பும் தெள்ளிதில் விளங்கும்.

இவ்வாறு பல புலவர்கள் மாறுபட்டு நிற்கும் அரசர் களைத் தம் சொன்னெறியினல் அவர்களுக்குத் தக்க அறிவுரை கூறி அவர்களை நன்னெறிப் படுத்த முயன்ற தன்மைகளை நாம் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

## அருஞ்சொற்பொருள்

நானிலம் - (குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்) உலகம், விழுமிய - சிறந்த, புரவலர் - வள்ளல், மாண் - பெருமை, நெறி - வழி, மனை - வீடு.

## பயிற்சி

I. வினக்கள் :

1. அரசர்கள் புலவர்களை ஏன் ஆதரித்தனர்?
2. புலவர்கள் அரசர்களுக்கு செய்த நன்மைகள் யாவை?
3. ஒளவையார் செய்த தொண்டு யாது?
4. கோவூர்கிழார் செய்த சேவை யாது?
5. பரணர் பேகனிடம் வேண்டிய தென்ன?
6. குறிப்பு வரைக :

   தகடூர், தொண்டைமான், கண்ணகி, முற்றுகை.

II. பிரித்தெழுதுக :

பண்டைக்காலம், நானிலம், நல்லொழுக்கம், நன்னெறி, நுண்ணறிவு, செந்நெறி, வேறிடம்.

III. சேர்த்தெழுதுக :

நான்கு + நிலம், நன்மை + குணம், அறம் + உரை, இதை + அறிந்த, தமிழ் + அரசர்.

IV. பொருள் கூறுக:

புலமை, சந்து, மாண்பு, வாளா, நாணம், சினம், அருள்.

V. வாக்கியங்களில் அமைக்க:

நானிலத்தில், தாரை தாரையாக, நற்குணங்கள், ஒழுக்க நெறி, என்றெண்ணி, முற்றுகை, அறவுணர்வு, அன்புக்குரிய.

VI. கட்டுரை வரைக:

1. தற்காலத்தில் வாழ்ந்த வள்ளல் ஒருவர் வரலாறு.
2. தற்காலத்தில் வாழ்ந்துவரும் புலவர் ஒருவர் வரலாறு.
3. தற்காலத்தில் வாழும் எழுத்தாளர் ஒருவர் வரலாறு.

# 14. சிறு சேமிப்பு

[திரு. ம. இலட்சுமி நாராயணன் அவர்கள், B.Sc., B.T.,
திருத்தவத்துறை.]

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த" தமது குறளிலே வரவுக்கும் செலவுக்கும் இருக்க வேண்டிய தொடர்பை,

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்று தெளிவுபடுத்தினர் செந்நாப்போதார். நொடி தோறும் மாறிவரும் 'ஆழிசூழ்' வையத்திலே நேற்று ஒரு விலைக்குக் கிடைத்த பொருள் இன்று அதே விலைக்குக் கிடைப்பதில்லை. நாளை அது கிடைக்குமா என்றும் அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. நமது தேவைகளோ நாளும் ஈசன் படைப்பில் பெருகிவரும் உயிரினங்கள் போலப் பல்கி நம்மையே வியப்பில் ஆழ்த்துகின்றன. எது தேவை? எது இன்றியமையாதது? என்ற ஆராய்ச்சி நோக்கு இல்லாமல், 'கண்டதே காட்சி' என்றபடி புற அழகில் மயங்கிக் கையில் இருக்கும் பொருளுக்குத் தன் எண்ணத்தில் தோன்றும் பொருள்களை எல்லாம் வாங்கிவிட்டுப் பின்னர் வாழ்க்கை முழுவதும் 'ஆற்றாது, அல்லற்பட்டு' வீழ்வோர்கள் எத்துணை பேர்? முதலில் தமது வரவுக்கு மிஞ்சிய செலவு செய்துவிட்டு, ஆடம்பரமாக வாழ்ந்த பின் துன்பம் நிறைந்த வாழ்க்கையைக் கைக்கொள்ளும் போது 'பழங் கணக்கு' பார்ப்பதால் யாது பயன் விளையும்? நிலையான, சீரான, அமைதி நிறைந்த வாழ்க்கை ஒன்றை அமைத்துக் கொள்ளும் அறிவுபடைத்தோர் எத்துணை பேர் உள்ளனர்? நிலையான வாழ்க்கை ஒன்றை அமைத்துக்கொண்டு அதன் மூலம் வளமான வாழ்க்கைக்கு அடிகோலிட முயற்சி செய்யாவிட்டால் நமக்கும், ஐந்தறிவு படைத்த விலங்கினங்களுக்கும் என்ன வேற்றுமை உளதாகிறது? எனவே நாம் மேன்மையுற்று, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழி வகைகளைச் செய்துகொள்ள வேண்டும்.

இன்று நம்முன் தெரியும் தேவைகள் நாளை பல்கிப் பெருகலாம். அவ்வமயம் அவற்றுள் பல மிகவும் இன்றி யமையாதனவாகவும் அமையலாம். எனவே நம் தேவை களை நிறைவு செய்து கொள்ள, அதற்கு வேண்டிய பொருளை நாம் தனியே ஒதுக்கி வைக்கவேண்டும். வருமுன்னர்க் காவாது போயின், நம் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெட்டு அழிவது உறுதி. நம்முடைய பிற்கால நல்வாழ்விற்கு, சிறு பொருளை இப் போதிலிருந்தே சேர்த்து வந்தால் அதனைப் பின் நம்முடைய முன்னேற்றத்திற்காக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். திட்டமிடாமல் கைப்பொருள் அனைத்தை யும் செலவு செய்துவிட்டால் இவ்வுலகில் நம் வாழ்க்கை பயனற்றதாகப் போய்விடும்.

“ ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு”

என்ற ‘ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்’ கூற்றுப்படி ‘போகாறு அகலாதிருந்தால்’ ‘ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை’ அவ்வாறு இல்லாது மாறி வாழ்வோமாயின், போன திசை எல்லார்க்கும் கள்ளர் தாம்; ஏழ் பிறப்பும் தீயர்தாம்; நல்லாரும் நம்மைப் பொல்லார் என்றே கூறுவர். இருக்கும் பொருளை எல்லாம் செலவு செய்துவிட்டுப் பிறரிடம் கையேந்தி நிற்பது பிறருக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதாகவா இருக்கும்? எளிய, உயரிய வாழ்க்கை வாழ, பிறரிடம் கையேந்தாமல் நாமாகவே வாழச் சிறந்த வழி சேமிப்பு ஒன்றுதான்.

ஒரு தற்கால வேதாந்தி கூறினார்: “நல்ல, சுகமான வாழ்க்கை வேண்டுமா? நீங்கள் நினைக்கும் செயல்கள் அனைத்தும் கைகூட வேண்டுமா? இதோ ஐந்து வழிகள்: செல்வமுடையவர்களாகப் பிறந்துவிடுங்கள்; அல்லது, ஒரு செல்வந்தரின் வாரிசுதாராகுங்கள்; அல்லது ஒரு

பெரும் பொருளுக்குரியவரை மணம் செய்துகொள்ளுங்கள்; அல்லது முதற் பரிசுத் தொகை நூறுயிரம் ரூபாய்கள் கிடைக்கக்கூடிய பரிசுப் போட்டியில் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடையளியுங்கள்; அல்லது நன்ருக உழைத்துப் பொருளைச் சேமியுங்கள்.'' இந்த ஐந்து வழிகளிலேயும் எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, எல்லாராலும் இயலக்கூடிய வழி சேமிப்புதான்.

நம் பிற்கால வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கிற்காகச் சேமிக்க வேண்டும் என்று கண்டோம். அத்துடன் நல்ல படிப்பு, மக்கள் திருமணம், நல்ல உறையுள், வாணிபத்தில் முதலிட்டுப் பெருக்குவதற்கான பொருள், அமைதியான குடும்ப வாழ்க்கை, எதிர்பாராது வரும் செலவினங்கள் போன்ற இன்னேரன்ன காரணங்களால் சேமிப்பு இன்றியமையாததாகிறது. நம் நலன் மட்டுமன்றி நாட்டின் நலனும் பெருகுகிறது. நம் தாய்த் திருநாட்டிற்கும் பெரும்பயன் விளைவிப்பதாலேயே சேமிப்பு மிகவும் முக்கியமானதாகிறது.

நிறைந்த பொருளுடையவர்கள் எல்லாரும் திட்டமிட்டுத் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து, மற்றதைச் செலவு செய்திருந்தால் விலைவாசிகள் ஏற்றம் காணுமல் இருந்திருக்கும். தமது விருப்பங்களை நிறைவு செய்துகொள்ளத் தேவையற்ற பொருள்களை, அவற்றின் உண்மையான விலைக்கு அதிகம் கொடுத்து வாங்கும்பொழுது விலை தானுக உயர்கிறது. ஆகவே நமது செலவு குறைந்து சேமிப்பு அதிகமாக அதிகமாக வாழ்க்கைச் செலவை உயரவிடாமல் ஓரளவு கட்டுப்படுத்த முடியும். ஏன்! திறமையான சேமிப்பினுல் வாழ்க்கைச் செலவைக் குறைக்கக்கூட முடியும். இதனுல் நாம் மட்டுமின்றி நம் நாட்டுமக்கள் பயன்பெற முடிகின்றது. இவ்வாறு சேமிப்பதால் நமக்கு இழப்பு ஒன்றுமில்லை. நமது சேமிப்பு வட்டி சேர்க்கப்பட்டு அதிகமாகிறது. 'காலத்தினுல் செய்த உதவி சிறிதெனினும்' அது இந்தப் பரந்த ஞாலத்தின் மாணப் பெரிது' என்பது வள்ளுவர் வாக்கு. எனவே நாட்டின் தற்போ

தைய நிலைமையை நோக்கி, நாம், நமது நாட்டு முன்னேற்றத்திற்கான நமது பங்கை உடனே செய்ய வேண்டும். அதனால் நமக்கும் நற்பயன் விளைவதால் இதில் காலதாமதம் கூடாது.

நம் அரசாங்கம் மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு செயல்படுவது. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்'. எனவே இந்நாட்டு முன்னேற்றத்தில் நம் எல்லோருக்கும் பங்குண்டு. அரசாங்கம் நிவைவேற்றி வரும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான பொருளை, நம் சேமிப்பை, அரசாங்க சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் தரமுடியும். அமைதியான பொருளாதாரப் புரட்சிக்கு மட்டும்தான் சிறு சேமிப்பு என்பது இல்லை. நமது எல்லைகளில் மாற்றான் வந்து, நியாயமற்ற முறையில் நம்மோடு போர் தொடுக்கும்போது, அவனுடன் போராடி, நமக்கு உரிமையான பகுதிகளையும், நமது சுதந்திரத்தையும் காப்பதில் சிறு சேமிப்புக்குப் பெரும்பங்குண்டு. சேமிப்பால் உற்பத்தி அதிகரிக்கிறது; வேலை வாய்ப்புகள் பல்குகின்றன; மக்களின் வாழ்க்கைத் தரம் உயருகிறது; அதனால் குறைவான செலவு, நிறைவான சேமிப்பாக ஆவதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது.

எவ்வளவு சேமிக்க வேண்டும் என்ற கேள்வி எழத் தேவையில்லை. எவ்வளவு குறைவாகச் சேமித்தாலும், 'சிறு துளி பெருவெள்ளம்' என்றபடி அது பெரிய சேமிப்பாக மாறும். ஒரு மரம் தோப்பாக முடியாது. ஆனால், பல மரங்கள் ஒரே பகுதியில் சேர்ந்து இருந்தால் அது தோப்பாகிவிடும். அந்தத் தோப்பால் எல்லோருக்கும் பெரும் பயன் உண்டு. 'அங்கே, வெயிலுக்கேற்ற நிழலுண்டு; வீசும் தென்றல் காற்றுண்டு.' தனி மனிதன் முயற்சியும் வெவ்வேறு திக்கில் சென்று கொண்டிருந்தால் ஒருவருக்கும் அதனால் பயனில்லை. அனைவரும் ஒரே திசையில், சரியான திசையில் ஒரே இலட்சியத்தை நோக்கிச் சென்றால், அதற்காக அனை

வரும் உழைத்தால் நமது முன்னேற்றம் விரைவில் கிட்டக்கூடிய ஒன்ருய்விடும். குறைவாக ஆனுலும், எல்லோரும் நிலையாகச் சேமித்தால் அது பெருந்தொகை யாய் நம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும்.

எப்படியாகிலும் சேமிக்கவேண்டும் என்று நாம் உறுதி கொண்டுவிட்டால் அடுத்தபடியாக நம் உள்ளத் தில் எழும் வினு எந்த வகையில் சேமித்து வருவது என்பதுதான். இதற்கு ஓர் எளிதான வழி, நமது சம்பளத்தில் ஒரு சிறு பகுதியைச் சேமிப்பதற்காக ஒதுக்கி மீதமுள்ள தொகையில் நமது வாழ்க்கைச் செலவுகளை நடத்திக் கொள்வதே. அவ்வாறன்றிச் செலவுகளை முதலில் முடித்துக்கொள்வோமானுல் மீதம் ஏதும் இருக்காது. ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கி வைத்துவிட்டு, மீதமுள்ளதில் குடும்பத்தை நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்திக் கொள்வதால், அவசியமற்ற செலவுகள் எழுவதற்கு வாய்ப்பில்லை. நமது தேவைகள் தாமாகக் குறைந்துவிடும். ஆகவே எல்லா வகையினரும், தமது வருமானத்தில் 100க்கு 5 விழுக்கா டாவது சேமிக்க வேண்டும். மேலும் சேமிப்பு தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒன்று. எந்த ஒரு திங்களும் சேமிக்காமல் நிறுத்திவிடக் கூடாது. ஆக, தொடர்ந்து சேமித்தால், சில ஆண்டுகளில் நம்மையே திகைக்க வைக்கும் ஒரு தொகை நம் கணக்கில் சேர்ந்து விடும்.

வங்கிகளில் சேமிப்பதற்கான பல வழிகள் உள்ளன. ஆனுல், அவைகளில் சேமிப்பது உண்டியலில் சேமிப்பது போலத்தான். சில்லறைச் செலவுக்குக்கூட உண்டியலை உடைக்கத் தோன்றும். ஆகவே இன்றைய நிலைமையில் பாதுகாப்பைப் பலப்படுத்த நமது அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்வதுதான் சாலச்சிறந்தது.

பலதரப்பட்ட மக்களுக்கேற்றவாறு பலவகையான சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. நிரந்தர வருமான முள்ளவர்கள், மொத்தமாகப் பணமுள்ளவர்கள் ஆகிய

ஒவ்வொருவருக்கும் இதில் வழியுண்டு. இந்தச் சேமிப்புப் பத்திரங்கள் எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.

ஆகவே நம் முன்னேற்றத்தையும், நமது நாட்டு முன்னேற்றத்தையும் மனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு சேமிப்பதாக உறுதி கொண்டு அதைச் செயல்படுத்தி வருவோமானால், நமது நாடு மிகச் சிறந்த முன்னேற்றம் அடைந்து உலக நாடுகளின் முன்னணியில் நிற்கப்போகும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அதற்கு வழி செய்ய இன்றே நாம் நம் சேமிப்பைத் தொடங்குவோமாக!

### அருஞ்சொற்பொருள்

ஆற்றுது - பொறுக்காது; வைத்தூறு - வைக்கோல்போர், போகாறு - போகும் வழி; ஏற்றம் - உயர்வு, ஞாலம் - உலகம்; பல்கு கின்றன - பெருகுகின்றன.

### பயிற்சி

I. **வினுக்கள்:**

1. திருவள்ளுவர் வரவு செலவு பற்றிக் கூறுவதென்ன?
2. ஆனமுதலில் அதிகம் செலவானுல் வரும் தொல்லைகள் யாவை?
3. சேமிப்பின் அவசியத்தை விளக்குக.
4. நாட்டின் முன்னேற்றத்தில் சிறு சேமிப்பின் பங்கு என்ன?
5. நியாயமான சேமிப்பிற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
6. சிறு சேமிப்பிற்கு அரசாங்கம் செய்துவரும் ஏற்பாடுகள் யாவை?
7. சேமிப்பால் ஏற்படும் நன்மைகள் யாவை?

II. **குறிப்பு வரைக:**

திருக்குறள், திட்டமிடுதல், சிறு சேமிப்பு, பாதுகாப்பு, சேமிப்புப் பத்திரம்.

III. **வாக்கியங்களில் அமைத்தெழுதுக:**

அளவறிந்து, வருமுன்னர்க் காவாது போயின், பிற்கால வாழ்வு, விலைவாசிகள், தொடர்ந்து சேமித்தால்.

IV. **கட்டுரை வரைக:**

1. சிக்கன வகை.
2. நாட்டுப் பாதுகாப்பு.
3. சிறு சேமிப்பு.

# 15. நாடகக் கலைஞர்கள்

[திரு. வித்துவான், தி. ச. சுப்பிரமணியம் அவர்கள், பசுமலை.]

இயற்றமிழும் இசைத்தமிழும் கூடி மெய்யின் இயக்கமொடு நிகழ்வது நாடகத் தமிழாகும். நூல்களைக் கற்பதற்கு நேரமில்லாத தொழிலாளர்கட்கும் கல்லாதவர்கட்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டதே நாடகத்தமிழ் எனலாம். நாடகம் இன்பச் சுவையோடு இயங்கியமையால் கல்லாதாரன்றிக் கற்றோர்க்கும் கழிபேருவகை தந்தது. பொதுமக்கள் நாடகத்தைப் பெரிதும் விரும்பினர்.

**நாடகத்தமிழின் தோற்றம்:** இதன் தோற்றத்தைப் பரிதிமாற் கலைஞர் தமது நாடக இயலின் முன்னுரையாகக் கூறியிருப்பதில் காண்போம். "தமிழ் நாடகம் முதலில் உண்டானது மதத்தொடர்பாக என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல்கள் இரண்டையுஞ்சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின. அதன்மேல் முதலிற் பாடமாயுள்ள சொல்லாடல்களும் பின் உரை நடையான சொல்லாடல்களும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பின்னர் நாடகத்தமிழ் வேத்தியல், பொதுவியல் என்ற இரு பிரிவினதாகி அரசர்களானும் ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. கி. மு. மூன்றும் நூற்றுண்டினுதல் அல்லாக்கால் அதனினுஞ் சற்று முற்காலத்தினுதல் நாடகத்தமிழ் உயர்நிலை யுற்றிருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**நாடகக் கலைஞர்கள்:** முத்தமிழ்க் கலையுள் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து இன்பம் பயப்பது நாடகக்கலையே யாகும் என்பதை அனைவரும் அறிவர். நம் தமிழகத்தில் இக்கலை சிறப்புற்று விளங்கியது. பல ஆண்டுகளுக்கு முன்பும் சிற்றூர்கள் தோறும் விழாக் காலங்களில் மிகுதியாக நாடகங்கள் நடைபெற்றன. அதற்குக் காரணம் மக்கள் நாடகத்தின்பால் கொண்ட ஈடுபாடேயாகும்.

19, 20ஆம் நூற்றாண்டுகளில் பல நாடகக் கலைஞர்கள் தோன்றி நாடகக் கலையை நன்முறையில் வளப்படுத்தினர். பரிதிமாற் கலைஞர், சங்கரதாச சுவாமிகள், இராவ்பகதூர் பம்மல்-சம்பந்த முதலியார் ஆகியோர் சிறந்தவர்களாவர். அவர்களிலொருவராய சங்கரதாச சுவாமிகளைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

சுவாமிகளின் பிறப்பிடம்: தமிழக வரலாற்றிலே சிறப்பான இடம்பெற்ற கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரையும், பாட்டுக்கொரு புலவராய்ச் சிறந்து விளங்கிய அமரகவி சுப்பிரமணிய பாரதியாரையும், ஆங்கில ஆட்சியை ஒழிக்க அன்றே உரிமைப்போர் தொடங்கிய வீரபாண்டிய கட்டபொம்மனையும், சிறந்த புலவர்களையும் நமக்குத் தந்தது திருநெல்வேலி மாவட்டமே. அத்தகைய சீருஞ்சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் தான் நாடகக் கலைஞராகிய சங்கரதாச சுவாமிகள் தோன்றினர். தென்னகத்தின் துறைமுக நகரங்களிலொன்றான தூத்துக்குடியில் தாமோதரக் கணக்கப்பிள்ளை என்றொரு புலவர் இருந்தார். இவர் வெள்ளையரை விரட்டியடித்த வெள்ளையத்தேவன் பரம்பரையிலே போரில் புறமுதுகு காட்டாத வீர மறக்குடியைச் சார்ந்தவர். இவர் கல்வி கேள்விகளிற் சிறந்த புலமை பெற்று விளங்கியமையால் இராமாயணப் புலவர் என்றே இவரை மக்கள் அழைத்தனர். இவரது அருமைத் திருக்குமரனாக கி. பி. 1867ஆம் ஆண்டில் ஆவணித் திங்கள் 22ஆம் நாள் சங்கரதாசர் பிறந்தார்.

இளமை வாழ்க்கை: சங்கரதாசர் இளமையிலேயே மதிநுட்பம் வாய்ந்தவராகச் சிறந்து விளங்கினர். புலமை பெற்ற தனது தந்தையார் தாமோதரத் தேவரிடமே கல்வி பயின்றார். அடக்கமும் கீழ்ப்படிதலும் அணியெனக் கொண்டார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' எனும் பழமொழிக் கிணங்கத் தமிழ்ப்பாடல்களை விரைந்து மனப்பாடம் செய்யும் திறன் கைவரப்பெற்றார். தந்தையாரும் மனமகிழ்ந்து பழனி தண்டபாணி சுவாமிகளிடம் பாடம் பயில அனுப்பிவைத்தார். அதுபோழ்து உடுமலைச்

சரபம் முத்துச்சாமிக் கவிராயரும் உடன் பயிலும் மாண வராக அமைந்தார். சுவாமிகளும் இலக்கண இலக்கியங் களை ஐயந்திரிபறக் கற்றுப் பாடல்கள் இயற்றும் திற னடைந்தார். சிலகாலம் தூத்துக்குடி உப்பு வாணிகப் பண்டக சாலையில் கணக்கராகப் பணியாற்றினர். கவி தைப் புலமைக்கும் கணக்குத் தொழிலுக்கும் ஒத்துவராத தால் தனது இருபத்துநான்காவது வயதில் நாடகத்துறை யில் இறங்கினர்.

**நாடகக்கலையின் தொடக்கம் :** முதன்முதலாகப் பழம்பெரும் நாடக மன்றத்தில் சேர்ந்து நடிகராகவும் பின்னர் ஆசிரியராகவும் சிறப்புற்றார். அவர் எடுப்பான தோற்றம் உடையவராக விளங்கியதால் வேடப் பொருத் தம் இவருக்குச் சிறப்பாக அமைந்தது. இவரது நடிப்புத் திறமையை அனைவரும் பாராட்டினர். நாடகத் தொடக் கத்தின்போது, நடைபெற இருக்கும் நாடகத்தின் நீதி களையும், நுணுக்கங்களையும் சிறந்த முறையில் விளக்கு வார். இவரது சொற்றிறனைக் கேட்கவும் நடிப்புத் திற னைக் கண்டுகளிக்கவும் மக்கள் பெருந்திரளாகக் கூடு வார்கள்.

**சுவாமிகளான விதம் :** வாழ்க்கையில் வெறுப்புற்று முருகப் பெருமானின் திருவருளை வேண்டிச் சிறு தொகை யுடன் பல தலங்களுக்குச் சென்றார். இறைவனை நினைந் துருகிப் பாடி வணங்கினர். துறவிக்கோலத்துடன் அவர் பல தலங்களுக்குச் சென்று வந்ததால் அவரைச் 'சுவாமிகள்' என்றே அனைவரும் அழைக்கத் தொடங் கினர். பின்னர் **சுவாமிகள்** என்றாலே நாடகப் பெருங் கலைஞரான சங்கரதாச சுவாமிகளையே குறிக்கும் என்ற அளவுக்குப் பெரும் புகழ் வாய்ந்தவராக விளங்கினர்.

**அன்புச்செல்வரானது :** சுவாமிகள் புதுக்கோட்டை மகா வித்துவான் **கஞ்சிரா மாமுண்டியா** பிள்ளை அவர் களிடம் சேர்ந்தார். அவரும் தனக்குப் பிள்ளையில்லாத தால் இவரை அன்புச்செல்வராக ஏற்றுக்கொண்டார். சுவாமிகள் சந்தங்கள் பாடவும் அதற்கேற்ப அவர் கஞ் சிரா வாசிக்கவும் இன்பமாகக் களித்து மகிழ்ந்தனர்.

அவரது வேண்டுகோளின்படி மீண்டும் நாடக ஆசிரியப் பொறுப்பைச் சுவாமிகள் மேற்கொண்டார்.

**மீண்டும் நாடகாசிரியர் :** சுவாமிகள் வள்ளி வைத்தியநாதய்யர், அல்லி பரமேசுவர ஐயர் நாடக சபையிலும், பி. எஸ். வேலுநாயர் நடத்திவந்த சண்முகானந்த சபையிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பேச்சுத்திறனில், புகழ்பெற்ற பி. எஸ். வேலுநாயரும், டி. கே. எஸ். குழுவினரின் தந்தையான டி. எஸ். கண்ணுச்சாமிப் பிள்ளை அவர்களும் சுவாமிகளின் அன்பு மாணவராகத் திகழ்ந்தனர். பின்னர் சுவாமிகள் சொந்தமாக "சமரச சன்மார்க்க நாடக மன்றம்" ஒன்று நிறுவினர்கள். அதில் புகழ்பெற்ற நடிகர்களும், நடிகையர்களும் பயிற்சிபெற்றுச் சிறந்து விளங்கினர். அதில் எஸ். ஜி. கிட்டப்பாவும் அவரது சகோதரர்களும் பயிற்சி பெற்றனர். இசைப் புலவராக இன்று நம்மிடையே வாழும் **மதுரை மாரியப்ப சுவாமிகள்** இந்த நாடகக் குழுவில் தோன்றியவரே யாவர்.

பின்னர் "பால மீன ரஞ்சனி சபை"யில் சுவாமிகள் ஆசிரியராகப் பொறுப்பேற்று இருந்தார். அதில் பயிற்சி பெற்ற நாடக மணிகளில் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. பி. டி. சம்பந்தம், எம். எஸ். முத்துக்கிருஷ்ணன், டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை, எம். வி. மணி, கே. சாரங்கபாணி, நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், எம். ஆர். ராதா ஆகியோராவர். மேலும் தமிழ் நாடகங்களுக்குப் புத்துணர்ச்சியூட்டி, புகழ்பெற்று விளங்கும் டி. கே. எஸ். சகோதரர்களான சங்கரன், முத்துச்சாமி, சண்முகம், பகவதி ஆகியோரும் சுவாமிகளின் அருமை மாணவர்கள் என்பதை அறியும்போதும் நமக்குச் சுவாமிகளின் நடிப்புக் கலை உயர்வு நன்கு விளங்குகிறதன்றோ? கி. பி. 1918ஆம் ஆண்டு மதுரையில் "தத்துவ மீனலோசனி நாடக சபை" நிறுவப்பட்டது. அதுபோழ்துதான் டி. கே. எஸ். சகோதரர்கள் சேர்ந்து பயிற்சி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சுவாமிகள் எழுதிய நாடகங்கள் :** இவை அபி

மன்யு சுந்தரி, பார்வதி கலியாணம், பிரபுலிங்கலீலை, வள்ளித் திருமணம், பாதுகாபட்டாபிடேகம், இலங்கா தகனம், அல்லி அர்ச்சுனு, சிறுத்தொண்டர், சதி அனு சூயா, பவளக்கொடி, சுலோசனு சதி, மணிமேகலை, மிருச்சகடி, சீமந்தனி, சாவித்திரி, கோவலன், பிரகலாதா ஆகியவையாகும்.

**சுவாமிகளின் இலக்கியப் புலமை:** ஒரு சமயம் மதுரையில் கோவலன் நாடகம் நடைபெற்றது. கண்ணகி கொடுத்த காற்சிலம்பை விற்றுவர மதுரைக்குப் போவதாகக் கோவலன் கூறுகின்றான். அப்போது கண்ணகியின் வாய் மொழியாக,

“ மாபாவியோர் கூடிவாழும் மதுரைக்கு
மன்னு போகதீர் இன்று ”

என்ற பாடல் பாடப்படுகின்றது. மதுரை நகர மக்கள் முன்னிலையிலேயே “ மாபாவியோர் வாழும் மதுரைக்குப் போக வேண்டாம் ” என்று பாடினல் சும்மா விடுவார்களா? பெருங் கூச்சலிட்டார்கள். நாடக ஆசிரியரை மேடைக்குக் கொண்டு வருமாறு கூவினர்கள். ஆசிரியர் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று மக்கள் பெருங் குழப்பம் செய்தனர்.

சுவாமிகள் அமைதியாக மேடைக்கு வந்து தனது புலமை நயத்தால் கீழ்க்கண்டவாறு பொருளை விளக்கினர்.

மா என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், பா என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், வி என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கிறது என்று கூறி அதற்கு ஆதாரமாகத் திருவிளையாடற் புராணத்திலிருந்து மேற்கோள் காட்டி விளக்கினர். “ மாபாவியோர் கூடிவாழும் மதுரை என்றால் திருமகளும் கலைமகளும் மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள்படுகிறது; மதுரை நகரைப் பெருமைப் படப் பாடியிருக்கிறேனே அல்லாது சிறுமையில்லை ” எனக் கூறினர். எல்லோரும் சுவாமிகளின் புலமையை மெச்சிக் கைதட்டிப் பாராட்டினர்கள்.

குண நலன்கள்: சுவாமிகள் நாடக நூல்கள் எழுதும்போது அடித்தல் திருத்தலின்றி அழகுற விரைந்து எழுதும் திறம் பெற்றவர்கள். நடிப்புச் சொல்லிக் கொடுக்கும்போது சினவாது மாணவர்களிடம் அன்பொழுகக் கூறுவார்கள். தனது நூல்களைப் பொருள் பெறும் நோக்கமின்றியே எழுதி வந்தார். இத்துணைப் புலமை பெற்றிருந்தும் மனிதர்களைப் பாடிப் பொருள் பெறும் விருப்பம் இல்லாமலேயே வாழ்ந்து வந்தார். எண்ணற்ற நாடக மணிகளைத் தமிழகத்துக்குத் தந்த பெருமை சங்கரதாச சுவாமிகளையே சாரும். இன்றும் அவரது பாடல்களோ, உரையாடல்களோ ஒலிக்காத நாடக மேடை இல்லை யென்றே துணிந்து கூறலாம்.

இறுதி வாழ்வு: சுவாமிகள் நாடக உலகின் தந்தையாக விளங்கியதும் இறுதிவரை திருமணம் செய்து கொள்ளாமலேயே நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து வந்ததும் போற்றுதற்குரியதாகும். இறுதியில் சுவாமிகள் பக்கவாத நோயினால் துன்பப்பட்டார். தடுக்கும் மருந்து முறைகள் பயனளிக்கவில்லை. 1922ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 13ஆம் நாள் திங்கட்கிழமை இரவு 11 மணிக்குப் புதுச்சேரியில் தமது பூத உடலை நீத்தார்.

தமிழ் நாடகத்தாய் தன்னருஞ் செல்வனை இழந்து தவித்தாள். நடிகர்கள் ஒப்பாரும் மிக்காருமில்லா உண்மை நாடக ஆசிரியரை இழந்து தவித்தனர். கலையமுதம் பருகிய மக்கள் தங்கள் கலையரசரை இழந்தமைக்குக் கவலையுற்றனர். கலையுலகம் தமது ஒப்பற்ற நாடகக் கலைஞரை இழந்தமைக்குக் கண்ணீர் வடித்தது.

மதுரை நகரவையார், தமுக்கம் கலையரங்கத்தில் அமைத்துள்ள நாடக அரங்கிற்கு **"சங்கரதாச சுவாமிகள் கலைமன்றம்"** எனப் பெயரிட்டுள்ளனர். இஃது அவரது நினைவிற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**அருஞ்சொற்பொருள்.**

வேத்தியல் - அரசர், மேலானோர் கண்டு களிக்கும் நாடகம், பொதுவியல் - பாமர மக்கள் பார்த்து மகிழும் கூத்துவகைகள்,

ஈடுபாடு - தொடர்பு : (ஐயம் + திரிபு + அற) ஐயம் திரிபற = சந்தேகம் மாறுபாடில்லாமல், பண்டகசாலை - சாமான்கள் சேர்த்துவைக்குமிடம், கஞ்சிரா - ஒருவகை வாத்தியக் கருவி, மேற்கோள் - தக்க சான்று.

**பிரித்து எழுதுதல் :** இயல் + தமிழ், இன்பம் + சுவை, நடிப்பு + கலை, புறம் + முதுகு, கப்பல் + ஓட்டிய.

## பயிற்சி

**I. வினாக்கள் :**

1. நாடகத்தமிழ் என்றால் என்ன?
2. நாடகத் தமிழின் தோற்றம் ,குறித்துப் பரிதிமாற் கலைஞர் யாது கூறுகின்றார்?
3. உனக்குத் தெரிந்த நாடகக் கலைஞர்கள் யாவர்?
4. சங்கரதாச சுவாமிகளின் பிறப்பும் இளமை வாழ்க்கையும் பற்றி எழுதுக.
5. சங்கரதாசர் 'சுவாமிகள்' ஆனது எங்ஙனம்?
6. அவர் பொறுப்பேற்றிருந்த நாடக நிறுவனங்கள் யாவை?
7. சங்கரதாச சுவாமிகள் எழுதிய நாடகங்கள் எவை?
8. சுவாமிகள் இலக்கியப் புலமை வாய்ந்தவர் என்பதனைச் சான்றுடன் விளக்குக.
9. சுவாமிகளின் குணநலன்களைக் கூறுக.

**II. குறிப்பு வரை :**

பரிதிமாற்கலைஞர், சம்பந்த முதலியார், பவளக்கொடி.

**III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :**

முன்னுரையாக, கைவரப் பெற்றார், ஆசிரியப் பொறுப்பு, நாடக நூல்கள், மருந்து முறைகள்.

**IV. கட்டுரை வரைக :**

1. முத்தமிழ் வளர்ச்சி.
2. நாடகத் தமிழ் அன்றும் இன்றும்.
3. நாடகத்தொண்டு செய்பவர்.

# 16. விஞ்ஞான முன்னேற்றத்தால் விளைவது நன்மையே!

## (சொற்போர் மன்ற நிகழ்ச்சி)

[திரு. வித்துவான் நா. சாமிநாதன், M.A., B.O.L.]

(திருச்சிராப்பள்ளி, புத்தூர் ஹீபர் உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தில் நடைபெற்ற ஒரு சொற்போர் நிகழ்ச்சி)

**செயலாளர் சொக்கலிங்கம் :** மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே! இவண் கூடியுள்ள தோழர்களே! இன்று நமது மாணவர் இலக்கிய மன்றத்தின் மூன்றும் கூட்டம் நிகழ இருக்கிறது. இக் கூட்டத்திற்கு நடுவராய்த் தலைமை தாங்குமாறு நம் பள்ளி அறிவியர் கலை ஆசிரியர் திரு. கணேசன் M A., B.T., அவர்களை உங்கள் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

(ஆமோதித்துக் கைதட்டல்)

**தலைவர் முன்னுரை :** பள்ளித் தலைமையாசிரியரவர்கட்கும், உடனுசிரியர்கட்கும் என் வணக்கம் உரியதாகுக. இன்று சொற்போர் புரிய எடுத்துக்கொண்ட பொருள், "விஞ்ஞான முன்னேற்றம் பல துறைகளிலும் நன்மையே விளைவித்துள்ளது" என்பதாகும். இச் சொற்போரைத் துவக்கி வைத்து இப் பொருள்பற்றி ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்கு நான்கு மாணவர்கள் முன்வந்துள்ளனர். அவர்கள் சொல்கின்ற கருத்துக்களை அமைதியுடன் இருந்து கேட்டு இறுதியில் உங்கள் முடிவைத் தெரிவிப்பீர்களாக. இத் தலைப்பை ஒட்டிப் பேசுமாறு மாணவர் கலைச் செல்வனை அழைக்கின்றேன்.

**கலைச் செல்வன் :** அவைத் தலைவர்களே! ஆன்ற ஆசிரியப் பெருமக்களே! மாணவ நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். இன்று நாம் வசிக்கின்ற காலம் விஞ்ஞான காலமாகும். நாம் கூடியுள்ள இச் சமயம் மாலை நேரமாகும். ஆயினும் ஞாயிற்றின் வெம்மை பொறுக்க முடியாத அளவு கொடுமையாக இருக்கிறது. வெயிலின் வெம்மை தெரியாதவாறு இருக்

கச் செய்வது உங்கள் தலைக்குமேல் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் மின் விசிறியேயாகும். இம் மின் விசிறிக்குக் காரணமாயிருப்பது எது? மின்சாரம் என்று கூறவும் வேண்டுமோ? விஞ்ஞான முன்னேற்ற விளைவினுல் 19ஆம் நூற்றுண்டில் கண்டுபிடிக்கப்பெற்ற இம் மின்சாரம் இருபதாம் நூற்றுண்டின் இடைப் பகுதிக்குள்ளாகப் பல துறைகளில் வியத்தகு பயன்களை விளைத்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். மேலும் இம் மின்சாரம் நம் அன்றாட வாழ்க்கையிலும் பயன்பட்டு வருகிறது. திரைப் படம், தொலைபேசி, வானொலி முதலியவற்றின் பயன்களைக் கூறவும் வேண்டுமோ?

போக்குவரவுச் சாதனங்களில் விஞ்ஞானம் சிறந்த பங்கு வகிக்கிறது. பழங்காலங்களில் மக்கள் கால்நடையாகவோ, வண்டிகள் மூலமாகவோதான் ஓர் ஊர்விட்டு ஓர் ஊர் சென்றனர். அக்காலத்து மக்கள் பொருட் செலவு, காலச் செலவு மிகுந்து, பலவகை துன்பங்கட்கும் ஆளாயினர். அவர்கள் உலகில் உள்ள பல நாடுகளைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தனரேயன்றி நேரிற் சென்று காணும் பேறு பெற்றனர் இல்லை. விஞ்ஞான அறிவு வளர்ந்த பின்னர் உந்துவண்டி, புகை வண்டி, வான ஊர்தி, முதலிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்—உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாடுகள் நமது அயல் வீடுகள் ஆகிவிட்டன. அந்நாடுகளில் வாழ்வோர் நமது உடன் பிறந்தவர்களாகிவிட்டனர். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற பரந்த நோக்கம் இன்று விஞ்ஞான முன்னேற்றத்தால் உண்மையாகிவிட்டது. இத்தகு புதிய போக்குவரத்துச் சாதனங்களால் வாணிகம் வளமுற்றுப் பொருளாதாரத் துறையிலும் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளோம். இக் காரணங்களால் விஞ்ஞான முன்னேற்றம் மக்களுக்கு நன்மையே விளைத்துள்ளது என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

தலைவர்: இத்தலைப்பை வெட்டிப் பேசுமாறு புகழேந்தியை அழைக்கிறேன்.

**புகழேந்தி :** அறிவு நலம் சான்ற அவைத்தலைவ ரவர்கட்கும், வருங்கால மக்களை உருவாக்கும் ஆசிரியப் பெரியோர்கட்கும், ஈண்டுக் குழுமியுள்ள மாணவத் தோழர்கட்கும் எனது வணக்கம் உரியதாகுக. முதலிற் பேசிய நண்பர் கலைச் செல்வன் தமக்குத் தோன்றிய கருத்துக்களை எடுத்துக் கூறினர். நண்பர் சொற்களில் நாட்டம் செலுத்திய உங்கட்கு ஓர் வேண்டுகோள்; சிந் தனைக்குச் சிறிது வேலை தருகிறேன்; எதையும் சிந் தித்தே முடிவு செய்தல் வேண்டுமல்லவா?

அடுக்கிப் பேசுவதாலும் அடித்துப் பேசுவதாலும் எவரும் உண்மையை மறைக்க முடியாது. முதலில், மின் விசிறியே வெம்மையைப் போக்குவதாக நண்பர் கலைச் செல்வன் கூறினர். அஃது உண்மையாகுமா என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். உண்மையன்று என்று உங்கள் உள்ளமே சொல்லிவிடும். உண்மையில், விசிறி சுழல்கிறதே ஒழிய அதன்கண் காற்று ஏது? பக்கங்களில் உள்ள காற்றைத் தன் சுழற்சியால் அசையச் செய்கிறது. அவ்வளவே! எனவே, இக்காற்று காலநிலைக் கேற்பவே அமையும். இம் மின் விசிறி கண்டுபிடிப்பதற்கு முன்னர் மக்கள் நல்வாழ்வு வாழவில்லையா? அல்லது வெயி லின் வெம்மையால் அவதியுறுபவர்கள் இப்பொழுதும் இல்லையா? சுற்றிலும் நிழல்தரும் மரங்களும், பலகணி களும் போதுமான அளவு இருப்பின் காற்று நமக்கு வேண்டிய அளவு கிடைக்குமே. மின் விசிறி இல்லாத காலங்களில் பலவகைப்பட்ட விசிறிகள் பயன்பட்டன. அவற்றல் கிடைக்கும் காற்று இயற்கைக் காற்றுகவே இருந்தது. அன்றியும் மின்விசிறி போன்ற பலவகைச் சாதனங்களைப் பெற்றுள்ள செல்வர்களும் மாலைவேளை களில் ஏன் உலாவச் செல்கிறுர்கள்! இயற்கையில் தோய்ந்து இயற்கைக் காற்றை நுகரவேண்டும் என்பதற் காக அல்லவா? எனவே, மின்சார விசிறியாற் கிடைக்கும் செயற்கைக் காற்றைவிட இயற்கையில் அடையும் காற்றே இன்பம் நல்குவதோடு உடல் நலத்துக்கும் உகந்ததா யிருக்கிறது.

அடுத்ததாக, போக்குவரத்திற்கும் வாணிபத்திற்கும் விஞ்ஞானம் பேருதவி புரிவதாகப் பெருமிதத்துடன் கூறினர். நாளும் செய்தித் தாளில், ஆகாய விமானங்கள் போன்ற பல போக்குவரத்துச் சாதனங்கள் பலவகை விபத்துக்களுக்குள்ளாகி, அவற்றிலுள்ளோர் அனைவரும் உயிரிழந்தார்கள் என்பனபோன்று வரும் செய்திகள் படிப்போர் உள்ளத்தை நடுக்குறச் செய்யவில்லையா? இவைபோன்ற கொடிய பல துன்பங்கள், விஞ்ஞான முன்னேற்றத்தால் தோன்றியனவாகப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் சாதனங்களால் நாளும் நிகழ்கின்றன. இதை எவரே மறுப்பர்! இத்தகைய சாதனங்கள் இல்லாத காலத்தும் நம்நாட்டு மக்கள், கடல் கடந்து அயல் நாட்டவரோடு வாணிபம் செய்து வளம் பெருக்கி வாழ வில்லையா?

திரைப்படங்களால் நன்மையினும் தீமையே மிகுதி யென்பது என் கருத்து. இக்கருத்தை விரித்துக் கூறப் புகுந்தால் இதுவும் ஒரு சொற்போராக நீளும். ஆகையால் விஞ்ஞான முன்னேற்றத்தால் தீமையே என்பது என் கருத்தாகும்.

**தலைவர்:** வெற்றிச் செல்வன் தன் கருத்தை எடுத்துக் கூறுவார்.

**வெற்றிச் செல்வன்:** தலைவரவர்கட்கும், ஆசிரியர் கட்கும், மாணாக்கர்கட்கும் வணக்கம். நமது நண்பர் புகழேந்தி அவர்கள் இன்னும் பழமை தாங்கியாகவே இருக்கின்றார். விஞ்ஞான முன்னேற்றம் மக்கட்கு நன்மையே விளைப்பதில்லை என்று கூறிய புகழேந்தி எதன்முன் நின்று தன் கருத்தை வெளியிட்டார்? ஒலி பரப்பியின் முன் நின்றல்லவா? அக் கருவி விஞ்ஞான முன்னேற்ற சாதனைகளில் சிறந்த ஒன்று என்பது அதன்முன் நின்று பேசியபோதே அவருக்குத் தெரிந் திருக்க வேண்டும். அதன் உதவி இல்லையேல், இம் மாபெருங் கூட்டத்தில் அவர் தம் கருத்தைத் தெளிவாக எடுத்துக்கூற எவ்வளவு துன்பப்பட்டிருப்பார். திரைப் படங்களால் தீமையே விளைவதாயின் அதற்குப் பள்ளிப்

பாடத்தில் இடம் எவ்வாறு கிடைக்கும். இதுவொன்றே திரைப்படங்களால் நன்மையே என்று கூறுவதற்குப் போதுமானதாகும்.

அடுத்து, மருத்துவத் துறையில் மதிக்க முடியாத வகையில் விஞ்ஞானம் முன்னேறியுள்ளது. நோயாளிகட்குச் சிறிதும் வலி தெரியாத வகையில் இரண சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

விஞ்ஞானிகள் இடைவிடாது முயன்று அணுச்சக்தியைக் கண்டதும், தமது ஆராய்ச்சியினுல் சந்திரனே அடைய முயல்வதும் நீங்கள் அறியாததா? இயற்கையையும் வென்று அதைத் தமக்கு அடிமைப்படுத்துமளவிற்கு அமைந்துள்ள விஞ்ஞான முன்னேற்றத்தையும் அதனுல் விளேந்த பயன்களேயும் யார்தான் மறுக்க முடியும்? எனவே, விஞ்ஞான முன்னேற்றம் நாட்டு மக்கட்கு நன்மையே விளேவிக்கின்றது எனக்கூறி எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

தலேவர்: இளங்கோவைத் தன் கருத்தை எடுத்தியம்புமாறு அழைக்கிறேன்.

இளங்கோ: அறிவுமிகு தலேவர்களே! அன்புமிகு ஆசிரியர்களே! பண்புமிகு நண்பர்களே! வணக்கம். இரு நண்பர்கள் விஞ்ஞான முன்னேற்றம் நன்மையே விளேக்கிறதென்று விறுவிறுப்புடன் பேசினுர்கள். புகழேந்தி பேசியதைத் தொடர்ந்து பேசவே நான் உங்கள் முன்னிலேயில் நிற்கின்றேன். மின்சாரம் பல துறைகளில் பயன்படுவதாக அவர்கள் கூறினுர்கள். ஆனுல் அதே மின்சாரம் பல மக்களின் உயிர்கட்குக் காலனுகவும் விளங்குகிறது. மருத்துவத் துறையில் மதித்துக் கூற முடியாத அளவு விஞ்ஞானம் முன்னேறியுள்ளது என்று கூறியது முற்றிலும் சரியே! ஆம்! 'மதிக்க முடியாத' வகையில்தான் முன்னேறியுள்ளது.

நம் நகரில் இருபது ஆண்டுகட்கு முன் இருந்த மருந்துக் கடைகளின் எண்ணிக்கை, இப்பொழுதுள்ள எண்ணிக்கை ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கும்போது விஞ்ஞான முன்னேற்றம் மருத்துவத் துறையில்

எத்தகைய தொண்டு செய்துள்ளது என்பது நன்கு விளங்குகிறது! நாம் என்றும் கண்டும் கேட்டுமிராத புதுப்புது நோய்களின் தோற்றத்துக்கு இவ் விஞ்ஞான முன்னேற்றமே—விஞ்ஞான முன்னேற்ற விளைவுகளுள் ஒன்ருய அணுகுண்டே—காரணமாகும் எனப் பலரும் கூறுகின்றனர். இதனுல் ஜப்பான் நாட்டில் இரு பெரு நகரங்கள் அடியோடு அழிந்துவிட்டன. அதன் விளைவு இன்னும் நீங்கிய பாடில்லையெனில் விஞ்ஞான முன்னேற்றம் எந்த அளவில் நன்மை பயக்கிறது என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். நமது நண்பர்கள், விஞ்ஞானத்தால் மக்கள் முன்னேறி விட்டார்கள் என்று எவ்வளவுதான் சொன்னுலும், இயற்கையை வெல்லுதல் என்பது எவராலும் எக்காலத்தும் இயலாத ஒன்ருகும் எனக்கூறி எனது பேச்சை முடிக்கின்றேன். (நீண்ட கை தட்டல்)

[மாணவர்களில் மிகப் பெரும்பாலோர் விஞ்ஞான முன்னேற்றம் மக்கட்கு நன்மையே விளைக்கிறது எனத் தம் கருத்தைத் தெரிவித்தனர்.]

தலைவர் முடிவுரை: அன்புமிக்க நண்பர்களே! அருமை மாணுக்கர்களே! இதுவரை மாணுக்கர்கள் தத்தம் கருத்தை அழகாகவும் தெளிவாகவும் சுவைபடக் கூறினுர்கள். நீங்களும் அமைதியுடன் கேட்டீர்கள். பெரும்பாலோர் கூறிய முடிவே எல்லாராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதாகும். விஞ்ஞான முன்னேற்றத்தால் நன்மைகளே மிகுதியாக இருந்தும் வெட்டிப் பேசிய நண்பர்கள் மிகத் திறம்படத் தங்கள் கருத்தை எடுத்துக் கூறிய முறை பாராட்டத்தக்கதாகும்.

விஞ்ஞானத்தினுல் பல நன்மைகள் உள; தீமைகளும் உள்ளன. உலகிலுள்ள எந்தப் பொருளிலும் நன்மையும் தீமையும் கலந்தே காணப்படும்; இரண்டு தன்மைகளையும் ஆராய்ந்து அதனை மேற்கொள்ளலோ தள்ளலோ வேண்டும்.

" குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் "

என்னும் வள்ளுவர் கருத்தும் இதனை வலியுறுத்துவதாகும். விஞ்ஞானமும் ஒரு கருவியே. அக்கருவியைப் பயன்படுத்தும் முறையிலே நன்மையும் தீமையும் அமைந்துள்ளது. நன்மைக்குப் பயன்படுமாறு செய்தலே அறிவுடைமை. விஞ்ஞான மேதைகளிற் பலரும் அணு சக்தியை ஆக்க வேலைகட்கு எவ்வெவ்வாறு பயன்படுத்தலாம் என ஆராய்ந்து வருகின்றனர். அவர்தம் ஆராய்ச்சிகள் வெற்றி பெற்றால் உலக நாடுகள் பல துறைகளில் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. விஞ்ஞான முன்னேற்றத்தால் நன்மையே மிகுந்துள்ளது என்பதே என் கருத்தாகும். இக் கூட்டத்தில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்பை எனக்கு அளித்த உங்கள் மன்றச் செயலாளருக்கு என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். (நீண்ட கை தட்டல்)

**செயலாளர் நன்றி கூறல்:** இன்றைய சொற்போர் திறம்பட நடைபெற்றமை குறித்துப் பெருமகிழ்வடைகின்றேன். இன்றைய கூட்டத்திற்கு நடுவராய்த் தலைமை தாங்கிச் சிறப்பித்த ஆசிரியரவர்கட்கும், கூட்டத்திற்கு வந்து எங்களைப் பெருமைப்படுத்திய ஆசிரியப் பெருந்தகையாளருக்கும், ஆர்வத்துடனும் அமைதியுடனும் இருந்து கேட்ட மாணவர்கட்கும் சிறப்பாக இச் சொற்போரில் பங்குகொண்ட மாணவர்கட்கும் இலக்கிய மன்றச்சார்பில் என் உளங்கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(நீண்ட கைதட்டல் ஒலி, கூட்டம் கலைதல்.)

### அருஞ்சொற்பொருள்

துவக்கி - தொடங்கி; குழுமிய - கூடிய; நாட்டம் - கவனம்; சாதனம் - வசதி; ஆர்வம் - விருப்பம்; நாடி - ஆராய்ந்து; மிகை - மிகுதி.

### பயிற்சி

I. வினாக்கள்:

1. விஞ்ஞானம் பற்றிக் கலைச் செல்வன் கூறியதென்ன?

2. போக்கு வரத்து, வாணிபம்—இத்துறைகளில் விஞ்ஞானத்தின் சாதனைகள் யாவை?

3. இளங்கோ கூறிய கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

4. விஞ்ஞான முன்னேற்றம் பற்றித் தலைவர் கூறிய கருத்து என்ன ?

II. குறிப்பு வரைக :

அணுகுண்டு, மருத்துவத் துறையில் விஞ்ஞானம்.

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

பெருந்தகை, ஆர்வமும் அமைதியும், சிற்றுரை, பாராட்டத் தக்கது.

IV. கட்டுரை வரைக :

1. விஞ்ஞான முன்னேற்றம்.
2. அன்பும் அருளும்.
3. வாய்மையும் கொல்லாமையும்.

## 17. வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர்

[திரு. வித்துவான் பொன். சீனிவாசன் அவர்கள், நெய்க்குப்பை]

தமிழ்மொழிச் சிறப்பு: உலகில் பன்னூறு மொழிகள் பரந்திலங்கக் காண்கின்றோம். அவற்றுள் பழமைச் சிறப்புடனும், இலக்கண வரம்புடனும் மிளிர்கின்ற மொழி தன்னேரில்லாத தமிழ்மொழியாகும். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தகுடி" என்று சிறப்பிக்கப்பட்ட தமிழர்களால் பேசப்பட்ட மொழியே தேனினுமினிய செந்தமிழ் மொழியாகும். தமிழ் மொழி மிகப் பழமை தொட்டே "உயர் தனிச் செம்மொழி"யாய்ச் சிறந்து விளங்கியது. தமிழ் மொழியின்கண் எண்ணற்ற இலக்கண இலக்கியங்கள் தோன்றியுள்ளன. முச் சங்கங்களை நிறுவித் தமிழ் வளர்த்த பெருமை முடியுடை வேந்தர் பாண்டியரையே சாரும். மதுரை மாநகரம் தமிழ் வளர்த்த காரணத்தால் 'சங்கம் இருந்த நகரம்' எனச் சிறப்பிக்கப்பட்டது. அத்தகைய சிறப்புடைய இந்த மதுரையிலேதான் கடைச் சங்க காலத்தில் நக்கீரர், கபிலர், பரணர், திருவள்ளுவர், ஔவையார், காக்கை பாடினியார் முதலிய அருந்தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழாராய்ந்தனர். அதன் பயனாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றலாயின. முடியுடை வேந்தர் ஆட்சியிலும் தமிழ்மொழிச் சீரும் சிறப்புமுற்று விளங்கியது.

சேது நாடு: "பாண்டி நாடு முத்துடைத்து" என்று தமிழ் மூதாட்டியரால் சிறப்பிக்கப்பெற்ற பழம்பதி மதுரையம்பதியாகும். மதுரையையடுத்த முகவை மாவட்டமே சேது நாடு என்பர். சேது நாட்டை ஆண்டவர் சேது மன்னர் எனப்பட்டனர். இவர்கள் பாண்டியர்க்கு அடங்கிய குறு நில மன்னராவர். சேதுநாடு பல அருந்தமிழ்ப் புலவர்களைத் தமிழ் நாட்டிற்கு ஈந்துள்ளது. சேதுநாடு அன்று முதல் இன்றுவரை, தமிழ்த் தொண்டாற்றி வருகிறது எனல் சாலும்!

பெற்றோர்: சேது மன்னர் மரபில் வந்த முத்து ராமலிங்க மன்னரின் தமையனரே பொன்னுச்சாமித் தேவராவர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்த பெரும் புலவராய்த் திகழ்ந்தார். அத்துடன் சிவப்பற்றும் மிக்குடையவராய்த் திகழ்ந்தார். இவர் அமைச்சர் பதவியில் திகழ்ந்தவர். தூங்காமை, கல்வி, துணி வுடைமை இவற்றைத் துணையாகக்கொண்டு அமைச்சர் பதவியில் அரிய அரசியல் தலைவராய் இருந்து வந்தார். பொன்னுச்சாமித்தேவர் அருள் உள்ளமும், தமிழ்ப் பற்றும் கொண்டவர். அரசியல் வினையுடன் தமிழ்த் தொண்டையும் தமது கடமையாகக் கொண்டு உழைத் தவராவர். பொன்னுச்சாமித் தேவரின் மூன்ரும் மகனரே நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய சான்ரோர். பாளையம்பட்டிச் சமீன் பொறுப்பையேற்ற சீமைச்சாமித் தேவரும், கோட்டைச்சாமித் தேவரும் தேவரவர்களின் உடன் பிறந்தோராவர். நிர்வாகி சேஷாத்திரியிடம் தம் மக்களை ஒப்படைத்துவிட்டுப் பொன்னுச்சாமித் தேவர் காலமானர். நிர்வாகி தேவர் மக்களைக் கண்ணின் இமைபோல் காத்து வளர்த்தார்.

கல்வி: பாண்டித்துரைத் தேவர் சேது நாட்டின் செம்மலாக 1867ஆம் ஆண்டில் மார்ச்சு மாதம் 21ஆம் நாள் 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்கின்படி சேது நாட்டில் அவதரித்தார். பிள்ளைப் பருவத்தில் இவருக்கு இடப்பட்ட பெயர் 'உக்கிர பாண்டியன்' என்பதாகும். அழகிலும் ஆர்வத்திலும் சிறந்த தேவரவர்கட்கு இளம்பருவம் முதல் உடனிருந்து தமிழ் பயிற்றுவித்த ஆசிரியர் அழகர் ராசு என்ற புலவரே யாவர். வழக்கறிஞர் வேங்கடேச சாத்திரியிடம் முறை யாக ஆங்கிலம் பயின்ருர். சுவார்ட்சு துரை மகனரால் நடத்தப்பட்ட கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சியைப் பெற்ருர். பூச்சி சீனிவாச ஐயங்கார் இவருடன் உடன் பயின்ற மாணவராவர். பூச்சி சீனிவாச ஐயங்காரிடம் பிற்காலத்தில் இசைப் பயிற்சி பெற்ருர். கேடில் விழுச் செல்வமாகிய கல்வியைத் தேவரவர்கள் நன்கு பெற்ருர்

கள். சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடம் இலக்கியங்களை ஐயம் திரிபறக் கற்றுணர்ந்தார். திருவாவடுதுறை ஆதீனத்துப் பழனிக் குமாரசாமித் தம்பிரானிடம் சைவசமய ஒழுகலாறுகளை முறையாகக் கற்று அதிலும் தேர்ச்சியடைந்தார். கேடில் விழுச் செல்வமாகிய கல்வியைப் பெற்றுத் தேவரவர்கள் மகிழ்ந்தார்கள்.

ஆட்சிப் பொறுப்பு: நம் தேவரவர்கள் பாலவநத்தம் ஆட்சிப் பொறுப்பை 1884ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் ஏற்றார். தேவர் காலத்தில் சேது நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர் முத்துராமலிங்கத்தேவரின் மகனாரான பாஸ்கர சேதுபதியாவர். பாலவநத்தம் சமீன் பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நடத்திவந்தார். இவர் நாட்டை ஆள்வதில் நிகரற்றவர்; செங்கோல் வழுவாது நீதி வழியில் நின்று மக்களின் குறைகளையுணர்ந்து அவற்றை உடனே களைந்து மக்கள் மகிழுமாறு, மாற்றார் மதிக்கும்படி நல்லாட்சி புரிந்தார். பாஸ்கர சேதுபதியும் சீரிய புலமை பெற்றவராவர். நம் தேவரவர்கள் தந்தையைப்போலவே நிரம்பிய புலமை பெற்றவராய்த் திகழ்ந்தார். கலை வளரச்சியில் நாட்டங்கொண்ட இவர் பலவிதக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றுத் தலைசிறந்தவராய்த் திகழ்ந்து வந்தார்.

தமிழ்ச்சங்கம் நிறுவல்: சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் 1901ஆம் ஆண்டு சென்னை மாநிலக் காங்கிரசு கூடியது. அதுபோழ்ந்து இவர் அம் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகத் திகழ்ந்தார். காங்கிரசின் தீர்மானங்கள் முடிவுற்றதும், தேவரவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சி குறித்து அங்கு வந்திருந்த புலவர் பெருமக்களிடமும் அறிஞர்களிடமும் தமது கருத்தைத் தெள்ளத் தெளிய விளக்கினார். அதன் விளைவே நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றக் காரணமாயிற்று. 1901ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் நாள் சேது வேந்தரின் முன்னிலையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கப் பெற்றது.

சங்கம் நிறுவிய காலே உடனிருந்த புலவர் பெருமக்கள், குடந்தை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், இரா. இராகவையங்கார், வை. மு. சடகோப ராமானுசாச்சாரியார், பரிதிமாற் கலேஞர், நாராயணசாமி ஐயங்கார், மறைமலேயடிகள், அரசஞ்சண்முகனர், திருமணம் செல்வகேசமுதலியார், மு. சு. பூரணலிங்கம் பிள்ளே, திருமயிலே சண்முகம்பிள்ளே முதலியோராவர். பாண்டியர் நிறுவிய முச்சங்கங்களுடன் இது நான்காம் சங்கமாகத் திகழ்ந்தது. யாரும் எண்ணிப்பார்க்காத இந்த அரிய செயலேச் செய்த இவரைப் புலவர் பெருமக்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்தினர். அப்பொழுதே சேதுபதி உயர்நிலேப் பள்ளியை யடுத்திருந்த தனிக் கட்டடங்களில் 'செந்தமிழ்க் கலாசாலே,' 'பாண்டியன் புத்தகசாலே, நூலாராய்ச்சிச் சாலே' முதலியனவும் தொடங்கப் பட்டன. செந்தமிழ்க் கல்லூரிக்குத் திரு. நாராயண ஐயங்கார் தலேவராக நியமிக்கப்பட்டார். இரா. இராகவையங்கார் ஆராய்ச்சிப் பகுதியில் பங்கேற்ருர்; நூற் பதிப்பு, ஆராய்ச்சித்துறை இவற்றை ஆராய்ந்து பல நூல் தொகுதிகளே வெயிட்டார்.

பொழுது போக்கு: பாஸ்கர சேதுபதியின் அரசவையில் தமிழ் வளர்ச்சி குறித்துப் பல ஆக்கவேலே கள் நடைபெற்றன. தமிழைத் தன் உயிரினும் மேலாகப் போற்றிய நம் தேவரவர்கள் தலேமையில் தமிழ்ப் பொறுப்பு விடப்பட்டது. அதனுல் இவர் தமிழ் வளர்ச்சி யில் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துப் பணியாற்றி ஞர். அம்வமயம் பூச்சி சீனிவாச ஐயங்கார் அவர் களால் இசைத் தமிழும், இரா. இராகவையங்கார் அவர் களால் இயற்றமிழும் வளர்க்கப்பட்டுப் பொன்னேபோல் துலங்கின. பாஸ்கர சேதுபதியின் அரசவைக்குப் புலவர்கள் அடிக்கடி வருதலுண்டு. புலவர்களின் திறமைக்கேற்பப் பரிசுகள் வழங்கப்படும். இங்கு இயல், இசை ஆராய்ச்சிகளும் தருக்கங்களும் நடைபெற்றன.

தேவர் சிவநெறிச் செல்வர். தேவரவர்களின்

மாளிகை 'சோமசுந்தர விலாசம்' என இறைவன் பெயரைக்கொண்டு திகழ்கிறது. அங்கு நாள்தோறும் இறைவழிபாடு நடைபெறும். இறைவழிபாட்டில் தேவார திருவாசகப் பாடல்கள் ஓதப்படும். வழிபாடு முடிந்ததும் இன்னிசை நடைபெறும். அரசவையில் புலவர் பலர் கூடி ஆராய்ச்சியில் ஈடுபடுவர். பலவிதப் பொருள்கள் பற்றிய தருக்கங்களும் நடைபெறும். கருத்தோடு கருத்தை மோதவிடுவர். பாஸ்கர சேதுபதியும் சிற்சில சமயங்களில் அரசவைக்கு வருவதுண்டு. வந்ததும் புலவர்களை அன்போடு வினவுவார். அவர்களுடன் தாமும் சேர்ந்து உரையாடி மகிழ்வார். தேவரவர்கள் இவ்வாறு பயனுள்ள வகையில் இன்பமாகப் பொழுது போக்கினர்.

நூல் வெளியீடு: தேவரவர்களால் பெரிதும் சிறப்பிக்கப்பட்டவர். டாக்டர் உ. வே. சாமிநாதய்யராவர். மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை என்ற இரு நூல்களையும் வெளியிடப் பொருளுதவி செய்தவர் நம் தேவரேயாவர். தம் ஆசிரியராகிய இராமசாமிப் பிள்ளையைக் கொண்டு தேவாரத் தலமுறைப் பதிப்பையும், சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டையும் வெளியிட்டு உதவினர். சிவஞான முனிவர் இயற்றிய 'சிவசமயவாதவுரை மறுப்பு' என்ற நூலை சபாபதி நாவலர் வெளியிடத் தன்னாலியன்ற உதவியும் பொருளும் தந்து அவரை ஊக்குவித்தார். சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை அவர்களின் நூல்கள் வெளியிடவும் காரணமாக இருந்தவர் நம் தேவரேயாவர். புலவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்து "பன்னூற்றிரட்டு" என்ற நூலை வெளியிட்டார். சைவ சமய ஒழுகலாறுகளை முறையாகத் தொகுத்துச் 'சைவசமய மஞ்சரி' என்ற பெயரில் வெளியிட்டார். தேவரவர்கள் சிவஞான முனிவரிடம் பேரன்பு கொண்ட காரணத்தினால் 'சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை' என்னும் பிரபந்தத்தினையும் இயற்றி வெளியிட்டார். இன்னும் சிவஞான முனிவர்

களைக் குறித்துச் 'சிவஞானபுரம் காவடிச் சிந்தும்' வேறு சில பிரபந்தங்களும் பாடியுள்ளார்.

**தமிழ்த் தொண்டு:** தமிழ்க் கல்வியைக் கல்லூரியில் பயிற்றுவிக்கச் செய்த பெருமை இவரையே சாரும். சேதுபதித் தமிழ்க் கல்லூரியில் இலவசக் கல்வி சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. அதில் உண்டியும் உறையுளும் பெற்று இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்ற மாணவர்கள் எண்ணிறந்தோராவர். இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தில் 'செந்தமிழ்' என்னும் இதழ் 1903ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச் செந்தமிழ் இதழ் தமிழின் வளர்ச்சிக்குப் பலவகைகளிலும் உதவியது எனலாம். தமிழ்ச் சங்கப் பதிப்புக்கள் வெளியிடத் தனியாக அச்சுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்குச் சேற்றூர்ப் புலவர் சுப்பிரமணிய கவிராயர் பதிப்பாசிரியரானார். அதில் ஞானமிர்தம், வில்லிபாரதம், திரு. வி. க. வின் ஆசிரியரான நா. கதிரைவேற்பிள்ளைத் தமிழ் அகராதி போன்ற நூல்கள் வெளியிடப் பெற்றன. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை தொடங்கிய கப்பல் கம்பெனிக்கு ஓர் இலட்சம் பொருள் தந்ததோடுமல்லாமல், தலைமை தாங்கியும் நடத்திவந்தார். தம் நண்பர்களையும் அப்பணியில் ஈடுபடச் செய்தார்.

**குணநலம்:** தேவர் சிவநெறிச் சீலர். அன்பின் திருவுருவம். அமைதியே உருவானவர். அறமும் அருளும் நிரம்பிய அறச் சிந்தையாளர். இன்முகத்தோடு இன்சொல் கூறும் பெற்றியர். கைம்மாறு கருதாது உதவுபவர். பிறர் துன்பத்தையும் தன் துன்பம் போல் கருதும் தகைமையாளர். செந்தமிழ்ப் புலமைக்குச் சிறப்பளித்த செம்மல்!

**மறைவு:** இத்தகைய புகழுடன் விளங்கிய நம் தேவர் 1919ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் நாள் பூதவுடலை நீத்துப் புகழுடம்பெய்தினர். புலவர்களும் மக்களும் ஆறாத் துயரெய்திக் கண்ணீர்விட்டுக் கலங்கி நின்றனர். புலவர்கள் இரங்கற் பாக்கள் பாடி ஒருவாறு

அமைதியடைந்தனர். புலவர் ஒருவர் தேவரவர்களின் புகழினை உள்ளமுருக்கும் வகையில் பாடியுள்ளார். அப்பாட்டு,

"சித்திரத்தில் நீயிருப்பாய்; சிந்தையுளே
வீற்றிருப்பாய்; சிறப்பாச் செய்த
புத்தகத்தில் நீயிருப்பாய்; புலவர்கள்தம்
பாவிலெல்லாம் புகழாய் நிற்பாய்;
பத்திரிகை தனிலிருப்பாய்; தமிழ்ப்பாண்டித்
துரைவேந்தே; பாரில் எங்கும்
நித்தியமாய் இருக்கும்நினை 'நிலங்கடந்தான்'
என்றுலகர் நிகழ்த்தல் என்னே!"

இப்பாட்டில் தேவரவர்களின் வாழ்க்கையினை நமக்குப் படம்பிடித்துக் காட்டிவிட்டார். என்னே தேவரவர்களின் பெருமை! மாணவர்கள் அவரைப் போல் நாட்டுச் பற்றும் மொழிப் பற்றும் நிரம்பப்பெற்று அவர் விட்டுச் சென்ற பணியினைச் செவ்வனே செய்வதே அவருக்குச் செய்யும் கைம்மாறுகும்.

## அருஞ்சொற்பொருள்

பன்னூறு - பலநூறு. வரம்பு - எல்லை. பதி - ஊர். சாலும் - பொருந்தும். செம்மல் - தலைமைக் குணம் உள்ளவர். விழு - சிறந்த. சதாவதானம் - நூறு கேள்விகளுக்குப் பதில் கூறும் திறமை உடையவர். மாற்றுர் - பகைவர். நாட்டம் - கவனம். முகவை - இராமநாதபுரம். அரசவை - அரசர் மன்றம். வினவுவார் - கேட்பார். சீலர் - ஒழுக்கமுள்ளவர். சித்திரம் - ஓவியம். சிந்தை - உள்ளம். பா - பாட்டு. பார் - உலகம். நித்தியம் - நிலை.

## பயிற்சி

I. வினாக்கள்:

1. தமிழின் சிறப்பை விளக்குக.
2. சேது நாட்டின் பெருமையை விளக்குக.
3. தேவரவர்களின் இளமையும் கல்வியும் எவ்விதம் அமைந்திருந்தது?
4. தேவரவர்கள் தமிழ்ச் சங்கம் எப்போது நிறுவினர்? அதில் கலந்து கொண்ட அறிஞர் யாவர்?
5. தேவரின் பொழுதுபோக்கு யாது?

6. தமிழ்ச் சங்கம் வெளியிட்ட நூல்கள் யாவை?
7. தேவரின் குண நலன்கள் யாவை?
8. தேவரின் நாட்டுப் பற்றை விளக்குக.
9. தேவர் மறைவு குறித்துப் புலவர் ஒருவரது பாடலின் கருத்து யாது?

II. பிரித்து எழுதுக:

பன்னூறு, தன்னேரில்லாத, கடைச்சங்கம், பிற்காலம், விழுச் செல்வம், பொறுப்பிலிருந்தவர், செந்தமிழ், பொருளுதவி.

III. குறிப்பெழுதுக:

நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை, சேது மன்னர், திரு. நாராயண ஐய்யங்கார், செந்தமிழ்.

IV. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

பரந்திலங்க, மதுரை மாநகரம், சீரும் சிறப்புமுடன், தமிழ்ப் பற்று, இசைப் பயிற்சி, வரவேற்புக் குழு.

V. கட்டுரை வரைக:

1. தேவரின் தமிழ்த் தொண்டு.
2. தேவரின் நாட்டுத் தொண்டு.
3. தேவரின் நண்பர்கள்.
4. தேவரின் நற்குணங்கள்.

# 18. தாவரங்களின் மேல் வளரும் தாவரங்கள்

[திரு. A. P. இராமன் அவர்கள், B.Sc., L.T.
உதவித் தலைமையாசிரியர், சே. நி. உயர்நிலைப்பள்ளி,
உறையூர், திருச்சி.]

தாவரங்கள் நிலத்தில் வேரூன்றி வளர்கின்றன. நிலம் தாவரங்களின் வீடும் உணவுக் கருவூலமும் ஆகும். நிலத்தில் மண் அணுக்களுக்கிடையில் பயிருணவுச் சத்துக்கள் அடங்கிய சத்துநீர் இருக்கிறது. தாவரங்களின் வேர்த் தொகுதி இச்சத்து நீரை நிலத்திலிருந்து உறிஞ்சித் தண்டுத் தொகுதிக்கு அனுப்பும். இறுதியில் சத்து நீர் இலைகளிலுள்ள செல்களை அடைகின்றது. அதே சமயத்தில் இலைகள் காற்றிலிருந்து கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு கரியைத் தனியாகப் பிரித்து எஞ்சியுள்ள உயிரியத்தை (ஆக்ஸிஜன்) வெளிவிடுகின்றன. இலைகளிலுள்ள செல்களில் பசுங்கணிகங்கள் என்ற சிறு உருண்டைகள் ஏராளமாக உள்ளன. இவற்றில் பச்சையம் என்ற வண்ணப் பொருள் இருக்கிறது. இலைப் பச்சை, சூரிய ஒளியில் கரிப்பொருளையும் பயிருணவுச் சத்துக்களையும் நீரையும் சேர்த்துத் தாவர உணவைத் தாமே தயாரித்துக்கொள்ளும் ஆற்றலையுடையவை. சில வகைத் தாவரங்கள் நீரில் மிதந்து வாழ்கின்றன. இவையும் தரைத் தாவரங்களைப் போலச் சுதந்திர வாழ்க்கையை நடத்துகின்றன.

சில வகைத் தாவரங்கள் நிலத்துடன் அல்லது நீர் நிலையுடன் எந்தவிதமான தொடர்புமின்றிப் பெரிய மரங்கள் மீது 'வளர்கின்றன. இவற்றில் சில தாம் வளரும் மரத்திலிருந்து தமக்கு வேண்டிய உணவைக் கவர்ந்து கொள்கின்றன. இவை (1) ஒட்டுண்ணித் தாவரங்கள் எனப்படும். வேறு சில தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய நீரை மழை நீரிலிருந்து எடுத்துக்கொண்டு, தம் உணவைத் தாமே தயார் செய்துகொள்கின்றன. இவை தாம் வளரும் மரங்களைத் தங்குவதற்கு மட்டும் பயன்படுத்திக்

கொண்டு வாழ்கின்றன. இவை (2) தொற்றுத் தாவரங்கள் எனப்படும்.

"நாகநல்லறு" (Vanda): இது தொற்றுச் செடிகளில் ஒன்று. இதில் இருபத்தைந்து இனங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. இவை இந்தியாவின் மேற்குக் கரையில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்தத் தொற்றுச் செடியில் மூன்று விதமான வேர்கள் இருக்கின்றன. ஒருவகைப் பட்டைகளின் வெடிப்புக்களில் வளர்ந்து செடியை நிலையாக நிறுவ உதவும். இவை பற்றிக்கொள்ளும் வேர்கள் எனப்படும். மற்றொரு வகை மேல் நோக்கி வளரும் பல வேர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சிறிய வலை போன்ற அமைப்பை உண்டாக்கும். இவ்வலையில் மரத்தின் இலைச்சருகுகளில் சில விழ நேரிடும். சருகுகள் மக்கி இலைமக்கு உண்டாகும். இலைமக்கில் பயிருணவுச் சத்துக்கள் உள்ளன. வலையிலுள்ள வேர்கள் உணவுச் சத்துக்களை கவரும். இவ்வேர்கள் உறிஞ்சும் வேர்கள் எனப்படும். மூன்றுவது வகை வேர்கள் நேராகக் கீழ்நோக்கித் தொங்கும். இவை விழுதுகள் எனப்படும். இவற்றின் வெளிப்புறம் வெண்மையாகக் காணப்படும். வேரின் வெளிப்பாகம் "வெலாமென்" (Velamen) எனப்படும். மழை அல்லது பனி பெய்யும்பொழுது வெலாமென் என்ற பகுதி நீரை உறிஞ்சிக்கொள்ளும். வெலாமென் மை ஒற்றும் தாளைப் போல வேலை செய்யும். விழுதின் உட்புறத்தில் பசுங்கணிகங்கள் இருக்கின்றன. இவற்றிலுள்ள பச்சையத்தின் உதவியால் விழுதுகள் இலைகளைப் போலவே தாவர உணவைத் தயாரிக்கின்றன.

நாக நல்லறுவின் இலைகள் நீரைச் சேமித்து வைக்கும். இச்செடியின் மலர்கள் அழகிய வண்ணமுடையவை; நறுமணமுடையவை. இதன் கனிகளைப் பறவைகள் விரும்பி உண்ணும். பறவைகளின் மலம் மூலம் விதைகள் பல மரக்கிளைகளுக்குப் பரவுகின்றன.

"டிஸ்க்கிடியா" (Dischidia): இது ஒரு தொற்றுச் செடி. இதன் இலைகள் சாடிகள் போல மாறியிருக்கும். இவற்றில் கூடி வாழும் ஒருவகை எறும்புகள் இலைத்

துணுக்குகளைச் சாடிகளில் சேமித்து வைக்கும். இலைத் துணுக்குகள் மக்கிப் பயிருணவுச் சத்துக்கள் உண்டாகும். சாடிகளில் மழை நீரும் சேரும். இந்த நீரில் உப்புச்சத்துக்கள் கரையும். இச்செடியின் ஒருவகை வேர்கள் சாடிக்குள் ஊடுருவிப் பரவி அங்கேயிருக்கும் சத்து நீரை உறிஞ்சும்.

“ வானில்லா ” (Vanilla): இத்தொற்றுச் செடியின் கனிகளிலிருந்து ஒரு நறுமணப் பொருள் தயாரிக்கப்படுகிறது.

முடித்தாளி அல்லது திரௌபதிக் கூந்தல் (Cuscuta): இது ஒரு முழு ஒட்டுண்ணித் தாவரம். இது ஒரு கொடி; கிளைகள் மெல்லிய கம்பி போன்றவை; மஞ்சள் நிறமுள்ளவை. இத்தாவரத்திற்கு வேரும் இலையும் இல்லை. பச்சை வண்ணமே இல்லாத முடித்தாளி தனக்கு வேண்டிய உணவைத் தாமே தயாரித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. இதன் கொடி நொச்சி போன்ற வேறொரு செடியின் தண்டைக் கெட்டியாகச் சுற்றிக்கொள்ளும். இது தொடுகை உணர்ச்சி மிக்கது. முடித்தாளிகள் கொடி ஆதாரச் செடியின் ஒரு கிளையில் சுமார் மூன்று தடவை மட்டுமே சுற்றியிருக்கும். நெருங்கி ஒட்டியிருக்கும் இடங்களில் இதன் கொடியிலிருந்து கிண்ணம் போன்ற **உறிஞ்சுறுப்புக்கள்** வளர்ந்து ஊட்டுச் செடியினுள் புகுந்து ஒரு பிணைப்பை அமைத்துக் கொண்டு அங்கிருந்து தனக்கு வேண்டிய உணவை உறிஞ்சிக் கொள்ளும்.

முடித்தாளியின் விதைகள் முளைக்கும்போது முளை வேர் தோன்றிச் சிறு செடியை ஓரிடத்தில் பதித்துவைக்கும். முளைக்குருத்து வளர்ந்து ஏதாவது ஓர் ஊட்டுச் செடியைப் பற்றிக்கொள்ளும். சிறு செடியின் வேர் காய்ந்துபோகும்.

புல்லுருவி (Loranthus): இது இலைகளுடன் கூடிய ஓர் ஒட்டுண்ணிச் செடி. இதிலுள்ள இலைகள் தாமாகவே தாவர உணவைத் தயாரிக்கக் கூடும். இது நிலத்தில் வேர் கொள்ளாததால், நிலத்திலிருந்து சத்து

நீரைப் பெறமுடியாது. புல்லுருவி மா, எலுமிச்சை, மாதுளை போன்ற மரங்களின் மேல் வளர்கின்றது. இதன் தண்டு ஊட்டுச் செடியின் ஒரு கிளையுடன் ஒரு போகு முறையில் வளர்ந்து ஆங்காங்கு உறிஞ்சுறுப்புக்களை ஊட்டுச் செடியினுள் செலுத்தி அங்கிருந்து தண்ணீரையும், தாது உப்புக்களையும் அடையும். புல்லுருவியின் இலைகள் சத்து நீரைக்கொண்டு உணவு தயாரிக்கும். முடித்தாளி ஒரு முழு ஒட்டுண்ணி, புல்லுருவி ஓர் அரை ஒட்டுண்ணியாகும்.

சந்தனமரம் சுயேச்சையாக வாழக்கூடியது. ஆனால் "லன்டானு" (Lantana) என்னும் தாவரத்தின் வேர்களைச் சந்தனமரத்தின் வேர்கள் தொட்டுவிட்டால் சந்தனமரம் ஒட்டுண்ணி வாழ்க்கையை நடத்தத் துவங்கும்.

### அருஞ்சொற்பொருள்

கருவூலம் - இருக்குமிடம். இறுதி - முடிவு. எஞ்சி - மிஞ்சி. வண்ணம் - அழகு. தாவரம் - செடி, கொடி, மரம். நிறுவ - நிறுத்த. மிக்கது - மிகுந்தது. உப்பு - அங்கம். நீர் நிலை - குளம் முதலியன. நறுமணம் - வாசனை.

### பயிற்சி

I. வினாக்கள்:

1. தாவரங்கள் எவ்விதம் வளர்கின்றன?
2. ஒட்டுண்ணித் தாவரங்கள்—விளக்கி வரைக.
3. தொற்றுத் தாவரங்கள்—விளக்கி வரைக.

II. குறிப்பு வரைக:

நாகநல்லறு, டிஸ்க்கிடியா, முடித்தாளி.

III. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

தாவரங்கள், காற்றிலிருந்து, சுதந்திர வாழ்க்கையைத் தொடங்க, மழை நீரிலிருந்து, பயிருணவுச் சத்துக்கள், சுற்றிக்கொள்ளும்.

IV. கட்டுரை வரைக:

1. தாவரங்களின் அழகு.
2. தாவரங்களால் நாம் அடையும் நன்மை.
3. நம் நாட்டு விஞ்ஞானி ஒருவரின் வரலாறு.
4. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டுபிடித்த முறையினை வரைக.

# 19. குடும்பக் கலை

[திருமதி. வித்துவான், செல்லப்பாப்பா கீரன் அவர்கள், இலால்குடி]

கலை என்பது அழகின் வெளிப்பாடு. ஒவ்வொரு மனித வுள்ளமும் அழகையும், அதனுல் விளையும் இன்பத்தையுமே எதிர்பார்க்கிறது. சிறு குழந்தைகள் கையில் கிடைக்கும் விளையாட்டுப் பொருள்களை, அக்குழந்தைகள் நிரல்பட அடுக்குகின்றனவே, ஏன் ? அழகை உணர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தினுலேயே யாகும். அழகை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு பொருளினும் நாம் அறிவு, செயல், திறமை ஆகியவற்றைக் கொண்டு அகழ்ந்து காணும் முயற்சியே கலையாகும்.

கலைகள் பல்வேறு வகைப்படும். அவற்றுள் ஈண்டு நாம் ஆராய்வது குடும்பக்கலை பற்றியாகும். மனைக்கலை என்று அழைப்பதும் இதனையேயாகும்.

தொன்மைக் காலத்திலிருந்து பெருமையுடன் நடைபெற்றுவரும் மனை வாழ்க்கையை நவீன விஞ்ஞான அடிப்படையில் அமைத்துக் கொள்வதையே குடும்பக் கலை யென்கிறோம். குடும்பம் என்பதும் தானுகவே இயங்கிவிடும் ஒன்ருதலின் அதனை ஒரு கலையாகக் கருத வேண்டுமோ ? எனச் சிலர் ஐயுறலாம். இவ்வெண்ணம் பிழையானது. ஒவ்வொரு மனிதனின் பெருமைக்கும், இன்பத்திற்கும் மூலமாக விளங்குவது குடும்பமேயாகும். தியாகம், அன்பு, அறம், தூய்மை, இனியன கூறல் போன்ற உயரிய பண்புகள் அனைத்தையும் ஒவ்வொருவனும் குடும்பத்திலிருந்தே கற்றுக் கொள்கிருன். இதனுலேயே சான்ருேர்கள் "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்று கூறுகின்றனர். சுருங்கச் சொன்னுல், ஒவ்வொரு தனி மனிதனின் மனக்கோளையும் நிமிர்த்தி, பிறருடைய இன்ப துன்பங்களைத் தனதாய் அன்புபாராட்டச் செய்து, பொறையினையும் சாந்தியினையும் புகட்டிப் பக்குவஞ் செய்யும் நற்பள்ளிச்சாலையாக விளங்குவது

குடும்பமே. இக்குடும்பம் சிறப்புற, அதனை ஒரு கலை யாகக் கற்றுக்கொள்ளுதல் இன்றியமையாதது.

தாய், தந்தை, மக்கள் ஆகியோரை உறுப்பினர் களாகக் கொண்ட குடும்பத்தில் நிருவாகப் பொறுப்பும், செயலும் தாய்க்கே உரியது. மனைவி, இல்லாள் என்ற சொற்கள் பெண்பாலருக்கே வழங்குவது இவ்வுண்மை யைக் காட்டவல்லது.

"குடும்பக்கலை" என்பது மிகவும் தொன்மை யானது. எனினும், விஞ்ஞான அடிப்படையில் இதனை ஓர் ஆய்வுக்குட்படுத்தித் தனிக்கலையாக வளர்க்கத் தொடங்கியது அறுபதாண்டுகட்கு முன்பிருந்தேயாகும். கி. பி. 1908இல் அமெரிக்காவில் வாழ்ந்த எலன். எச். ரிச்சர்ட்ஸ் என்ற அம்மையாரே முதன்முதலாகக் குடும்பக்கலையைத் தோற்றுவித்தவரெனலாம். அவரால் தோற்றுவிக்கப்பெற்ற "அமெரிக்க குடும்ப நிருவாகக் கலைச் சங்கம்" (America Home Economics Association) இன்று ஒரு பேரமைப்பாக விளங்குவதுடன் பல்வேறு நாட்டைச்சார்ந்த மாணவியர் பலரும் இங்கு போந்து மனைக்கலையைப் படித்துச் செல்லும்படியாகவும் விளங்குகிறது. இந்தியாவில் 'முதன் முதலாகக் கி. பி. 1951இல் பரோடா பல்கலைக் கழகத்தில் குடும்பக்கலை தனிப்பாடப் பிரிவாகத் தொடங்கியது. இன்று 16 பல்கலைக் கழகங்களிலும், பல உயர்நிலைப்பள்ளிகளிலும், ஆதாரக் கல்விச் சாலையிலும், தொழிற் பயிற்சிப் பிரிவி லும் இது ஒரு தனிக்கலையாகப் பயிற்றப்படுகின்றது.

தொன்றுதொட்டு வந்த குடும்ப நிருவாகத்தை ஒரு கலையாகக் கருதவேண்டுவதற்கு வளர்ந்துவரும் நாகரி கமே காரணமாகும். புதிய நாகரிகப் போக்கில் குடும்பமே மாறிவிட்டது. பழைய கால மகளிர் பார்த்தறியாத மின்சார இயந்திரங்கள், போக்கு வரத்துச் சாதனங்கள், புதிய உணவுகள், புதிய சமையல் முறைகள் ஆகிய வற்றை இக்கால மகளிர் காணவும், அவற்றைப் பயன் படுத்தித் தீரவேண்டிய அவசியமும் தோன்றியுள்ளன. இப் புதிய கருவிகளைப் பயன்படுத்தும் கல்வியை இக்

காலப் பெண்கள் பெற்றுகவேண்டும். அத்துடன், குடும் பக்கலேக் கல்வியைக் கற்க மற்ருெரு காரணமும் உண்டு. இக்காலப் பெண்கள் பலரும், சமூக நலத்திற்கும், பொருளாதார நிலேமையினுலும் வீட்டிற்கு வெளியே பணியேற்கும் நிலேயிலேயே உள்ளனர். இந்த நிலேயால் வீட்டு வேலேகளே மட்டுமே கவனித்தல் என்பது இயலாது. புதிய மாறுதலுக்கேற்பவும், குடும்ப வாழ்க்கையைப் பயனுடனும் திறமையுடனும் செய்யவும் தேவையான அறிவைக் கல்வி மூலம் பெறவேண்டியதாகிறது. இவ் விரண்டு காரணங்களே, குடும்பக்கலே வளர்ந்து வருவதற்கு அடிப்படைகளாகும்.

குடும்பக்கலேயின் குறிக்கோள் வாழ்க்கையில் உயர்ந்த இன்பத்தைப் பெறுவதேயாகும். கிடைத்துள்ள குறைந்த பொருள்களேக் கொண்டே மிகுந்த இன்பத் தைப் பெற வைப்பது குடும்பக்கலே.

குடும்பக் கலே தன்னகத்தே பல்வேறு துறைகளே அடக்கியுள்ளது. உணவு, உடை, வாழும் வீட்டமைப்பு, அதன் அழகு வெளிப்படச் செய்தல், உடற் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு, துப்புரவு, நோயினின்றும் பாதுகாப்பு ஆகிய இன்ன பிற துறைகளேச் செம்மையுறச் செய்வது குடும்பக் கலேயேயாகும். தொன்றுதொட்டு வருகின்ற பண்பாடு, இறை வழிபாடு, கலேயழகு ஆகியவற்றின் அடிப்படையில், அவற்றிற்குச் சிறிதும் ஊறின்றி அமைவதே குடும்பக்கலே.

குடும்பக் கலேப் பிரிவுகளே நாம் இரு பெரும் பிரிவு களாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒன்று உடை, வரவு செலவு, வீடு ஆகிய பகுதி. பிறிதொன்று குழந்தை வளர்ப்பு, சமூகத் தொண்டு ஆகிய பகுதி.

'ஆள் பாதி; ஆடை பாதி' என்பது பழமொழி. ஒவ்வொருவருடைய தோற்றப் பொலிவை மிகுத்துக் காட்டுவது ஆடையே யாகும். நவீன ஆடையுலகம் தந்திருக்கும் உடைகள் மனிதனின் தோற்றத்தை மேலும் அழகுபெறச் செய்வன. இந்தக் காலத்தில் ஒவ்வொரு வரும் ஆடையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

'விலை குறைவு' என்ற ஒரே காரணத்திற்காக விரைவில் கிழிந்து பயனற்றுப் போகும் உடைகளைப் பயன்படுத்து வதைவிடச் சற்று விலை கூடினும் நிலைத்த பயன் தரும் ஆடைகளை மேற்கொள்ளுதலே நன்று. உடையின் தரம் எவ்வாறு இருப்பினும் அவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதே இன்றியமையாதது. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழியல்லவா?

இரண்டாவதாக வீட்டமைப்பும், அதனை அழகு செய் தலும் குடும்பக் கலையின் பெரும்பகுதியாக விளங்கு கின்றது. குடும்பக் கலையின்படி அழகாக விளங்க வேண்டுமானால் வீடு அளவிலே பெரிதாக இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. அளவிலே சிறியதாயினும் அஃது அமைக்கப்படும் விதத்திலேயே கலையும் அழகும் வெளிப்படுகின்றன. உதாரணமாக ஒரு வரவேற்பு அறை, ஒரு வாசிப்பு அறை, கூடம், படுக்கையறை, சமையலறை, புறக்கடை ஆகிய பகுதிகளையுடைய நடுத்தர வீட்டை எடுத்துக் கொண்டால், இவ்வளவு அறைகள் தனித்தனியே அமைந்திருப்பதால் மட்டுமே அவை அழகு பெற்றுவிடுவதில்லை. ஒவ்வோர் அறையிலும் வைக்கப்படும் பொருள்களை வைக்கும் அமைப்பே அழகை வெளிப்படுத்துவது. ஒவ்வொரு வரவேற்பு அறையிலும் சில நாற்காலிகள், அவற்றுக்கு நடுவில் சிறிய வட்ட மேசை, அதன்மீது ஒரு விரிப்பு, அழகிய பூக்கள் தாங்கிய செம்பு ஆகியவை இருந்தால் போதும். இத்தகைய அமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வ துடன், கலையழகையும் வெளிப்படுத்துவதாக அமையும். இதற்கு மாறாக வரவேற்பறையில் பாதியிடத்தை அடைத் துக் கொள்ளும் கட்டிலைப் போட்டு அதன் மேல் படுக்கை களை அடுக்கி வைப்பது அருவெறுப்பையே தரும்.

படுக்கையறை அமைப்பதில் காற்றோட்டத்திற்கே முதலிடம் தரப்படவேண்டும். உடுப்புகள் மாற்றவும் வைக்கவும் பயன்படும் சிறிய அலமாரி, தூக்கத்திற்கு முன் ஏதேனும் படிக்க நினைப்பது இயற்கையாதலால் ஒரு சாய்வு நாற்காலி, அழகுறவும் வசதியுடனும்

அமைக்கப்பட்ட மின் விளக்கு ஆகியவற்றுடன் படுக்கப் பயன் பெறும் கட்டில் முதலியன படுக்கையறை அமைப்புக்கு முக்கியப் பொருள்கள். படுக்கை விரிப்பி லும் தலையணை உறையிலும் கண்ணையும், மனத்தையும், களிக்கச் செய்யும் பூவேலை அமைப்பிருக்குமானல், அக்காட்சியே நல்ல தூக்கத்தைத் தரவல்லது.

உணவு அறையில் பொருள்கள் பாழாகாமலும், பார்வைக்கு அழகு தருமாறும் அடுக்கி வைக்கப்பட வேண்டும். உட்செல்லும் பொருளை உற்பத்தி செய்யும் இடமாதலின், இங்குத் துப்புரவு முக்கியமான இடம்பெற வேண்டும். கண்டகண்ட இடங்களில் விறகு, கரி முதலியவற்றைப் போட்டுவைத்துள்ள சமையலறையைக் காணும்போது, உணவின் மீதே வெறுப்பேற்படுவது இயற்கை. நின்று உணவு ஆக்கும் வகையில் உயரமாக அமைக்கப்பட்ட மேடை, நாளும் சுத்தம் செய்ய இயலுமாறு அமைக்கப்பட வேண்டும். தூய நீர் பெறுமாறு மேடையை யொட்டிய நீர்க்குழாயும், அந்த நீர் எங்கும் தெறித்துப் பரவாதவாறு ஒரு சிறிய தொட்டியும் அவசியமானவை. பொருள்களைப் போட்டு வைக்கும் பாத்திரங்களை ஒரே உயரமும் அகலமும் உடையனவாகத் தேர்ந்தெடுத்து, அவற்றை முறையாக அடுக்கி வைத்திருந்தால், அக்காட்சி பார்வைக்கே பெரும் இன்பம் தருவதாகும். இவ்வாறு வீட்டமைப்பிலும், அவ் வீட்டில் பயன்படுத்தும் பொருள்களை அழகுற அமைப் பதிலும் மட்டுமே மனைக்கலை அடங்கி விடுவதில்லை. அவற்றைச் செம்மையுறச் செய்கின்றபோது தன் வருவாய்க்கு உள்ளிட்ட நிலையிலேயே அமைத்துக் கொள்ளவேண்டும். குடும்பத்தின் ஆகாறு, போகாறு களைக் கணக்கில் கொண்டு செலவுத் தொகைக்குள்ளிட்டே அழகு காணவேண்டும்.

வருவாய்க்கேற்ற வகையில் குடும்பப் பொருள்களை வாங்குவதும், பாதுகாப்பதும் முக்கியமானவை. ஏனெ னில் குடும்பத்தின் தலைவி அழகு ஒன்றையே கருதி வருவாய்க்கு மிஞ்சிய செலவில் ஈடுபடுவளாயின்

இல்லறத்தின் அமைதியே அழிந்துபடும். அமைதி இல்லாத இடத்தில் கலையிருக்காது. குடும்பம் நடாத்தும் ஒவ்வொரு பெண்ணும் இதனை நினைவில் கொள்ள வேண்டும்.

குடும்பக் கலையின் இரண்டாவது பிரிவாகப் பெண்கள் குழந்தை வளர்ப்பில் அதிகக் கவனஞ் செலுத்த வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியும் வாழ்வும் இளமைக் காலச் சூழ்நிலைக்கேற்ற வகையிலேயே அமைகின்றன. குழந்தைகளை இளம் பருவத்திலேயே நல்ல பழக்க வழக்கங்களைப் பெறுமாறு வளர்க்கவேண்டும். குழந்தைப் பருவத்திலேயே உடல் திண்மை பெறுமாறு வளர்ச்சிபெற உதவ வேண்டுவது மிக முக்கியமானது. பிறந்தது முதலே நோயிலும், அதைத் தீர்க்கும் மருந்திலும் வளர்த்தல் கூடாது. குழந்தைகள் ஓய்வு நேரத்தில் புதியன பலவற்றைத் தாமே விரும்பிக் கற்பதற்கு ஏற்ற பொருள்களை வாங்கி வைத்து, அவற்றைக் கற்கச் செய்ய வேண்டும். குழந்தைகள் அணியும் ஆடைகளைச் சுத்தமாகப் பெற்றோர்கள் அமைத்துத் தந்தால் மட்டுமே அக் குழந்தைகள் இளமையிலிருந்தே அழகை விரும்பும் உள்ளத்தினராய் வளருவர். மேலும் ஒவ்வொரு குழந்தைக்கும் இளவயது முதலே சேமிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். தாங்களே எதிர்காலத் தலைவர்கள் என்றும், தங்களால் பல பணிகள் நிறைவேற வேண்டியுள்ளன என்றும், அக்குழந்தைகள் உணருமாறு வளர்க்க வேண்டும்.

இக்காலப் பெண்கள் சமூகத்திற்குப் பெருந்தொண்டாற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். சமூகத் தொண்டியற்றுவதைக் கற்றல் குடும்பக் கலையின் ஒரு பகுதியேயாகும். கல்வியறிவையோ, கலாச்சாரத்தையோ பெறுமல் வாழும் எண்ணற்ற பெண்களைத் தூய்மையும், துப்புரவும் கலந்த வாழ்க்கையினராய் மாற்றும் பெருந்தொண்டினைக் கல்வி கற்ற பெண்கள் செய்தே தீரவேண்டும்.

குடும்பக் கலையின் பல்வேறு துறைகளையும் வெற்றி

யுடன் செய்து முடிப்பது எளிதான செயலன்று. எனினும், இவற்றைச் செம்மையுடன் அமைத்து விட்டால், அக்குடும்பத்தில் தோன்றும் மகிழ்ச்சி இணை யற்றதேயாகும். இவற்றைச் செய்து முடிக்கும் முழுப் பொறுப்பும் ஒரு குடும்பத் தலைவியினுடையதேயாகும். இவ்வனைத்தையும் செய்து முடிக்கத் தேவைப்படும் பொருளைப் பெறுவதற்கு ஓய்வு நேரத்தில் பல வீட்டுத் தொழில்களில் ஈடுபடுவதும் நல்லதேயாகும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென் இல்லவள் மாணாக்கடை" என்ற வள்ளுவர் குறள்படி இல்லறத்தின் வெற்றிக்குக் காரணமானவள் பெண்ணே. சோம்பலின்றி, சுறுசுறுப்புடன் கலையும் அழகும் நிறைந்த குடும்பத்தை அமைக்கவேண்டுவது அவள் பொறுப்பேயாகும். "காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து மாதறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சிபெறச் செய்ய" வேண்டியவர்கள் மகளிரேயாவர்.

### அருஞ்சொற்பொருள்

கலை - திறமை; அகழ்ந்து - தோண்டி; நிரல்பட - வரிசைப்பட; மனை - வீடு; பண்பு - குணம்; பொறை - பொறுமை; மனக்கோள் - எண்ணம்; ஆய்வு - ஆராய்தல்; பயிற்ற - பழக்க; பணி - வேலை; ஊறு - இடையூறு, துன்பம்; பிறிது - வேறு; பொலிவு - அழகு; உடுப்பு - உடை; ஆகாறு - வருமானம்; போகாறு - செலவு; சாந்தி - அமைதி; ஐயுறலாம் - சந்தேகப்படலாம்.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. கலை யென்றால் என்ன? விளக்குக.
2. குடும்பக்கலை எப்போது உருவம் பெற்றது?
3. குடும்பத்தை அமைக்கும் பொறுப்பு யாருடையது?
4. குடும்ப அமைப்பை விளக்குக.
5. நல்ல குடும்பமாக அமைய யாது புரிதல் வேண்டும்?

6. குடும்பக்கலை எத்தனை பிரிவுகளை உடையது? விளக்குக.
7. குடும்பத் தூய்மை பற்றிய கருத்தைத் தொகுத்து வரைக.
8. சமையலறை எவ்விதம் அமையவேண்டும்?
9. குழந்தை வளர்ப்பில் செய்யவேண்டியதென்ன?

II. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

அழகின் வெளிப்பாடு, பல்வேறு, தொன்று தொட்டு, 'குடும்பக்கலை, அறுபதாண்டுகட்கு.

III. கட்டுரை வரைக:

1. குடும்பக் கலையின் பண்பு.
2. குடும்பத்தில் தாயின் பங்கு.
3. குடும்பச் சுகாதாரம்.
4. குடும்பம் சிறந்தோங்க வழி.

# 20. பேசாத தம்பி

[திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள், M.A.,
முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.]

நாடக மேடையில் இருட்டாக இருக்கும்போது, ஒரு மூலையிலிருந்து மாத்திரம் பிரகாசமான வெளிச்சம் குவிந்து வந்து முக்கியமான நடிகர் மேல் விழுவதைப் பார்த்திருப்பீர்களே? அப்போது வேறு நடிகர்கள் மேடைமீது இருக்கலாம். என்றாலும், அவர்கள் முகத்திலே ஒளி நேரடியாக விழாத காரணத்தால், நம்மைப் பொறுத்த வரையில் அவர்கள் நிழல்களைப் போலத்தான். ஏதோ அவர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்ச்சி இடையிடையே தோன்றலாம். சில சமயம் அவர்களுடைய முழு வடிவத்தையும் அறியவேண்டும் என்ற ஆசையும் ஏற்படலாம். ஏற்பட்டாலும் அது நிறைவேறுவதில்லை. நம்முடைய கவனமெல்லாம் ஒளி விழுகின்ற இடத்திலே தான். இருட்டை நோக்கிக் கண் திரும்புமா? திரும்பினாலும் என்னத்தைக் கண்டு விடும்?

இதைப் போன்ற நிலைமை காவிய அரங்கத்திலும் உண்டாகிறது. அங்கேயும் பல பாத்திரங்கள். ஆனால், கவிஞன் வீசுகின்ற ஒளி ஒருசில பாத்திரங்களின் மேலே தான் அதிகமாக விழுகிறது. இவர்களுடைய பேச்சும் செயலும் காவியத்திலே முதலிடம் பெறுகின்றன. மற்றைய பாத்திரங்கள் மங்கல் வெளிச்சத்திலோ இருட்டிலோ வந்து வந்து போவதோடு சரி; நாமும் அவர்களை அதிகமாகக் கவனிப்பது கிடையாது. கவனித்தாலும் விசேடமாக ஒன்றும் தெரிந்துகொள்ளவும் முடிவதில்லை. அது இயற்கைதான். காவியத்திலே தோன்றும் எல்லாப் பாத்திரங்களையும் பூரணமாக விவரிப்பது என்றால், ஒவ்வொரு பாத்திரத்தையும் தலைமையாக வைத்து ஒரு காவியம் எழுத வேண்டியது தான். அது முடிகிற காரியமா?

இப்படி மற்றவர்கள் மேல் விழும் ஒளி தன் பேரில் விழாமல் ஒதுங்கி நிற்கின்ற ஒரு நாடகப் பாத்திரம்

சத்துருக்கன். ஒதுங்கி நிற்கிறுன் என்று சொன்னேன்? இல்லை கதையின் அமைப்பிலே ஒதுக்கப்பட்டு நிற்கின்ற பாத்திரம் என்றுதான் முதலில் நமக்குத் தோன்றுகிறது. ஏதோ தசரதனுக்கு மகனுகப் பிறந்தான். எல்லாப் பகைகளையும் ஒழிக்கக்கூடிய எழில் வாய்ந்தவன் என்று கருதி, சத்துருக்கன் என்று வசிட்டன் பெயரிட்டானும். இராமனை விட்டுப் பிரியாமல் இலட்சுமணன் இருந்தது போலவே சத்துருக்கனும் பரதனை விட்டு ஒரு நொடி கூடப் பிரியாமல் இருந்தானும். இவ்வளவு தான் முதலிலே சத்துருக்கனைப் பற்றி நமக்குக் கிடைக்கின்ற செய்தி. கதை வளர வளர இராமனைப் பற்றியும் இலட்சுமணனைப் பற்றியும், பரதனைப் பற்றியும் எத்தனையோ செய்திகள் அடுக்கடுக்காய் வருகின்றன. இதனுல் இப் பாத்திரங்கள் பிரம்மாண்டமான ஆகிருதியும் தனிப் பண்பும் பெறுகின்றன. சத்துருக்கனே நிழலில் நிற்கிறுன். பரதனை விட்டுப் பிரியாமல் தான் இருக்கிறுன்; என்றுலும் இராமனை விட்டுப் பிரியாமல் இருக்கின்ற இலட்சுமணன் பேரில் விழுகின்ற அளவிற்குப் பேச்சு, சம்பவம் இவற்றின் ஒளி இவன் பேரில் விழவில்லை. சீதையை மணப்பதற்காக இராமன் தேர் ஏறி மிதிலை வீதியில் வரும்போது இலட்சுமணனேடு பக்கத்தில் நின்றுகொண்டு சாமரை வீசுகிறுன். இராமனுடைய கலியாணம் நடந்தேறிய பிறகு அதே மணப்பந்தலில் சத்துருக்கனுக்கு விவாகமாகிறது. ஆனுல், இராமனுடைய கலியாணத்திற்குப் பல படலங்களைத் தருகிற கம்பர், பரதன், இலட்சுமணன், சத்துருக்கன் இவர்களுடைய கலியாணத்தை ஒரே பாட்டிலே முடித்துவிடுகிறுர். இந்த ஒரு பாட்டிலும் சத்துருக்கனுக்குத் தனியிடம் இல்லை. கிடைத்த இடத்தை மற்றைய இருவரோடும் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இராமன் அயோத்தியை விட்டுக் காட்டுக்குப்போன பிறகு, பரதனேடு கேகய நாட்டிலிருந்து சத்துருக்கனும் திரும்பவருகிறுன். ஆனுல், பரதனுடைய திகைப்பு, அவன் துயரம், அவன் கசப்பு, கோபம், வீரம், தியாகம்—

இவற்றிலே ஈடுபட்டு நாம் சத்துருக்கனை மறந்தே போகிறோம். இவ்வளவு பேசுகிறானே பரதன்; சத்துருக்கன் பேசிய வார்த்தை ஒன்றுகூட நம் காதில் விழவில்லை. எப்படி விழும்? கம்பர் காதில் விழுந்தால் அன்றோ நம்முடைய காதில் விழப்போகின்றது? தசரதன்சாவு என்ற இருள் கவிழ்ந்த அயோத்தியில், சோகக்கடல் பொங்கி எழுகிறது. பல உள்ளங்கள் துடிக்கின்றன. சத்துருக்கன் உள்ளம் துடித்ததோ, என்னவோ அவன் பேசவே இல்லை.

பரதன் இராமனை அழைத்துவரக் காட்டிற்குப் புறப்படுகிறான். புறப்படும் செய்தியை நகர மக்களுக்கு அறிவித்து உடன் வருவதற்குச் சேனையைத் திரட்டி வர வேண்டும் என்ற கட்டளை சத்துருக்கனுக்கு இடப்படுகிறது. கட்டளையை நிறைவேற்றுகின்றான். ஆனால் இதைச் செய்வதற்கு ஒரு பாட்டில் அரை அடிதான் சத்துருக்கன் பெறுகின்ற இடம் என்றாலும் நமது கவனத்தைக் கவருவதற்குச் சத்துருக்கனுக்குச் சீக்கிரத்தில் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பரதனும், அவனைத் தொடர்ந்து செல்லும் சனசமுத்திரமும் அயோத்தி நகரவாசலை அடையும்போது அங்கே கூனி எதிர்ப்படுகிறாள். அவ்வளவுதான்; இதுவரை நிழலிலே, பரதனுடைய நிழலிலே என்றாலும் நிழல் நிழல் தானே— இருந்த சத்துருக்கன் பளீரென்று ஒளியில் வந்து நிற்கின்றான். மந்தரையைப் பார்த்தவன்,

'......ஓடியார்ந்து அந்தரத்து ஏற்றுவான் அழன்று...'

அவளைப் பற்றுகிறான். இப்போதும் சத்துருக்கன் பேசவில்லை. பேசுவது பரதன்; 'விட்டுவிடு. இந்தக் கூனியை வெகுண்டோம் என்று தெரிந்தாலும் இராமன் முனிவான். அவளை விட்டுவிடு, நாம் போகலாம்' என்கிறான் பரதன். சத்துருக்கன் கூனியை விட்டுவிடுகிறான் என்று சொல்வதற்குக்கூடக் கம்பருக்கு நேரமில்லை. அவர் கவலையெல்லாம்—நம் கவனம் எல்லாம்—பரதனிடமே இலயித்து இருக்கின்றது. கணநேரத்திற்கு நம்

முன்னே வந்து நின்ற சத்துருக்கன் மறுபடியும் ஒளியின் எல்லைக்கு அப்பால் சென்றுவிடுகிறான்.

அங்கே அவனை இனம் கண்டு கொள்கிறது குகனுடைய அன்பு. துயரமே உருவாகப் பரதன் நிற்கும் தோற்றத்தைப் பார்த்து அவனைப் பற்றி முதலில் தான் எண்ணியது தவறு என்ற முடிவிற்கு வருகிறான் குகன்.

'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்'

என்று பேசுவது நம்முடைய காதில் விழுகின்றது. ஆமாம்; அதோ பரதனுக்குப் பக்கத்தில் நிற்கும் சத்துருக்கன் இலட்சுமணனைப் போலத்தான் இருக்கிறான். அதில் ஒன்றும் குறைவில்லை. இலட்சுமணனைப்போலவே இவனும் உணர்ச்சிக் கனல் கக்கும் வீரப்பேச்சு ஏதாவது பேசுவானோ என்று நாம் நினைக்கின்றோம். நினைக்கின்றோமா? அதற்கு நேரம் ஏது? பரதனும், குகனும் சந்திக்கின்ற உருக்கமான காட்சியில் மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம்.

சித்திர கூடத்திலும் இதே கதைதான். பரதனுடைய படைகள் வருவதைப் பார்த்து இலட்சுமணன் சீறுகிறான். இராமன் பேரிலுள்ள அன்பின் அற்புதமான எதிரொலியாக அவனுடைய கோபம் மூள்கிறது. இராமனுடைய சாந்தம் அதை ஆற்றுகின்றது. பிறகு பரதன் வருகிறான். அவன் புனைந்த தவவேடத்தை இராமன்,

'பன்முறை நோக்கிப் பலவும் உன்னி,
அல்லலில் அழுங்கினை ஐய'

என்று விம்முகிறான். சித்திரகூடத்தின் அமைதியிலே சிறிது நேரத்திற்கு உணர்ச்சிப்புயல் வீசுகிறது. தசரதன் இறந்தான் என்பதைக் கேட்ட இராமனுடைய சோகம், இதற்குத் தத்துவ மருந்து தரும் வசிட்டனுடையஞானம், மன்னன் துஞ்சினன் என்ற செய்தியைக் கேட்டதும் முதன் முதலாகத் துயர்க்கடலில் அடிவைக்கும் சீதையின் சஞ்சலம், அரசை இராமன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேசும் பரதனின் துடிப்பு, இராமனுடைய அசை

யாத சிந்தை—இப்படியாகப் பலப்பல மனநிலைகள் ஒன்றோடொன்று மோதி விளைகின்ற உணர்ச்சிவேகம் அங்கே சுழலுகிறது. எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் சத்துருக்கன் பேசவே இல்லை. அவன் கூட்டத்தில் இருப்பதாகக்கூட நமக்கு நினைவு இல்லை. சித்திரகூடத்தை விட்டுப் பரதனும் அவனோடு வந்தவர்களும் புறப்படுகிறார்கள் :

'......பரதன் போயினான் பொடித்தலம் இலங்குறு
பொலங்கொண் மேனியான்.'

வசிட்டன் போகிறான் :

'மூன்று நூல் கிடந்ததோர் முனியும் போயினான்.'

அதன் பிறகு பரத்வாசன், நகரமக்கள், தேவர்கள் :

'பண்டை நூல் தெரிபரத் துவனும் போயினான்
மண்டு நீர் நெடுநகர் மாந்தர் போயினார்
விண்டுறை தேவரும் விலகிப் போயினார்.'

கடைசியாகப் போக மனமில்லாமல் நிற்கும் குகனும் இராமனுடைய கட்டளையின் பேரில் சித்திரகூடத்தை விட்டு நீங்குகிறான்.

'கொண்டல் தன் ஆணையால் குகனும் போயினான்!'

சத்துருக்கனும் போயிருக்க வேண்டும்; போனான் என்றுகூட இத்தனை பேரையும் குறிப்பிடுகின்ற கம்பர் குறிப்பிடவில்லை. இராமனுக்கு மூன்று தம்பிகள் என்று சொன்னாரே, மூவரில் பரதனையும் இலட்சுமணனையும் விரிவாகக் காட்டுகிறாரே அந்தக்கவிஞர். எம்பிரான் பின் பிறந்தவனாகிய சத்துருக்கனை மட்டும் மறந்தே போய் விட்டாரா?

மறக்கவில்லை என்பது காவியத்தின் கடைசிப் பகுதியிலே தெளிவாகிறது. இராமன் காட்டிற்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன. நந்திக் கிராமத்தில் இராமன் வரும் திசையையே நோக்கி 'வாக்கில் பொய்யான் வரும் வரும்' என்று இராமன் வருகையை எதிர்நோக்கித் துடிக்கின்றான் பரதன். குறிப்பிட்ட கடைசி நாள் வந்தும் இராமன் வரவில்லையே என்று ஆறாத் துய

ரத்தில் அழுந்திய பரதன் தன் உயிரையே விட்டுவிடத் தீர்மானிக்கிருன். சத்துருக்கனுக்குச் சொல்லி அனுப்பிஞன். அவன் வந்ததும் 'உன்னை அழுது வேண்டுகிறேன் ஒருவரம். அது குற்றமில்லாதது'—என்று பேசிக் கொண்டே வரத்தையும் கேட்டு விடுகிருன் பரதன்:

'சொன்னநாளின் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான்இனி வீழுவன்
மன்னனுதி என் சொல்லை மாருது.'

பரதன் கேட்கின்ற வரம் இது. சத்துருக்கன் என்ன செய்யப் போகிருன் என்று திரும்புகிருேம். இப்போது அவன் பேரில் ஒளி பூரணமாக விழுகிறது. அவன் துணுக்குறுகிருன். நஞ்சை உண்டவன்போல் தடுமாறுகிருன். மனமும், உடலும் நடுங்க நிற்கிருன். பெருமூச்சோடு பரதனைப் பார்த்து, 'நீ துன்பத்தில் அழுந்தி இருக்கிருய், உண்மைதான். ஆனுல், நான் உனக்குச் செய்த பிழை என்ன?'

'நான் உனக்கு என்ன பிழைத்துளது அழுந்து துன்பத்திஞய்' என்று கேட்கிருன். 'நீ வருந்துகிருய், ஆனுல், இராமன் காட்டிற்குப் போனதிலும் அதை எண்ணி நீ பட்ட துயரத்திலும் எனக்கு மட்டும் கலக்கம் இல்லாமல் போய்விட்டது என்று எண்ணுகிருய் போலிருக்கிறது? இதனுல் அல்லவா 'அரசஞக இரு' என்று என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டாய். ஈரமில்லாத நெஞ்சினன் என்று என்னைப்பற்றி எண்ணும்படிக்கு நான் என்ன தவறு செய்து விட்டேன்?' என்று கேட்பது போல் இருக்கிறது இந்தப் பேச்சு. இதோடு சத்துருக்கன் அமைதி அடையவில்லை. அவன் மனத்திலே குமுறுகின்ற இரக்கமும், வருத்தமும் கசப்பாக வெளிவருகின்றன. அவன் சொல்கிருன்:

'நாட்டை விட்டு விட்டுக் காட்டை ஆளப் புறப்பட்டான் ஒருவன். அவனைக் காத்துப் பின் தொடர்ந்து சென்ருன் ஒரு தம்பி. மற்ருெரு தம்பியோ போனவர்கள் வரவில்லையே என்று மனம் புழுங்கி உயிர்விடத் துணிந்து

விட்டான். இன்னொரு தம்பி இருக்கிறன்; அவன்தான் அரசாளப் பிறந்தவன். அரசாட்சி என்பதுதான் எவ்வளவு இனிமையான அனுபவம்! இதைப் பெருமல் சத்துருக்கன் இருந்துவிடலாமா? வெட்கத்தைப்பற்றிப் பேசுவானேன்? யாருக்கு 'வெட்கம்? அரசாள வேண்டியதுதான், அரசு!

“ கானுள நிலமகளைக் கைவிட்டுப்
போனவனைக் காத்துப் பின்பு
போனும் ஒரு தம்பி; போனவர்கள்
வரும்அவதி போயிற்று என்ரு
ஆருத உயிர்விட இன்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நாணு(து)
யானும் இவ்வரசாள்வென் என்னே
இவ்வரசாட்சி இனிதே அம்மா!”

ஆ! ஆ! பேசாத தம்பி பேசியே விட்டான்! பேச்சில் தான் என்ன வேகம், கவனித்தீர்களா? அன்பும் தன்னல மற்ற உணர்வும் தமக்குரிய அடக்கத்தோடு இதுவரை அடைத்துக் கிடந்தன. இப்போது அவை இருப்பதையே அறியாதவன் போல் பரதன் பேசியதும், காட்டாற்று வெள்ளம்போல் சீறிக்கொண்டு அவை வெளிவருகின் றன. இந்த வெள்ளம் கோபமாகச் சுழலுகிறது. பரிகாச மாக நுரை கக்குகிறது. யாரிடம் இவ்வளவு நாளும் சலியாமல் அன்பு செலுத்திஞனே அந்தப் பரதனே தன்னை உணரவில்லையே என்ற தவிப்பில் சத்துருக்கன் இன்னும் சில வார்த்தைகளை உதிர்க்கிருன். ஆமாம். உன்னுடைய அன்பு உயர்ந்ததுதான். இராமன் இல் லாத அயோத்தியில் பரதன் புகுந்தான் என்ற சொல் லுக்கு அஞ்சி இங்கே இந்த நந்திக் கிராமத்தில் தங்கித் தவ வாழ்க்கை தொடங்கினய். நான் பிரமாதமாக என்ன செய்துவிட்டேன், ஒன்றும் இல்லையே? ஏதோ உனக்கும் ஒரு தம்பி இருக்கிறன் என்ற முறையில் உன் அடிமை யாக நின்றேன். உன்னைப் பின்தொடர்ந்தேன். அவ் வளவுதான்; நாஞக ஒன்றும் செய்யவில்லையே;

ஆகவே, இதுவரை என் வாழ்க்கை நடத்திய விதத்திற்கு ஒத்ததாகத்தான் இனி இந்த நாட்டை ஆளும் பொறுப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் பாக்கியசாலிதான்!

“ மன்னிற் பின்வள நகரம் புக்கிருந்து
வாழ்ந்தானே பரதன் என்னும்
சொல்நிற்கும் என்று அஞ்சிப்புறத் திருந்தும்
அருந்த வமே தொடங்கினயே!
என்னிற்பின் இவன் உளனும்என்றே பின்
அடிமை உனக்கிருந்த தேனும்
உன்னிற் பின்னிருந்ததுவும் ஒருகுடைக்
கீழ் இருப்பதுவும் ஒக்கும் ”

என்கிருன்.

பரதன் என்ன சொல்ல முடியும்? பிரமித்து நிற்கிருன்; நாமும் பிரமித்தே நிற்கிரும். இதுவரை பேசாமல் இருந்ததும், தன்னைக் காட்டிக் கொள்ளாமல் அடக்கத்தோடு பரதனுக்குப் பின்னேயே நின்றதும் சத்துருக்கனுடைய அளவில்லாத அன்பின் திறம் என்பதை உணர்கிரும். தியாகத்திலோ, அன்பிலோ, பேசாத தம்பி பேசுகின்ற தம்பியருக்குத் தாழ்ந்து விடவில்லை. இந்த ஒரு பேச்சில் உயிர்த் தத்துவம் பெற்று சகோதர வாஞ்சையின் வடிவமாக நம் மனத்தில் இடம் பெற்று விடுகிருன் சத்துருக்கன். குகனையும், சுக்ரீவனையும், விபீடணனையும் தம்பியாக ஏற்றுக்கொண்டு மகிழ்ந்த இராமனுக்குப் பெயரளவில் அன்று, உண்மையாகவே இன்று நான்காவது தம்பி பிறந்து விடுகிருன்.

ஆம்; சத்துருக்கன் பிறந்த செய்தி பாலகாண்டத்தில் பேசப்படுகின்றது. ஆனல், அவன் பிறந்து வளர்ந்த கதை—அவன் வாழ்க்கையின் சீவ முத்திரை—உண்மையில் காவிய இறுதியில் மீட்சிப் படலத்தில்தான் இடம் பெறுகின்றது. கதை, சக்கரத்தின் கடைசி சுழற்சியின்போது கண நேரத்தில் மகா கவிஞன் ஒருவனுடைய பாத்திர சிருட்டி மேதையால் சத்துருக்கன்

என்ற பெயர், பாத்திரமாக மாறி, அழியாத உயிரும் தனிப் பண்பும் பெற்றுவிடுகிறது.

### அருஞ்சொற்பொருள்

அரங்கு - மேடை; எழில் - அழகு; கூனி - மந்தரை; அல்லல் - துன்பம்; துஞ்சினன் - இறந்தான்; பொலம் - பொன்; கொண்டல் - மேகம் போன்ற இராமன்; துணுக்குறுகின்றான் - வியப்புறுகின்றான். ஈரம் - இரக்கம்.

### பயிற்சி

I. வினாக்கள் :

1. ஒவ்வொரு பாத்திரத்தையும் தலைமையாக அமைக்க இயலுமா? விளக்குக.

2. சத்துருக்கனைப்பற்றிய செய்தி ஏன் பரதனுடன் அயோத்திக்கு வந்தபோது சொல்லப்படவில்லை?

3. கூனியைக் கண்ட சத்துருக்கன் அடைந்த நிலையை விளக்குக.

4. நந்திக் கிராமத்தில் தவம்புரிந்த பரதன் கூறிய பதிலுக்குச் சத்துருக்கன் கூறியதென்ன?

5. முழுப்பாத்திரமாகச் சத்துருக்கன் எங்கே வெளிப்படுகின்றான்?

II. வாக்கியத்தில் அமைக்க :

ஒரு மூலையிலிருந்து, இருட்டை நோக்கி, அழைத்துவர, காவியத்தின் கடைசிப் பகுதி.

III. கட்டுரை வரைக :

1. கம்பரின் திறமை.
2. கம்பரின் கற்பனை அழகு.
3. கம்பரின் நாடக இயல்பு.
4. கம்பரின் நினைவாற்றல்.
5. கம்பரின் சிறந்த படைப்பு.

ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
135479

RM
955

# TAMIL MALAR MALAI

BOOK I for STANDARD IX

EDITED BY
Vidwan, C. ARASAPPANAR
*S. M. High School, Uraiyur,*
*Thiruchirappalli.*

T. G. GOPAUL PILLAI
PUBLISHERS
TIRUCHI-2 : : MADRAS-1

*Copyright*]

[*Price* Rs. 2·00